# பெரியார் தொலைநிலைக் கல்வி நிறுவனம்
# (PRIDE)

## பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்–636 011.

## இளங்கலை தமிழ் இலக்கியம்
முதலாமாண்டு
## தாள் – 5 : தமிழக வரலாறும் பண்பாடும்

பாடம் எழுதியவர் :
**முனைவர் இரா. வசந்தமாலை**
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் – 636 011.

**இளங்கலை தமிழ் இலக்கியம்**

**முதலாமாண்டு**

**தாள் – 5 : தமிழக வரலாறும் பண்பாடும்**

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| | பாட அறிமுகம் |
| **அலகு 1** | வாழ்வியல் நெறிகள் |
| **அலகு 2** | கலைகள் |
| **அலகு 3** | சமயங்கள் |
| **அலகு 4** | சமூக அமைப்புகள் |
| **அலகு 5** | பண்பாட்டு ஊடாட்டங்கள் |

## பாடத்திட்டம்

## தமிழக வரலாறும் பண்பாடும்

**அலகு : 1**

சங்க காலத் தமிழக அரசியல் நிலை – போர் முறை–சமூக அமைப்பு– திருமண முறை– வணிகம்–உணவு, உடை, உறையுள்– அணிகலன்கள்–கல்வி– பொழுது போக்கு–நம்பிக்கைகள்– அறம்.

**அலகு : 2**

தமிழர்கலைகள் – இசை – சிற்பம் – கட்டடம் – ஓவியம் – கூத்து – நாடகம் – மருத்துவம்.

**அலகு : 3**

தமிழர் சமயம் – சைவம் – வைணவம் – சமணம் – பௌத்தம் – இசுலாம்– பகுத்தறிவு இயக்கம்.

**அலகு : 4**

தமிழர் நீதி–வரிகள்–உள்ளாட்சி மன்றங்கள்–சாதி வளர்ச்சியும் பெரியார் செயல்பாடுகளும்–மகளிர் நிலை– இந்தியப் பண்பாட்டில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்.

**அலகு : 5**

தமிழ்ப் பண்பாட்டில் ஆங்கில ஆட்சிச் செல்வாக்கு– மராட்டியர் செய்த நன்மைகள்– வாய்மொழி இலக்கியங்களும் தமிழ்ப் பண்பாடும்–சமயப்பொதுநோக்கு– பண்பாட்டு ஊடாட்டம்.

**பாடநூல் :**

முனைவர் அ. தட்சிணாமூர்த்தி– **தமிழர் நாகரிகமும் பண்பாடும்**

யாழ் வெளியீடு

AP.1108, தென்றல் குடியிருப்பு

மூன்றாம் தெரு, மேற்கு அண்ணாநகர்

சென்னை–600 040. 2005.

## பாட அறிமுகம்

**அன்பிற்குரிய மாணவர்களே!**

தமிழ் இலக்கியம் பயில்வதில் பேரார்வம் கொண்ட தங்களைப் பெருமகிழ்ச்சியோடு பெரியார் பல்கலைக்கழகத் தொலை தூரக்கல்வி நிறுவனத்தின் சார்பாக வரவேற்கின்றேன்.

உலக நாடுகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வரலாறு உண்டு. அதைப் போல தமிழகத்திற்கும் ஒரு பழம் பெரும் வரலாறு உண்டு; பண்பாடு உண்டு; தமிழ் ஆராய்ச்சியாளர்கள் தமிழ் வரலாறு, கல்வெட்டு, புதைபொருள், நாணயங்கள், வெளி நாட்டார் குறிப்புகள், சிறப்பாகத் தமிழ் இலக்கியங்கள் ஆகியவற்றைச் சான்றுகளாகக் கொண்டு தமிழக மக்களின் வரலாற்றையும் நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளையும் எடுத்துக் காட்டியுள்ளனர். இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதே இப்பாடம்.

**தமிழக வரலாறும் பண்பாடும்** எனும் இப்பாடத்தில் ஐந்து அலகுகள் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் எளிய வகையில் கற்றுக் கொள்ளுமாறு (Self Instructional Materials) மாணவர்களாகியத் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அலகிலும் பல்வேறு பாடப்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பாடப்பிரிவிற்கு இறுதியிலும் தாங்கள் பயிற்சி பெறுவதற்குரிய வினாக்கள் தரப்பட்டுள்ளன.

மாணவர்களே! நீங்கள் செய்ய வேண்டியவை இவைதாம்:

1) பாடங்களை நன்றாகப் படியுங்கள்.
2) தமிழக வரலாற்றையும் பண்பாட்டையும் நன்றாக உள்வாங்கிக் கொள்ளுங்கள்.
3) குறிப்பெடுத்துப் பயில முற்படுங்கள்.
4) வினாக்களுக்கு விடையெழுதிப் பயிலுங்கள்.

வெற்றி உங்கள் கையில்!

வாழ்த்துகிறோம்.

## அலகு – 1

## வாழ்வியல் நெறிகள்

## பாடக்கருத்தலகுகள்

**1.0.** நோக்கம்

**1.1.** முன்னுரை

**1.2.** அரசியல் நிலை

**1.2.1.** சங்க இலக்கியத் தோற்றம் குறித்த சிந்தனைகள்

**1.2.2.** மூவேந்தர்களுக்குரிய பகுதிகள்

**1.2.3.** மூவேந்தர்களின் தோற்றம்

**1.2.4.** மூவேந்தர்களின் வேறு பெயர்கள்

**1.2.5.** இலக்கியங்களில் மூவேந்தர்கள்

**1.2.6.** அரசச் சின்னங்கள்

**1.2.7.** ஐம்பெருங்குழு

**1.2.8.** எண்பேராயம்

**1.2.9.** நகர ஆட்சியும் கிராம ஆட்சியும்

தன் மதிப்பீடு **– 1**

**1.3.** போர்முறை

**1.3.1.** போருக்கான காரணங்கள்

**1.3.2.** போர்க்கருவிகள்

**1.3.3.** பாசறைகள்

**1.3.4.** அரண்கள்

தன் மதிப்பீடு **– 2**

**1.4.** சமூக அமைப்பு

**1.4.1.** தொழில் அடிப்படையில் சமூகப் பிரிவுகள்

**1.4.1.1.** தச்சர்

**1.4.1.2.** கொல்லர்

**1.4.1.3.** குயவர்

**1.4.1.4** நெசவாளர்

**1.4.1.5.** வண்ணார்

**1.4.1.6.** உமணர்

**1.4.1.7.** பாணர், பறையர், துடியர், கடம்பர்

**1.4.2.** நில அடிப்படையில் சமூகப் பிரிவுகள்

**1.4.2.1.** குறிஞ்சி நிலக் குறவர்கள்

**1.4.2.2.** முல்லை நில ஆயர்கள்

**1.4.2.3.** நெய்தல் நிலப் பரதவர்கள்

1.4.2.4. மருத நில உழவர்கள்

1.4.2.5. பாலை நில எயினர்கள்

1.4.3. பிற சமூகப் பிரிவினர்

தன் மதிப்பீடு – 3

1.5. திருமண முறை

1.5.1. களவு வாழ்க்கை

1.5.1.1. உலகியல் வழக்கு

1.5.1.2. அலர்

1.5.1.3. இற்செறிப்பு

1.5.1.4. உடன்போக்கு

1.5.1.5. அறத்தொடு நிற்றல்

1.5.1.6. மடல் ஏறுதல்

1.5.2. கற்பு வாழ்க்கை

1.5.2.1. பொருத்தம் பார்த்தல்

1.5.2.2. பரிசமளித்தல்

1.5.2.3. திருமணச் சடங்குகள்

1.5.2.4. சிலம்பு கழித்தல்

1.5.2.5. மலரணிதல்

தன் மதிப்பீடு – 4

1.6. வணிகமுறை

1.6.1. மேலை நாட்டு வாணிகம்

1.6.2. உள் நாட்டு வாணிகம்

1.6.3. உமணர்கள்

1.6.4. வம்பலர் கூட்டம்

1.6.5. அங்காடிகள்

தன் மதிப்பீடு – 5

1.7. உணவு–உடை–உறையுள்

1.7.1. உணவு

1.7.2. உடை

1.7.3. உறையுள்

தன் மதிப்பீடு – 6

1.8. அணிகலன்கள்

1.8.1. குழந்தைகளின் அணிகலன்கள்

1.8.2. மகளிர் ஒப்பனை முறை

1.8.3. ஆடவர் ஒப்பனை முறை

தன் மதிப்பீடு – 7

**1.9.** கல்வி நிலை

**1.9.1.** சங்கப் புலவர்கள்

**1.9.2.** தமிழிலக்கியங்களில் கல்வி

**1.9.3.** கல்வி நிறுவனங்கள்

தன் மதிப்பீடு – **8**

**1.10.** பொழுது போக்குகள்

**1.10.1.** புனலாடுதல்

**1.10.2.** குளித்து மணல் எடுத்தல்

**1.10.3.** வேட்டையாடுதல்

**1.10.4.** இசையும் கூத்தும்

**1.10.5.** வீர விளையாட்டுகள்

**1.10.6** வட்டாடல்

**1.10.7.** பந்தாடுதல்

**1.10.8.** கழங்காடுதல்

**1.10.9.** ஊசலாட்டம்

**1.10.10.** ஓரையாடுதல்

**1.10.11.** வண்டலிழைத்தல்

**1.10.12.** முக்காற் சிறுதேர்

**1.10.13.** கிலிகிலியாடல்

**1.10.14.** கோழிப் போர்

**1.10.15.** ஏறுதழுவல்

தன் மதிப்பீடு – **9**

**1.11.** நம்பிக்கைகள்

**1.11.1.** கோள் பற்றிய நம்பிக்கை

**1.11.2.** பல்லி பற்றிய நம்பிக்கை

**1.11.3.** பறவைகள் பற்றிய நம்பிக்கை

**1.11.4.** நற்சொல் பற்றிய நம்பிக்கை

**1.11.5.** உன்னமரம் பற்றிய நம்பிக்கை

**1.11.6.** கண், தோள் பற்றிய நம்பிக்கை

**1.11.7.** கனவு பற்றிய நம்பிக்கை

**1.11.8.** வெள்ளி மீன் பற்றிய நம்பிக்கை

**1.11.9.** எரிகோள் பற்றிய நம்பிக்கை

**1.11.10.** பேய் பற்றிய நம்பிக்கை

தன் மதிப்பீடு – **10**

1.12. அற நெறிகள்

1.12.1. அறத்தின் பயன்

1.12.2. அறத்தின் வகைமை

1.12.2.1. இன்பம் கண்டு வாழ்தல்

1.12.2.2. இன்னா செய்யாமை

1.12.2.3. பிறருக்கு உதவுதல்

1.12.2.4. எண்ணம் உயர்வாதல்

1.12.2.5. பண்புடைமை

1.12.2.6. கொடையறம்

1.12.2.7. நட்பறம்

1.12.2.8. வாழ்க்கையறம்

1.12.2.9. செய்நன்றி மறவாமை

1.12.2.10. பிறர் துன்பத்திற்கு அஞ்சுதல்

1.12.2.11. மனம் பற்றிய அறம்

1.12.3. நல்லறத்திற்கு ஆகாதவை

தன் மதிப்பீடு – 11

1.13. தொகுப்புரை

# அலகு – 1

# வாழ்வியல் நெறிகள்

## 1.0. நோக்கம்

- ❖ சங்க காலத் தமிழக அரசியல் நிலை குறித்து அறிந்து கொள்ளல்.
- ❖ சங்ககால மன்னர்களுக்கிடையே நடந்த போர்முறைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளல்.
- ❖ பண்டைச் சமூக அமைப்பினை இலக்கியங்களின் வழி அறிதல்.
- ❖ சங்ககாலத் தமிழரின் அக, புற வாழ்க்கை நிலைகளை உணர்ந்து கொள்ளல்.
- ❖ தமிழர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மேற்கொண்ட வாணிகத் தொடர்பினை அறிந்து கொள்ளல்.
- ❖ பண்டைத் தமிழரின் உணவு, உடை, உறையுள், அணிகலன் நிலத்திற்கு ஏற்ப மாறுபட்டிருப்பதை உணர்ந்து கொள்ளல்.
- ❖ சங்க இலக்கியங்களின் வாயிலாகப் பண்டைக் கல்வி நிலையை அறிதல்.
- ❖ பொழுது போக்கு, நம்பிக்கை, அறம் இவற்றின் வாயிலாகத் தமிழரின் பண்பாட்டு வரலாற்றை அறிதல்.

## 1.1. முன்னுரை

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டனவாக வரலாற்று அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டவை சங்க நூல்களாகும். இந்நூல்களின் வாயிலாகவே அக்காலத்து அரசியல் பண்பாட்டு வரலாற்றினை நம்மால் அறிந்து கொள்ளவியலும். சங்க நூல்கள் தரும் செய்திகள் அண்மைக்காலத் தொல்பொருள் ஆய்வுகளின் முடிவுகளாலும் சங்க காலத்தை ஒட்டிய காலங்களில் வாழ்ந்த கிரேக்க உரோம ஆசிரியர்கள் எழுதிய குறிப்புகளாலும் உறுதி செய்யப்படுகின்றன. எனவே, சங்க இலக்கியங்களைக் கொண்டும், சில ஆய்வாளர்களின் ஆய்வுமுடிவுகளைக் கொண்டும் அதன் காலத்தையும் அரசியல் நிலையினையும் சுருக்கமாகக் காண்போம்.

## 1.2. அரசியல் நிலை

### 1.2.1. சங்க இலக்கியத் தோற்றம் குறித்த சிந்தனைகள்

ஐரோப்பிய வரலாற்று அறிஞர்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இலக்கியங்கள் தமிழில் இல்லை என்று தவறாகக் கருதினர். ஆனால் பின்னாளில் எழுந்த வரலாற்று நூல்களைக் கொண்டு உண்மையை உணர்ந்தனர்.

1. கனகசபைப்பிள்ளை 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்' என்னும் நூலை எழுதி, ''தமிழர்களின் முதன்மையானவும் மிக விழுமியனவுமான இலக்கியங்கள் யாவும் கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டனவாகத் தோன்றுகின்றன..... சில பழைய நூல்கள் ஐயத்திற்கிடமின்றி ஈராயிரமாண்டுகட்கு முற்பட்டவை'' என்கிறார்.
2. வி.ஏ.சுமித் என்பவர் 'இந்தியாவின் பழைய வரலாறு' என்னும் நூலை எழுதினார். அவர் ''தமிழின் மிகச் சிறந்த செய்யுட்கள் மிகப் பழைமையானவை என்று அறிஞர்கள் கூறுவது சரியே. தமிழிலக்கியத்தின் பொற்காலம் கிறித்துவ ஊழியின் முதல் மூன்று நூற்றாண்டுகட்கு உரியதாகும்'' என்கிறார்.

3. வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் சங்கத்தின் தோற்றம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு என்றார். அதன் இறுதிக்காலம் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு என்றும் வரையறுத்துள்ளார். கே.ஆர். சீனிவாச ஐயங்காரும் இக்கருத்தினை ஏற்றுக் கொண்டுள்ளார்.

4. சங்க நூல்கள் தரும் செய்திகளும், கிறித்துவ ஊழியின் தொடக்க காலத்தினரான தாலமி, பிளினி, ஸ்ட்ராபோ, பெரிப்புளூசின் குறிப்புகளும் ஒத்துள்ளன. இவர்கட்கு மூன்று நூற்றாண்டுகட்கு முற்பட்டவரான மெகஸ்தனீசு பாண்டிய நாடு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

5. மௌரிய நாட்டையாண்ட அசோகருடைய கல்வெட்டுக்களில் சேர, சோழ, பாண்டியர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

6. சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாகக் கூறுகின்றன. ‘‘வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு’’ என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இதே பொருளைச் சங்க நூல்களும் பல இடங்களில் சுட்டுகின்றன.

### 1.2.2. மூவேந்தர்களுக்குரிய பகுதிகள்

- இன்றைய சித்தூர், வடவார்க்காடு, சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் அடங்கிய பகுதிகள் சோழர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளாகும். இதில் சித்தூரும், வடஆற்காடும், சென்னை–செங்கற்பட்டும் அடங்கியது தொண்டை மண்டலம் எனப்பட்டது.
- காவிரியின் தெற்குப் பகுதி முதல் ஆனை மலைக்குக் கிழக்குப்பகுதி, கீழைக் கடற்கரை வரையிலான பகுதி, தெற்கே குமரி ஆகிய பகுதிகள் வரையில் பாண்டிய நாட்டிற்குரிய பகுதிகளாகும்.
- இன்றைய கேரளப் பகுதியும், சேலம், கோவை மாவட்டங்களின் பகுதிகளும் சேர நாட்டிற்குரிய பகுதிகளாகும். சேலம், கோவை மாவட்டப் பகுதிகள் கொங்கு நாடெனவும் பெயர் பெற்றன.
- குடகு மலைப்பகுதி, நீலமலைப்பகுதி, தென்கன்னடப் பகுதி ஆகியவை கோசர்களால் ஆளப்பட்டன. மைசூரின் தென்பகுதியும் மையப் பகுதியும் கங்கர்களால் ஆளப்பட்டன.

### 1.2.3. மூவேந்தர்களின் தோற்றம்

- மூவேந்தர்கள் எப்போது தோன்றினார்கள் என்று கூறுவது எளிதன்று. அவர்கள் பழைய அரச மரபினர் என்பர்.
- வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத்திரம், அசோகர் கல்வெட்டு ஆகியவை இவர்களைப் பற்றிப் பேசுவதால் இவர்கள் கிறித்துவுக்குப் பன்னெடுங் காலம் முற்பட்டவர்கள் என்று கொள்ளலாம்.
- தமிழில் கோன், கோ என்னும் சொற்கள் அரசனையும், ஆயர்களையும் சுட்டுகின்றன. அரசன் செங்கோலைத் தாங்கியதைப் போலவே ஆயனும் கோலை வைத்துள்ளான். எனவே, முல்லை நிலத்தில்தான் முதன்முதல் அரசமுறைத் தோன்றியிருக்க வேண்டும் என்கிறார் பி.தி.சீனிவாச ஐயங்கார். (நூல்: தமிழர் வரலாறு)
- போரில் வெற்றி பெற்ற கூட்டத்தின் தலைவன் **கோன்** ஆகியிருப்பான். அவனே அமைதிக் காலத்திலும் கூட்டத்தின் தலைவனாகியிருப்பான்.

எனவே **கோன்மை** நிறுவப்பட்டிருக்கும். குறிஞ்சி, மருதம் பகுதியில் இவ்வாறே தலைமை உருவாகியிருக்க இடம் உண்டு.

- ❖ மலைப்பகுதியில் வேட்டைக்காரர்கள் தமக்குள் வலிமையுள்ள ஒருவனைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். சேர நாட்டு வேந்தர்கள் வில்லைத் தன் சின்னமாகக் கொண்டிருத்தலால் அங்கே வேட்டுவர்களின் அரசு உருவாகியிருக்கலாம் என்பார் டாக்டர்.சுப்பிரமணியம்.

### 1.2.4. மூவேந்தர்களின் வேறு பெயர்கள்

- ❖ சேரர்களை வானவர், வில்லவர், குடவர், குட்டுவர், பொறையர், மலையர் எனப் பலவாறு குறிப்பர். **வானவர்** என்ற சொல்லுக்கு **மேலுலகத்தவர்** என்று பொருள். குட்ட நாட்டையாண்டவர் **குட்டுவர்** எனப்பட்டனர். குடநாட்டுக்குரியவர் குடவராயினர்.
- ❖ சோழர்களைச் சென்னி, செம்பியன், வளவன், கிள்ளி எனக் குறிப்பர். **சென்னி** என்பது தலைமையைக் குறிக்கும். சிபியின் மரபினர் **செம்பியர்** ஆயினர் என்பார் நீலகண்ட சாஸ்திரியார். வளமான நாட்டை ஆண்டதன் காரணமாக **வளவர்** ஆயினர். 'தோண்டுதல்' என்னும் பொருளில் **கிள்ளி** என்பது அமைந்திருக்கலாம் என்பார் திரு.சாத்திரியார்.
- ❖ பாண்டியர்களை மீனவர், கவுரியர், பஞ்சவர், தென்னர், செழியர், மாறர், வழுதி என்றழைப்பர். **மீனவர்** என்பது அவர்கள் பரதவர்களாக இருந்திருக்கலாம் என்பதை உணர்த்துகின்றது. பின்னால் மீன்கொடியை உடையவர் என்றும் பொருள்பட்டது. **கவுரியர்** என்பது மீனாட்சியை வணங்குபவர் என்னும் பொருளில் அமைந்தது. **பஞ்சவர்** என்பது பாண்டவ கௌரவர்களோடு தொடர்புப்படுத்த எழுந்த பெயராகலாம் என்றும், தென்பகுதியை ஆண்டதால் **தென்னவர்** என்றும், வளமான நாட்டை உடையவர் என்பதால் **செழியர்** என்றும் கூற்றுவன் என்னும் பொருளைக் குறிக்கும் விதமாக **மாறர்** என்றும் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பார் திரு.சுப்பிரமணியம்.

### 1.2.5. இலக்கியங்களில் மூவேந்தர்கள்

- ❖ அரசனைக் கோ, மன்னன், வேந்தன், கொற்றவன் எனும் பல்வேறு சொற்களில் குறித்தனர். இதன் பொருள்:

  கோ–தலைவன்

  மன்னன்–நிலையான புகழை உடையவன்

  வேந்தன்–முடிவேந்தன்

  கொற்றவன்–வெற்றியை உடையவன்

என்பதாகும்.

- ❖ தந்தைக்குப் பின்னர் மூத்த மகன் பட்டம் பெறுவது என்பது அன்றைய மரபு. அரசுக்குரியவன் கோமகன் என்றழைக்கப்பட்டான். அரசாள்வதற்குரிய இளையவர்கள் **இளங்கோ** எனப்படுவர். இளஞ்சேரல், இளஞ்செழியன், இளவிச்சிக்கோன், இளகோசர் என்னும் இலக்கிய வழக்கினையும் காணலாம். இவர்கள் நாட்டின் சிலபகுதிகளை மேற்பார்வையிடும் உரிமை பெற்றிருந்தனர். சேர நாட்டில் மகள்வழியுரிமை (நாட்டை ஆளும் உரிமை) இருந்ததாகக் கூறுவர்.
- ❖ மன்னன் இன்ன வயதில் தான் முடி சூட வேண்டும் என்ற வரையறை இல்லை. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

ஐம்படைத்தாலி அணிந்த பருவத்திலே முடிசூடியுள்ளான். கரிகாலனும் இளமையிலேயே முடிசூடினான் என்று பழமொழி (பாடல்.21) குறிப்பிட்டுள்ளது.

- ❖ மன்னனின் முடிசூட்டு விழாவினை மக்கள் ஆண்டு தோறும் கொண்டாடினர். அவ்விழா **மண்ணுமங்கலம்** எனப்பட்டது. பிறந்த நாள் விழா **நாண்மங்கலம்** எனப்பட்டது.
- ❖ உறையூரிலிருந்த **அவை** நீதிக்கும் அறத்திற்கும் பெயர் பெற்றதாக இருந்தது என்ற செய்தியை நற்றிணையும் (பா.400), புறநானூறும் (பா.39) கூறுகின்றன. அவையில் இசை நாட்டியம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.
- ❖ புலவர்கள், அறிஞர்கள், அதிகாரிகள் போன்றோர் அரசனைச் சூழ்ந்திருந்தனர். ஆசான், அமைச்சர், தானைத்தலைவர் ஆகியோரும் அரசவையில் இருந்தனர்.
- ❖ பொதுவாக அவையோர்க்கு இருக்க வேண்டிய பண்புகள் எட்டு என்பர். அவை நற்குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, தன்னலமின்மை என்பனவாகும். ஈகை மன்னர்களுக்குரிய பெரிய கடமையாகக் கொள்ளப்பட்டது. பாணர், கூத்தர், விறலியர், புலவர் போன்றோர்க்கும் மன்னர்கள் பொருளை வாரி வழங்கியுள்ளனர்.
- ❖ மன்னர்கள் பொதுவாகக் கல்வியறிவில் சிறந்து விளங்கியுள்ளனர். கோப்பெருஞ்சோழன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், இளம் பெருவழுதி, கணைக்கால் இரும்பொறை, நல்லுருத்திரன் போன்றோர் பாடிய பாடல்கள் சங்க நூல்களில் இடம் பெற்று அணி செய்துள்ளன.
- ❖ மன்னர்கள் சிலர் மானம் அழிய வந்த போது உண்ணாதிருந்து உயிர் விட்டனர். சேரன் கணைக்கால் இரும்பொறையைச் சோழன் செங்கணான் சிறை வைத்தபோது பகைவர் தரும் நீரை உண்ண விரும்பாது உயிர் விட்டதையும், வெண்ணிப் பறந்தலையில் கரிகாலனிடம் தோற்றப் பெருஞ்சேரலாதன் புறப்புண் நாணி உயிர் விட்டதையும் சான்றுகளாகக் கொள்ளலாம்.

### 1.2.6. அரசச் சின்னங்கள்

படைக்கலம், கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், மாலை, முடி ஆகியவை அரசச்சின்னங்கள் என்று தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது.

- ❖ போர்க்களத்தில் கொடி உயரப்பறக்கும். அது **வெல்கொடி** என்றழைக்கப்பட்டுள்ளது (பதிற்றுப்பத்து: 44). பெரிய யானையின் மேல் கொடி எடுத்துச் செல்லப்பட்டது (புறநானூறு:9). நல்லநாளிலே கோட்டையில் கொடியேற்றிய நிகழ்ச்சியையும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. (சிலம்பு. 15: 217)
- ❖ **குடை** தூய வெண்ணிறமும், வட்ட வடிவமும் கொண்டது என்று புறநானூறும் சிலம்பும் பகரும். (பாடல்:3; சிலம்பு 28:1–2)
- ❖ **முரசு** புனிதமானதாகக் கருதப்பட்டது. கழுவி, எண்ணெய் பூசி, மயிற்பீலியும் மாலையும் சூட்டி அதனைப் பாதுகாப்பர். அது வைக்கப்படும் கட்டிலில் யாரும் அமர்தல் குற்றமாகும். மோசிக்கீரனார் அறியாது அதில் படுத்ததற்காக வருந்தியதாகப் புறநானூறு பேசுகின்றது.
- ❖ காவல் தொழிலுக்குரியது **ஏமமுரசு** என்றழைக்கப்பட்டது. (கலித்தொகை: பா.79) பாசறையில் இம்முரசு முழங்கப்பட்டுள்ளது.

- **மாலை** மன்னர்களுக்கேற்ப மாறுபட்டிருந்தன. சோழர்களுக்கு ஆத்திமாலையும், சேரர்களுக்குப் பனைமாலையும், பாண்டியர்களுக்கு வேம்புமாலையும் அடையாள மாலைகளாகும்.

- **வாள்** மன்னனின் வீரத்திற்குரிய சின்னமாகும். மன்னனை **வாளேர் உழவன்** என்று பொருநராற்றுப்படை (வரி:368) கூறியுள்ளது. நல்ல நாளிலே வாளினை எடுத்துச் செல்ல வேண்டிய திசையில் செலுத்தும் நிகழ்ச்சியை **வாள் நாட்கோள்** என்பர்.

- மன்னர்கள் தம் குடியைக் காக்கும் மரம் என்று நம்பியது **காவல் மரம்** என்றழைக்கப்பட்டது. அது **கடிமரம்** என்றும் அழைக்கப்படும். (புறநானூறு:57, 162) பழையன் என்பவன் வேம்பினைக் காவல் மரமாகக் கொண்டிருந்தான். (பதிற்றுப்பற்று: 44) பகையரசர்கள் தம் யானையை அதில் கட்டினால் அம்மன்னனை இழிவு செய்வதாகக் கருதப்பட்டது. (புறநானூறு:162)

### 1.2.7. ஐம்பெருங்குழு

- சிலம்பு, மணிமேகலை, மதுரைக்காஞ்சி போன்ற இலக்கியங்களில் ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் குறிக்கப்பட்டுள்ளன.

- கனகசபைப்பிள்ளை என்பவர் மன்னனின் அதிகாரங்கள் இந்த ஐம்பெருங்குழு, எண்பேராய அவைகளால் கட்டுப்படுத்தப்பட்டதாகக் கூறியுள்ளார்.

- ஐம்பெருங்குழுவில் மக்களின் பிரதிநிதிகள், புரோகிதர், மருத்துவர், சோதிடர், அமைச்சர் ஆகியோர் இருந்தனர். மக்கள் உரிமைகளை இக்குழுவே காத்தது.

- எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார் ஐம்பெருங்குழு என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட மக்கள் குழு என்றும், இவர்களை மன்னனே தேர்ந்தெடுத்தான் என்றும், இவர்கள் மன்னனின் நிலையான அவையினர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

- நச்சினார்க்கினியர் ஐம்பெருங்குழுவைப் பற்றி விளக்குகையில் அமைச்சர், புரோகிதர், சேனாதிபதி, தூதர், ஒற்றர் ஆகியோர் ஐம்பெருங்குழுவில் இடம் பெற்றனர் என்கிறார்.

### 1.2.8. எண்பேராயம்

- நச்சினார்க்கினியர் எண்பேராயத்தில் 1. கரணத்தியலவர் (கணக்கர்) 2.கருமக்காரர் (செயலர்) 3. கனகச் சுற்றம் (கருவூல அதிகாரி) 4. கடை காப்பாளர் (அரண்மனைக் காவலர்) 5. நகரமாந்தர் (முதியோர்) 6.படைத்தலைவர் (காலாட் படைத்தலைவர்) 7. யானை வீரர் (யானைப் படைத்தலைவர்) 8. இவுளி மறவர் (குதிரைப் படைத்தலைவர்) போன்றோர் இருந்தனர் என்பார்.

- சாந்து, நெய், பூ, கச்சு, ஆடி, பாக்கு, இலை, கஞ்சுகம் என்னும் எண்பொருள்களை ஏந்தி நின்றவர்களே எண்பேராயம் என்று சிலம்பின் பழைய உரை ஒன்று குறிப்பிட்டுள்ளது. இவர்கள் ஏவலர்களே அன்றி அதிகாரிகள் அல்லர்.

- இவ்விரு குழுக்களிலும் இருந்தவர்கள் தனித்தனியாகச் சிலபொறுப்புகளைப் பெற்றிருந்தனர் என்பதும், இவர்களை மன்னன் கலந்து செயல்பட்டிருக்கலாம் என்பதும், மன்னனுக்கு இவ்விரு குழுக்களும் கட்டுப்பட்டவர்கள் என்பதும் அறிஞர்களின் கருத்து ஆகும்.

- ஐம்பெருங்குழு, எண்பேராயத்தில் பணியாற்றிய இப்பணியாளர்களைத் தவிர, சிலம்பின் வாயிலாகவும் பல்வேறு பணியாளர்களை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.
    - அரண்மனைப் பணியாளர்கள் உரிமைச்சுற்றம் எனப்பட்டனர். (சிலம்பு, 4:153)
    - ஊமைகள் மன்னனுக்குப் பணி செய்தனர். மன்னன் உலவுகையில் கையில் விளக்குடன் சென்றனர். (சிலம்பு, 28:153)
    - மேலும், அறக்களத்து அந்தணர், தந்திர வினைஞர் (செயலர்), கரும வினைஞர் (சமயம்), ஆயக்கணக்கர் (வரி வாங்குவோர்) என்ற பிரிவினரும் இருந்துள்ளனர். (சிலம்பு, 28:205)

### 1.2.9. நகர ஆட்சியும் கிராம ஆட்சியும்

- மன்னனுக்கு அளவுக்கு அதிகமான அதிகாரம் இருப்பினும், அவனது அதிகாரத்தைச் செலுத்த இயலாத அளவிற்கு நாட்டின் பரப்பு விரிந்து கிடந்தது. பெரும்பாலும் வரி பெறவும், அமைதி காக்கவுமே நாடு முழுவதும் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. அந்தந்தப் பகுதி மக்கள் தம்மிடையேயிருந்த சான்றோர் முதியோர் உதவியுடன் தமக்குரிய பணிகளைத்தாமே செய்து வந்தனர். இதுவே ஊராட்சி மன்றங்கள் உருவாகக் காரணமாயின.
- சிறு பகுதிகள் **சேரி** எனப்பட்டன. பார்ப்பனர்கள் வாழ்ந்த பகுதி **பார்ப்பனச்சேரி** என்றழைக்கப்பட்டது. **ஊர்** என்பது சிற்றூர், பேரூர் என்ற இரண்டையும் குறிக்கும். கடற்கரை நகர் **பட்டினம்** எனப்படும். அதன் பகுதி **பாக்கம்** என்று அழைக்கப்பட்டது.
- ஊரில் இருந்த **அவையை மன்றம், பொதியில், அம்பலம்** என்றனர். **மன்றம்** என்பது மரத்தடியாகும். அஃது ஊர் மக்கள் கூடுமிடமாகும்.
- **பொதியில்** என்பது உயர்ந்த மேடையில் அமைந்த சிறு கட்டிடம் என்பர்.
- **அம்பலம்** என்பது வழிப்போக்கர் தங்குமிடம் என்று மலைபடுகடாம் (வரி:492) உரையில் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுச் செல்கிறார்.
- **பொதியில்** என்பது ஊருக்கு முன்னால் இருப்பதாகும். **முன்னூர்ப் பொதியில்** என்று புறநானூறு குறிப்பிட்டுள்ளது (பாடல்:390). இப்பொதியில் மேடையைப் பெண்கள் சாணமிட்டு மெழுகினர் என்று பட்டினப்பாலை (வரி:246–249)யும் விளக்கியுள்ளது.
- இவ்வமைப்புகள் அனைத்தும் மக்கள் ஓய்வு பெறவும், சமயக் கொண்டாட்டங்கள் நிகழ்த்தவும், ஆக்கப்பணிகள் பற்றிச் சிந்திக்கவும், நீதி விசாரணை செய்யவும் பயன்பட்டன.
- அக்காலத்தில் மண்டலப்பிரிவு இருந்தது. தொண்டை மண்டலமும், கொங்கு மண்டலமும் பிற்காலத்தில் ஏற்பட்டன.
- மண்டலங்களுக்குக் கீழே நாடு, கூற்றம் என்னும் இரு பிரிவுகள் இருந்தன. புகார், மதுரை, வஞ்சி, கொற்கை முதலியன பெரிய நகரங்களாக இருந்தன. பெரு நகரங்களை நெடுஞ்சாலைகள் இணைத்தன.
- அரசியலில் பொதுவாக மூன்று பேரரசர்கட்கும் இடையே போர் நிகழ்ந்த வண்ணமேயிருந்தது. அரசர்களைத் தவிர குறுநில மன்னர்கள் பலர் இருந்துள்ளனர்.

- ❖ தகடூரை அதியமானும், முதிர மலையைக் குமணனும், பொதினி மலையைப் பேகனும், தோட்டி மலையை நள்ளியும், கொல்லி மலையை ஓரியும், முள்ளூர் மலையைக் காரியும், பறம்பு மலையைப் பாரியும் அரண்களாகக் கொண்டு ஆண்டனர். இவர்கள் குறுநில மன்னர்களாவர்.
- ❖ மோரியர், ஆரியர், யவனர் ஆகியோர் தமிழக அரசியலில் தலையிட்டுள்ளனர். அரசியலில் ஒற்றுமையின்மை நிலவியதால் தான் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட களப்பிரர் படையெடுப்பினைத் தமிழரசர்களால் தடுத்து நிறுத்த இயலவில்லை.
- ❖ ஒரே காலத்தில் சிற்றரசுகளும் பேரரசுகளும் நிலவிய நிலை தமிழகத்தின் அரசியலில் நிலவிய சிறப்புப் பண்பாகும்.

**தன்மதிப்பீடு–1**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. சங்க இலக்கியத் தோற்றம் குறித்த சிந்தனைகளைச் சுருக்கி எழுதுக.
2. மூவேந்தர்க்குரிய பகுதிகள் யாவை ?
3. மூவேந்தர்களின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
4. அரசச் சின்னங்கள் குறித்து எழுதுக.
5. ஐம்பெருங்குழுக்கள், எண்பேராயம் – குறிப்பு வரைக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. நகர ஆட்சியும், கிராம ஆட்சியும் பற்றி விளக்குக.
2. சங்க கால வேந்தர்களைப் பற்றிக் கட்டுரை வரைக.

### 1.3. போர்முறை

சங்க காலத்தில் தமிழகம் மூன்று பேரரசர்களாலும், பல குறுநில மன்னர்களாலும் ஆளப்பட்டது. அவர்களுக்குள் போர்கள் நிகழ்ந்த வண்ணமிருந்தன. இப்போர்கள் எற்பட்டதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

#### 1.3.1. போருக்கான காரணங்கள்

1. எல்லைகள் சரியாக வரையறுக்கப்படாமையால் எல்லைப்போர்கள் தோன்றின.
2. மன்னர்கள் மண்ணாசையின் காரணமாகவும், புகழின் காரணமாகவும் போரை ஏற்படுத்திக் கொண்டனர்.
3. பெரிய நாட்டை ஆள வேண்டும் என்ற பேராசையும் போருக்குக் காரணமாயிற்று.
4. மகட்கொடை மறுப்பும் (ஓர் அரசன் தனது பெண்ணைப் பகை மன்னனுக்குத் தர மறுத்தல்) போருக்குக் காரணமாயின எனலாம்.

- ❖ போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் நட்டுத் தெய்வமாக வணங்கியுள்ளனர்.
- ❖ மூவேந்தர்கள் ஒருவரையொருவர் பகைத்துக் கொள்வதை இயல்பென்று புலவர்கள் கருதினர். போர் செய்ய இருந்த இருபெருஞ் சோழர்கட்குக் கோவூர்கிழார் அறிவுரை கூறியதையும் (புறநானூறு: 45) அறியலாம்.
- ❖ தமிழகத்தில் மறவர், எயினர், மழவர், மல்லர் என்னும் மறக்குடியினர் இருந்தனர்.

❖ இக்குடியினரில் பெண்டிரும் வீரமிக்கோராவார். தாயொருத்தி அடுத்தடுத்து நடந்த போர்களில் கணவனையும், அண்ணனையும் இழந்தும் மனம் கலங்காது இளைய வயது மகனையும் போருக்கனுப்பினாள் என்ற செய்தியைப் புறநானூறு (பாடல்:279) கூறுகிறது.

❖ போரின் தொடக்கத்தில் பகைவர் நாட்டிற்குள் புகுந்து அவர்களுக்குரிய ஆக்களைக் கவர்ந்து வருதலும் உண்டு. போருக்குரிய காரணங்களில் ஆநிரைகளைக் கவர்தலும் ஒன்றாகும். ஆக்கள் அன்று பொருளாதாரத்தில் தனியிடம் வகித்தன.

❖ நச்சினார்க்கினியர் தமிழர் போரில் தோற்ற கோழைகளையும், படைக்கருவிகளை நழுவ விட்டவரையும், படை எடாதோரையும் தமிழ் வீரர் கொல்லார் என்கின்றார்.

❖ மதுரையை அழித்த கண்ணகியும் தீக்கடவுளை ஏவும்போது பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி இவர்களை விட்டு விட்டுத் தீயோரை மட்டும் அழித்ததாக இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். எனவே போரில் நல்லவர்களை அழிக்கலாகாது என்பது தெரியவருகின்றது.

❖ ஆக்கள், பார்ப்பார், பெண்கள், பிள்ளைப் பேறில்லாதவர், நோயாளர், முதியோர், அறிஞர், புலவர் போன்றோர் போரினால் துன்புறலாகாது என்று தமிழர்கள் கருதி போரில் அறநெறி காத்தனர்.

❖ புறத்திணையியலில் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், காஞ்சி என்னும் ஏழு நிலைகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுவார். இவற்றில் முதல் நான்கும் போருக்கு உரியன. வாகை, பாடாண், காஞ்சி போரொடு மட்டுமின்றிப் பிற செயலுக்கும் உரியவை.

### 1.3.2. போர்க்கருவிகள்

❖ போர்க்காலங்களில் வேலும் வாளும் வில்லும் போர்க்கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு வடிவுடையனவாக வாளும் வேலும் விளங்கின. **அம்பு** கணை, கோல், பகழி என்ற சொற்களால் அழைக்கப்பட்டுள்ளது. வாளும் வேலும் **எஃகம்** எனப்பட்டன.

❖ வீரர்கள் தமது வாளையும் வேலையும் தாமே தீட்டினர். குறுந்தொகையில் அம்புகளைத் தீட்டுவது **பகழி மாய்த்தல்** என்று கூறப்படுகிறது (குறுந்தொகை : 12).

❖ தற்காப்புக் கருவியாகக் **கேடயம்** இருந்தது. இக்கருவி கிடுகு, பலகை, தோல் எனப் பலவாறு அழைக்கப்பட்டது. தோலாலும், இரும்பாலும் இது செய்யப்பட்டது.

❖ வீரர்கள் தங்களது **வேல்**களைப் புலித்தோல் உறையில் வைப்பர். (புறநானூறு : 323) **அம்புகள்** வைக்கும் தூணி அம்பறாத்தூணியாகும்.

❖ போரின்போது **சங்கு** முழங்குவதுண்டு. போர்க்காலங்களில் போர் **முரசு** இடியென முழங்கும். வென்றவன் பகைவனுடைய முரசைக் கைப்பற்றுவது பெருமைக்குரியதாகக் கருதப்பட்டது.

❖ படைக்கருவிகள் படைக்கலக் கொட்டிலில் நெய் பூசப்பட்டு, மலர் சூட்டப்பெற்று மயில் பீலி சூட்டப்பட்டுக் காவலுடன் வைக்கப்பட்டன. (புறநானூறு : 95)

- ❖ மதில்களின் வாயில் கதவுகளைப் பெரிய மரங்களைக் கொண்டு தாழிட்டனர். அது **கணையமரம்–ஏழு** எனப்பட்டது. பகைவர் படையெடுத்து வருவதை அறிந்தால் மதிற்கதவுகளைச் சாத்தி எழுவினை இடுவர். (புறநானூறு : 98)
- ❖ போரிட இயலாத போது அதன் அறிகுறியாகக் **குடையைத்** தாழ்த்தினர் என்ற (புறநானூறு : 387) குறிப்பு நீக்குக.

### 1.3.3. பாசறைகள்

- ❖ போர்க்காலங்களில் மன்னர்கள் பாசறையில் தங்கியிருப்பர். அப்பாசறை கூதிர்பாசறை, வேனிற் பாசறை என்று இருவகைப்படும்.
- ❖ நல்ல காவல் சூழ்ந்த உயர்ந்த இடத்தில் பாசறை அமைக்கப்பட்டது. அங்கே இருந்த காவல் இருக்கைக்குப் **பார்வல் இருக்கை** என்றுபெயர். (மதுரைக்காஞ்சி : 231)
- ❖ பாசறை கடல் போலக் காட்சியளிக்கும். பாசறை மேல் வெண்குடை மதியம் போல் விரிந்திருந்தது.

  ''வெண்குடை மதியம் மேனிலாத் திகழ்தரக்

  கண்கூ டிறுத்த கடல்மருள் பாசறைக்

  குமரிப்படை தழீஇய கூற்று வினை ஆடவர்'' (புறநானூறு:294)

- ❖ பாசறையின் சுற்று மதில்கள் சுட்ட செங்கல்லால் ஆனது. **சுடுமண்ணோங்கிய நெடுநகர் வரைப்பு** என்று பெரும்பாணாற்றுப்படை இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளது.
- ❖ அரசனுக்காகத் தனியான கூடாரம் அமைக்கப்பட்டது. (முல்லைப் பாட்டு: 43) அது **படங்கு** எனப்பட்டது. (முல்லைப்பாட்டு: 37–40)
- ❖ இரவு நேரத்தில் வாளணிந்த பெண்கள் எண்ணெய் வார்த்து விளக்கை எரியவிடுவர். நாழிகைக் கணக்கர் குறுநீர்க் கன்னலைக் கொண்டு நேரத்தை அறிவித்தனர்.
- ❖ இரவு நேரத்தில் பாசறையில் இருந்த மன்னன் புண்பட்ட வீரர்களைக் கண்டு ஆறுதல் கூறினான் என்று நெடுநல்வாடை குறிப்பிட்டுள்ளது. (வரி:177–187)

### 1.3.4. அரண்கள்

- ❖ பல்வேறு அரண்கள் நாட்டுக்குக் காவலாக இருந்தன. நகரைச் சுற்றிக் **காட்டரண்** உண்டு. அது **மிளை** எனப்பட்டது.
- ❖ **கோட்டைகள்** விண்ணளவு உயர்ந்து நின்றன. இவற்றைச் சுற்றி ஆழமான **அகழிகள்** இருந்தன. அகழிகளில் முதலைகள் நீந்திக் கொண்டிருந்தன. **மதில்களை** இஞ்சி, புரிசை, அகப்பா என்று குறித்துள்ளனர்.
- ❖ கோட்டை மதிலின் உள் வட்டம் **அகப்பா** எனப்பட்டது. கோட்டைச் சுவர்கள் செம்பினால் செய்யப்பட்டன. வீரர்கள் உள்ளே நின்று போரிடும் இடம் **ஞாயில்** எனப்பட்டது.
- ❖ பகைவரின் **காவல்மரத்தை** வெட்டி அதனால் **முரசு** செய்து முழங்குவதும், **முடியைக்** கவர்ந்து அதனால் **கழல்** செய்து அணிதலும் பகைவரைச் சிறுமைப்படுத்தும் செயலாகக் கருதப்பட்டது.

எனவே, போர் என்பது தவிர்க்க இயலாத ஒன்று என்பதும், நால் வகை படைகள் இருந்தன என்பதும், அரண்களின் வாயிலாக நாட்டுக்குப் பாதுகாப்பு

ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்பதும் இலக்கியங்களின் வாயிலாக அறியப்படும் செய்திகளாகும்.

**தன்மதிப்பீடு–2**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. சங்க காலத்தில் போருக்கான காரணங்கள் யாவை ?
2. பண்டைத் தமிழரின் போர்க்கருவிகளைப் பற்றிக் குறிப்பிடுக.
3. பாசறை அமைப்பைக் கூறுக.
4. அரண்களின் இன்றியமையாமையை விளக்குக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. பண்டைக்காலப் போர்முறை குறித்து விரிவாக எழுதுக.
2. பாசறைகள், அரண்கள் – விளக்கி வரைக.

## 1.4. சமூக அமைப்பு

சங்ககாலச் சமூக அமைப்பினை இலக்கியங்களின் வழி உய்த்துணரலாம். சங்ககால மக்களோடு வடநாட்டிலிருந்து வந்து குடியேறிய வைதிகப் பிராமணரும் கலந்து வாழ்ந்தனர். வணிகத்தின் பொருட்டு கடலோரப் பகுதிகளில் குடியேறிய யவணரும் இருந்தனர். சமணரும் பௌத்தரும் கி.மு. 3 ஆம் நூற்றாண்டளவில் இங்கு வந்ததாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

மக்கள் சிற்றூர்களில் அவரவர்களுக்குரிய தொழில்களைச் செய்து வாழ்ந்து வந்தனர். புகார், வஞ்சி, மதுரை போன்ற பெரிய நகரங்களில் தொழில்கள் பெருகின. **அரசர், அந்தணர், வணிகர், வேளாளர்** எனும் நான்கு பிரிவினரும் சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்தனர். **குறிஞ்சி நிலத்தவர் குறவர் என்றும், முல்லை நிலத்தவர் ஆயர் என்றும், மருத நிலத்தவர் உழவர் என்றும் நெய்தல் நிலத்தவர் பரதர் என்றும், பாலை நிலத்தவர் எயினர்** என்றும் அழைக்கப்பட்டனர். மேலும், தச்சர், கொல்லர், குயவர், வண்ணார், நெசவாளர், உமணர், பறையர், பாணர், துடியர், கடம்பர், வேட்டுவர், கணியர், பரத்தையர் போன்ற வகுப்பினரும் வாழ்ந்தனர்.

### 1.4.1. தொழில் அடிப்படையில் சமூகப் பிரிவுகள்

#### 1.4.1.1. தச்சர்

- தச்சர்கள் மக்களுக்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்களையும், வண்டிகளையும், தேர்களையும் செய்து கொடுத்தனர். தேரினைச் செய்வது அன்றைய தச்சர்களின் தலையாயக் கடமையாக இருந்தது. அதியமானின் வலிமையைக் கூற வந்த ஔவையார்,

  ''வைகல் எண்டேர் செய்யும் தச்சன்
  திங்கள் வலித்த காலன் னோனே'' (புறநானூறு:87)

  என்று பாராட்டியுள்ளார்.

- ❖ பெரிய வண்டிகள் மட்டுமின்றிச் சிறார்கள் ஓட்டி விளையாடும் நடைவண்டிகளும் அக்காலத்தில் செய்யப்பட்டன. ‘தச்சன் செய்த சிறுமாவையம்’, ‘முக்காற் சிறுதேர்’ என்று அது வழங்கப்பட்டது.
- ❖ தமிழர்கள் கடல் வாணிபத்தில் மேம்பட்டிருந்தனர். பல்வேறு உருவங்களை உடைய படகுகளையும் தச்சர் செய்தனர். இவர்கள் ‘கலம்புணர் கம்மியர்’ என்று சிலப்பதிகாரத்தில் சுட்டப்படுகின்றனர்.
- ❖ வீடுகளுக்குரிய அழகிய தூண்களையும், வேலைப்பாடு மிக்க கதவுகளையும் செய்தனர். அரசர்களுக்காக அழகிய கட்டில்களைச் செய்து கொடுத்தனர்.

**1.4.1.2. கொல்லர்**

- ❖ தமிழர்கள் உலோகத் தொழிலில் மேம்பட்டிருந்தனர். இரும்பு செய் கொல்லரும், பொன் செய் கொல்லரும் தனித்தனியாகப் பேசப்படுகின்றனர்.
- ❖ போர்க்கருவிகள் செய்ய எண்ணற்ற கொல்லர்கள் தேவைப்பட்டனர். அவர்களைக் கொண்டு போர்க்கருவிகளும் செய்யப்பட்டன.
- ❖ கொல்லர்கள் இரும்பைக் காய்ச்சிச் சம்மட்டியால் அடித்தனர். இதனை,

  “கருங்கைக் கொல்லன் இரும்புவிசைத்து எறிந்த

  கூடத் திண்ணிசை” (பெரும்பாணாற்றுப்படை:437–449)

  என்ற வரிகளால் அறியலாம்.
- ❖ தமிழர்கள் அணிந்த எண்ணற்ற அணிகலன்களை இப்பொற்கொல்லர்களே உருவாக்கினர் என்பதோடு, அவர்கள் பொன்னை உரைத்துத் தரம் அறியப் பயன்படுத்திய கட்டளைக்கல் பல இடங்களில் சுட்டப்பட்டுள்ளன. கண்ணகியின் காற்சிலம்பின் வேலைப்பாடு ஒன்றே அக்காலக் கொல்லரின் கைத்திறனுக்குச் சான்றாகும்.

**1.4.1.3. குயவர்**

- ❖ பண்டை நாளில் மக்கள் மட்பாண்டங்களையே பெரிதும் பயன்படுத்தினர். சமைத்தலுக்கு மட்டுமின்றி உடல்களைப் புதைப்பதற்கும் தாழிகள் செய்யப்பட்டன.
- ❖ மண்பாண்டம் செய்வதற்குரிய கருவிகள் குறித்த குறிப்புகளும் இலக்கியங்களில் காணலாகின்றன.

  ‘அச்சுடைச் சாகாட்டு ஆரம்’ (புறநானூறு:256)
- ❖ பெரிய சூளைகளில் பானைகளும் பிற கலன்களும் சுடப்பட்டன என்பதற்குச் சான்றாக,

  “இருள் திணிந் தன்ன குரூஉத்திரள் பரூஉப்புகை

  அகலிரு விசும்பின் ஊன்றும் சூளை”(புறநானூறு:228)

  என்ற பாடலைக் குறிப்பிடலாம்.
- ❖ பெரிய தாழிகளில் சவங்கள் அடக்கம் செய்யப்பட்டன. அத்தாழிகள் செந்நிறமாக இருந்தன என்பதைப் புறநானூறு குறிப்பிடுகிறது.

  “கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த

  செவிசெஞ் சேவலும் பொருவலம் வெருவா” (புறநானூறு:238)

### 1.4.1.4 நெசவாளர்

அக்காலத்தில் தமிழ்நாட்டு ஆடைகளுக்கு வெளிநாடுகளில் நல்ல மதிப்பு இருந்தது. பருத்தி, பட்டு, உரோமம் முதலியவற்றால் ஆடைகள் நெய்யப்பட்டன.

- ❖ கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய இழைகளால் ஆடைகள் நெய்து வண்ணம் ஊட்டப்பட்டது. அதில் பல பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்டன.
- ❖ ஆடைகளின் ஓரங்களில் குஞ்சங் கட்டும் கலைஞர்களும் இருந்தனர்.
- ❖ ஆடைகளைப் புலத்தியர் வெளுத்துக் கஞ்சித் தோய்த்து மடித்தனர்.

### 1.4.1.5. வண்ணார்

ஆடைகளை வெளுக்கும் வண்ணார்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. வண்ணாருக்குக் **காழியர்** என்னும் பெயர் வழங்கப்பட்டது. (அகநானூறு:89) வண்ணாரப் பெண் **புலைத்தி** எனச் சுட்டப்படுகிறாள்.

- ❖ வண்ணார்கள் வறுமை உடையவர்களாக இருந்தனர். அவர்கள் களர் நிலத்தில் ஊற்றுக்கிணறுகளைத் தோண்டி துணிகளை வெளுத்தனர் என்பதைப் புறநானூறு,

  ''களர்ப்படு கூவல் தோண்டி நாளும்

  புலைத்தி கழீஇய தூவெள் எறுவை'' (புறநானூறு:311)

  என்று பாடியுள்ளது.

### 1.4.1.6. உமணர்

- ❖ இவர்கள் உப்பினை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு ஊர் ஊராகச் சென்று வணிகம் புரிந்த இனத்தோர் ஆவார். உமணர்களின் வாழ்வினைப் பெரும்பாணாற்றுப்படையும், சிறுபாணாற்றுப்படையும் விரிவாகக் கூறுகின்றன.
- ❖ உமணப்பெண்ணே வண்டியை ஓட்டிச் செல்லும் தன்மையுடையவளாக விளங்கினாள். ஆடவர்கள் மாடுகளை ஓட்டிக் கொண்டு நடந்து செல்லும் பொழுது மாடுகள் சோர்வுற்றால் நடுக்காட்டிலே அவற்றை விட்டு விட்டுச் செல்வாராம்.
- ❖ வழிப்போக்கில் உணவு சமைத்து உண்ணும் தன்மை உடையவராகவும் விளங்கினர்.
- ❖ உமணப் பெண்கள் தலையில் உப்பினைச் சுமந்து ''நெல்லும் உப்பும் நேரே ஊரீர் கொள்ளீரோ எனச் சேரி தோறும் நுவலும்'' இயல்புடையவராக விளங்கினர். (அகநானூறு:390)

### 1.4.1.7. பாணர், பறையர், துடியர், கடம்பர்

- ❖ பாணர், பறையர், துடியர், கடம்பர் என்பார் ஒருசேரப் **புலையர்** என்று வழங்கப்பட்டனர்.
- ❖ புறநானூறு ''பாணர், பறையன், துடியன், கடம்பன் இந்நான் கல்லது குடியும் இல்லை'' (புறநானூறு:335) என்று போர்ச் செயலோடு தொடர்புற்ற குடிகளாகப் பேசுகின்றது.
- ❖ பறையை முழங்கியவன் **பறையன்** என்றும், துடிக் கொட்டுபவன் **துடியன்** என்றும் **பாணர்** என்பார் யாழ் மீட்டி இசை பாடுபவர் என்றும் கூறப்படுவர். கடம்பன் என்பதன் பொருள் அறியப்படவில்லை.

- ❖ நாடோடிகளாக இவர்கள் மன்னர்களையும், வள்ளல்களையும் நாடிச் சென்றனர்.
- ❖ இவர்கள் வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டு ஆற்றுப்படை என்றொரு பாடல் வகை தோன்றியது.
- ❖ பெண்பாலரான விறலியர்க்கும் மன்னர்கள் பெரும் பொருளைக் கொடுத்துச் சிறப்பித்துள்ளனர்.
- ❖ பிறவியிலேயே இவர்கள் இழிந்தோராகக் கருதப்பட்டுள்ளனர். இவர்களை இழிசினர், இழிபிறப்பாளர், புலையர் என்று குறிப்பிட்டமையைப் புறநானூற்றுப் பாடல்கள் விளக்கிச் செல்கின்றன. சான்றுகள்:

  ''மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே'' (புறநானூறு: 289)

  ''இழிபிறப் பாளன் கருங்கை சிவப்ப'' (புறநானூறு: 170)

  ''துடியெறியும் புலைய'' (புறநானூறு: 287)

- ❖ இடுகாட்டில் செய்யும் சடங்குகளைப் புலையர்கள் செய்துள்ளனர்.

### 1.4.2. நில அடிப்படையில் சமூகப் பிரிவுகள்

சங்ககாலத்தில் நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாக வகைப்படுத்தினர். இவ்வகை நிலங்களின் அடிப்படையில் சமூகப் பிரிவுகள் விளங்கின. பழக்கவழக்கங்களும், தொழில்களும் வேறுபட்டிருந்தன.

#### 1.4.2.1. குறிஞ்சி நிலக் குறவர்கள்

- ❖ குறிஞ்சி நில மக்கள் **குறவர்களாவர்.** இவர்கள் பெரும்பாலும் வேட்டுவர்கள். **கானவர்** என்றும் அழைக்கப்பட்டனர். பெண்பாலர் **குறத்தி, கொடிச்சி** எனப்பட்டனர்.
- ❖ இவர்கள் தினை விதைத்து உண்டனர். மேலும், பன்றி இறைச்சி, உடும்பு இறைச்சி போன்றவற்றையும் உண்டனர். மூங்கில் அரிசியால் சமைத்த உணவைப் பலாக்கொட்டை மாவோடு கலந்து உண்டனர் என்பதை மலைப்படுகடாம் கூறியுள்ளது. (வரி:174–183)
- ❖ இவர்கள் வாழ்ந்த ஊர் **சிறுகுடி** என்றும் **குறிச்சி** என்றும் பெயர் பெறுகிறது. இவர்களுக்குரிய இறைவன் முருகன் ஆவான்.

#### 1.4.2.2. முல்லை நில ஆயர்கள்

- ❖ **ஆயர்கள்** என்பவர்கள் ஆடு மாடுகளை மேய்த்தனர். காட்டுப்பகுதியில் வாழ்ந்தனர். இடைமகன் ஒரே ஆடையை அணிந்தான் என்று பெரும்பாணாற்றுப்படை ''ஒன்றமர் உடுக்கைக் கூழார் இடையன்'' (வரி:175) என்று பாடியுள்ளது.
- ❖ இடையர் குலப் பெண்கள் **ஆய்ச்சியர்** எனப்படுவர். இவர்கள் தயிரைக் கலக்கி மோராக்கி விற்றனர். வெண்ணை விற்ற பொருள்களைக் கொண்டு பசுக்களை வாங்கினர் என்று பெரும்பாணாற்றுப்படை (வரி:165) கூறியுள்ளது.
- ❖ இவர்கள் எளிய குடிசைகளில் வாழ்ந்தனர். முல்லை நிலத் தினை அரிசிச் சோற்றை உண்டனர். **திருமால்** இவர்களது கடவுளாவார்.
- ❖ **ஏறுதழுவுதலை** ஒரு மரபாகக் கொண்டிருந்தனர். இவ்வீரர்களையே இக்குலப் பெண்கள் மணந்தனர். முல்லைக்கலிப் பாடல் இவர்களது வாழ்க்கையை விவரித்துப் பாடியுள்ளதாக அமைகின்றது.

### 1.4.2.3. நெய்தல் நிலப் பரதவர்கள்

- **பரதவர்கள்** கடல் பகுதியில் வாழ்ந்தனர். மீன் பிடித்தலையும் உப்பு விளைவிப்பதையும் தொழிலாகக் கொண்டனர். இவர்களது குடியிருப்பு **பாக்கம்** எனப்பட்டது. (மதுரைக்காஞ்சி:137)
- இவர்களை நுளையர், பரதவர், வலைஞர் என்றழைத்தனர். மீன்களைப் பிடிக்க வலைகளைப் பயன்படுத்தினர்.
- இவர்களது குடியிருப்பைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை விவரித்துச் செல்கிறது. (வரி:263–268)
- இவர்கள் தாழை மடலைச் சூடினர். பனங் கள்ளினை அருந்துவர். புனலில் மூழ்கி மகிழ்வர். பெண்கள் மீன் உணங்களைப் பாதுகாப்பர். கூடைகளில் எடுத்துச் சென்று விற்று நெல்லைக் கொண்டு வருவர்.

### 1.4.2.4. மருத நில உழவர்கள்

- வளம் மிக்க மருத நில மக்கள் நாகரீகத்தில் மேம்பட்டவர் ஆவர். உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் என்ற சொற்களால் அழைக்கப்பட்டனர். **கடையர்** என்பவர் கழனிகளில் வேலை செய்தனர்.
- உழவே தலைமையான தொழிலாகச் சங்க காலத்தில் விளங்கியது. மன்னரின் வெற்றி உழவரின் கலப்பையையே நம்பி இருந்தது.
- திருவள்ளுவர் உழவுக்கெனத் தனி அதிகாரம் அமைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.
- உழவுத் தொழிலின் மேன்மையை உணர்ந்த புலவர்கள் தம்மைப் **புலன் உழுதுண்மார்** என்று கூறிக்கொண்டனர். உழவர்கள் பயன்படுத்திய கலப்பை **நாஞ்சில்** எனப்பட்டது.
- களை எடுப்பதற்கு ஒருவகையான கருவியைப் பயன்படுத்தினர். அது மரத்தால் செய்யப்பட்டிருந்ததை,

  ‘‘கோடுடைக் கையர் துளரெறி வினைஞர்’’ (பாடல் 184:13–14)

  என்று அகநானூறு குறிப்பிட்டிருக்கிறது.
- மன்னர்கள் நீர்ப் பாசனத்திற்காக அணைகளைக் கட்டினர். கரிகாலன் கல்லணையைக் கட்டினான். சேர மன்னனும் அணைக் கட்டினான் என்பதற்குப் ‘‘பொய்கை வாயில் புனல் பொரு புதவின்’’ (பதிற்றுப்பத்து, 27:9) என்ற வரி சான்றாகும்.
- விளை நிலங்களைக் காவல் செய்யும் பணியையும் பெண்களே செய்தனர். பரண்கட்டி தட்டை என்னும் கருவியினால் ஒலி உண்டாக்கிக் கிளியைக் கடிந்தனர் என்று குறிஞ்சிப்பாட்டு விளக்கியுள்ளது.
- உழவர்களை **ஏரின் வாழ்நர், களமர்** எனவும் அழைத்தனர். இவர்கள் உழுதுண்பவர்களாவர்.

### 1.4.2.5. பாலை நில எயினர்கள்

- ❖ எயினர் என்பார் வேட்டைத் தொழிலைச் செய்தனர். பெண்பாலர் **எயிற்றியர்** எனப்படுவர். இவர்களது வாழ்க்கையைப் பெரும்பாணாற்றுப்படை விவரித்துச் செல்கிறது. (வரி:82–133)
- ❖ எயினர்கள் ஈத்திலை வேய்ந்த குடிசைகளில் வாழ்ந்தனர். மான் தோளில் படுத்தனர். தேக்கிலையில் உணவை வைத்து உண்டனர். பன்றியையும் முயலையும் வேட்டையாடினர். இவர்கள் வலிய அரண்களைக் கொண்டிருந்தனர்.
- ❖ எயினர்கள் எப்பொழுதும் கொடிய வில்லினைத் தாங்கித் திரிந்தனர். செந்துவர் ஆடையை உடுத்தனர். கொல்லும் தொழில் செய்தனர். வழியில் செல்வோரைக் கொல்லும் தன்மை உடையவர் என்பதைக் குறுந்தொகையும் (283), அகநானூறும் (175,181) குறிப்பிட்டுள்ளன.

### 1.4.3. பிற சமூகப் பிரிவினர்

- ❖ மேலே கூறப்பட்டவர்கள் தவிர, காரோடர் (சாணை பிடிப்பவர்) யவனர்கள் (காவலர்) மழவர், மல்லர், மறவர் (வீரர்கள்) அறிவர் (காலத்தை அளப்பவர்) பார்ப்பார் (ஓதுபவர்) அறவோர் (அறத்தொழில் புரிபவர்) போன்ற தொழிலாளர்களும் இருந்தனர்.
- ❖ தமிழகத்தில் பல்வேறு இனமக்கள் இருந்தமைக்கு மேற்சுட்டிய செய்திகளே சான்றாகும். தொழில் அடிப்படையில் பல்வேறு சாதிப்பிரிவினர் தோன்றினர். குலத்தவர் தமக்குள்ளே மண உறவு கொண்டனர். வேளாளர், வணிகர் ஆகியோர் நாகரீகத்தில் முன்னேறினர். பார்ப்பார்கள் சமூகப் படிநிலையில் மேலே இருந்தனர். புலையர்கள் தாழ்ந்த நிலையில் இருந்தனர்.

**<u>தன்மதிப்பீடு – 3</u>**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. தச்சர்களின் பணியைக் குறிப்பிடுக.
2. உமணர்களின் தொழிலைப் பற்றி எழுதுக.
3. குயவர்கள் பற்றிய சங்க இலக்கியச் செய்திகளைக் குறிப்பிடுக.
4. மருதநில உழவர்கள் – குறிப்பு வரைக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. சங்க காலச் சமூக அமைப்பைப் பற்றி விவரிக்க.
2. நில அடிப்படையில் சமூகப் பிரிவுகளைப் பற்றி விளக்குக.

### 1.5. திருமண முறை

- ❖ சங்க வாழ்க்கையை **அகம்** என்றும் **புறம்** என்றும் இரண்டாக வகுத்தனர். ஒருவனும் ஒருத்தியும் காதல் கொண்டு இன்புறும் ஒழுக்கத்தினை அகம் என்றனர். பிற வாழ்வியல் கூறுகளைப் புறம் என்றனர். இவ்விரண்டின் அடிப்படையில் இலக்கியங்கள் தோன்றின.

### 1.5.1. களவு வாழ்க்கை

- ❖ அகத்திணைக் காதல் வாழ்க்கையைக் களவு, கற்பு என இருவகைப்படுத்தினர். ஊர் அறியாத வகையில் ஆணும் பெண்ணும் காதல் கொண்டு வாழ்வது களவெனப்பட்டது. ஊர் அறிய திருமணம் செய்து

வாழ்வது கற்பெனப்பட்டது. களவு கற்பாக முடிய வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

(தொல்காப்பியம், கற்பியல், நூ:1)

என்று பாடிச் செல்கிறார் பழம்பெரும் இலக்கண நூலாசிரியர் **தொல்காப்பியர்.**

### 1.5.1.1. உலகியல் வழக்கு

தலைவன், தலைவிக்குக் காதல் காரணமாகத் திருமணங்கள் நடந்துள்ளன. இது அல்லாமல் பெற்றோர்களே முயன்று முடித்து வைக்கும் திருமணமும் நடந்தேறி இருக்கிறது.

### 1.5.1.2. அலர்

ஓர் ஆணும் பெண்ணும் சமூகத்தில் காதல் செய்வதை ஊரார் எதிர்த்துப் பழித்தூற்றுவதே அலர் ஆகும். இதற்கான சான்றுகள் பலவும் சங்க இலக்கியத்தில் காணலாகும். ஒரு தலைவி தனது காதலைத் தாய் அறிந்ததால் இனி வாழ்தலே அறிதாகும் என்று வருந்துகிறாள். இதனை நற்றிணை,

"அலரே அன்னை அறியின் இவணுறை வாழ்க்கை

அரிய வாகும் நமக்கெனக்......" (பாடல்:4)

என்கிறது.

### 1.5.1.3. இற்செறிப்பு

கட்டுப்பாடின்றி வெளியில் செல்லும் ஒரு பெண்ணை ஒரு தாயானவள் இல்லத்திலேயே இருக்குமாறுச் செய்வதே இற்செறிப்பு ஆகும். மகள் காதலில் ஈடுபட்டதை அறிந்து அவளைக் கட்டுப்படுத்தி, காதலனைக் காணத் தடைவிதிக்கிறாள் ஒரு தாய். இதற்காகத் தலைவியானவள் நொந்து கொள்கிறாள் என்பதற்குப் 'பகைமுக ஊரின் துஞ்சலோ இலளே' எனும் குறுந்தொகை 292ஆவது பாடல் வரியே சான்றாகும்.

### 1.5.1.4. உடன்போக்கு

பெற்றோர் தனது காதலை அறியின் காதலுக்குத் தடை ஏற்படும் என்று அஞ்சி காதலர் ஊர்விட்டுப் பிற ஊருக்குச் செல்லும் செயலாகிய உடன்போக்கில் ஈடுபட்டனர். தாய் தன்மகள் உடன்போக்கில் சென்ற பின் வருந்துவதை,

"காடும் கானமும் அவனோடு துணிந்து

நாடும் தேயமும் நனிபல இறந்த

சிறுவெண் கண்ணி" (பாடல்:383)

என்று அகநானூறு குறிப்பிட்டுச் செல்கிறது.

### 1.5.1.5. அறத்தொடு நிற்றல்

தலைவி காதலில் ஈடுபட்டதால் அவள் உடலிலும் செயலிலும் மாற்றம் தோன்றும் போது இம்மாற்றத்தை உணர்ந்து கொள்ள தாயானவள் வெறியாட்டு (குறிகேட்டல்) நிகழ்த்துவாள். அப்பொழுது தோழியானவள் தலைவியின் காதல் நிலை குறித்துத் தாயிடம் பேசுவாள். இதுவே அறத்தோடு நிற்றல் என்பதாகும்.

### 1.5.1.6. மடல் ஏறுதல்

மகளின் காதலைப் பெற்றோர் மறுத்த போது தலைவன் தலைவியின் படத்தை எழுதிக் கையில் கொண்டு பனை மட்டையால் செய்த மாவின் மீது (குதிரை போலச் செய்யப்பட்டதோர் வடிவம்) ஏறி ஊர் அறியத் தோன்றுவான். இதனை,

''மாவென மடலும் ஊர்ப பூவெனக்

குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப

மறுகில் ஆர்க்கவும் படுப

பிறிதும் ஆகுப காமம் கொளினே'' (பாடல்:17)

என்று குறுந்தொகை குறிப்பிட்டுள்ளது. இதனால் காதலுக்கு எதிர்ப்பு இருந்ததை அறிகிறோம். ஒத்தக் குலத்தவர் ஆயின் திருமணம் பேசி முடிப்பதும் உண்டு.

### 1.5.2. கற்பு வாழ்க்கை

- சிறு சிறு குழுக்களாக வாழ்ந்தவர்கள் அக்குழுக்களுக்கு இடையிலேயே திருமணத்தை நடத்திக் கொண்டனர்.
- அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்தவராகவும் உறவுடையவராகவும் விளங்கினர்.
- உறவு என்பது தாய் வழி உறவு, தந்தை வழி உறவு என்ற இரு நிலையில் அமைந்தது. தாய் மாமன் மகளையும் அத்தை மகளையும் மணக்கும் வழக்கமே நெடுங்காலமாக நிலவியது. பிறகு,

''அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே'' (குறுந்தொகை:40)

என்ற பாடல் இவ்விரு வகையிலும் உறவில்லாதவர்களும் திருமணம் புரிந்து கொண்டனர் என்பதை உணர்த்துகிறது.

### 1.5.2.1. பொருத்தம் பார்த்தல்

- பெண்ணுக்கும் பிள்ளைக்கும் திருமணம் செய்ய விரும்புபவர்கள் பொருத்தம் பார்த்தல் இன்று நடைமுறையில் உள்ளதுபோல பண்டைக் காலத்திலும் இருந்தது. தொல்காப்பியரும் இதைப் பற்றிப் 'பிறப்பே குடிமை' என்று கூறியுள்ளார்.

### 1.5.2.2. பரிசமளித்தல்

- பெண்ணுக்கு மணமகன் பரிசமளிக்கும் வழக்கம் தொன்று தொட்டு வரும் தமிழர் மரபாகும். அன்று இது முலைவிலை, சிறுவளை விலை, பரியம் என்று அழைக்கப்பட்டது.

### 1.5.2.3. திருமணச் சடங்குகள்

- காதலில் ஈடுபட்டவர்கள் பின்னர் அதனை இல்லை என்று மறுத்தபோது சான்றோர்கள் கரணம் எனப்படும் திருமணத்தை ஏற்படுத்தினர் என்பர்.
- பெண்ணின் பெற்றோர் பெண்ணைக் கொடுக்க மணமகன் ஏற்றுக் கொள்வதே கற்பு வாழ்க்கையின் தொடக்கமாக இருந்தது.
- சங்க இலக்கியத்தில் அகநானூற்றில் இரண்டு பாடல்கள் திருமணச் சடங்கு பற்றிப் பேசுகின்றன. 86ஆம் பாடல் கூறுவதாவது:
    - திங்களும் உரோகிணியும் கூடிய நாளில் திருமணம் நடந்தது.
    - விடியற்காலையில் மணவினை நிகழ்ந்தது.

- ○ பந்தலிட்டு அதில் புதுமணல் பரப்பினர்.
- ○ நல்ல விளக்குகளை ஏற்றினர்.
- ○ மாலைகளைத் தொங்கவிட்டு அழகுபடுத்தினர்
- ○ பின் மணப்பந்தலுக்கு வந்து பெற்றோர் மணமகளைத் தலைவனிடம் தந்தனர்.

136 ஆம் பாடல் கூறுவதாவது:

- ○ திருமணக் காலங்களில் வெண்சோறு படைக்கப்பட்டது.
- ○ சகுனம் பார்த்து, திங்கள் உரோகிணியோடு கூடிய நன்னாளில் வீட்டை அழகுறுத்தினர்.
- ○ கடவுள் வழிபாடு நிகழ மணமுழவு ஒலிக்க, பெண்ணுக்கு வதுவை (திருமண) நீராட்டு நடந்தது.
- ○ தலைமகளை மணமகனிடத்து அளித்தனர். இச்சடங்கில் பார்ப்பான் இல்லை; மந்திரம் இல்லை. தீவலம் செய்தலோ, அம்மி மிதித்தலோ, அருந்ததி காட்டுவதோ இல்லை. தாலி கட்டும் குறிப்பும் இல்லை.

- ❖ சிலப்பதிகாரத்தில் கூறப்படும் கண்ணகியின் திருமணம் பார்ப்பான் முன்னிலையில் நடந்தது என்றும், தீயை வலமாக வந்தனர் என்றும் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். ஆனால் தாலி பூட்டியதாகக் கூறவில்லை.
- ❖ ஆண்டாளும் தனது கனவைப் பற்றிக் கூறும் போது பல்வேறு திருமணச் சடங்குகளைப் பற்றிக் கூறியுள்ளார். தாலி குறித்து எதுவும் கூறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.
- ❖ எனவே பழங்காலத்தில் மணமகள் கழுத்தில் தாலி கட்டும் வழக்கம் இல்லை என அறிய வேண்டியுள்ளது.

### 1.5.2.4. சிலம்பு கழித்தல்

- ❖ திருமணத்திற்கு முன்பு இளமை தொட்டு தலைவி அணிந்திருந்த காற்சிலம்பைக் கழற்றுதலை மரபாகக் கொண்ட செய்தி தெரிகின்றது. இதனை ஒரு விழாவாகவே பெற்றோர்கள் கொண்டாடினர். இதுபற்றி அகநானூறும், ஐங்குறுநூறும் குறிப்பிட்டுள்ளன.

### 1.5.2.5. மலரணிதல்

- ❖ திருமணமாவதற்கு முன்பு கன்னிப்பெண்கள் மலர் சூடுவது இல்லை. தலைவியின் கூந்தலில் தலைவன் மலர் சூட்டுவதும் ஒருவகைத் திருமணமாகும்.
- ❖ ஒரு தலைவி, தன் தாய் கூந்தலில் மலர் சூட்டுவதை மறுத்து அடம் பிடிப்பாள். அத்தகு தலைவி பின் தலைவன் சூடிய பூவை முடித்துக் கொண்டு பின்னால் சென்றாள் என்று அகநானூறு குறிப்பிட்டுள்ளது. (பாடல்:117)
- ❖ கபிலருடைய குறிஞ்சிப்பாட்டில் தலைவியும் தோழியும் பல மலர்களைப் பறித்துத் தம் தலையில் சூடிக்கொண்டதாகப் பாடியுள்ளமை கன்னிப்பெண் மலர்சூடுதல் வழக்கமே என்றுணரலாம்.

**தன்மதிப்பீடு – 4**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. களவு வாழ்க்கை குறிப்பு வரைக.
2. இச்செறிப்பு என்றால் என்ன ?
3. மடல் ஏறுதல் பற்றிக் குறுந்தொகை கூறுவது யாது ?
4. அகநானூறு குறிப்பிடும் திருமணச் சடங்குகள் யாவை ?

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. களவு வாழ்க்கை என்பது குறித்து விவரிக்க.
2. தமிழரின் திருமண முறைகளை விளக்குக.

### 1.6. வணிகமுறை

#### 1.6.1. மேலை நாட்டு வாணிகம்

- கிறித்துவம் பிறப்பதற்குப் பலநூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர் மேற்கே கிரீசு, உரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையில் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.
- ஏலம், இலவங்கம், இஞ்சி, மிளகு போன்ற பொருட்களை மேற்காசிய நாடுகள் நல்ல விலைக்கு வாங்கினர். எகிப்து, பாலத்தீனம், மெசபடோமியா, சீனம் ஆகிய நாடுகளும் தமிழரின் பொருள்களை விரும்பி வாங்கினர்.
- தென் அரேபிய நாட்டு அரசி சோபா, இசுரேல் மன்னர் சாலமோனைப் பார்க்கச் சென்ற போது ஏலம், இலவங்கம் போன்றவற்றைக் கையுறைப் பொருளாக எடுத்துச் சென்றார்கள்.
- பாபிலோனியாவுடன் தமிழர்கள் வணிகம் நிகழ்த்தியதற்குச் சான்றுகள் உள்ளன. தமிழர்கள் எகிப்து நாட்டுடனும் தொடர்பு கொண்டு இருந்தனர்.
- தென்னகத்துக்கும் சுமேரியாவுக்கும் இடையே கி.மு.4000 ஆண்டுகளுக்கு முன்பு வணிகம் நடந்தது என்பதைச் **சாய்சு** என்பவர் கூறியுள்ளார்.
- தமிழக வணிகர் மெல்லிய மசுலின் துணியையும், ஏலம், இலவங்கம் ஆகியவற்றை ஏடன் வளைகுடாவிற்கு இடையில் உள்ள துறைமுகங்களுக்கு ஏற்றிச் சென்றனர்.
- மடகாஸ்கருக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே நடந்த வணிகத்தினால் அங்குத் தமிழர்கள் குடியேற்றப்பட்டனர்.
- தமிழ்நாட்டில் பிறநாட்டாரின் உள்ளத்தைக் கவரும் வகையில் பல பொருள்கள் அதிகமாகக் கிடைத்தன. ஆரமும், அகிலும், சங்கும் குறிப்பிடத்தக்கவை. யவனர்கள் பொன்னைக் கொடுத்துவிட்டு மிளகு ஏற்றிக் கொண்டு சென்றனர்.

> ''யவனர் தந்த வினைமாண் நன்கலம்
> பொன்னொடு வந்து கறியொடு பெயரும்''(அகநானூறு, 149:9–10)

என்னும் குறிப்பின் மூலம் அறியலாம்.

- காவிரிப்பூம்பட்டினத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் நடந்தது. இவை மலையில் பெய்த நீர் கடலில் பரப்பது போலவும் வான்முகந்த நீர் மலையில்

பொழிவது போலவும் இருந்ததைப் பட்டினப்பாலை (126:132) என்ற வரிகள் கூறிச் செல்கின்றன.

- பெரிய மரக்கலங்களில் கொண்டு வந்த பொருள்களைச் சிறிய தோணிகளில் ஏற்றிக் கரைக்குக் கொண்டுவந்தனர் என்பதை,

''கலந் தந்த பொற் பரிசம்

கழித்தோணியால் கரைச்சேர்க்குந்து'' (343:5–8)

என்ற புறநானூற்று வரிகள் கூறிச் செல்கின்றன.

- கடலில் செல்லும் பெரிய கப்பல் நாவாய் எனப்படும். கப்பல்கள் புறப்படும் பொழுது முரசு முழங்குவது உண்டு என்பதை மதுரைக்காஞ்சி (79–83) வரிகள் மூலம் அறியலாம்.
- கடலிற் செல்லும் மரக்கலங்கள் வழித்தவறிச் சென்று விடாமல் துறைமுகத்திற்கு வருவதற்கு உதவியாக உயரமான கலங்கரை விளக்கங்கள் இருந்தன. இதைப்பற்றிப் பெரும்பாணாற்றுப்படை (வரி 347–350) குறிப்பிட்டுள்ளது.
- காவிரிப்பூம்பட்டினத்திலும் பிற துறைமுகங்களிலும் யவனர் போன்ற பிறநாட்டவர்கள் வாழ்ந்தனர். அத்தகு சேரி ஒன்றினை,

''பயனற வறியா யவனர் இருக்கை'' (காதை 5: வரி: 10)

என்று சிலப்பதிகாரம் கூறியுள்ளது.

- கி.பி. 2–ஆம் நூற்றாண்டில் இங்கு வந்த **தாலமி** என்பவர் காவிரிப்பூம்பட்டினம் ஒரு வாணிக முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகத் திகழ்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார். கி.பி. 5 ஆம் நூற்றாண்டிலும் இது சிறந்த நகரமாக விளங்கியது என்று புத்ததத்தர் கூறியுள்ளார்.
- குடமலைப் பகுதியில் அகில் ஏராளமாகக் கிடைத்தது. இதனைப் பட்டினப்பாலை, ''குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்'' (வரி: 188) என்கிறது. மேலும் பொருநராற்றுப்படையும் (வரிகள்:238–239) அகிலின் சிறப்பைக் கூறியுள்ளது.
- பாண்டிய நாட்டின் வளம் பெருக்கிய துறைமுகம் கொற்கையாகும். இத்துறைமுகத்தில் முத்துக் குளித்தல் மிகச் சிறப்பாக நடந்தது.
- மதுரைக் காஞ்சியும் சிறுபாணாற்றுப்படையும் இவ்வூரின் முத்தினைச் சிறப்பிக்கும். இவ்வூரில் முத்தும் சங்கும் குளிப்பார் (கடலில் மூழ்கி எடுப்பவர்) குடியிருப்பு இருந்தது என மதுரைக்காஞ்சியில் குறிப்பிடப்பட்டு உள்ளது.
- சிறையில் இருந்த குற்றவாளிகள் முத்துக்குளிக்கும் பணியில் ஈடுபட்டனர் என்று **பெரிப்புளுசு** ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.
- வெளிநாட்டிலிருந்து குதிரைகள் இங்கு வந்தது பற்றிப் பெரும்பாணாற்றுப்படையும் பட்டினப்பாலையும் கூறுகின்றன. இக்குதிரைகள் பாரசீகம், பார்த்தியா, அரேபியா ஆகிய பகுதிகளிலிருந்தே வந்திருக்கலாம் என்று கூறுவர்.
- உரோமர்கள் தமிழகத்திலிருந்து பெற்ற பொருள்களில் தலைமையானது மிளகேயாகும். இது நான்கில் மூன்று பகுதியாக இருந்தது. உணவுப் பொருள்கள் கெடாதவாறு பாதுகாக்க உரோமர் இதனைப் பயன்படுத்தினர்.

- தமிழ் நாட்டுச் சந்தனத்தை உரோமர்கள் பேதி மருந்தாகப் பயன்படுத்தினர். பொதிகை, மைசூர், கோவை, சேலம் ஆகிய இடங்களில் சந்தனம், சந்தனக் கட்டைகள், புகார் கடைத் தெருவில் விற்கப்பட்டன. பெரிப்புளுசும் சந்தன வாணிகம் பற்றித் தனது குறிப்பில் கூறியுள்ளார்.
- உரோமபுரி மகளிர் முத்தினை ஆடைகளின் அருகுகளிலும், செருப்பிலும் வைத்துத் தைத்துக் கொண்டனர். கையசு என்னும் பேரரசனின் மனைவி **பௌலீனா** என்பவள் 40,000,000 பொன் மதிப்புள்ள இரத்தினங்களாலும் முத்துக்களாலும் தன்னை அழகு செய்து கொண்டாள் என்று **பிளைனி** வெறுத்துக் குறிப்பிட்டுள்ளார்.
- யவன நாட்டிலிருந்து இறக்குமதி செய்த உயர் பொருள்களில் மதுவும் ஒன்று என்பதைப் புறநானூறும் (பாடல்:56) அகநானூறும் (பாடல்:149) விளக்கியுள்ளன.
- இதுகாறும் கூறியவற்றால் தமிழர் சங்க காலத்துக்கு முன்பும் சங்க காலத்திலும் வெளிநாட்டு வணிகத்தில் சிறந்திருந்தனர் என்பது தெளிவாகும். இவ்வணிகம் பிற்காலத்திலும் தொடர்ந்தது.
- யவன நாட்டிலிருந்து இறக்குமதி செய்த உயர் பொருட்களில் மதுவும் ஒன்று என்பதைப் புறநானூறு, அகநானூறு போன்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

### 1.6.2. உள் நாட்டு வாணிகம்

- சங்க காலத்தில் உள்நாட்டு வாணிகமும் சிறந்து விளங்கியது. அவரவர் தமக்குத் தேவையான பொருள்களை மாற்றிக் கொண்டனர்.
- நெல்லும் உப்பும் அன்று ஒரே மதிப்புடையதாகக் கருதப்பட்டன என்பதை,

  ''நெல்லும் உப்பும் நேரே யூரீர்

  கொள்ளீரோ எனச் சேரிதொறும் நுவலும்''

  எனும் அகநானூறு (பாடல்: 390) கூறியுள்ளது.
- படகில் உப்பினை ஏற்றிச் சென்று விற்றனர். திரும்பி வரும் போது படகு நிறைய வெண்ணெல் நிரம்பியிருந்தது. இதனை,

  ''வெள்ளை உப்பின் கொள்ளை சாற்று

  நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி''

  என்று பட்டினப்பாலை (வரிகள்:29–30) குறிப்பிட்டுள்ளது.

### 1.6.3. உமணர்கள்

- பெரிய வண்டியில் உப்பை மட்டுமின்றித் தம் வீட்டுச் சாமான்களையும் ஏற்றிக் கொண்டு உள் நாட்டுக்குள் நெடுந்தொலைவு சென்று விற்பனை செய்தவர்கள் உமணர்கள் ஆவர்.
- உமணர்கள் பற்றிப் பெரும்பாணாற்றுப்படையும் (வரி:46–65), சிறுபாணாற்றுப்படையும் (வரி:51–55) பிற சங்க நூல்களும் குறிப்புகளைத் தந்துள்ளன.

### 1.6.4. வம்பலர் கூட்டம்

- வம்பலர் என்போர் வெளிநாட்டுக்காரராக இருக்க வேண்டும் என்பர். இவர்கள் மலைபடு பொருளையும் கடல்படு பொருளையும் வாங்கி விற்றனர்.

- ❖ தம் கால்களில் அடி மூழ்குமாறு செருப்பு அணிந்திருந்தனர். உடலைக் கவசத்தால் மூடியிருந்தனர். ஒள்ளிய வாள் தோளில் தொங்கிக் கொண்டிருந்தன.
- ❖ வில்லை ஒச்சுவதால் வலிமைபெற்றதோளையுடைய அவர்கள் முருகன் போன்று வலிமையுடையவர் ஆவர். இவர்கள் வணிகப் பொருள்களை மூட்டையாக்கிக் கழுதைகளின் மேல் ஏற்றிச் சென்றனர்.

**1.6.5. அங்காடிகள்**

- ❖ பெரிய நகரங்களில் அங்காடிகள் கூடின. பகலில் நாளங்காடியும், இரவில் அல்லங்காடியும் நடைபெற்றன.
- ❖ புகார் நகரத்து அங்காடி பற்றிச் சிலம்பும், மதுரை நகரத்து அங்காடி பற்றி மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுகின்றன.
- ❖ அங்காடியில் சங்கினை அறுத்து வளையல் செய்து விற்பவரும், மணிகளில் துளையிடுவோரும், பொன்னை உரைத்துத் தரம் காண்பவர்களும், மண் பொம்மைகள் செய்பவரும் கூடி இருந்தனர்.
- ❖ வணிகர்கள் அதிகமாக இருந்ததால் அவர்கள் தனித்தனி தெருக்களில் குடியிருந்தனர். பெரிய மாளிகையில் குடியிருந்தனர். அவர்கள் வீட்டிற்குக் காவலிடப்பட்டிருந்தது என்பதைச் சிலப்பதிகாரம் குறிப்பிட்டுள்ளது.
- ❖ பண்டைக் காலத்தில் புலம் பெயர் மாக்கள் கலந்து வாழ்ந்தனர். வண்ணமும், சுண்ணமும், சந்தனமும், பூவும், புகையும் விற்பார் தெருக்களும் பட்டினும், மயிரினும் பருத்தி நூலினும் ஆடை நெய்பவரின் தெருக்களும் இருந்தன.
- ❖ இந்த வணிகர்கள் தராசுக் கோலைப் பயன்படுத்தினர். அது 'ஞமன்கோல்' எனப்பட்டது.
- ❖ வள்ளுவரும் துலாக் கோலைப் பற்றிக் கூறியுள்ளார். நாழி, தூணி, தொடி, கஃசு எனும் அளவுகளும் இருந்தன. இவ்வணிகர்கள் நேர்மையாக வணிகம் செய்ததாகப் பட்டினப்பாலை (வரிகள்:206–212) குறிப்பிட்டுள்ளது.
- ❖ வள்ளுவரும்,

  ''வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
  பிறவும் தம்போற் செயின்'' (குறள்: 120)

  என்று நடுவுநிலைமையை வற்புறுத்தியுள்ளார்.
- ❖ எனவே அன்றைய தமிழகத்தில் அயல்நாட்டு வணிகம் போன்று உள் நாட்டு வணிகமும் சிறந்து இருந்ததை அறியலாம்.

**தன்மதிப்பீடு – 5**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. உமணர்கள் பற்றிக் குறிப்புத் தருக.
2. அங்காடிகள் பற்றிக் குறிப்பிடுக.
3. வம்பலர் கூட்டம் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
4. தமிழரின் வணிகமுறைகளைக் குறிப்பிடும் சங்க நூல்கள் யாவை ?

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. மேலை நாட்டு வணிகம் பற்றி விளக்குக.
2. உள்நாட்டு வணிகம் பற்றி விரிவாக எழுதுக.

### 1.7. உணவு–உடை–உறையுள்

#### 1.7.1. உணவு

பண்டைத் தமிழர்கள் சுவைமிக்க உணவுப் பொருள்களைச் சமைப்பதில் தேர்ந்திருந்தனர். மக்கள் வாழ்ந்த நிலத்திற்கேற்ப உணவு வேறுபட்டது. அவரவரின் பொருளாதார நிலையையொட்டி உணவின் தரம் வேறுபட்டிருந்தது. மரக்கறி உணவோடு புலாலுணவும் பெரிதும் விரும்பி உண்ணப்பட்டது. மது வகைகளையும் விரும்பி உண்டனர்.

- ❖ மருத நில மக்கள் அரிசியைப் புழுக்கிக் காய வைத்து இரும்பு உலக்கையால் குத்தி அரிசியாக்கினர். இந்த நெற்சோற்றை நண்டு கறியோடு சேர்த்து உண்டனர். இதனை,

  “இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த
  அவைப்புமாண் அரிசி அமலை வெண்சோறு
  கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்”

என்று சிறுபாணாற்றுப்படை (வரிகள்:193–195) குறிப்பிடுகிறது.

- ❖ நெல்சோற்றோடு காய்கறி வகைகளைச் சேர்த்து உண்டனர் என்பதைப் புறநானூறும் (பாடல்:127) மாங்காயை நசுக்கி அதன் சாறை எடுத்து உண்டனர் என்பதை அகநானூறும் (பாடல்:37) கூறுகின்றன.
- ❖ மாதுளங்காயை மிளகுப்பொடி கறிவேப்பிலையும் சேர்த்து, பசு வெண்ணெயில் பொரித்துப் பார்ப்பார் உண்டனர்.

  “சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
  துருப்புறு பசுங்காய்ப் போழோடு கறிகலந்து
  கஞ்சக நறுமுறி யளைஇ” (வரிகள்:306–308)

என்பதைப் பெரும்பாணாற்றுப்படையின் மூலம் அறியலாம்.

- ❖ மேலும், இந்நூல் எயினர்கள் களர் நிலத்தில் விளைந்த ஈச்சம்பழம் போன்ற சோற்றை, நாய் வேட்டையாடிக் கொண்டு வந்த உடும்பு கறியோடு சேர்த்து உண்டனர் என்றும் (வரிகள்:130–132) கூறிச் செல்கிறது.
- ❖ மருத நிலத்தவர்கள் வினைஞர் தந்த வெண்ணெல் சோற்றைக் கோழியிறைச்சியின் வற்றலோடு உண்டனர். மாதுளங்காயொடு மிளகினைச் சேர்த்து வெண்ணெயில் பொரித்துண்டனர். மேலும் மாங்காய் வடு

ஊறுகாயும் உண்பர் என்றும் (வரிகள்:305–310) பெரும்பாணாற்றுப்படை குறிப்பிட்டுள்ளது.

- ❖ அக்காலத்தில் பன்றி இறைச்சியை விரும்பி உண்டனர். வேடுவர்கள் பன்றியை வேட்டையாடினர் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை (வரிகள்:106–111) கூறுகின்றது.

- ❖ மன்னர்கள் பாணர்க்கும் புலவர்க்கும் அளித்த பெருவிருந்தில் ஊன்சோறே பரிமாறப்பட்டது. அதனைப் புலவர்கள் பெருமையாக ஏற்றனர். அக்காலத்தில் கள் உண்டலையும் தவறாக நினைக்கவில்லை.

- ❖ ஊர்களின் வளத்தினைப் பேசும் போது கள் மிகுதியையும் இணைத்துப் பேசினர். இதனை,

  ''இன்கடு ள்ளின் ஆமூர்'' (புறநானூறு:80)

  ''இன்கடுங் கள்ளின் இழையணி நெடுந்தேர்க்

  கொற்றச் சோழர்'' (நற்றிணை:10)

  என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

- ❖ தென்னை, பனை மரங்களிலிருந்து இறக்கிய கள்ளைத் தவிர வீட்டிலேயே சமைத்த ஒருவகை கள்ளைத் **தோப்பி** என்று வழங்கினர். உள்நாட்டுக் கள்ளைத் தவிர வெளிநாட்டில் இருந்து வந்த மதுவைப் பெரும்பாலும் செல்வர்களும் மன்னர்களும் உண்டனர். வள்ளல்கள் இறந்த போது புலவர்கள் பாடிய கையறு நிலைப் பாடல்களில் அவர்கள் இரவலர்க்குக் கள்ளை வழங்கியது அதிகமாகப் பாராட்டப்படுகிறது.

- ❖ கள் உண்டு மகிழ்ச்சியாக இருக்கும் விழா **உண்டாட்டு** எனப்பட்டது.

### 1.7.2. உடை

- ❖ சங்க காலத் தமிழர்கள் அவரவரின் தகுதிக்கேற்ப ஆடை அணிந்தனர். ஆண்கள் இடையில் ஓர் ஆடையும் மேலே ஒரு துண்டும் அணிந்தனர் என்பதை,

  ''உண்பது நாழி உடுப்பவை இரண்டே'' (புறநானூறு:189)

  என்னும் நக்கீரர் வாக்கால் அறியலாம்.

- ❖ வீரர்கள் நீலநிறக் கச்சையினை அணிந்தனர். அதிலே பூ வேலை செய்யப்பட்டிருந்தது. அனைவரும் மேல்சட்டை அணியவில்லை. சிலரே அணிந்திருந்தனர். அரண்மனைப் பொற்கொல்லன் சட்டை அணிந்திருந்தான் என்று சிலப்பதிகாரம் கொலைக்களக்காதையில் (வரிகள்:107–108) கூறிச் செல்கிறது.

- ❖ இதேபோன்று, பாண்டியன் அரண்மனையில் பணிபுரிந்த அயல் நாட்டவரான யவனரும் சட்டையணிந்தனர் என்பதை,

  ''உடம்பின் உரைக்கும் உரையா நாவின்

  படம்புகு மிலேச்சர்''

  என்ற முல்லைப்பாட்டு (வரிகள்:65–66) மூலம் அறியலாம்.

- ❖ பெண்கள் இடையில் மட்டும் புடவை உடுத்தினர் என்றும் மார்பகத்தைத் துணியால் மூடும் வழக்கம் அன்று இல்லை என்றும் சந்தனத்தால் தொய்யில்

எழுதியும் மலர்களை இட்டும் மார்பகத்தை மூடினர் என்றும் முல்லைக்கலி (11:16–19) குறிப்பிடுகிறது.

- ❖ புதுமணப் பெண்கள் தம் உடலையும் முகத்தையும் புத்தாடையால் மூடிக்கொண்டதாக அகநானூறு (பாடல்:86) குறிப்பிட்டுள்ளது.
- ❖ அக்காலத்து ஆடை கண்ணுக்குப் புலப்படாத மெல்லிய இழைகளால் நெய்யப்பட்டது. பாம்பின் சட்டையைப் போல மென்மையாக இருந்தது என்பதை,

  ''நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து

  அரவுரி யன்ன அறுவை நல்கி''

  என்று பொருநராற்றுப்படை (வரிகள்: 82–83) கூறுகிறது.
- ❖ மூங்கில் உள்புறத்தே இருக்கும் வெண் தோல் போல ஆடை இருக்கும் என்று புறநானூறும் புகையைப் போலவும் பால் ஆவியைப் போலவும் ஆடை விளங்கியது என்று பெரும்பாணாற்றுப்படையும் குறிப்பிட்டு உள்ளன.
- ❖ துணிகளுக்குப் பல வண்ணங்களைத் தனது கலைத்திறனால் தமிழக நெசவாளர் செய்து சிறந்து இருந்தனர் என்று புறநானூறு கூறிச் செல்கிறது.
- ❖ தமிழகத்தில் பருத்தி அதிகமாக விளைந்தது. கணவனை இழந்த பெண்கள் நூற்புத் தொழிலில் ஈடுபட்டனர். அவர்களைப் **பருத்திப் பெண்டிர்** என்று அழைத்தாகப் புறநானூறும் (பாடல்:326), நற்றிணையும் (பாடல்:355) கூறுகின்றன.
- ❖ பருத்தி மட்டுமன்றிப் பட்டினாலும், ஆட்டு உரோமத்தாலும் ஆடைகளை நெய்தனர் என்பதை,

  ''பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்

  சுட்டும் நுண்வினைக் காருகர் இருக்கை''(5:16–17)

  என்ற பாடலில் சிலப்பதிகாரம் கூறுகின்றது.
- ❖ துணிகளை மண்ணால் வெளுப்போரை மண்ணார் என்று அழைத்தனர். அக்குலப் பெண்களைப் புலத்தி என்றனர். துணியைக் கஞ்சியிட்டுக் காயவைத்து மடித்து வைத்தனர்.
- ❖ துணி வெளுக்கும் மக்களைப் பற்றிப் பல சான்றுகள் உள்ளன. ஒரு சான்று:

  ''நலத்தகைப் புலத்தி பசைதோய்த் தெடுத்து'' (குறுந்தொகை:330)
- ❖ அடியார்க்கு நல்லார் உரையில் 36 ஆடை வகைகள் சுட்டப்பட்டுள்ளன. அவை: கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபடம், சித்திரக்கம்பி, குருதி, கரியல், பேடகம், புரியட்டம், காசு, சில்லிகை, நந்தியம், நூல் யாப்பு, திருக்கு, தேவகிரி, வேதங்கம், புங்கர்க்காழகம், தூரியம், பங்கம், வண்டை, கவற்றுமடி, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, காத்தூலம், கிறைஞ்சி, செம்பொத்தி, பணிப்பொத்தி ஆகும்.

### 1.7.3. உறையுள்

- ❖ சங்க இலக்கியங்களின் வழியே அக்கால மக்களின் கட்டிடக் கலையின் சிறப்பினை அறிய முடிகிறது.

- பெரும்பாணாற்றுப்படையில் பாலை நிலத்து எயினர், முல்லை நிலத்து ஆயர், நெய்தல் நிலத்துப் பரதவர், மருத நிலத்து உழவர், பார்ப்பார் ஆகிய மக்களின் வீடுகளின் அமைப்புகளை அறிய முடிகின்றது.
- தாழை மடல்களால் வேயப்பட்ட கடலோரத்துக் குடியிருப்பினை,

  ''கண்டல் வேலிக் கழிசூழ் படப்பை

  முண்டகம் வேய்ந்த குறியிறைக் குரம்பை''

  என்ற நற்றிணை (பாடல்:207) செய்யுள் வரிகள் பேசுகின்றன.
- முல்லை நில ஆயர்களின் குடியிருப்பைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை (வரிகள்:147–154) கூறிச் செல்கிறது.
- பாலை நில எயினர்களின் குடிசைகள் வேல் போன்ற நுனிகளையும் ஈந்தின் இலைகளால் வேயப்பட்டு எய்ப்பன்றியின் தோற்றத்தோடு விளங்கின என்பதைப் பெரும்பாணாற்றுப்படை (வரிகள்:83–88) கூறுகின்றது.
- நெய்தல் நில உழவர்களின் வீடுகள் நீண்ட சுவர்களைக் கொண்டிருந்தன. அவற்றில் வண்டிச் சக்கரங்களும், கலப்பையும் வைத்திருந்தனர். முன்னால் இருந்த பந்தலில் யானைகள் நின்றாற் போலக் குதிர்கள் இருந்தன. பக்கத்தில் மாட்டுத்தொழுவம் இருந்தது. கரிய வைக்கோலால் வீடுகள் வேய்ந்திருந்தனர் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை (வரிகள்:185–191) குறிப்பிடுகிறது.
- மன்னர் செல்வரின் வீடுகள் உயர்ந்தும் நல்ல காற்றோட்டத்தோடும், குளிர்ச்சியாகவும் இருந்தன. அதற்கு வெண்சுதை பூசப்பட்டிருந்தது வெள்ளி போன்று வெண்மையாக இருந்தது.
- காவிரிப்பூம்பட்டினத்துச் சாலையோரத்தில் பெரிய மாடங்கள் இருந்தன. அவ்வீட்டுச் சுவர்கள் தேரோட்டத்தினால் எழும் துகளால் அழகு மாறிப் புழுதியாடிய யானைகள் போல் தோற்றமளித்தன. இதனை,

  ''நீறாடிய கயிறு போல

  வேறுபடு வினையோவத்து

  வெண்கோயில் மாசூட்டும்'' (வரிகள்: 48–50)

  என்று பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.
- மொட்டை மாடி வேயாமாடம் எனப்பட்டது. கோடைக்காலத்தில் நிலவின் பயனைப் பெற நிலாமுற்றங்கள் அமைக்கப்பட்டிருந்தன. குளிர் காலத்தில் காற்று புகாமல் இருக்க மூடப்பட்டிருந்தன என்பதை நெடுநல்வாடை (வரிகள்:60–63) குறிப்பிடுகிறது.
- நிலா முற்றத்திலிருந்து மழை நீர் கீழே வராமல் இருக்க வடிகுழாய் அமைக்கப்பட்டிருந்தது என்று நெடுநல்வாடை (வரிகள்:95–97) கூறுகிறது.
- மாளிகைகளைச் சுற்றி ஆழமான கிடங்குகள் இருந்தன. குன்றுகள் பல சேர்ந்து இருப்பது போல வீடுகள் நிறைந்திருந்தன. மதுரையில் இருந்த அந்தணர்பள்ளி குன்றினை இடையே குடைந்து அமைத்தாற்போன்று இருந்தது என்பதை மதுரைக்காஞ்சியின் மூலம் அறியலாம்.
- தமிழரின் கட்டிடக்கலையின் மேன்மை பற்றி அறிய நெடுநல்வாடை பெரிதும் உதவுகின்றது. பாண்டியனுடைய அரண்மனையைக் கட்டிட நூலை நன்குணர்ந்த கட்டிடக் கலைஞர்கள் கட்டி முடித்தனர். அரண்மனை

வாயிலில் பெரிய இரட்டைக்கதவுகள் இருந்தன. இரும்புப் பட்டைகள் ஆணிகளால் தைக்கப்பட்டிருந்தன.

- ❖ மன்னனின் அந்தப்புரம் தனிக்காவலுடன் விளங்கியது. மணி போன்ற வலிமையான தூண்கள் இருந்தன.
- ❖ வீடுகளில் ஓவியங்கள் வரையப்பட்டு இருந்தன. வீடுகட்கு ஓவியங்கள் உவமையாகக் கூறப்பட்டன என்பதை,

> ''ஓவத்தன்ன இயனுடைய வரைப்பிற்
>
> பாவை அன்ன நல்லோள் கணவன்'' (7ஆம் பத்து, 61:3–5)

என்றுப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.

- ❖ மணிமேகலையின் வாயிலாக அக்காலத்தில் பிற நாட்டுக் கட்டிடக் கலைஞர்களும் தமிழகத் தச்சருடன் கூடிப்பணி செய்தனர் என்பதை அறியலாம்.
- ❖ முருகன், சிவன், திருமால், பலராமன், சூரியன், இந்திரன் முதலிய பல தெய்வங்களுக்குக் கோட்டங்கள் இருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.
- ❖ மேற்காட்டிய சான்றுகளால் தமிழர் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே உறையுள் கட்டிய நிலையில் சிறந்து விளங்கிப் பிற்காலத்தில் திராவிடக்கலையின் முன்னோடிகளாக விளங்கினர் என்பதை உணரலாம்.

**தன்மதிப்பீடு – 6**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. செல்வர், மன்னர்கள் குடியிருப்புகளைப் பற்றிக் கூறுக.
2. மருத நிலமக்களின் உணவு முறைகளைக் குறிப்பிடுக.
3. தமிழர்களின் உடை அமைப்புகளைப் பற்றி எழுதுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. தமிழர்களின் உணவு, உடை, உறையுள் குறித்து விவரிக்க.
2. தமிழரின் நிலத்திற்கேற்ப உணவுமுறை மாறுபட்டது என்பதைச் சான்றுடன் விளக்குக.

## 1.8. அணிகலன்கள்

- ❖ பண்டைத் தமிழகத்துப் பெண்கள் ஆடையினால் மறைக்கப்படாத தம் உடலை அணிகலன் கொண்டு மறைத்தனர்.
- ❖ யவனர் கொண்டு வந்த பொன், மன்னர் பகைவரிடமிருந்து கவர்ந்த பொன், மண்ணைத் தோண்டி எடுத்த பொன்னும் தமிழகத்தில் நிறைய கிடந்தன. முத்து, பவளம் இவைகளைச் சேர்த்து சிறந்த கம்மியர்கள் அணிகலன்களாகச் செய்தனர்.

### 1.8.1. குழந்தைகளின் அணிகலன்கள்

- ❖ குழந்தைகளுக்கு நெற்றியில் சுட்டியும் பிறையும், மூவடம் கோத்த பொன் சங்கிலியும் அணிவிப்பார்கள்.
- ❖ கழுத்தில் ஐம்படைத் தாலியும், புலிப்பல் தாலியும் அணிய செய்தனர்.

- ❖ விரலில் சுறாமீனைப் போன்ற மோதிரமும், காலில் மணிகள் பதித்த சதங்கையும் அணிந்தனர்.
- ❖ நெல்லைத் தின்ன வந்த கோழியை விரட்ட பெண்கள் குழைகளைக் கழற்றி எறிவார்கள் என்பதும், அக்காலத்தில் குழைகள் மலிவாகக் கிடைத்தன என்பதை உணர்த்துகின்றன.
- ❖ தமிழகத்தில் செய்யப்பட்ட அணிகலன்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். 'கொடுமணம்' என்ற ஊரில் செய்த அணிகலன்கள் மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டன.

### 1.8.2. மகளிர் ஒப்பனை முறை

- ❖ மகளிர் அணிந்த அணிகலன்களாகச் சிலப்பதிகாரம் சில வகைகளைக் கூறுகிறது. அவை: கால்விரல், மோதிரம், அரையில் அணியும் முத்துவடம், செம்பொன்வளை, குதம்பை எனும் காதணிகளாகும்.
- ❖ பெண்கள் கால் விரல்களில் மோதிரம் அணியும் பழக்கம் பண்டைக் காலத்திலும் உண்டு.
- ❖ மகளிர் தலைக்கு ஒப்பனை செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வந்தனர். அவை வியப்பூட்டும் அளவுக்கு இருந்தன. நீண்ட கூந்தலை விரும்பி வளர்த்தனர். கொண்டை, குழல், பனிச்சை, சுருள், முடி என ஐந்து வகையாகத் தலைக்கோலம் செய்தனர்.
- ❖ கூந்தலில் பல வகையான மலர்களைச் சூடினர். மலர் சூடாத வெறுங்கூந்தலை இழிவாகக் கருதினர்.
- ❖ மகளிர் தம் கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டினர். பழங்காலத் தமிழ்ப் பெண்கள் தங்கள் கூந்தலுக்குக் களிமண் தேய்த்துக் குளிக்கும் வழக்கம் இருந்தது.
- ❖ பெண்கள் கண்ணில் மை தீட்டிக் கொள்வர். மை தீட்டாத கண்ணைப் புண்ணுடைய கண் என்பர்.

### 1.8.3. ஆடவர் ஒப்பனை முறை

- ❖ ஆண்கள் முத்துமாலை, மதாணி, வெள்ளிக் கம்பியில் கோத்த பொன் தாமரை மலர்கள், கைவளைகள் ஆகியவற்றை அணிகலன்களாக அணிந்தனர்.
- ❖ ஆண்களும் முடி வளர்த்துப் பின்புறம் முடிந்து கொள்வார்கள். தலையில் பூச்சுடும் வழக்கமும் உண்டு. அதைக் **கண்ணி** என்று கூறுவார்கள்.

**தன்மதிப்பீடு – 7**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. குழந்தைகளின் அணிகலன்கள் யாவை ?
2. சங்க மகளிர் கூந்தலை எவ்வாறு ஒப்பனை செய்தனர் ?

**பின்வரும் வினாவிற்கு விரிவான விடையளிக்க.**

1. பண்டைத் தமிழரின் அணிகலன்கள் குறித்து எழுதுக.

## 1.9. கல்வி நிலை

### 1.9.1. சங்கப் புலவர்கள்

- ❖ தனி மனித வாழ்வையும் நாட்டின் வாழ்வையும் உயர்த்துவது கல்வியாகும்.
- ❖ சங்க காலத்தில் ஐந்நூறு புலவர்கள் வாழ்ந்தனர் என்று கூறப்படுகிறது. இவர்களில் அரசரும், பெண்டிரும் பலராவார். குறவர் குடியில் பிறந்த குறியெயினியும், இளவெயினியும் குயவர் குடியில் பிறந்த வெண்ணிக் குயத்தியும் சிறந்த புலவர்களாக விளங்கினர்.
- ❖ அக்காலத்தில் மரத்தடியும், ஆசிரியர் வீடும், ஊர் அம்பலமும் பள்ளிகளாக விளங்கின.
- ❖ 'மதுரைக் கணக்காயனார்' என்று அழைக்கப்படும் நக்கீரரின் தந்தை மதுரையில் பெரிய ஆசிரியராக விளங்கினார்.
- ❖ மதுரைப் பாலாசிரியர் சேந்தங்கொற்றனார், மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார், மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார், மதுரையாசிரியர் நல்லந்துவனார், நக்கண்ணனார், பேராசிரியர், கணக்காயர் போன்றோர் மதுரைப்பாலாசிரியர், மதுரையாசிரியர் என்ற அடைமொழியோடு கூறப்படுகின்றனர்.
- ❖ இவ்வாசிரியர்கள் கணக்கைக் குறிக்கும் எண்ணையும், மற்றவற்றைக் குறிக்கும் கணக்கையும் கற்பித்தனர்.

### 1.9.2. தமிழிலக்கியங்களில் கல்வி

- ❖ வாயினால் வகுத்த பக்கம், கையினால் வகுத்த பக்கம் என்று தொல்காப்பியர் ஏட்டுக் கல்வியையும், தொழிற்கல்வியையும் பிரித்துக் கூறுகிறார்.
- ❖ இன்று தாள்கடை போல் அன்று ஓலைக்கடை வைத்திருந்த புலவர் ஒருவர் 'ஓலைக்கடையத்தனார்' என்று அழைக்கப்படுகிறார்.
- ❖ சுவடியும், உணவும், எழுத்தாணியும், உடையும் அளித்தலைச் சிறந்த அறமென்று ஏலாதிச் செய்யுள் (63) ஒன்று குறிப்பிடுகிறது.
- ❖ கல்வி ஒரு கால எல்லையுள் அடங்குவதன்று என்றும் அது எல்லையற்ற பரப்புடையது என்றும் வாழ்நாள் முழுவதும் அவற்றைக் கற்க வேண்டும் என்றும் புலவர்கள் கூறுகின்றனர்.
- ❖ 'கல்வி கரையில கற்பவர் நாள் சில' என்றும் 'மக்களைக் கல்லா வளரவிடல் தீது' என்றும் புலவர்கள் கூறியுள்ளனர்.
- ❖ பாண்டியன் ஒருவன் கல்வியை வற்புறுத்திப் பாடிய செய்யுள் ஒன்று புறநானூற்றில் (பாடல்:183) உள்ளது.
- ❖ திருவள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி முதலிய பல அதிகாரங்களில் கல்வியின் பெருமையைக் கூறியுள்ளார். அவை பின்வருமாறு:

> ''எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்என்ப வாழும் உயிர்க்கு'' (குறள் – 392)
>
> ''கண் உடையார் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
> புண்உடையார் கல்லா தவர்'' (குறள் – 393)

- ❖ நாலடியார் நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வியழகே அழகு (கல்வி:1) என்றும், கடை நிலத்திற் பிறந்தவர் எனினும் கற்றறிந்தவரைத் தலை நிலத்த வைப்பர் (கல்வி:3) என்றும் கூறுகிறது.
- ❖ நான்மணிக்கடிகை 'தனக்குப்பாழ் கற்றறிவில்லா உடம்பு' (பாடல்:2) 'கற்றலின் வாய்த்த பிறப்பில்லை' (பாடல்:2) என்றும், 65, 10, 74, 82, 84 ஆகிய பாடல்களில் கல்வியின் சிறப்பையும் எடுத்துக் கூறுகிறது. மேலும் இளமைப் பருவத்தில் கல்லாமை குற்றம் என்றும் (பாடல்:93) மக்களைக் கல்லாமல் வளர விடுவது தீது என்றும் (பாடல்:94) கூறியுள்ளது.
- ❖ இனியவை நாற்பது 'பிச்சை புக்காயினும் கற்றல் மிகவினிதே' (பாடல்:1) என்றும், 'பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய கற்றலின் காழ் இனிய தில்' (பாடல்:40) என்றும் கூறுகிறது.
- ❖ திரிகடுகம் கல்லாதவர்க்கு இனமாய் ஒழுகுதல் அறியாமை (பாடல்:3) என்றும், நல்ல மாணாக்கன் என்பவன் கேட்டதை மறத்தலாகாது (பாடல்:12) என்றும் குறிப்பிடுகிறது. மேலும் 20, 26, 99 ஆகிய பாடல்களில் கல்லாதவனுக்கு ஏற்படும் இன்னல்களையும் கற்றவரைக் கைவிடுவதால் நரகம் ஏற்படும் என்றும் கூறுகிறது.
- ❖ ஆசாரக்கோவை அரசன், ஆசிரியன், தாய், தந்தை தம்முன் என்னும் ஐவரையும் ஐங்குருவர் என்று பாராட்டிக் கூறுகிறது (பாடல்:16). மேலும் இந்நூல் மாணாக்கனாவான் நடந்து கொள்ள வேண்டிய முறையினை எடுத்துக்காட்டுகிறது.

  ''நின்றக்கால் நிற்க அடக்கத்தா லென்றும்
  இருந்தக்கால் ஏவாமை ஏகார்–பெருந்தக்கார்
  சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டீக மீட்டும்
  வினாவற்க சொல்லொழித்தக் கால்'' (பாடல்:74)

- ❖ பழமொழி நானூறும் கற்றலின் கேட்டலே நன்றென்றும் (பாடல்:143), பாம்பறியும் பாம்பின் கால் (பாடல்:301) என்றும் கூறி கல்வியின் சிறப்பினையும், கல்லாமையின் இழிவினையும் கூறியுள்ளது.
- ❖ இச்சான்றுகளின் மூலம் தமிழர் கல்வியின் பெருமை, கற்பவரின் இயல்பு, கற்றார் ஒழுக வேண்டிய முறை ஆகியவை பற்றித் தெளிந்த அறிவுடையவராக விளங்கினர் என்பது பெறப்படுகிறது.
- ❖ கல்வியை அளிப்பது தந்தையின் கடமையென்பதை

  ''தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
  முந்தி யிருப்பச் செயல்'' (குறள்:67)

  என்றும், அக்கல்வி பிறவி தொறும் பயன் தரும் என்றும்,

  ''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
  எழுமையும் ஏமாப்புடைத்து'' (குறள்:398)

  என்றும், வள்ளுவர் கூறுகிறார்.
- ❖ கி.பி. 7–ம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர்,

  ''எண் அவன் காண் எழுத்தவன் காண்
  இன்பக் கேள்வி இசையவன் காண்'' (ஆறாம் திருமுறை: 485)

என்ற பாடலில் எண்ணையும், எழுத்தையும் பற்றிக் கூறியுள்ளார்.

- ❖ ஒன்று முதல் கோடியீறாக எண்ணை அறிந்திருந்த மக்கள் எண்ணிலடங்காத பேரெண்ணினைக் குறிக்க தாமரை, ஆம்பல், வெள்ளம் என்னும் சொற்களை ஆண்டுள்ளனர் என்பதைக் கபிலர் பதிற்றுப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.
- ❖ இவ்வாறே பின்னங்களும் வழக்கிலிருந்தன. 'காணி' (பழமொழி–32) 'முந்திரி' (பழமொழி–346) என்னும் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இம்மி (நாலடியார்–94) என்னும் சிற்றளவும் கூறப்பட்டுள்ளது.
- ❖ அளவுகளில் நாழி, தூணி (புறநானூறு–89, நற்றிணை–16) என்பனவும், சிலம்பில் காதம், காவதம் என்பனவும், மணிமேகலையில் யோசனை எனும் அளவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ மேலும் வானியல், மருத்துவம், இசை, ஓவியம், சிற்பம், நாட்டியம் முதலியவை பற்றிய கல்வியும் சிறந்திருந்தது.

ஓவியச் செந்நூல்–மணிமேகலை

நூலறி புலவர்–நெடுநல்வாடை

யாழின் மறை – தொல்காப்பியம்

### 1.9.3. கல்வி நிறுவனங்கள்

- ❖ அன்று கற்றறிந்தார் கூடிச் சிந்திக்க சங்கம் அமைத்தனர். பட்டி மண்டபங்கள் வைத்து அறிஞர்கள் பல பொருள்களைப் பற்றி வாதிட்டதிற்குச் சான்றுகள் உண்டு. (பட்டினப்பாலை: 169–171)
- ❖ சமண பௌத்தர்கள் தம் பள்ளிகளில் இருந்து கொண்டு கல்வியளித்தனர். இதனால்தான் பள்ளி என்னும் சொல் கல்வி நிலையத்தைக் குறிப்பதாக அமைந்தது.
- ❖ வடமொழிக்கல்வியே வளர்ச்சியடைந்தது. இடைக்காலத்தில் வடமொழிக் கல்வி தமிழில் காப்பியங்களும் அணி நூல்களும் வளர வாய்ப்பளித்தது. ஆங்கிலேயர் காலத்தில்தான் முறையான பள்ளிகள் தோன்றிப் புத்துலக அறிவினைத் தமிழர்களுக்கு அளித்தன.

**தன்மதிப்பீடு – 8**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. திருவள்ளுவர் கல்வியைப் பற்றிக் கூறுவது யாது ?
2. நான்மணிக்கடிகை கூறும் கல்வியின் சிறப்பை எழுதுக.
3. சமண பௌத்தப் பள்ளிகளால் எக்கல்வி புகுத்தப்பட்டது ?

**பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்க.**

1. கல்வியின் சிறப்பை இலக்கியங்கள் வழி விளக்குக.
2. கல்வியின் இன்றைய நிலை குறித்து எழுதுக.

### 1.10. பொழுது போக்குகள்

- ❖ விளையாட்டும் பொழுதுபோக்கும் ஓரினத்தின் பண்பாட்டினை அறியும் கருவி ஆகும்.
- ❖ சங்க இலக்கியத்தில் இளையவர்கள் முதல் முதியவர் வரை விளையாட்டிலும் பொழுதுபோக்கிலும் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது.

### 1.10.1. புனலாடுதல்

- ❖ பெண்களும் ஆண்களும் ஆறு, குளங்களில் புனலாடி மகிழ்ந்ததை அகப்பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. பரத்தையருடன் ஆண்கள் நீராடி மகிழ்ந்ததை மருதச் செய்யுள்கள் கூறுகின்றன.

### 1.10.2. குளித்து மணல் எடுத்தல்

> "நெடுநீர்க் குட்டத்து துடுமெனப் பாய்ந்து
>
> குளித்து மணற்கொண்ட கல்லா இளமை'' (புறநானூறு: 243)

என்று கல்லாத இளையவன் ஒருவன், பெண்கள் பலர் கிணற்றைச் சூழ்ந்திருக்க நீரில் பாய்ந்து மணல் கொண்டு வந்து விளையாடிய நிகழ்வினைப் பாடியிருக்கிறார் தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் புலவர்.

### 1.10.3. வேட்டையாடுதல்

- ❖ வேடர்கள் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கருதினர். ஆனால் மன்னர்கள் வேட்டையை வீரமிக்க பொழுதுபோக்காகக் கருதினர். சான்றாக வல்வில்லோரி, கண்டீரக்கோப்பெருநற்கிள்ளி என்ற மன்னர்களைக் காட்டலாம்.

### 1.10.4. இசையும் கூத்தும்

- ❖ வேந்தர்கள் தம் அவைப் புலவர்களின் இலக்கிய விளக்கங்களைக் கேட்டும், பாணர், கூத்தர், விறலியர்களின் பாடலையும் ஆடலையும் கேட்டும் கண்டும் இன்புற்று அவர்களுக்குப் பெரும் பொருள்களைப் பரிசாக அளித்தனர்.
- ❖ போர்க்குச் செல்லும் மன்னர்கள் கலைஞர்களையும் அழைத்துச் சென்ற செய்தி சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.
- ❖ பாணர், கூத்தர், போன்றவர்கள் பாசறையில் பொழுது போக்க உதவியாக இருந்தனர்.
- ❖ குறவரும், பரதவரும் ஓய்வு நேரங்களில் பாடியும் ஆடியும் பிறரை மகிழ்வித்து இருக்கின்றனர்.

### 1.10.5. வீர விளையாட்டுகள்

- ❖ விழா நாட்களிலும் ஓய்வு நேரத்திலும் வீரர்கள் வீர விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். இதனை,

> ''மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
>
> கையினும் கலத்தினும் மெய்யுறத் தீண்டிப்
>
> பெருஞ் சினத்தாற் புறக்கொடாஅ'' (வரிகள்: 69 – 71)

என்று பட்டினப்பாலை பாடல் உணர்த்துகின்றது.

### 1.10.6 வட்டாடல்

- பண்டைத் தமிழகத்தில் சிறப்புப் பெற்றிருந்த விளையாட்டுக்களில் ஒன்று வட்டாடுதல். இதற்காக அரங்கம் அமைத்துக் காய்களை நகர்த்தி வட்டாடுவர்.
- இளங்கீரனார் பாடிய நற்றிணைப் பாட்டொன்றின் வேப்பமரத்து நிழலில் கல்லாச் சிறுவர்கள் நெல்லிக்கனியைக் கொண்டு வட்டாடிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது. (நற்றிணை 3:2–5)
- வட்டாடுதல் **வல்லாடுதல்** என்றும் கூறப்படும்.
- பாறையில் உதிர்ந்துகிடந்த பளிங்கு போன்ற நெல்லிக்காய்கள் வட்டுப்போல் தோன்றிய பாலைநிலம் பற்றி அகநானூறு (5:7–10) குறிப்பிட்டுச் செல்கிறது.

### 1.10.7. பந்தாடுதல்

- அன்றைய பெண்கள் நூலினால் வரிந்து கட்டப்பட்ட ஒருவகைப் பந்தினைக் கொண்டு விளையாடினர்.
- வீடுகளின் மேல்மாடத்தில் பெண்கள் வரிப்பந்தாடியது பற்றிப் பெரும்பாணாற்றுப்படை,

> ''பீலி மஞ்ஞையின் இயலி கால
>
> தமனியப் பொற்சிலம் பொலிப்ப உயர்நிலை
>
> வான்தோய் மாடத்து வரிப்பந்த தசைஇ'' (வரிகள்: 331–333)

என்று குறிப்பிடுகிறது.

### 1.10.8. கழங்காடுதல்

- மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று கழங்கு.
- திண்ணைகளில் பொன்னாலான கழங்கினை வைத்து விளையாடிய குறிப்பினைப் 'பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்' என்று புறநானூறு 86ஆம் பாடல் காட்டுகிறது.

> ''மகளிர் ...............
>
> முத்த வார் மணல் பொற்கழங்காடும்'' (வரிகள்:327 – 335)

என்று பெரும்பாணாற்றுப்படையும் குறிப்பிடுகின்றது.

### 1.10.9. ஊசலாட்டம்

- மரத்தின் கிளையில் கயிற்றினை ஊசலாகக் கட்டி அதில் அமர்ந்து ஆடி மகிழ்தல் ஊசலாட்டம் எனப்படும். அப்போது பாடும் பாடல் ஊசல் வரியாகும்.
- குறிஞ்சி கலியில் தலைவியை வைத்து ஊஞ்சலை ஆட்டும் குறிப்பு ஒன்றும் உண்டு.

### 1.10.10. ஓரையாடுதல்

- மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று ஓரையாடுதல். ஆமை நண்டு ஆகியவற்றைக் கோலினைக் கொண்டு கலக்கி விளையாடுவர்.

> ''ஓரை யாயற் தொண்டொடி மகளிர்'' (புறநானூறு – 176)

என்று புறநானூற்றில் ஓரையாடிய மகளிரைப் பற்றிக் குறிப்பொன்று காணப்படுகிறது.

### 1.10.11. வண்டலிழைத்தல்

- ❖ மணலால் பாவை செய்து அதற்குப் பூச்சூட்டி மகிழும் விளையாட்டு வண்டிலிழைத்தல் ஆகும்.

''வாலிழை மடமங்கையர்

வரிமணல் புனைபாவைக்குக்

குலவுச்சினைப் பூக்கொய்து''

என்று புறநானூற்று அடிகளானது (பாடல்:11:2–4) வண்டற் பாவைக்கு மலரினைச் சூட்டிய குறிப்பினைக் காட்டுகிறது.

### 1.10.12. முக்காற் சிறுதேர்

- ❖ மூன்று கால்களை உடைய சிறிய தேரினை ஓட்டி விளையாடுவர். இதனை முக்காற் சிறுதேர் என்பர்.
- ❖ மகளிர் தங்கள் குழைகளை எறிய அது தேரினைத் தாக்கிய செய்தியைப்

''பொற்காற் சிறுவர் புரவியின்றுருட்டும் முக்காற் சிறுதேர்'' (வரி:24)

எனப் பட்டினப்பாலை சுட்டுகிறது.

### 1.10.13. கிலிகிலியாடல்

- ❖ சிறுவர்கள் இன்று கிலுகிலுப்பை என்ற கருவியினைக் கொண்டு விளையாடுவது போல் சங்க காலத்திலும் விளையாடியிருக்கின்றனர். இதனைச் சிறுபாணாற்றுப்படை பாடல் ஒன்று (வரிகள்:55–61) காட்டுகிறது.

### 1.10.14. கோழிப் போர்

- ❖ ஆட்டுக்கிடாய், காடை, கவுதாரி, கோழி முதலான பறவைகளைப் பழக்கிப் போரிடச் செய்து மகிழ்வதில் தமிழர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர்.

''குப்பைக் கோழித் தனிப்போர் போல'' (பாடல்:305)

என்ற குறுந்தொகைப் பாடலில் உவமையானது இடம் பெறுவதால் கோழியைப் பழக்கிப் போரிடச் செய்தது வழக்கில் இருந்ததை அறிய முடிகிறது.

### 1.10.15. ஏறுதழுவல்

- ❖ முல்லை நில வீரர்கள் காளைகளை அடக்குவதை விளையாட்டாகக் கொண்டிருந்தனர். இத்தகைய வீரர்களையே ஆயர்குடிப் பெண்கள் விரும்பினர்.

''கொல்லேற்றக் கோடஞ்சுவானை மறுமையும்

புல்லாளே ஆய மகள்'' (வரிகள்: 63–64)

எனும் கலித்தொகைப் பாடல் சான்றாக விளங்குகிறது. மேற்கண்ட செய்திகளால் சங்க கால மக்கள் பொழுது போக்கிலும் விளையாட்டிலும் ஆர்வம் காட்டினர் என்பதை அறியலாம்.

**தன்மதிப்பீடு – 9**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. இசையும் கூத்தும் பொழுதுபோக்கில் எங்ஙனம் இடம் பெறுகின்றன ?
2. வீர விளையாட்டைப் பற்றிப் பட்டினப்பாலை கூறுவது யாது ?
3. கழங்காடுதல் பற்றிக் குறிப்பு வரைக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. தமிழரின் வீர விளையாட்டுக்களைப் பற்றி விளக்குக.
2. தமிழரின் பொழுதுபோக்கைப் பற்றிக் குறிப்பிடுக.

### 1.11. நம்பிக்கைகள்

- ❖ பழமையான எல்லா இனங்களிலும் நம்பிக்கைகள் காணப்படுகின்றன. சில நம்பிக்கைகள் இன்று வரையிலும் தொடர்ந்து இருக்கின்றன.
- ❖ நன்மையினால் உண்டாகும் ஆர்வமும் தீமையினால் உண்டாகும் அச்சமும் நம்பிக்கைக்கு அடிப்படை ஆகும்.
- ❖ உலகப் பொருள்கள் சிலவற்றில் தெய்வங்களும் பேய்களும் பிசாசுகளும் குடியிருப்பதாக எண்ணி அவற்றிற்குப் பலியிட்டனர். சொர்க்கம், நரகம், மறுபிறப்பு, இருவினை ஊழ் பற்றி நம்பிக்கைகளும் இருந்தன.

#### 1.11.1. கோள் பற்றிய நம்பிக்கை

- ❖ பண்டைய மனிதன் தான் செய்யும் செயல் வெற்றியோடு முடிய வேண்டும் என்றால் நல்ல நாள், நல்ல வேளை என்ற பொழுதுகளைப் பார்த்திருக்கின்றனர்.
- ❖ மன்னர்களிடமும் நல்ல நாள் பார்க்கும் வழக்கம் இருந்தது. இதற்காக அரண்மனையில் கணியர்கள் இருந்தனர்.
- ❖ வாள்நாள் கோள், குடைநாள் கோள் என மன்னர்கள் தனது வாளினையும், குடையையும் எடுத்து சென்றனர். இதனைத் தொல்காப்பியமும் குறிப்பிட்டுள்ளது.
- ❖ திருமணம் திங்களும் உரோகிணியும் கூடிய நல்லநாளில் நடத்தப்பட்டதை அகநானூறு (பாடல்கள்: 86,136) காட்டுகிறது.
- ❖ சகுனம் பார்க்கும் பழக்கமும் இருந்தது. வல்வில் ஓரியைக் கழைதின் யானையார் பாடிப் பரிசில் வாங்கச் சென்ற போது பரிசில் பெற இயலவில்லை. இதற்குப் புறப்பட்ட வேளையையும், பறவை சகுனத்தையும் நொந்து கொள்வது தவிர மன்னனைக் கடிந்து கொள்வது ஆகாது என்பதை,

  ''புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
  உள்ளிச் சென்றோர் பழியலர் அதனால்
  புலவேன் வாழியர் ஓரி'' (பாடல்: 204)

  என்று புறநானூறு விளக்குகிறது.

#### 1.11.2. பல்லி பற்றிய நம்பிக்கைகள்

- ❖ பண்டைக் காலம் தொட்டுப் பல்லியின் குரலைச் சகுனமாகக் கொள்ளும் நம்பிக்கை இருந்து வருகின்றது.

- ❖ பல்லி உடம்பின் எந்தப் பகுதியில் விழுந்தால் என்ன பலன் என்று கணித்துக் கூறுபவர் இன்றைக்கும் இருக்கின்றனர்.
- ❖ தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி பல்லியின் குரலைக் கேட்டதும் நல்ல அறிகுறி என்ற எண்ணம் கொண்டாள் என்பதை,

  ''மையல் கொண்ட மதனழி இருக்கையள்

  பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி

  நல்ல கூறுகென நடுங்கி'' (பாடல்: 269)

  என்ற அகநானூற்றுப்பாடல் எடுத்துக் காட்டுகிறது.
- ❖ யானை மேல் செல்லும் மன்னர் பல்லி சொல்கேட்டுப் பின்வாங்கியதை அகநானூறு (பாடல்–387) காட்டுகிறது.

**1.11.3. பறவைகள் பற்றிய நம்பிக்கைகள்**

- ❖ குயில் கூவினால் பிரிந்து சென்ற தலைவன் வருவான் என்ற குறிப்பானது நற்றிணையில் (246:1–4) இடம் பெறுகிறது.
- ❖ காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை காணப்பட்டது. ''விருந்து வரக் கரைந்த காக்கை'' என்று பாடியதால் காக்கைபாடினியார் என்ற ஒரு புலவர் பாராட்டப்பட்டார்.
- ❖ சில பறவைகளின் ஒலியும் சகுனமாகப் பார்க்கப்பட்டது. பறவையின் ஒலிப் பலனைக் கூறுவோரும் இருந்தனர்.
- ❖ காரி என்ற கரிக்குருவியின் ஒலி அழிவுக்கு அறிகுறி என்றும், போரின் போது வீசப்படும் முரசுப்பலி உணவினைப் பருந்தும் காக்கையும் உண்டால் வெறி உண்டாகும் என்றும், ஆந்தையின் அலறலைத் தீய நிமித்தமாகவும் கருதினர் (புறநானூறு – 41).

**1.11.4. நற்சொல் பற்றிய நம்பிக்கை**

- ❖ பிறர் சொல்லும் சொல்லைச் சகுனமாகப் பார்க்கும் வழக்கம் இருந்தது. இதனை **நற்சொல்** என்றும் **விரிச்சி** என்றும் கூறுவர்.
- ❖ முதுமகளிர் நாழியில் நெல்லை எடுத்துச் சென்று, சுளகில் இட்டு, நீரும் பூவும் சொரிந்து விரிச்சி கேட்பர் என்று முல்லைப்பாட்டுக் குறிப்பிடுகிறது.

  ''நாழி கொண்ட நறுவீ முல்லை

  அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது

  பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப''

  (வரிகள்:9–11)

என்பதால் விரிச்சி கேட்ட நிகழ்ச்சியினை அறிய முடிகிறது.

**1.11.5. உன்னமரம் பற்றிய நம்பிக்கைகள்**

- ❖ 'உன்னம்' என்பது ஒரு வகை மரம்
- ❖ உன்ன மரம் தழைத்துக் காணப்பட்டால் வெற்றி என்றும் வாடிக் காணப்பட்டால் தோல்வி என்றும் கூறப்பட்டது.

### 1.11.6. கண், தோள் பற்றிய நம்பிக்கைகள்

- ❖ பெண்களுக்கு இடக்கண்ணும் இடத்தோளும் துடித்தல் நல்லது எனவும், ஆண்களுக்கு வலக்கண்ணும் வலத்தோளும் துடித்தல் நல்லது எனவும் நம்பினர்.

### 1.11.7. கனவு, உற்பாதம் பற்றிய நம்பிக்கைகள்

- ❖ கனவு பற்றிய நம்பிக்கை பழங்காலம் தொட்டு இருந்து வருகிறது. கனா நூல்கள் தமிழில் உண்டு.
- ❖ சிலப்பதிகாரத்தில் கனாத்திறம் உரைத்த காதையில் கண்ணகி கண்ட கனவினால் தீய காரியங்கள் நிகழ்ந்ததை அறிய முடிகிறது.
- ❖ உற்பாதங்கள் என்பது மனதிற்கு ஒவ்வாத செயல்களைக் குறிக்கும். தலைவி ஒருத்தி தும்பி இசைபாடுதல், விளக்கு ஒளியில்லாமல் போதல், ஆந்தை குழறுதல் போன்றவற்றைத் தீய சகுனங்களாகக் கொண்டு அஞ்சும் நிலையினைப் புறநானூறு குறிப்பிடுகிறது.

### 1.11.8. வெள்ளி மீன் பற்றிய நம்பிக்கைகள்

- ❖ வெள்ளி மீனானது வடதிசையில் இருந்தால் வளம் என்று கூறப்பட்டது.
- ❖ சனி மீன் புகைந்தாலும் எல்லாத் திசையிலும் புகை தோன்றினாலும் வெள்ளி தெற்கே தோன்றினாலும் மழை வளம் தவறாது என்றார் கபிலர். (புறநானூறு:117)

### 1.11.9. எரிகோள் பற்றிய நம்பிக்கை

- ❖ விண்மீன் தோன்றினால் அரசர்க்கு ஆகாது என்பதை விண்மீன் தோன்றிய ஏழாம் நாளில் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை இறந்த குறிப்பானது புறநானூற்றில் (பாடல்:229) உள்ளது என்பதன் மூலம் அறியலாம்.

### 1.11.10. பேய் பற்றிய நம்பிக்கை

- ❖ பேயினை விரட்ட யாழ் போன்ற கருவியினை முழக்கினர்.

  ''வெண் சிறு கடுகைப் புகைத்தனர், ஆம்பற் குழலை ஊதினர்,
  காஞ்சிப் பண்ணைப் பாடினர் தூபம் எடுத்தனர்'' (பாடல்:28)

  என்பன போன்ற குறிப்புகள் புறநானூற்றில் காணப்படுகிறது.

இத்தகைய நம்பிக்கைகள் நம் பழந்தமிழ் மக்களிடம் காணப்பட்டன. இவற்றில் சில இன்றும் காணப்படுவதை நாம் அறியலாம்.

**தன்மதிப்பீடு – 10**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. தமிழரின் கோள் பற்றிய நம்பிக்கைகள் யாவை ?
2. விரிச்சி என்றால் என்ன ?
3. கனவு – நம்பிக்கைகளில் ஒன்றாகுமா ? சுருக்கி எழுதுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. தமிழர்களின் நம்பிக்கைகளைப் பற்றி விரிவாகக் கூறுக.
2. நம்பிக்கை குறித்த இலக்கியச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

### 1.12. அற நெறிகள்

- ❖ பண்டைத் தமிழர்கள் அறத்தின் மீது பற்று கொண்டவராக இருந்தனர்.
- ❖ சங்க இலக்கியங்களில் சான்றோர்கள் நாம் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்களை வரையறுத்துக் கூறியுள்ளனர். பிற்கால நூல்களும் அறம் குறித்தும் அறத்தின் பயன்குறித்தும் இயம்பியுள்ளன.

### 1.12.1. அறத்தின் பயன்

- ❖ மக்களின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை பொருள். உள்ளவர்கள் இல்லாதவருக்குக் கொடுத்து உதவுவது கடன் எனப் புலவர்கள் வலியுறுத்தினர்.
- ❖ ஈகை என்பது நற்செயல் என்று எண்ணிச் செய்ய வேண்டுமே அன்றிப் புகழும் மறுமைப் பயனும் உண்டாகும் என்று எண்ணுதல் கூடாது. ‘‘எத்துணையாயினும் ஈத்தல் நன்றென மறுமை நோக்கின்றோ அன்றே பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே’’ (புறநானூறு: 141) என்று புலவர் பேகனின் கொடைத்தன்மையைப் பாடியுள்ளார்.
- ❖ கடையெழு வள்ளல்கள் பற்றிய புகழ்பாடல்கள் அவர்களின் ஈகை தன்மைக்குச் சான்றாக அமைகின்றன.
- ❖ இந்திரர்களின் அமிழ்தம் கிடைப்பதாக இருந்தாலும் தானே உண்ணாமல் பகுத்து உண்ண வேண்டும் என்ற அறத்தினைப் புறநானூறு (பாடல்:182) வலியுறுத்துகிறது.
- ❖ எந்த ஊரும் தன்னூர் என்றும் யாவரும் உறவினர் என்றும் கருதுபவன் நன்மைக்கும் தீமைக்கும் தானே காரணம் என்பான். துன்பமும் இன்பமும் தன் வினையினால் வருவது என்பான். சாவினைக் கண்டு அச்சம் கொள்ள மாட்டான். பெரியவரைக் கண்டு வியப்பினையும் சிறியோரைக் கண்டு இகழ்ச்சியும் கொள்ளமாட்டான். (புறநானூறு:192)
- ❖ மேற்கண்ட கருத்துக்களின் வழி மனித இனம் முழுவதும் ஒன்றே எனக் காண்கின்ற மனப்பக்குவத்தினைத் தமிழர்கள் கொண்டு இருந்ததைக் காணலாம்.

### 1.12.2. அறத்தின் வகைமை

#### 1.12.2.1. இன்பம் கண்டு வாழ்தல்

- ❖ இன்பத்தினையும் துன்பத்தினையும் கொண்டது மனித வாழ்க்கை.
- ❖ ஓரில்லத்தில் மணம் நடைபெறுகிறது. எதிர் வீட்டில் பிணப்பறை ஒலிக்கிறது. இத்தகைய நிலையில்லாத வாழ்வில் இனிமை கண்டு வாழ்தல் வேண்டும் என்று பக்குடுக்கை நன்கணியார் பாடுகிறார். (புறநானூறு:194)

#### 1.12.2.2. இன்னா செய்யாமை

- ❖ வாழ்நாள் முழுதும் பிறருக்குத் தீமை செய்து வாழ்பவன் தன் மூப்பு நேரத்தில் அதற்காக வருந்துவதால் பயன் ஒன்றும் இல்லை.
- ❖ மூப்பும் பிணியும் வருவதற்கு முன்பே நல்லது செய்ய முயல வேண்டும். நன்மை செய்ய பொருள் தேவைப்படுகிறது. நன்மை செய்யா விட்டாலும் தீமை செய்யாமல் இருத்தல் வேண்டும் என்றும் (புறநானூறு: 195) புலவர் பாடுகிறார்.

### 1.12.2.3. பிறருக்கு உதவுதல்

- ❖ இயலாத நிலையில் உள்ள அனைவருக்கும் நம்மால் உதவ முடியாது. முடிந்த வரையில் பிறருக்கு உதவலாம்.
- ❖ நம்மால் செய்ய இயலாத காரியத்தை முடியும் என்பதும், செய்ய இயலும் காரியத்தை இயலாது என்பதும் தவறாகும். இத்தகைய செயலானது ஒருவனது புகழைக் குறைத்துவிடும் என்று மூலங்கிழார் அறிவுறுத்துகிறார். (புறநானூறு:196)

### 1.12.2.4. எண்ணம் உயர்வாதல்

- ❖ எண்ணுவது எல்லாம் உயர்வாக இருத்தல் வேண்டும் என்று (புறநானூறு:214) கோப்பெருஞ்சோழன் வலியுறுத்துகிறார்.
- ❖ யானைவேடன் தன் நோக்கத்தில் உறுதியாக இருந்தால் யானையைப் பெறுவான். குறும்பூழ் (பறவை) வேடன் நோக்கம் இல்லாதவனாக இருந்தால் வெறுங்கையோடு திரும்பும் நிலை வரும் என்றும் கூறப்படுகிறது.
- ❖ உயர்ந்ததைப் பெற முயல வேண்டும் என்ற நோக்கம் உடையார் துறக்கத்தை (சொர்க்கம்) அடைவர். நோக்கம் இல்லாதவர் மாய்தல் நன்று எனவும் (புறநானூறு:214) வலியுறுத்தப்படுகிறது.

### 1.12.2.5. பண்புடைமை

- ❖ மாந்தர்களின் பண்பினால் தான் நாடானது சிறக்கும்.
- ❖ மலைவளம், கழனிவளம், காட்டுவளம், கடல் வளம் ஒரு நாட்டில் சிறந்து காணப்பட்டாலும் அங்கு மனிதர்கள் சிறந்தவர்களாக இருந்தால் தான் சிறப்பு என்பதை 'நாடாகொன்றோ' என்ற ஔவையாரின் (புறநானூறு:187) பாடல் வழி அறியலாம்.
- ❖ புறநானூற்று பாடல் ஒன்றில் இளம்பெருவழுதி என்ற மன்னன் இந்த உலகமானது நிலைபெற்று இருப்பதற்குச் சான்றோர்களே காரணம் என்று கூறியுள்ளார்.
- ❖ சான்றோர்கள் என்போர் அமிழ்தமே கிடைப்பதாக இருந்தாலும் தானே உண்ணாமல் பகுத்து உண்ணும் தன்மை உடையவர் ஆவர்.
- ❖ புகழ் வருவதாக இருந்தால் சான்றோர் உயிரையும் கொடுப்பர்.
- ❖ பழி வருவதாக இருந்தால் அதனைக் கண்டு அஞ்சுவர்.
- ❖ சான்றோர் தமக்காக வாழாமல் பிறருக்காக வாழும் தன்மையுடையவர் ஆவர். இத்தகைய இயல்பு உள்ளவர்களால் தான் உலகம் நிலைத்து இருக்கிறது என்ற கருத்தினைப் புறநானூற்றின் 182–ஆம் பாடல் காட்டுகிறது.

### 1.12.2.6. கொடையறம்

- ❖ மனித இனம் என்பது ஒரே தன்மை உடையது. இதில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடு கிடையாது.
- ❖ ஒரு நாட்டை ஆளும் மன்னனுக்கும் உணவுக்காக அலையும் வேடனுக்கும் அடிப்படையில் தேவை என்பது நாழியுணவும் இரண்டு ஆடையுமே ஆகும். எனவே செல்வம் பெற்றிருப்பதன் காரணம் பிறருக்குக் கொடுப்பதற்காகவே என்ற கருத்தினைச் செந்நாப்புலவர் நக்கீரர் கூறியுள்ளார். (புறநானூறு:189)

### 1.12.2.7. நட்பறம்

- ❖ மனிதர்களில் சிலர் வஞ்சக எண்ணத்தால் தன்னுடைய செல்வத்தைப் பிறருக்குக் கொடுக்காமல் பதுக்கி வைத்திருப்பவர். இவர்களோடு உறவு கொள்வது ஆபத்தாக முடியும்.
- ❖ புலியானது பெரிய களிறினை வீழ்த்தி மறுநாள் வரை பசியோடு இருந்து பின்னர் அதனை உண்ணும் தன்மை உடையது. இத்தகைய தன்மை உடையவரோடு நட்பு கொள்வதே சிறந்தது என்பதைப் புறநானூறு 130–வது பாடல் விளக்குகிறது.

### 1.12.2.8. வாழ்க்கையறம்

பிசிராந்தையார் என்ற புலவர் தனிமனிதன் கவலையற்று வாழ்வதற்குரிய காரணங்களைக் குறிப்பிடுகிறார். (புறநானூறு:191)

- ❖ ஒரு தனிமனிதனுக்கு வாய்த்த மனைவி பண்புடையவளாக இருக்க வேண்டும்.
- ❖ பெற்ற பிள்ளைகள் அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.
- ❖ ஏவலாளர்கள் தன் குறிப்பினை அறிந்து செயல்பட வேண்டும்.
- ❖ தன் நாட்டிற்கு நல்ல மன்னர் அமைதல் வேண்டும்.

மேற்கண்ட காரணங்கள் தான் ஒரு தனிமனிதனைக் கவலை இல்லாமல் செய்யும் காரணம் என்று கூறப்படுகிறது.

### 1.12.2.9. செய்நன்றி மறவாமை

- ❖ வள்ளுவர் செய்நன்றியின் பெருமையினைத் தனி அதிகாரத்தினுள் வழங்கியுள்ளார். துன்பக்காலத்தில் உதவியவர்களின் நட்பினை எழு பிறப்பிலும் மறத்தல் ஆகாது என வலியுறுத்துகிறார்.

“செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென

அறம்பா டின்றே ஆயிழை கணவ” (பாடல்:34)

என்று புறநானூறானது செய்நன்றியினைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

### 1.12.2.10. பிறர் துன்பத்திற்கு அஞ்சுதல்

- ❖ பொருட் செல்வமானது நிலையில்லாதது. அறச்செல்வமே நிலையானது என்று எண்ணினர் தமிழர்கள்.
- ❖ நற்றிணையில் உள்ள ஒரு பாடலில்,

“நெடிய மொழிதலும் கடிய வூர்தலும்

செல்வமன்று; தன் செய்வினைப் பயனே

சான்றோர் செல்வமென்பது சேர்ந்தோர்

புன்கண் அஞ்சும் பண்பின்

மென்கட் செல்வம் செல்வமென் பதுவே” (பாடல்:210: 5–9)

என்று பட்டம், பதவி பெற்று வாழும் ஆடம்பர வாழ்க்கை என்பது உயர்ந்ததல்ல. தன்னைச் சார்ந்தவர்க்குத் துன்பம் வருமானால் அதற்கு வருந்தும் உள்ளமே செல்வத்தை விட உயர்ந்தது என்பதைக் காட்டுகிறது.

**1.12.2.11. மனம் பற்றிய அறம்**

- ❖ மனம் என்பது ஒருவனது கண்ணாடி போன்றது.
- ❖ மனம் அறிந்து தீமைச் செய்வது பழிக்கத்தக்கது என்பதை,

"நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் அறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை" (கலித்தொகை:125:3–4)

என்ற பாடல் சுட்டிக்காட்டுகிறது.

**1.12.3. நல்லறத்திற்கு ஆகாதவை**

- ❖ நட்புக் கொண்டு துன்ப நேரத்தில் கைவிடுதல் தகாதச் செயலாகும்.
- ❖ செல்வம் உள்ள போது உறவு கொண்டு வறுமை உற்ற போது கைவிடுதல் சான்றோர்க்குத் தகாத செயலாகும். இதனைக் கலித்தொகையானது,

"செல்வத்துட் சேர்ந்து அவர் வளனுண்டு மற்றவர்
ஒல்கத்து நல்கிலா உணர்விலார்" (பாடல்:25:19–20)

எனக் காட்டுகிறது.

- ❖ தீவினைகள் செய்தால் வாழ்க்கையும் தேய்ந்து போகும் என தமிழர்கள் நம்பியிருந்தனர்.
- ❖ ஆசிரியருக்கு உதவாதவர், தனக்கு உதவியவருக்கு உதவாதவர், உறவினர் துன்பத்தில் இருக்க வருந்தாதவர்களின் வாழ்க்கையானது தேய்ந்து போகும் எனக் கலித்தொகைப் (149) பாடலொன்று காட்டுகிறது.
- ❖ மன்னனுக்குக் களிறு, புரவி, தேர், வீரர்களை விட அறமே சிறந்தது என்பதைப் புறநானூறு (பாடல்:55) காட்டுகிறது.
- ❖ அனைவருக்கும் பயன்படும் பொருளைச் சிதைத்தல் ஆகாது.
- ❖ பொய் கூறுபவரின் குடியானது பாழ்படும் எனக் கருதிப் பொய்க்கூறுதல் ஆகாது என நம்பினர்.
- ❖ மணம் கொண்டாரைப் பிரிதல் ஆகாது.
- ❖ சொன்னச் சொல்லை மறுத்தல் ஆகாது
- ❖ விசாரணை இல்லாமல் தண்டித்தல் ஆகாது.

போன்ற அறங்களைத் தமிழர்கள் பின்பற்றி வாழ்ந்தனர்.

**தன்மதிப்பீடு – 11**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. இன்னா செய்யாமை – குறிப்பு வரைக.
2. செய்ந்நன்றி மறவாமை – சுருக்கி வரைக.

**பின்வரும் வினாவிற்கு விரிவான விடையளிக்க.**

1. அறத்தின் வகைகளை விவரிக்க.

### 1.13. தொகுப்புரை

1. மூவேந்தர்கள் தோன்றிய காலத்தை வரையறுக்க இயலாது.
2. சங்க காலத்தில் அரசனைக் கோ, மன்னன், வேந்தன், கொற்றவன் என்று அழைத்துள்ளனர்.
3. தந்தைக்குப் பின் மூத்தமகன் பட்டம் பெறுவது அன்றைய மரபாகும்.
4. படைக்கலம், கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், மாலை, முடி ஆகியன அரசச் சின்னங்களாகும்.
5. ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் மன்னனின் கீழ்ப் பணியாற்றிய குழுக்களாவர்.
6. மக்கள், நில அடிப்படையில் குறிஞ்சிநிலக் குறவர்கள் முல்லைநில ஆயர்கள், நெய்தல் நில பரதவர்கள், மருதநில உழவர்கள், பாலை நில எயினர் எனப்பட்டனர்.
7. சங்க வாழ்க்கை அகம், புறம் என இரண்டாக வகுக்கப்பட்டது. காதல் வாழ்க்கையைக் களவு என்றும் திருமண வாழ்க்கையைக் கற்பு என்றும் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் வரையறுத்துள்ளது.
8. தமிழர்கள் மேற்கே கிரீசு, உரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையில் வாணிகத்தை மேற்கொண்டிருந்தனர். உள்நாட்டு வாணிகமும் சிறந்து விளங்கியுள்ளது.
9. மக்கள் தாங்கள் வாழ்ந்த நிலத்திற்கேற்ற வகையில் உணவு, உடை, உறையுளைக் கையாண்டனர். பொன், முத்து, பவழம் இவற்றாலான அணிகலன்களை அணிந்துள்ளனர்.
10. சங்க காலத்தில் பல்வேறு புலவர்கள் வாழ்ந்துள்ளனர். தமிழ் இலக்கியங்கள் பல கல்வியின் சிறப்பினைக் கூறியுள்ளன.
11. நாட்டுப்புற விளையாடல்கள் பலவற்றைச் சங்கத்தமிழர்கள் விளையாடியுள்ளனர். கோள், பறவை, நற்சொல், கனவு, வெள்ளிமீன், எரிகோள் பற்றிய நம்பிக்கைகள் மக்களிடையே இருந்துள்ளன.
12. தமிழர்கள் அறம் சார்ந்த பண்புகளைப் பெற்றிருந்தனர். சான்றாக, பிறருக்குத் துன்பம் செய்யாமல் இருத்தல், உதவும் தன்மை, உயர்வான எண்ணம், கொடை அறம், நட்பறம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

# குறிப்பு

## அலகு – 2

## கலைகள்

### பாடக்கருத்தலகுகள்

2.0. நோக்கம்

2.1. முன்னுரை

2.2. இசைக்கலை

2.2.1. தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் இசை

2.2.2. சங்ககாலத்து இசைக்கருவிகள்

2.2.3. இசை நூல்கள்

2.2.4. சிலப்பதிகாரத்தில் இசை

2.2.5. பல்லவர் காலத்தில் இசை

2.2.6. சோழர் காலத்தில் இசை

2.2.7. பிற்காலத்தில் இசை

2.2.8. தமிழிசைச் சங்கம்

2.2.9. பிற்கால இசைவாணர்கள்

தன்மதிப்பீடு – 1

2.3. சிற்பக்கலை

2.3.1. பல்லவர் காலச் சிற்பங்கள்

2.3.2. பாண்டியர் காலச் சிற்பங்கள்

2.3.3. சோழர் காலச் சிற்பங்கள்

2.3.4. விசயநகரத்தார் காலச் சிற்பங்கள்

2.3.5. இருவகைச் சிற்பங்கள்

2.3.6. யவனச் சிற்பமும் இந்தியச் சிற்பமும்

2.3.7. சிற்பத்தில் மறைபொருள்

2.3.8. செப்புத் திருமேனிகள்

2.3.9. சிற்பக்கலையின் சிறப்பியல்புகள்

தன்மதிப்பீடு – 2

2.4. கட்டிடக்கலை

2.4.1. சங்க இலக்கியக் குறிப்புகளில் கட்டிடக்கலை

2.4.2. கட்டிடக்கலையில் கோயில்கள்

2.4.3. பல்லவர்காலக் கட்டிடக்கலை

2.4.4. சோழர்காலக் கட்டிடக்கலை

2.4.5. பாண்டியர்காலக் கட்டிடக்கலை

2.4.6. விசய நகரத்தார்க்காலக் கட்டிடக்கலை

தன்மதிப்பீடு – 3

2.5. ஓவியக்கலை

2.5.1. சங்க கால ஓவியங்கள்

2.5.2. சங்க காலத்திற்குப் பின் ஓவியங்கள்

2.5.3. சேரர் கால ஓவியங்கள்

2.5.4. சோழர் கால ஓவியங்கள்

2.5.5. விசய நகரத்தார் கால ஓவியங்கள்

2.5.6. மதுரை நாயக்கர் கால ஓவியங்கள் (கி.பி. 1700–1800)

2.5.7. பிற்கால ஓவியங்கள்

தன்மதிப்பீடு – 4

2.6. கூத்துக்கலை

2.6.1. சங்ககாலத்தில் கூத்துக்கலை

2.6.2. கூத்து நூல்கள்

2.6.3. சிலம்பும் கூத்தும்

2.6.4. கூத்துக்கலையில் மெய்ப்பாடுகள்

2.6.5. பல்லவர் காலத்தில் கூத்துக்கலை

2.6.6. சோழர்காலத்தில் கூத்துக்கலை

2.6.7. நாயக்கர் காலத்தில் கூத்துக்கலை

தன்மதிப்பீடு – 5

2.7. நாடகக்கலை

2.7.1. தொடக்க காலத் தமிழ்நாடகங்கள்

2.7.2. பிற்காலத் தமிழ்நாடகங்கள்

2.7.3. நாடகக் கலைஞர்களும் படைப்புகளும்

2.7.4. இருபதாம் நூற்றாண்டு நாடகங்கள்

தன்மதிப்பீடு – 6

2.8. மருத்துவக் கலை

2.8.1. சங்க காலத்தில் மருத்துவம்

2.8.2. திருவள்ளுவர் சுட்டும் மருத்துவம்

2.8.3. சமண பௌத்த நூல்கள் கூறும் மருத்துவம்

2.8.4. பல்லவர் கால மருத்துவம்

2.8.5. சோழர் கால மருத்துவம்

2.8.6. மருத்துவ நெறியில் சித்தர்கள்

தன்மதிப்பீடு – 7

2.9. தொகுப்புரை

# அலகு – 2

# கலைகள்

## 2.0. நோக்கம்

- ❖ தமிழினத்தின் பண்டைய இசை மரபினை அறிதல்.
- ❖ பண்கள் இசைக்கருவிகள், இசைக்கலைஞர்கள், இசைநூல்கள், தமிழிசைச் சங்கம், பிற்கால இசைவாணர்களின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளுதல்.
- ❖ பல்வேறு மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் காணப்பட்ட சிற்ப வகைகளைத் தெரிந்து கொள்ளல்.
- ❖ சோழர், பாண்டியர், பல்லவர் நாயக்கர்களது ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் மற்றும் கட்டிடக்கலை குறித்து அறிதல்.
- ❖ சங்க காலம் முதல் பிற்காலம் வரையிலான பல்வேறு ஓவியங்கள் குறித்து உணர்ந்து கொள்ளுதல்
- ❖ பழந்தமிழர்களின் பல்வகைக் கூத்துக்களையும், கூத்தநூல்களையும் அறிதல்.
- ❖ பழங்காலம் முதல் தற்காலம் வரையில் வளர்ந்து வருகின்ற நாடகக்கலை குறித்த செய்திகளைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளுதல்.

## 2.1. முன்னுரை

தமிழக மக்களின் பண்பாட்டின் சின்னமாக விளங்குவது கலைகளாகும். இக்கலைகளின் மூலம் மக்களின் அறிவுத்திறனையும், கலாச்சாரத்தையும் உணர்ந்து கொள்ளலாம். இக்கலைகளை ஒவ்வொரு இனத்தவரும் தனக்கெனப் பிரித்துக் கொண்டனர். அதன்படி செயல்பட்டும் வருகின்றனர். தமிழர்கள் போற்றும் கலைகளாக இசை, சிற்பம், கட்டிடம், ஓவியம், கூத்து, நாடகம், மருத்துவம் ஆகியவை விளங்குகின்றன. இவற்றைப் பற்றிச் சற்று விரிவாகக் காண்போம்.

## 2.2. இசைக்கலை

- ❖ உலகில் வாழும் எல்லா இனங்களும் தங்களுக்கென இசை மரபுகளைக் கொண்டுள்ளன. தமிழினத்தின் இசை மரபு பழமையுடையதாகும்.
- ❖ அனைத்து உயிர்களையும் தன்வயப்படுத்துவதினால் இக்கலைக்கு 'இசை' என்று பெயரிட்டனர் தமிழர்கள். அவர்கள் மிடற்று இசையிலும், கருவியிசையிலும் மேம்பட்டிருந்தனர். போற்றிப் பாதுகாக்கப்படாத காரணத்தால் இசை இலக்கண நூல்கள் பல அழிந்துவிட்டன.
- ❖ இடைக்காலத்தில் சமயங்களின் அரவணைப்பில் இசைக்கலை வளர்ந்தது.
- ❖ நாயக்கர் காலத்தில் தெலுங்கிசை செல்வாக்குப் பெற்றதால் தமிழிசையின் வளர்ச்சித் தடைப்பட்டது.
- ❖ இந்நூற்றாண்டின் தமிழ்ப் பெரியார் சிலரின் முயற்சியால் தமிழிசையானது வளர்ச்சியைப் பெற்றது.

### 2.2.1. தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் இசை

- ❖ தமிழ் மக்களின் வாழ்வோடு இசையானது இரண்டறக் கலந்திருக்கின்றது என்பதைத் தொல்காப்பியமும் சங்க நூல்களும் குறிப்பிட்டுள்ளன.
- ❖ கருப்பொருள்களில் யாழையும் பறையையும் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது என்பதை,

''அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்'' (எழுத்து, நூ.33)

என்ற நூற்பாவால் அறியலாம்.

- தொல்காப்பியர் காலத்தில் இசையையும் கூத்தையும் துணையாகக் கொண்டு வாழ்வு நடத்திய கலைத்துறையினர் தனிப்பிரிவாக இயங்கினர் என்பதை ஆற்றுப்படையிலக்கணத்தின் மூலம் அறியவியலும்.
- மன்னர்களின் வாயிலில் நின்று பாணர்கள் துயிலெடை பாடியுள்ளனர். இதனை இடைக்காலத்தில் திருப்பள்ளியெழுச்சி என்றும் கூறினர்.
- சங்க இலக்கியங்களில் இசைக்கருவிகள், பண்கள், இசைவாணர்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.
- குறிஞ்சிப் பண்ணினை அகநானூறு பாடலும், பாலைப் பண்ணினைப் பொருநராற்றுப்படையும், விளரிப்பண், காஞ்சிப்பண் ஆகியவற்றைப் பற்றிப் புறநானூறும், மருதப்பண்ணை மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுகின்றன.
- குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை என்னும் நான்கும் அக்காலத்து இயற்கையையொட்டி வழங்கிய இசை வகைகளாகும்.
- நிலப்பண்களைத்தவிர காமரம், நைவளம் போன்ற பண்களின் பெயர்களும் கூறப்பட்டுள்ளன என்பதை,

  ''நைவளம் பழுநிய நயந்தெரி பாலை'' (வரி.36)

  ''காமரு தும்பி காமரம் செப்பும்'' (வரி.77)

  எனும் சிறுபாணாற்றுப்படை வரிகளின் மூலம் அறியலாம்.
- இசைக் கலைஞர்களைப் பாணர்கள் என்றழைத்தனர். 'பாணர்' எனும் சொல் பண் என்பதினடியாகப் பிறந்தது என்பர்.
- பாணர்களை மன்னர்களும் வள்ளல்களும் பெரிதும் பாராட்டிப் பரிசளித்தனர்.
- 'பாண்பசிப் பகைஞர்' என்று வள்ளல்களும், 'பாணர் பெருமகன்' என்று பாணர்களும் புகழப்பட்டுள்ளனர்.
- பாணர்கள் வள்ளல்களிடம் பரிசு பெற்று வருகையில் எதிர்வரும் தம்மினத்தவர்களை அவ்வள்ளல்கள்பால் ஆற்றுப்படுத்தினர்.
- சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகியவையும் பதிற்றுப்பத்தில் வரும் பல பாடல்களும் பாணர்களின் வாழ்க்கையினை உணர்த்துவதாக அமைந்துள்ளன.
- பாணர்கள் திருவிழாக்களின்போது மக்களையும், அவைக்களத்தில் மன்னர்களையும் பாடி மகிழ்வித்தனர். மேலும் தலைமக்களின் தூதுவர்களாகவும் இருந்தனர்.

### 2.2.2. சங்ககாலத்து இசைக்கருவிகள்

- பண்டை இசைக் கருவிகளில் தலைமையானது யாழாகும்.
- சீறியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டு யாழ் என்பன யாழின் வகையாகும்.
- பேரியாழ் அளவால் பெரியது என்பதை,

''வள்ளுயிர்ப் பேரியாழ்'' (மலைபடுகடாம், வரி.37)

"இடனுடைப் பேரியாழ்'' (பெரும்பாணாற்றுப்படை, வரி.462)

என்ற குறிப்புகளின் மூலம் அறியலாம்.

- ❖ இவை இருபத்தொரு நரம்புகளையும், பச்சை, செறிதுளை, போர்வை, வறுவாய், கவைக்கடை, நரம்பு, கோடு, திவவு என்ற உறுப்புகளையும் பெற்றுள்ளன.
- ❖ மலைபடுகடாமில் (வரிகள்:13–14) முழவு, ஆகுளி, பாண்டில், கோடு, தூம்பு, குழல், தட்டை, எல்லரி, பதலை முதலிய கருவிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கருவிகளைத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி எனப் பிரித்துள்ளனர்.
- ❖ குழல், கோடு, தூம்பு போன்றன துளைக்கருவிகள் என்றும் முழவு, முரசு, பதலை, பறை, துடி போன்றன தோற்கருவிகள் என்றும் யாழ் நரம்புக்கருவி என்றும் பாண்டில் கஞ்சக் கருவி என்றும் பிரித்துக்காட்டப்பட்டுள்ளன.
- ❖ தோற்கருவிகளில் மிகவும் பழைமையானது முழவு. இது ஆடவர்களின் தோளுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இதை,

"பண்ண மைத்துத் திண்வார் விசித்த முழவொடு''(வரிகள்.2–3)

என்ற மலைபடுகடாம் பாடலின் மூலம் அறியலாம்.

- ❖ ஒருபுறம் மட்டும் இயங்கக்கூடிய தோற்கருவி **பதலை**யாகும். இது இசை பாடும்போது மாத்திரையின் அளவினை வரையறுக்க உதவுகிறது.
- ❖ கிளிகளை ஓட்டவும், கூத்தாடவும் பயன்படுவது **தொண்டகப் பறை**யாகும். இதனைக் குறிஞ்சி நிலத்தவர் பயன்படுத்தினர்.
- ❖ ஆந்தையின் குரல் போல் ஒலிப்பது **ஆகுளி**யாகும். இது முழவோடு இணைத்து இசைக்கப்படும்.
- ❖ தினைப்புனத்தில் கிளியோட்டுவதற்குப் பயன்படுவது **தட்டை**யாகும். இது தேரையின் ஒலி போல் ஒலி எழுப்பக் கூடியதாகும். இதனை மூங்கிலை நறுக்கிப் பலவாகப் பிளந்து அமைப்பார். இதற்குப் பெயர் **கரடிகை** என்றும் வழங்கப்படும் என்று நச்சினார்க்கினியர் கூறுகிறார். (மலைபடுகமாம் உரை, வரி:9)
- ❖ **எல்லரி** என்பதும் ஒரு வகை பறையே. நச்சினார்க்கினியர் விளக்கத்தில் இதனைச் **சல்லி** என்று கூறுவார்.
- ❖ **குழலைப்** பற்றிப் பெரும்பாணாற்றுப்படையும், பிற நூல்களும் குறிப்பிட்டுள்ளன. இது பழம்பெரும் இசைக்கருவியாகும்.
- ❖ போர்க்களத்தில் சங்கோடு சேர்ந்து முழங்கப்படுவது **வயிர்** என்பதாகும். **பாண்டில்** என்பது உலோகத்தால் தட்டையாகச் செய்யப்பட்டதாகும்.

### 2.2.3. இசை நூல்கள்

- ❖ **இறையனார் களவியலுரைகாரர் முதுநாரை, முதுகுருகு** என்னும் நூல்களையும், அடியார்க்கு நல்லார் **பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம்** என்னும் நூல்களையும், **இறையனார் களவியலுரையின் உரைப்பாயிரம் சிற்றிசை, பேரிசை** என்னும் நூல்களையும் குறிப்பிட்டுள்ளன.

- ❖ **சயந்தன்** என்னும் பாண்டிய இளவரசனால் இயற்றப்பட்டது **இசை நுணுக்கம்** என்கிறார் அடியார்க்கு நல்லார்.
- ❖ **அறிவனார்** இயற்றிய **பஞ்சமரபு** எனும் நூலைப் பண்ணாராய்ச்சி வித்தகர் ப.சுந்தரேசனார் உரையோடு தற்பொழுது வெளியிட்டுள்ளார்.
- ❖ **அரும்பத உரையாசிரியர் பதினாறு படலம்** என்பதையும், யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் **வாய்ப்பியம்** என்னும் நூலையும், அடியார்க்கு நல்லார் **இந்திர காளியம்** என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளனர்.
- ❖ யாப்பருங்கலக்காரிகை உரைப்பாயிரத்தில் 'இசைத்தமிழ்ச் செய்யுள் துறைக்கோவை' என்பதும் **குலோத்துங்கச் சோழன்** இயற்றிய **குலோத்துங்கன் இசைநூல்** என்பதும் விபுலாநந்தரின் **யாழ்நூலும்** ஆபிரகாம் பண்டிதரின் **சங்கீதரத்தினாகரமும்** குறிப்பிடத்தக்கவை ஆகும்.

### 2.2.4. சிலப்பதிகாரத்தில் இசை

- ❖ சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையும், அடியார்க்கு நல்லார் எழுதிய உரையும், தமிழிசையின் பல்வேறு சிறப்புக்களை எடுத்துக் கூறுகின்றன.
- ❖ இசையாசிரியன், தண்ணுமையாசிரியன், யாழாசிரியன், குழலாசிரியன் ஆகியோரின் இலக்கணங்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.
- ❖ 21, 19, 14, 7 என்னும் அளவில் நரம்புகள் உடைய பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டு யாழ் போன்றன உரையாசிரியர் காலத்தில் வழங்கப்பட்டன.
- ❖ குரல், துத்தம், கைக்கிளை, இளி, உழை, விளரி, தாரம் என்பது ஏழிசையின் பெயர்களாகும். இன்று இவை **சப்தசுரங்கள்** என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் அடியாகப் பிறப்பது 103 பண்கள் ஆகும்.
- ❖ பாட்டுக்கு முதல் நடை, வாரம், கூடை, திரள் என்ற நான்கு வகை நடைகள் கூறப்படுகின்றன.
- ❖ சுருதி, அலகு, மாத்திரை எனவும், சுரம் நரம்பு எனவும் **சுரவரிசை** கோவை எனவும் கூறப்படுகிறது.
- ❖ இக்கோவை ஆயப்பாலை, சதுரப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை என நான்கு வகைப்படும்.
- ❖ அடியார்க்கு நல்லாரின் மேற்கோள் ஒன்றினால், பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, முடமுழவு, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, அந்தரிமுழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண் விடு தூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், விரலேறு, பாகம், உபாங்கம், துடி, பெரும்பறை, தகுணிச்சம் என்னும் தோற்கருவிகள் அறியப்படுகின்றன. இவை அகமுழவு, புறமுழவு, அகப்புறமுழவு என்று பிரிக்கப்பட்டுள்ளன.
- ❖ சிலம்பின் மூலம் ஆற்றுவரி, கானல்வரி, ஊசல்வரி, வேட்டுவ வரி போன்ற வரிப்பாட்டுகள் அறியப்படுகின்றன.

### 2.2.5. பல்லவர் காலத்தில் இசை

- ❖ பல்லவ மன்னரான முதலாம் மகேந்திரன், இராசசிம்மன் போன்றோர் இசையறிஞராகவும், இசைக்கலையை வளர்ப்பவர்களாகவும் விளங்கினர்.
- ❖ ஆழ்வார்களும், நாயன்மார்களும் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினர்.

- ❖ நாயன்மார்கள் இசையின் துணையோடு பக்தி நெறியை வளர்த்தனர் என்றும், சமயத்தின் ஆதரவில் தமிழிசை வளர்ந்தது என்றும், இறைவன் இசையில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.
- ❖ திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வர் போன்ற பாணர்கள் இறையன்பர்களாக இருந்தனர் என்றும், ஆனாயநாயனார் குழலிசையால் முக்தி அடைந்தார் என்றும் கூறப்படுகின்றன.
- ❖ தேவாரத்தில் **சாதாரி, குறிஞ்சி, நட்டபாடை, இந்தளம், வியாழக்குறிஞ்சி, சீகாமரம், பியந்தைக் காந்தாரம், செவ்வழி, கொல்லி, கொல்லிக் கௌவாணம், மேகராகக்குறிஞ்சி** போன்ற பண்கள் கூறப்பட்டுள்ளன.
- ❖ மேலும் **யாழ், வீணை, குழல், கின்னரி, கொக்கரி, சச்சரி, தக்கை, முழவம், மொந்தை, மிருதங்கம், தமருகம், துந்துபி, குடமுழா, தத்தலம், முரசம், உடுக்கை, தாளம், துடி, கொடுகட்டி** போன்ற கருவிகளையும் குறிப்பிடப்பட்டுள்ளன.
- ❖ பக்தி இயக்கம் இசை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்ததை அறிய முடிகிறது.
- ❖ **மகேந்திரப் பல்லவன்** சங்கீரணம் என்ற தாளத்தைக் கண்டறிந்ததால் **சங்கீரணசாதி** என்று அழைக்கப்பட்டான். குடுமியான் மலையில் இசை பற்றிய, கற்சானத்தைத் தோற்றுவித்தான் எனவும், பண்களும் தாளங்களும் இதில் இடம்பெற்றுள்ளன எனவும் கூறப்படுகின்றன.
- ❖ இராசசிம்மன் **பரிவாதினி** என்னும் வீணையில் வல்லவனாதலால் **வீணாநாரதன்**, **வாத்திய வித்தியாதரன்** என்றும் புகழப்பட்டான். இத்தகு மன்னர்களின் ஆட்சியில் இசை வளர்ச்சி உற்றதில் வியப்பில்லை.

### 2.2.6. சோழர் காலத்தில் இசை

- ❖ இசைக் கலைஞர்கட்குக் **கந்தருவர்**, **கந்தருவி** எனப் பட்டங்கள் வழங்கப்பட்டன. வாத்தியக் கலைஞர் **வாச்சிய மாராயன்** எனப் பெயர் பெற்றான்.
- ❖ கம்பராமாயணத்திலும், பெரியபுராணத்திலும் இசை பற்றி வரும் செய்திகள் பலவாகும். ஆனாய நாயனார் புராணம் இசைத்தமிழ்க் கருவூலமாக விளங்குகிறது.
- ❖ சிந்தாமணியில் சுரமஞ்சரியார் இலம்பகமும், காந்தருவத்தையார் இலம்பகமும் இசை நுட்பங்கள் சிலவற்றைக் கூறுகின்றன.
- ❖ யாழிற்கு ஏற்படக்கூடிய குற்றங்களையும், இசை பாடும் பொழுது ஏற்படக்கூடாத குற்றங்களையும் சீவக சிந்தாமணி கூறியுள்ளது. புருவம் உயர்தல், கண் ஆடல், மிடறு வீங்கல், பல் தோன்றல் என்பவை அக்குற்றங்களாகும். இதனால் அக்காலத்தில் இசையில் ஏற்பட்டிருந்த பெருவளர்ச்சியினை அறியலாம்.

### 2.2.7. பிற்காலத்தில் இசை

- ❖ சோழரும் பாண்டியரும் வீழ்ச்சியடைந்த காரணத்தினால் நாயக்கமன்னர்களின் ஆட்சியானது தமிழகத்தில் ஏற்பட்டது.
- ❖ நாட்டில் அமைதியில்லாத காரணத்தினால் இசைவாணர்கள் வேறு தொழில்களில் ஈடுபட்டனர். தத்தம் கலையை மறந்தனர். மேலும் தெலுங்கு இசை நுழைய தமிழிசையானது அழியத் தொடங்கியது.

- இந்த நிலையில் தமிழறிஞர் சிலர் திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, அருணகிரியாரின் திருப்புகழ் போன்ற இசை நயம் வாய்ந்த நூல்களை இயற்றினர்.
- நாயக்க மன்னர்கள் காலத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அமைப்புடைய ஆயிரக்கணக்கான கீர்த்தனைகளை எழுதினர்.
- தியாகையர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாத்திரியார் ஆகியோர் இயற்றிய கீர்த்தனைகள் செல்வாக்கைப் பெற்றன.
- இக்கீர்த்தனைகளைப் பின்பற்றி எழுதிய சீர்காழி அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனையும், கோபால கிருட்டிண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையும், மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் சர்வ சமய சமரசக் கீர்த்தனையும், அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்தும் தமிழிசை வரலாற்றில் சிறப்பு வாய்ந்தனவாகும்.
- இவர்களைத் தவிர, கவிக்குஞ்சரபாரதியார், கனம் கிருட்டிணய்யர், இராமலிங்க வள்ளலார், கோடீசுரஐயர், பட்டணம் சுப்பிரமணியஐயர், முத்துத்தாண்டவர், மாம்பழக் கவிராயர், ஊத்துக்காடு வேங்கட சுப்பையர் போன்றோரும் கீர்த்தனைகளை இயற்றியுள்ளனர்.

### 2.2.8. தமிழிசைச் சங்கம்

- **1940–**ல் செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசையின் மறுமலர்ச்சிக்கெனத் தமிழிசைச் சங்கத்தை அமைத்தார்.
- சர்.ஆர்.கே.சண்முகம் செட்டியார், இராசாசி, சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளை, இசையரசு தண்டபாணிதேசிகர், இசைச் சித்தர் சிதம்பரம் செயராமன், பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப.சுந்தரேசன் போன்றோரும் இதில் தொண்டாற்றினர்.
- இச்சங்கம் ஆண்டுதோறும் மாநாடுகள் நடத்தியும், இசை நிகழ்ச்சிகள் நடத்தியும் பல நூல்களை வெளியிட்டும் வருகின்றது.
- பஞ்சமரபு எனும் இசைநூல் வெளியீடு குடந்தை ப.சுந்தரேசனாரால் அமைந்தது.
- தற்கால அகத்தியர் எனப் புகழப்படுபவர் வெள்ளைவாரணனார் ஆவார். இவர் தேவாரப் பண்ணாராய்ச்சியில் சிறந்து விளங்கியவர். விபுலானந்தரின் யாழ் நூல் வெளியீட்டுக்கு உறுதுணையாக விளங்கினார்.

### 2.2.9. பிற்கால இசைவாணர்கள்

- மதுரை சோமசுந்தரமும், சீர்காழி கோவிந்தராசனும் தமிழிசையை மேடைதோறும் வளர்த்து வருபவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.
- நாதசுர வேந்தர் இராசரத்தினம், காருக்குறிச்சி அருணாசலம், வேதாரணியம் வேதமூர்த்தி, வீருசாமிப்பிள்ளை, திருவீழிமிழலை சுப்பிரமணியப்பிள்ளை, குளிக்கரை பிச்சையப்பா, இருஞ்சிக்குடிப் பிச்சைக்கண்ணு, நாமகிரிப்பேட்டை கிருட்டிணன், மன்னார்குடி பரமசிவம் பிள்ளை, சேக்கு சின்ன மௌலானாசாகேப் போன்றோர் சிறந்த கலைஞராவர்.
- நாடக மேடையும், திரைப்படமும் இசைக்கலையை வாழ வைத்து வருகின்றன. இன்று மெல்லிசை மேலோங்கி வருகிறது. எனினும் முறையான தமிழிசையை அழியாமற் பேணுவது நம் கடனாகும்.

**தன்மதிப்பீடு – 1**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. சங்க கால இசைக்கருவிகளைப் பற்றிக் குறிப்பிடுக.
2. இசைநூல்கள் குறித்து குறிப்பு வரைக.
3. சிலப்பதிகாரத்தில் காணலாகும் இசைக்கூறுகள் யாவை ?
4. சங்கீரண சாதி என்று அழைக்கப்பட்ட பல்லவன் யார் ?
5. பிற்கால இசைவாணர்கள் குறித்து எழுதுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. தொல்காப்பியத்தில் காணப்படும் இசை குறிப்புகளை எழுதுக.
2. பல்லவர்கால இசை குறித்து விவரிக்க.
3. தமிழிசைச் சங்கம் பற்றி விளக்குக.

### 2.3. சிற்பக்கலை

- ❖ பண்டைக் காலந்தொட்டே வளர்ந்து வந்துள்ள கலைகளில் சிற்பக்கலையும் ஒன்றாகும். பல்லவர் காலத்திற்கு முன்பு பெரும்பாலும் மண்ணுருவங்களும், சுதையுருவங்களுமே செய்யப்பட்டன.
- ❖ கோயில் கட்டுவதற்குக் கருங்கல் பயன்படுத்தப்பட்ட பிறகுதான் சிற்பம் கலையாக உருவாயிற்று.
- ❖ சங்ககாலத் தமிழர்கள் மண்ணாலும், மரத்தாலும், தந்தத்தாலும் அழகிய சிற்பங்களை உருவாக்கினர்.
- ❖ **மண்ணீட்டாளர்** என்னும் கலைஞர்கள் மண் உருவங்களைச் செய்தனர்.
- ❖ வீடுகளில் தச்சர்கள் அழகிய உருவங்களை நிலைப்படியில் உள்ள உத்தரக் கற்பலகையில் அமைத்தனர். அதில் திருமகள் உருவமே இடம் பெற்றது.
- ❖ வரலாற்றுச் சிறப்பு மிக்க புகார், காஞ்சி, அரிக்கமேடு, கொற்கை போன்ற இடங்களில் கிடைத்துள்ள மண் உருவங்கள் அக்காலச் சிற்பத்திற்குத் தக்க சான்றாகும்.
- ❖ மண்ணாலான சிற்பங்கள் போலவே சுதைச் சிற்பங்களும் நன்கு வளர்ச்சியுற்றன.
- ❖ சுண்ணாம்பை நன்கு அரைத்துக் கரும்புச்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்காயின் சாறு முதலியவற்றை ஊற்றி அரைத்து வச்சிரம் போல் செய்து அதன் மூலம் உருவங்கள் செய்தனர்.
- ❖ காவிரிப்பூம்பட்டினத்து அகழ்வாய்வில் இத்தகு உருவங்கள் கிடைத்துள்ளன.

#### 2.3.1. பல்லவர் காலச் சிற்பங்கள்

- ❖ பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட சுதைக் கோயில்களில் சுதையுருவங்கள் இருந்தன. செங்கல்லால் ஆன சுவர்களில் சுதை உருவங்களை அமைப்பது மரபு. (எ.கா) திருவதிகைக் கோயில்.
- ❖ கற்சிற்பங்கள் சோழர் காலத்தும், நாயக்கர் காலத்தும் பெருவழக்காயிருந்தன. அப்பொழுதும் உயர்ந்த கோபுரங்களில் சுதையுருவங்கள் அமைக்கப்பட்டன.

❖ இன்றும் கிராமப்புறங்களில் உள்ள கோயிலின் தெய்வ உருவங்கள் சுதையினால் அமைக்கப்பட்டு வருகின்றன.

**(i) கற்சிற்பங்கள்**

❖ சங்க காலத்தில் இறந்த போர் வீரர்களுக்குக் கல்லில் உருவம் செதுக்கி வழிபட்டனர்.

❖ தமிழகத்தில் கற்சிற்பங்களைத் தொடங்கி வைத்த பெருமை பல்லவர்களுக்கு உரியதாகும். இவர்கள் கட்டிய குடவரைக் கோயில்களிலும், கட்டுமானக் கோயில்களிலும் எண்ணற்ற சிற்ப உருவங்கள் உள்ளன.

❖ இக்காலத்தில் கட்டிடம் வேறு, சிற்பம் வேறு என்று பிரித்தறிய முடியாத நிலையில் அமைந்திருக்கிறது.

❖ மகேந்திரவர்மனால் செய்யப்பட்ட குகைக்கோயில்களில் காணப்படும் வாயில் காவலர் உருவங்கள் மற்றும் சிங்கம் சுமந்த தூண்கள் இக்காலச் சிற்பத்திற்குச் சான்றாகும்.

❖ மாமல்லபுரம் பல்லவர்களின் கலைக்கூடமாக விளங்குகின்றது. மகிடாசுரமர்த்தினி குகை, ஆதிவராகர் மண்டபம், மும்மூர்த்தி மண்டபம், வராகர் குகை ஆகியவை சிறப்பு வாய்ந்த சிற்பங்களாக விளங்குகின்றன.

❖ சிவன், திருமால், முருகன் உருவங்கள் அமைந்த மும்மூர்த்தி குகை சிறப்பாக உள்ளது. இதில் தெய்வங்களின் படைகளும், கருவிகளும், முனிவர்களும் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளனர்.

❖ மும்மூர்த்தி குகைக்கு மேற்கே சிறிது தொலைவில் கொற்றவை கோயில் உள்ளது. இது **கோடிக்கல் மண்டபம்** என்று குறிப்பிடப்படுகிறது.

❖ வராக மண்டபத்தில் வராகமூர்த்தி, திருமகள், கொற்றவை, திருவிக்கிரமன் ஆகியோரின் சிற்பங்கள் அழகுறப் படைக்கப்பட்டுள்ளன.

❖ ‘‘இங்குள்ள வராகப் பெருமானின் தோற்றம் உலகச் சிறப்பு வாய்ந்தது’’ என்பார் திரு.இரா. நாகசாமி. அதே போல் திருமகள் சிற்பம் குறித்தும், ‘‘இயற்கையன்னை அமர்ந்துள்ளாள். பணிப்பெண்கள் சுற்றிலும் நிற்கின்றனர். அலை வீசும் கடலிலிருந்து அள்ளியுண்ட நீரைத் தன்னுள் அடக்கி, விண்ணகத்தை மறைத்து வரும் கார்காலத்து மேகம் போல் இரு மத்தகஜங்கள் துதிக்கையில் கொண்டுள்ள குடங்களிலிருந்து நீரை அலை மகளின் மீது மழையெனக் கொட்டுகின்றன’’ என்றும் குறிப்பிடுகிறார்.

❖ ஆதிவராக மண்டபம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அதாவது, இது இன்றும் வழிபாட்டில் உள்ளது. பல்லவ மன்னர்களின் உருவச்சிலைகள் உள்ளன. திருமாலின் பத்து அவதாரங்களைக் குறிப்பிடுகின்ற கல்வெட்டும், புத்தர் ஓர் அவதாரமாகக் கூறப்பட்டதும், சிவபெருமானைக் கங்கையன்னை வணங்குவதும், தேவியருடன் சிம்ம விஷ்ணுவும், திருமகளுடன் பணிப்பெண்களும், யானைகளும் பாம்பைத் தாங்கிய நடராசனும், சங்கு சக்கரம் ஏந்திய திருமாலும் அழகான சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

❖ மகிடாசுரமர்த்தினி குகையில் சிவபெருமானையும், எருமைத் தலையுடைய அரக்கனைச் சிங்கத்தின் மீதமர்ந்த அன்னை அவனைக் கொன்ற காட்சியினையும் அற்புதமாகப் படைத்திருக்கின்றனர் பல்லவர்கள். இச்சிற்பத்தைக் குறித்து நாகசாமி, ‘‘இச்சிற்பம் அசையாத கல்லிலே

ஆரவாரம் நிறைந்த போரின் சீற்றத்தை அப்படியே சித்தரிக்கின்றது" என்கிறார்.

**(ii) பாறைச் சிற்பங்கள்**

- ❖ 23 அடி உயரமும் 90 அடி நீளமுடைய பாறைகளில் உள்ள அர்ச்சுனன் (அ) பகீரதன் தவம் என்பதைக் குறிக்கும் சிற்பம் ஒப்பற்ற கலைப்படைப்பாகும்.
- ❖ பாறையில் சந்திரன், சூரியன், கந்தர்வர், இயக்கர், வித்தியாதரர், சித்தர், சாரணர் ஆகியோர் சித்தரிக்கப்பட்டுள்ளனர். பாதி மனித உருவமாகவும், மறுபாதி பறவை உருவமாகவும் கொண்ட கின்னர்களும் காணப்படுகின்றனர்.
- ❖ தென்புறப் பாறையில் வேடர்கள் மீசையுடனும் மரத்தில் குரங்கு, உடும்பு போன்றவையும், முயல், கலைமான், பன்றி, புலி போன்ற விலங்குகளும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.
- ❖ இங்குள்ள கிருஷ்ணமண்டபத்தின் பின்னே, கண்ணன் குன்றையெடுத்து நிற்க, அதற்குக் கீழே ஆக்களும் ஆயர்களும் ஆய்ச்சியர்களும் நிற்கின்ற காட்சியும் காணப்படுகிறது.
- ❖ தாய்ப்பசு தன் கன்றை நாவினால் நக்கிக் கொடுப்பதும், ஆயன் பால் கறக்கும் காட்சியும், ஆயன் குழலிசைக்க பசுக்கள் எல்லாம் தம்மை மறந்து சூழ்ந்து நிற்கும் காட்சியும் உள்ளன.
- ❖ இன்னும் பல காட்சிகளைப் பல்லவச் சிற்பிகள் கருங்கற்களைப் பேசும் ஓவியங்களாகவும் மாற்றியுள்ளனர்.
- ❖ கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையில் தமிழகச் சிற்பிகள் சுவர்களில் சுதையுருவங்களைச் செய்து வைத்தனர். பல்லவச் சிற்பிகள் பாறைகளில் சிற்பங்களைப் படம் போல் செதுக்கினர்.

**(iii) கோவில்களில் சிற்பம்**

- ❖ காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோவிலில் சிவபெருமான் பல்வேறு தோற்றங்களோடும், தேவியர்களின் தோற்றமும், திருமால், நான்முகன், முருகன், கொற்றவை உருவங்களின் தோற்றங்களும் உள்ளன. இதுபோலவே வைகுந்தப் பெருமாள் கோவிலிலும் பல்வகைச் சிற்பங்கள் உள்ளன.

### 2.3.2. பாண்டியர் காலச் சிற்பங்கள்

கி.பி. 6, 7, 8 ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட பாண்டிய மன்னர்களின் குகைக் கோயில்களில் அழகிய சிற்பங்கள் பல உள்ளன. கி.பி. 8–ஆம் நூற்றாண்டுக் கழுகுமலை ஒற்றைக்கல் கோயிலில் பாண்டியக் கலையின் உன்னதப் படைப்பையும், அதியமான் கவின் சிற்பத்தை நாமக்கல் குடைவரைக் கோயிலிலும் காணலாம்.

### 2.3.3. சோழர் காலச் சிற்பங்கள்

- ❖ பல்லவர்கள் போற்றிய சிற்பக்கலை சோழர்கள் காலத்திலும் வளர்ச்சியடைந்தது.
- ❖ குடந்தைக் கீழ்க்கோட்டம், சீனிவாச நல்லூர் கோயில், பசுபதி கோயில், திருவாரூர் அறநெறீச்சுரம் ஆகியவற்றில் கி.பி. 9, 10 ஆம் நூற்றாண்டு சிற்பங்கள் உள்ளன.

- ❖ பல்லவர் காலச் சிற்பங்கள் சுவர்களிலேயே புடைப்பாகச் செதுக்கப்பட்டவை. ஆனால் சோழர் காலத்தில் சிற்பங்கள் தனியே செய்யப்பட்டு அவற்றுக்கெனச் சுவரில் அமைந்த இடங்களில் பொருத்தப்பட்டன.
- ❖ இராசராசன் தஞ்சையில் உயர்ந்த கோபுரங்களைக் கட்டினான். அதில் அழகான சிற்பங்கள் இருந்தன என்றாலும் உயரமான கட்டிடத்தினால் அவற்றின் சிறப்பு மறைந்துள்ளன.
- ❖ கங்கைகொண்ட சோழன் கட்டிய பெரிய கோவிலும் இதே தன்மை கொண்டது. எனினும் கலைமகள் சிற்பமும், சண்டீகப்பதம் பற்றிய சிற்பமும் தனித்தன்மை வாய்ந்தன. இதே போல கட்டிடச் சிறப்பினால் தாராசுரத்து ஐராவதேசுவரர் கோயில் சிற்பங்களும், தில்லைக் கோபுரச் சிற்பங்களும் தம் ஒளியிழந்து நிற்கின்றன.

### 2.3.4. விசயநகரத்தார் காலச் சிற்பங்கள்

கி.பி. 14, 15, 16—ஆம் நூற்றாண்டுகளில் விசய நகர அரசர்கள் பல இடங்களில் ஆயிரக்கால் மண்டபங்களையும் பிற மண்டபங்களையும் அமைத்தனர். அம்மண்டபத் தூண்கள் சிற்பங்களுக்கு இடமாயின.

- ❖ தூண்களில் சிற்பமாக உள்ள குதிரைகள் அராபிய நாட்டிலிருந்து வந்த குதிரைகளை நினைவு கூர்வதாக உள்ளன.
- ❖ தூணில் உள்ள சிற்பங்கள் 5 அடி (அ) 6 அடி உயரமுள்ளனவாக இருந்தன. மீனாட்சிக் கோயில், ஆயிரங்கால் மண்டபம், புதுமண்டபம், ஆகியவை சிற்பப் பெருமைக்குச் சான்றாகும்.
- ❖ சிவனுடைய தாண்டவ சிற்பங்கள், இவர்கள் கட்டிய கோபுரங்கள், மரத்தேர்கள் சிற்பக்கலையின் இருப்பிடமாகும்.
- ❖ திருவிளையாடற் புராண நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சிற்பங்கள் நாயக்கர்கள் காலத்தில் தான் ஏற்பட்டன.

### 2.3.5. இருவகைச் சிற்பங்கள்

- ❖ முழுச்சிற்பம், புடைப்புச்சிற்பம் எனச் சிற்பத்தினை இரு வகைப்படுத்தலாம்.
- ❖ சிலையின் முன்புறம், பின்புறம் அனைத்தும் தோன்ற வடிப்பது முழுச்சிற்பமாகும்.
- ❖ முன்புறம் மட்டும் தெரியுமாறு சுவர்களில் அமைவது புடைப்புச் சிற்பமாகும்.
- ❖ கிரேக்கரும், உரோமரும் உண்மையான உருவங்களைப் படைத்தனர். நம்மவர்கள் கற்பனை உருவங்களையே படைத்தனர். நம் நாட்டுச் சிற்பம் சமயத் தொடர்பானது. எனவே தெய்வப் படிமங்களே மிகுதியாக உள்ளன.

### 2.3.6. யவனச் சிற்பமும் இந்தியச் சிற்பமும்

யவனச் சிற்பமும், நம் நாட்டுச் சிற்பமும் அடிப்படையில் வேறுபடுவதெனத் திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், தம் **தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்** என்னும் நூலிலும், **இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்** என்னும் நூலிலும் எடுத்துக்காட்டியுள்ளார்.

- ❖ அயல்நாட்டுச் சிற்பங்களின் உருவங்கள் உள்ளது உள்ளவாறே கண்ணுக்குத் தோன்றுகிறபடியே அமைக்கப்படுவன. நமது நாட்டுச் சிற்பங்கள் உள்ளதை உள்ளபடியே காட்டும் நோக்கமுடையனவல்ல.

- ❖ சிற்ப உருவங்கள் ஏதேனும் கருத்தை (அ) உணர்ச்சியைக் காட்டும் நோக்கமுடையன. இயற்கை உருவத்தை உள்ளது உள்ளபடியே காட்டுவது அயல் நாட்டுச் சிற்பம்.
- ❖ கிரேக்க நாட்டுச் சிற்பிகள், தமது நாட்டுக் கடவுளர்களின் உருவங்களைச் சிற்ப உருவமாக அமைக்கும் போது, மனித உடலமைப்பு எவ்வளவு அழகாக அமையுமோ அது போன்று அமைத்தனர். இதற்குச் சான்று ஜீலியஸ், வீனஸ் சிற்பங்கள்.
- ❖ ஆகவே நமது சிற்பங்கள், அயல் நாட்டுச் சிற்பங்களைப் போன்று வெறும் காட்சிப் பொருளாக நில்லாமல், காட்சிக்கும் அப்பால் சென்று கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் ஊட்டுகின்றனவாக அமைந்துள்ளன.

### 2.3.7. சிற்பத்தில் மறைபொருள்

- ❖ சைவ வைணவச் சிற்பங்கள் இறைவன் எங்கும் பரந்துள்ளார் என்பதைக் குறிப்பதற்காக அத்தெய்வ உருவங்களுக்கு நான்கு, எட்டு, பதினாறு கைகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டன.
- ❖ ஆனால் சமண பௌத்த உருவங்களில் அது ஆற்றல் குறைவை உணர்த்திற்று.
- ❖ சமணர்களின் சிறு தெய்வங்களான இந்திரன், யட்சி, ஜீவாலா மாலினி ஆகியவற்றிற்கு நான்கு கைகளும், பேராற்றல் மிக்க தீர்த்தங்கரருக்குப் பெரிய உருவத்தினையும் அமைத்தனர்.
- ❖ சைவ வைணவர்கள் எத்தெய்வத்திற்கு முதன்மைக் கொடுத்தார்களோ அத்தெய்வத்திற்கு அதிகக் கைகளைக் கொடுத்தனர்.
- ❖ இத்தகைய சிற்பங்களை நான்கு வகையாகப் பிரித்தனர். 1. தெய்வ உருவங்கள், 2. இயற்கை உருவங்கள், 3. கற்பனை உருவங்கள், 4. படிமை உருவங்கள்.
- ❖ விலங்கு, பறவை, மனிதர் ஆகியவை இயற்கை உருவமாகவும், சரபப்பறவை, இருதலைப்பறவை, காமதேனு, கின்னரம், நாகர், பூதர் ஆகியவை கற்பனை உருவமாகவும் மன்னர் முதலியோர்க்கு எடுத்த உருவச் சிலைகள் படிமை உருவமாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.
- ❖ தமிழ்நாட்டுச் சிற்பிகள் கோயில்களையும், கல் உலோகச் சிற்பங்களையும் செய்வதற்குரிய விதிகளைக் கூறும் பல நூல்களைக் கற்றனர்.
- ❖ சங்க காலம் முதல் அவர்கள் பெற்ற அனுபவங்களைப் பிற்காலத்தவர் நூல்களாகச் செய்தனர். சங்க காலத்தில் **மனை நூல்** என்பதைப் பற்றி நெடுநல்வாடை கூறுகிறது.
- ❖ சிற்ப சாத்திரங்கள் பற்றி விளக்கமாகக் கூறியிருப்பவர் **சிற்பி கணபதியாவார்.** இவர் 32 நூல்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
- ❖ **எஸ்.ஏ.குமாரசாமி ஆசாரி** என்பவர் 97 நூல்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்.
- ❖ சிற்ப சாத்திரங்கள் 1. சமயம் சாராக் கட்டிடங்கள் 2. கோயில் கட்டிடம் 3. கோட்டை கொத்தளங்கள் 4. சிற்பம் ஓவியம் ஆகியவை அமைக்கப்பட வேண்டிய முறைகளைப் பற்றிக் கூறுகின்றன.

### 2.3.8. செப்புத் திருமேனிகள்

தமிழகத்தில் வளர்ந்து வந்த கலைகளுள் உலோகப் படிமக் கலையும் ஒன்று. சிற்ப சாத்திரங்களில் கூறப்பட்ட முறையினைப் பின்பற்றித் தமிழகச் சிற்பிகள் தெய்வப் படிமங்கள் அமைத்தது உலகின் பல பகுதிகளிலுள்ள அருங்காட்சியகங்களுக்குச் சிறப்பளிக்கின்றன.

**(i) பழங்காலம்**

- ❖ திருநெல்வேலி ஆதிச்சநல்லூரில் அகழ்வாராய்ச்சியின்போது கிடைத்த பொருள்களில் செம்பினால் இயன்ற அன்னை உருவமும் ஒன்றாகும். இதுதவிர கோழி, நாய் போன்ற உருவங்களையும் கண்டெடுத்துள்ளனர். இதன் மூலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டில் செம்பினால் செய்தப் படிமங்களும் பிறவும் செய்யப்பட்டன என்பதை அறியலாம்.

**(ii) பல்லவர் காலம்**

- ❖ பல்லவர் காலத்தில் செப்புப் படிமங்கள் வழக்கிலில்லை என்று கூறுவது தவறு எனத் திரு.இரா. நாகசாமி கூறுகிறார். செப்புத் திருமேனிகள் அலங்கரிக்கப்பட்டுத் தெருக்களில் எடுத்துச் சென்றதற்குத் தேவாரத்தில் சான்றுகள் பல உள்ளன.
- ❖ கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் தங்க முலாம் பூசப்பட்ட, மைத்திரேயர் சிலை காவிரிபூம்பட்டினத்திலும், திரிவிக்கிரமன் படிமம் கோவை மாவட்டச் சிங்க நல்லூரிலும், திருமாலின் சிலை திருப்பாண்டிக் கொடுமுடியிலும், நடராசர் சிலை கூரத்திலும், சோமாஸ்கந்தர் சிலை திருவாலங்காட்டிலும் கிடைத்துள்ளன.

**(iii) சோழர் காலம்**

- ❖ செப்புத் திருமேனிகளின் பொற்காலம் சோழர் காலமாகும். ஆதித்த சோழன், பராந்தக சோழன், கண்டராதித்த சோழன், அவருடைய துணைவி செம்பியன் மாதேவியார் ஆகியோர் எத்தனையோ கோயில்கட்குத் திருமேனிகளையும் பிற பொருள்களையும் செய்து கொடுத்ததாகக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.
- ❖ இராசராசன் கொடுத்த சண்டேசுவர தேவர், பஞ்சதேக மூர்த்திகள், திருமால் ஆகிய தெய்வங்களின் அளவு முதலியவை தஞ்சைக் கல்வெட்டால் அறியப்படுகின்றன.
- ❖ இராசராசனும் அவன் மகன் இராசேந்திரனும் செய்து கொடுத்த சிலைகள் பல கிடைத்துள்ளன.
- ❖ செப்புத் திருமேனிகள் பஞ்சலோகத் திருமேனிகள் என்றும் கூறப்படுகிறது.
- ❖ இவை முழுவதும் கனமாகச் செய்யப்பட்டவை என்றும், உள்ளே பொள்ளலாகச் (கூடாக) செய்யப்பட்டவை என்றும் இருவகையாகக் கூறப்படுகிறது.

### 2.3.9. சிற்பக்கலையின் சிறப்பியல்புகள்

சிற்பக்கலையின் சிறப்பியல்புகளைப் பற்றிச் சிற்பக்கலைஞர் வை.கணபதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

- ❖ நம் நாட்டுச் சிற்பக்கலை மரபின் சிறப்பியல்புகளில் ஒன்று ஆடற்கலையில் இலக்கணங்களைப் புகுத்தியதாகும்.

- ❖ சிற்பி, ஆடற்கலை இலக்கணத்தை அப்படியே கையாளாமல், அதை நன்குணர்ந்து அழகுணர்ச்சியைப் புகுத்தி, தான் எப்பொருளில் எவ்விடத்தில் எப்பொருளில் அமைக்கின்றானோ அவற்றிற்கேற்ப சிற்ப வடிவத்தை ஒடித்து, வளைத்து, நெளித்து, கைகளையும், கால்களையும் பல அமைதிகளில் காட்டி, பார்ப்போர் கலையழகை மட்டுமின்றி அதன் உட்பொருளையும் உணருமாறு செய்கிறான்.
- ❖ பல ஆண்டுகளாக வளர்ந்து வந்த படிமக்கலையானது இன்றும் உயிருடன் இருப்பது இக்கலையின் உயிர்ப்புத் தன்மைக்குச் சான்றாகும்.
- ❖ கும்பகோணத்தில் இக்கலை சிறப்பாக இன்றும் விளங்குகிறது. மாமல்லபுரத்தில் சிற்பக்கலைக் கல்லூரி அரசினால் நடத்தப்பட்டு வருகிறது.

**<u>தன்மதிப்பீடு – 2</u>**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. கோயில் சிற்பங்கள் குறித்து எழுதுக.
2. யவனச் சிற்பத்திற்கும், இந்தியச் சிற்பத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?
3. சோழர்காலச் சிற்பங்கள் – குறிப்பு வரைக.
4. பல்லவர் காலச் செப்புத் திருமேனிகள் குறித்து எழுதுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. சிற்பக்கலையில் கற்சிற்பங்கள் பெறும் இடம் யாது ?
2. சிற்பக்கலையின் வளர்ச்சிநிலைகள் குறித்து கட்டுரை ஒன்று வரைக.

### 2.4. கட்டிடக்கலை

நாகரிகத்தினை எடுத்துக்காட்டும் சின்னங்களில் கட்டிடக்கலையும் ஒன்றாகும். கட்டிடங்களைப் படைத்தவர்கள் இறந்த பின்னும் அவை நிலைபெற்று நிற்கும். அதனால் கட்டிடக்கலை சிறப்பிடம் பெறுகிறது. கோயிற்கட்டிடக்கலை சிற்பமும் ஓவியமும் கலந்த தன்மை உடையதாகும்.

### 2.4.1. சங்க இலக்கியக் குறிப்புகளில் கட்டிடக்கலை

- ❖ சங்க கால மக்கள் தெய்வங்களை வணங்கினர். சிவபெருமான் கோயில் ‘முக்கட்செல்வன் நகர்’ என்று புறநானூற்றில் சுட்டப்படுகிறது.
- ❖ மேலும் அகநானூற்று பாடல் ஒன்று அழிவுக்குள்ளான ஒரு கோயில் பற்றிக் குறிப்பிடுகிறது.

> “இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
> மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து
> எழுதணி கடவுள் போகலின் புல்லென்று
> ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை” (பா.167:13–16)

இப்பாடலின் மூலம் கோயிலுக்கு உயர்ந்த சுவர்கள் இருந்தன என்பதும், மரவிட்டங்கள் இருந்தன என்பதும் பெறப்படுகிறது.

- ❖ சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் பல்வேறு கோயில்கள் பேசப்பட்டுள்ளன.

“பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்”

என்பது சிலப்பதிகாரப் பகுதியாகும்.

**2.4.2. கட்டிடக்கலையில் கோயில்கள்**

- சுதையாலும், செங்கல்லாலும் கட்டப்பட்ட கோயில்களைத் தவிர மரத்தால் ஆன கோயில்களும் கட்டப்பட்டுள்ளன. சான்று: கேரள கோயில்கள், தில்லைச் சிற்றம்பலமாகிய சபாமண்டபம், தஞ்சைப் பெருவுடையார் கோயில் முன்மண்டபம்.
- நாயன்மார்கள், ஆழ்வார்கள் வாழ்ந்த காலத்தில் பல கோயில்கள் செங்கற்களால் அமைக்கப்பட்டன. சங்கத்து இறுதிக் காலத்தில் ஆண்டகோச்செங்கணான் சிவபெருமானுக்காக எழுபது கோயில்கள் எழுப்பியதாகத் திருநாவுக்கரசரும், திருமங்கையாழ்வாரும் பாராட்டியுள்ளனர்.
- விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீ விசாலம், ஸ்கந்தகாந்தம், ஸ்ரீகரம், ஹஸ்திபிருஷ்டம், கேசரம் என்னும் ஏழு வகையான கோயில்களின் தமிழ்ப் பெயர்களே கரக்கோயில், ஞாழற்கோயில் முதலியன என்றும் மயிலை சீனி. வேங்கடசாமி கூறுகிறார். அவற்றின் அமைப்புகளைப் பற்றியும் கூறியுள்ளார். அவை பின்வருமாறு:
- **ஆலக்கோயில்:** ஆலக்கோயில் என்பது, ஆணைக்கோயிலின் மரூஉவென்று கூறுகிறார். யானையின் முதுகு போல் இதன் கூரை அமைந்துள்ளது. சான்று: திருக்கச்சூர், திருவொற்றியூர், வடதிருமுல்லைவாயில், திருவேற்காடு ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள்.
- **இளங்கோயில்:** பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் பொழுது அதனருகே இறைவனை எழுந்தருளச் செய்வர். அப்பொழுது, அமையும் கோயில் இளங்கோயில் ஆகும். இதற்குப் பாலாலயம் என்றும் பெயருண்டு. சான்று : கடம்பூர், மீப்ச்சூர்க் கோயில், மாமல்லையிலுள்ள திரௌபதி இரதம்.
- **கரக்கோயில்:** வட்டமான விமானமுடையது. விஜயம் என்னும் வகையினதென்றும் கரக்கோயில் இதுவாகும் என்கிறார். சான்று : மேலைக்கடம்பூர் கோயில்.
- **ஞாழற்கோயில்:** ஞாழல் எனும் மரத்தினால் அமைந்த கோயில் ஆகையால் இப்பெயர் பெற்றது. இதன் அமைப்பைக் கூறுவதற்கில்லை.
- **கொகுடிக்கோயில்:** கொகுடியென்னும் மரத்தால் கட்டப்பட்டது என்பர். இதை மறுத்து, இதன் அமைப்பைக் கூறுவதற்கியலவில்லை என்றும், ஸ்ரீபோகம் (வட்டமான சிகரம் அமைதல்), ஸ்ரீவிசாலம் (நடுவில் இலைவரிசையுடன் அமைதல்) என்பவற்றில் ஒன்றாகும் என்றும் கூறுகிறார்.
- **மணிக்கோயில்:** இதன் அமைப்பு விளங்கவில்லை என்றும் எட்டு (அ) ஆறு பட்டையுடைய விமான அமைப்புடையதாகலாம் என்றும், ‘ஸ்கந்த காந்தம்’ என்னும் வகையினதாக இருக்கலாம் என்றும் கூறுகிறார்.

- **பெருங்கோயில்:** இக்கோயில் மாடக்கோயில் என்றும், செய்குன்றுகளின் மேல் அமைக்கப்பட்டவை என்றும் கூறுவர். இவை யானை ஏறாவண்ணம் உயரமாகவும், யானை படுத்திருப்பது போலவும் அமைந்துள்ளன. அதனால் இவை 'தூங்காணை மாடம்' என்று கூறப்படுகிறது. சான்று: நன்னிலம், குடவாயில், வைகல், தண்டலைச்செரி, பெண்ணாடகம் என்னும் ஊர்களில் உள்ள கோயில்கள்.

**2.4.3. பல்லவர்காலக் கட்டிடக்கலை**

- பல்லவர் காலமே கோயிற் கட்டிடக்கலையின் தொடக்க காலமாகும். பின்னால் வந்த கோயில்களுக்கு முன்னோடியாக விளங்குபவை பல்லவர் காலக் கோயில்களாகும்.
- தமிழகக் கோயிற் கட்டிடக் கலை பல்லவர் காலத்தில் தொடங்கிச் சோழர் காலத்தில் செம்மையுற்று, நாயக்கர் காலத்தில் முடிவுற்றது என்பது மிகவும் பொருத்தமாகும்.
- ஆந்திரப் பகுதியில் கண்ட குகைக் கோயில்களை விசித்திர சித்தன் (முதலாம் மகேந்திரவர்மன்) தான் ஆண்ட தொண்டை நாட்டில் தோற்றுவித்தான். வல்லம், சீயமங்கலம், மாமண்டூர், மகேந்திரவாடி, பல்லாவரம், திருச்சி போன்ற இடங்களில் இவனுடைய குகைக்கோயில்கள் உள்ளன.
- குகைக்கோயிலைத் தமிழகத்திற்கு விசித்திரசித்தன் கொண்டு வந்தான் என்பதை, "செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் இவை இல்லாமல் மும்மூர்த்திகட்கு விசித்திரசித்தன் அமைத்த கோயில் இது" என்ற கல்வெட்டின் மூலம் அறிந்து கொள்ளலாம்.
- மகேந்திரனுடைய குகைக்கோயில்கள் மலைச் சரிவுகளில் அமைந்தன. அதன் சுவர்களில் புராணக் கதைகளைக் கூறும் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- நரசிம்மவர்மனும் பல குடைவரைக் கோயில்களை உருவாக்கினான். மாமல்லபுரத்தில் மாமல்லனின் முறையைத் தழுவிய பத்துக்குகைகள் உள்ளன. சுவர் முழுவதும் சிறு கோயில்கள் உண்டு.
- மாமல்லன் காலத்தில் ஒற்றைக் கல்லாலான இரத வடிவம் அமைக்கப்பட்டது. ஒரு சிறு குன்றினை மேலிருந்து கீழாகச் செதுக்கி கோயில் அமைத்தனர். இவை மொத்தம் ஏழு உள்ளன. இவற்றைப் பஞ்சபாண்டவர் இரதங்கள் எனவும் வழங்குகின்றனர். அவை மரத்திற் செய்யப்பட்ட கோயில்களின் வடிவைப் பெற்றுள்ளன.
- பல்லவர்களின் அடுத்த வளர்ச்சி கட்டுமானக் கோயில் (அ) கற்றளி எனப்படும். இவை இராசசிம்மன் (கி.பி.700–800) கோயில்கள், நந்திவர்மன் கோயில்கள் (கி.பி. 800–900) என இருவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

முதல்வகைச் சான்று: மாமல்லபுரக் கடற்கரைக் கோயில், ஈசுவரன் கோயில், முகுந்தன் கோயில், பனைமலைக்கோயில், கைலாசநாதர் கோயில் ஆகியவையாகும்.

இரண்டாம் வகையான கற்றளி அளவிற் சிறியன. கலைப்பண்பு மிக்கவை அல்ல. காஞ்சியிலுள்ள முத்தீசுவரர் கோயில், மதங்கேசுவரர் கோயில் இவ்வகையின.

### 2.4.4. சோழர்காலக் கட்டிடக்கலை

- ❖ சோழர்காலக் கட்டிடக் கலையின் முதிர்ச்சியினைத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும் கங்கை கொண்ட சோழேச்சுரத்திலும் காணலாம். சோழப் பேரரசின் செல்வச் செழிப்பினைக் கலை வடிவில் எடுத்துக்காட்டும் சின்னமாக இவை விளங்குகின்றன.

### 2.4.5. பாண்டியர்காலக் கட்டிடக்கலை

- ❖ பாண்டியர்கள் "தங்கள் கவனத்தை மையக்கோயிலிருந்து நிருப்பிக்கோயில் தொகுதியின் வெளியுறுப்புகளின் மீது செலுத்தத் தொடங்கினர்." இவர்கள் பிரகாரங்களை அழகுப்படுத்தினர்.
- ❖ புதுக்கோவில்கள் கட்டுவதில் கவனம் செலுத்தாமல் பழைய கோயில் மண்டபங்களையும், துணைக்கோயில்களையும் கட்டுவதில் மிகுந்த கவனம் செலுத்தினர்.
- ❖ இவர்களின் தொடக்கக் காலக் கோபுரம் திருவாணைக்காவிலுள்ள சிவன் கோவிலின் இரண்டாம் திருச்சுற்றில் உள்ளது. இது கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இவற்றில் சோழர் கலைக் கூறுகள் மிகுந்துள்ளன.
- ❖ 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிதம்பரம் கிழக்குக் கோபுரமும், திருவானைக்காவிலுள்ள சுந்தரபாண்டியன் கோபுரமும் பாண்டியர் கலை முறைக்குச் சான்றாக விளங்குகிறது.

### 2.4.6. விசய நகரத்தார் காலக் கட்டிடக்கலை

- ❖ இவர்கள் முசுலீம்களின் தாக்குதலிலிருந்து இந்து மதத்தைக் காத்தலைப் போல, கோயில்களைக் காப்பதைத் தன் தலையாயக் கடமையாகக் கொண்டனர்.
- ❖ இவர்கள் காலக் கோயில்கள் எண்ணற்ற உறுப்புகளைக் கொண்டிருந்தன. பழைய கோயில்களில் புதிய மண்டபங்களையும், துணைக்கோயில்களையும் சேர்த்தனர். இதனால் கோயில்கள் அளவால் விரிவடைந்தன.
- ❖ தமிழகக் கட்டிடக் கலையில் புகுத்தியனவற்றுள் கலியாண மண்டபங்களும் ஆயிரக்கால் மண்டபங்களும் தலைமையானவை. இவர்கள் காலத்தில் எல்லாக் கோயில்களிலும் அம்மனுக்குத் தனிக் கருவறை ஏற்பட்டது.
- ❖ பலவகையான சிக்கலான முறைகளில் கட்டப்பட்ட தூண்களை நூற்றுக்கணக்கில் கொண்ட மண்டபங்கள் இக்காலத்துக்குச் சிறப்பினைச் சேர்ப்பதாகும்.
- ❖ தமிழகத்தில் விசய நகரத்தார் பாணியில் எழுப்பப்பட்ட கோயில்களை வேலூர், காஞ்சி, திருவரங்கம், குடந்தை ஆகிய இடங்களில் காணலாம்.
- ❖ நாயக்க மன்னர்கள் கட்டிய கோயில்கள் மதுரை, திருவரங்கம், திருவானைக்கா, திருவாரூர், இராமேசுவரபுரம், சிதம்பரம், திருநெல்வேலி, திருவண்ணாமலை, திருவல்லிப்புத்தூர் ஆகிய ஊர்களில் உள்ளன.
- ❖ இவற்றில் குறிப்பிடத்தக்கவை மதுரைக் கோயிலும் திருவரங்கமுமாகும். இவர்களின் காலத்துக்குப் பிறகு கோயில் கட்டிடக்கலை நின்றுவிட்டது எனலாம்.

- ❖ அவ்வக் காலத்திலும் ஒவ்வொரு புதிய கூறு இடம் பெற்று, சோழர்கலை, பாண்டியர் கலை, நாயக்கர் கலை எனக் கூறப்பட்டாலும் இவையனைத்தும் தமிழகக் கலையாய் நம்மை மகிழ்விக்கின்றன.

**தன்மதிப்பீடு – 3**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. பெருங்கோயில் – குறிப்பு வரைக.
2. மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிடும் ஏழு வகையான கோயில்கள் யாவை ?
3. குகைக் கோயிலைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்த மன்னன் யார் ?

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. கட்டிடக்கலையின் வளர்ச்சிக்கு மன்னர்கள் ஆற்றிய தொண்டினை விவரிக்க.
2. கோயில் வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

### 2.5. ஓவியக்கலை

ஓவியம் பழமையான கலைகளில் ஒன்றாகும். பழங்கால மக்கள் தாம் கண்ட விலங்குகள், பறவைகள், மரங்கள், செடி கொடிகள் ஆகியவற்றின் உருவங்களை வரைந்தனர். பழங்காலக் குகைகளில் வேட்டைக்காட்சிகளும் பிறவும் காணப்படுகின்றன. தொல் பொருளாய்வில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களிலும் எழுத்துருவங்கள், மற்றும் பிற உருவங்கள் காணப்படுகின்றன. இக்கலையின் நுட்பங்களைக் கூறும் இலக்கண நூல்களும் அழிந்தன. இன்று காணப்படும் ஓவியங்களில் பழமையானவை பல்லவர் காலத்தைச் சார்ந்தவை ஆகும்.

### 2.5.1. சங்க கால ஓவியங்கள்

- ❖ ஓவியம், ஓவம், ஓவு என்பன ஒரு பொருட் சொல்லாகும். ஓவியம் எனும் சொல்லை மிகுந்த அழகு என்னும் பொருள் கொண்டதாகச் சான்றோர் வழங்கினர்.
- ❖ அவர்கள் அழகிய வீடுகட்கு ஓவியங்களை உவமை கூறினர் என்பதை, ‘‘ஓவத்தன்ன இடனுடை வரைப்பு’’ (பதிற்றுப்பத்து – 61) எனப் பாரியின் அரண்மனையைக் கபிலர் பாடியதன் மூலம் அறியலாம்.
- ❖ பல பூக்களின் தாதுக்களும் உதிர்ந்து அழகிய காட்சி கொடுக்கும் நீர்த்துறையும் ‘‘ஓவத் தன்ன உண்டுறை’’ என்று சிறுபாணாற்றுப்படையில் பாராட்டப்படுகின்றது.
- ❖ ஓவியங்கள் சுவர்களில் மட்டுமின்றித் துணிகளிலும் வரையப்பட்டன. படம் எனும் சொல் துணியைக் குறிப்பதால் துணியில் வரைந்த ஓவியமும் படம் என்றே வழங்கப்பட்டது.
- ❖ சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய அரங்கத்தில் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி இருந்தன. இதில் இயற்கைக் காட்சிகள் வரையப்பட்டன.
- ❖ பூம்புகார் நகரத்து மாட மாளிகைகளில் அழகிய ஓவியங்கள் இருந்தன.
- ❖ மன்னரின் அரண்மனைகளில் சித்திரங்கள் வரையப்பட்ட மாடங்கள் இருந்தன. மாறன் வழுதி என்னும் பாண்டிய மன்னன் அத்தகு சித்திர

மாடத்தில் உயிர் விட்டான் என்பதை ‘சித்திர மாடத்துத் துஞ்சிய’ என்னும் அடைமொழியின் மூலம் அறியலாம்.

- ❖ ஓவியக் கலைஞர்கள் **கண்ணுள் வினைஞர்** என்றும் **ஓவமாக்கள்** என்றும் கூறப்பட்டனர்.
- ❖ ஓவியம் புனையா ஓவியம், புனைந்த ஓவியம் என இருவகைப்படும். வண்ணம் தீட்டப் பெறாதது புனையா ஓவியமாகும்.
- ❖ ‘‘புனையா ஓவியம் புறம் போந்தன்ன’’ என்று வெள்ளாடை உடுத்தி எளிமையாக இருக்கும் மணிமேகலையைப் புனையா ஓவியம் என்று சீத்தலைச்சாத்தனார் குறிப்பிடுகிறார். ஓவியம் அக்காலத்தில் வட்டிகைச் செய்தி எனப்பட்டது.
- ❖ வண்ணங்களைக் குழைத்து வைக்கும் பலகை தான் **வட்டிகை** எனப்பட்டது. ஓவியம் வரைவதற்குத் துகிலிகை பயன்பட்டது. பாதிரிப்பூ அரக்கு நிறம் கொண்டதாகும்.
- ❖ சிற்பமும் ஓவியமும் மிகவும் நெருங்கிய தொடர்புடையனவாகும். சிற்பக் கலைஞன் ஓவியக் கலைஞனாகவும் இருக்க வேண்டும்.

### 2.5.2. சங்க காலத்திற்குப் பின் ஓவியங்கள்

- ❖ சங்க காலத்திற்குப் பின்னர் தமிழகத்தையாண்ட பல்லவர்கள் கலைகளை வளர்ப்பதில் தனியீடுபாடு கொண்டிருந்தனர். குறிப்பாக மகேந்திரவர்மன் அனைத்துக் கலைகட்கும் தனிப்பெரும் காவலனாக விளங்கியதால் ‘சித்திரகாரப்புலி’ என்னும் பட்டத்தினைப் பெற்றான்.
- ❖ திருச்சிராப்பள்ளிக் குகைக்கோயில், பல்லாவரம் குகைக்கோயில், காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில், பௌர்ணமி மண்டபம் ஆகியவற்றிலுள்ள கல்வெட்டுக்கள் ‘சித்திரகாரப்புலி’ என்று பாராட்டுகின்றன.
- ❖ இவன் ‘தக்ஷிண சித்திரம்’ என்னும் ஓவிய நூலுக்கு உரை எழுதியதாக மாமண்டூர்க் குகைக்கோயிற் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

#### (i) பனைமலை ஓவியம்

- ❖ இராசசிம்மன் கட்டியது பனைமலைக் கோயிலாகும். இங்குள்ள பார்வதியின் ஓவியம் கண் கவரும் வனப்புக் கொண்டதாகும்.
- ❖ இவ்வோவியம் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் உள்ள பார்வதியின் சிற்பத்தை ஒத்துள்ளது.
- ❖ தலையில் மணிமகுடமும், கழுத்தில் மணிமாலையும், காதில் குழையும் அணிந்த பெண் தெய்வம் இடக்காலை மடக்கி, வலக்காலில் நின்று கொண்டிருக்கும் காட்சி கவின்மிகு காட்சியாகும்.
- ❖ இத்தெய்வ உருவம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அமராவதி சிற்பம் போலவும், கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அஜந்தா சிற்பம் போலவும் உள்ளதாகக் கூறுவர்.

#### (ii) காஞ்சி கைலாசநாதர் கோயில் ஓவியம்

- ❖ இராசசிம்மன் காலத்துக் கைலாசநாதர் கோயில் கலைநலம் உடையது.
- ❖ இக்கோயிலின் அறை முழுவதிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.
- ❖ 41–ஆம் அறையில் சோமாஸ்கந்தரின் உருவம் உள்ளது.

- ❖ அரை மனித உருவமும், அரைப் பறவை உருவமும் கொண்ட கின்னரர் உருவங்களை மாமல்லபுரத்திலும் மாமண்டூரிலும் காணலாம்.

**(iii) திருமலைப்புரம் ஓவியம்**

- ❖ பல்லவர்களைப் போலவே பாண்டியர்களும் ஓவியக்கலையை வளர்த்துள்ளனர். அரிகேசரி பாராங்குசன், மாறவர்மன், இராசசிம்மன், நெடுஞ்சடையன் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவராவர். பாண்டியர்களின் ஓவியங்களை இங்குக் காணலாம்.

**(iv) சித்தன்னவாசல் ஓவியம்**

- ❖ இக்குகையில் கண்கவரும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டு இருந்தமையை 1919–ஆம் ஆண்டில் அறிஞர் T.A.கோபிநாத்ராவ் அவர்களும், துப்ராய் அவர்களும் கண்டறிந்தனர்.
- ❖ இவ்வோவியங்களை மகேந்திரவர்மன் வரைந்தான் என்று கூற, தற்பொழுது மதுரை ஆசிரியர் இளம்கௌதமன் என்பவர் வரைந்தார் என்பது பெறப்படுகிறது. சித்தன்னவாசல் குகையின் நடுமண்டபத்தின் மேல் விதானத்தில் தாமரைக்குள ஓவியம் உள்ளது. செந்தாமரையும் வெண்டாமரையும் மலர்ந்துள்ள இத்தடாகத்தின் நீர்ப்பரப்பினைப் பசிய இலைகள் மறைத்துள்ளன. அன்ன பறவை, யானைகள், மீன்கள், கந்தர்வர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர்.
- ❖ வலப்புறத் தூணின் உட்பகுதியில் அரசன் அரசியரின் ஓவியங்கள் உள்ளன. முன்பு மகேந்திரப் பல்லவனும், அவன் மனைவியும் என்று கூற, தற்பொழுது பாண்டியனும் அவன் அரசியும் என்று கருதுகின்றனர்.

### 2.5.3. சேரர் கால ஓவியங்கள்

- ❖ கி.பி. 7, 8 ஆம் நூற்றாண்டுகளில் தொண்டை மண்டலத்தில் உருவான கலைப்பாணி கொங்குநாட்டிலும், சேர நாட்டிலும் பரவிற்று. கி.பி. 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் சேர நாட்டில் உருவான ஓவிய முறை பல்லவ பாண்டியக் கலை முறையினை ஒத்துள்ளது.

### 2.5.4. சோழர் கால ஓவியங்கள்

- ❖ தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் கருவறையில் தீட்டப்பட்ட சோழர் கால ஓவியத்தின் மேல் சுண்ணாம்பு பூசப்பட்டு நாயக்கர்கள் தம் ஓவியத்தை வரைந்தனர். 1930 ஆம் ஆண்டில் அறிஞர் எஸ்.கே. கோவிந்தசாமி அவர்கள் இதனை வெளிப்படுத்தினார்.
- ❖ கயிலையில் சிவபெருமான் புலி மீது அமர்ந்துள்ளதும், அவரைச் சூழ்ந்து பூதகணங்களும், நம்பியாரூரரும் சேரமான் பெருமாள் நாயனாரும் இருக்கும் காட்சியும், அன்னையும் அண்ணலும் ஆதவனும் திங்களும் பங்கு கொள்ளும் காட்சியும், சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் தடுத்தாட் கொண்ட வரலாறும் ஓவியமாக்கப்பட்டுள்ளன.
- ❖ பல வகை இன்னிசைக் கருவியோடு தேவகணங்கள் இசையெழுப்ப நாட்டிய நங்கையர் நடனமாடும் காட்சியும் ஓவியமாக்கப்பட்டுள்ளது.

### 2.5.5. விசய நகரத்தார் கால ஓவியங்கள்

- ❖ காஞ்சி, காளத்தி, குடந்தை, திருவரங்கம், திருப்பதி, திருவண்ணாமலை, தில்லை, திருவீழிமிழலை, ஆரூர், ஓமலூர் முதலான இடங்களில் நாயக்கர் கால ஓவியங்கள் உள்ளன.

- கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட ஓவியங்கள் திருவரங்கத்தில் வேணுகோபாலர் திருச்சந்நிதியில் வரையப்பட்டன.
- வேணுகோபாலனின் ஓவியம், கோகுலத்துப் பெண்கள், கோகுலத்துக் கோபியர்கள் கோபாலனைச் சூழ்ந்து நிற்கும் காட்சி, கார்வண்ணனின் இருபுறமும் கன்னியர்கள், இராமாயணக் காட்சிகள் போன்றன ஓவியமாக்கப்பட்டுள்ளன.

### 2.5.6. மதுரை நாயக்கர் கால ஓவியங்கள் (கி.பி. 1700–1800)

- தஞ்சை, மதுரை, தில்லை, திருவெள்ளறை, திருக்குற்றாலம், திருவலம்புரி, குடந்தை, திருவரங்கம், செங்கம், பட்டீசுவரம் ஆகிய இடங்களில் நாயக்கரின் ஓவியங்கள் உள்ளன.
- மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் ஊஞ்சல் மண்டபத்தின் எதிரில் உள்ள சிறுமண்டபத்தில் அங்கயற்கண்ணியைச் சுந்தரேசப்பெருமான் மணம்புரியும் காட்சியினை ஓவியமாகக் காணலாம்.
- இராணி மங்கம்மாள் மீனாட்சியிடமிருந்து செங்கோலைப் பெரும் காட்சி ஓவியமாக்கப்பட்டுள்ளது. பொற்றாமரைக் குளத்து எதிரேயுள்ள சுவரில் 64 திருவிளையாடல்களும் வரையப்பட்டுள்ளன.
- தில்லையில் உள்ள அம்மன் கோட்டத்தில் 17 ஆம் நூற்றாண்டு ஓவியங்கள் உள்ளன. திருமால் மோகினி உருவமெடுத்து தாருகாவனத்து முனிவர்களை மயக்குவது, சிவபெருமான் பிச்சாடனராக வருவது, அவரின் அழகில் முனி பத்தினிகள் மயங்குவது ஆகியவை வரையப்பட்டுள்ளன.

### 2.5.7. பிற்கால ஓவியங்கள்

18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மராட்டியர்கள் தஞ்சையை ஆண்ட போது ஓலையிலும், கண்ணாடியிலும், தந்தங்களிலும் ஓவியம் வரையப்பட்டது. ஆங்கிலேயரின் தொடர்பு இக்காலத்தில் ஏற்பட்டது. மேலை நாட்டு நாகரிகம் இக்கால ஓவியங்களில் வெளிப்பட்டது. மராட்டியர்களின் ஓவியங்கள் தஞ்சை அரண்மனையில் இடம் பெற்றன.

**<u>தன்மதிப்பீடு – 4</u>**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. சித்தன்னவாசல் ஓவியம் – குறிப்பு வரைக.
2. பனைமலை ஓவியத்தின் சிறப்பு யாது ?
3. சோழர் கால ஓவியங்களில் காணலாகும் வரலாற்றுக் குறிப்புகளை எழுதுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. சங்க காலத்திற்குப் பின் ஓவியங்களின் வளர்ச்சி நிலைகளை விவரிக்க.
2. வரலாற்றுப் பதிவுகளில் ஓவியக்கலை பெறும் இடம் யாது ?

### 2.6. கூத்துக்கலை

தமிழர் போற்றி வளர்த்த கலைகளில் கூத்தும் ஒன்றாகும். இது இசையோடு இணைந்து வளர்ந்த கலையாகும். ஆடவர் பெண்டிர் இருசாரார்க்கும் பொதுவாகும். விழாக்களின் போது கூத்தர்கள் மக்களை மகிழ்வித்தனர். மன்னரும் மக்களும் கூத்தர்களைப் பேணினர். பரதவர், குறவர் போன்ற மக்கள் பொழுது போக்கிற்காக ஆடுவார்கள். ஆனால் இக்கலையைத் தன் வாழ்விற்காகக் கொண்டவர்கள் கூத்தர்,

பொருநர், விறலியர், கோடியர் எனப் பலர் ஆவர். கூத்துக்கலையின் இலக்கணங்களைக் கூறும் நூல்கள் பல உள்ளன. ஆனால் அழிந்தவை போக எஞ்சியுள்ள நூல்கள் சிலவாகும்.

**2.6.1. சங்ககாலத்தில் கூத்துக்கலை**

- சங்க காலத்தில் எல்லாத் துறைகளிலும் ஆடல், பாடல் பரவியிருந்தன. பண்டையோர் ஆடிய ஆடல்களில் வள்ளிக்கூத்து ஒன்றாகும். நாட்டுக்கு வளமும் வெற்றியும் கொணர்ந்த வள்ளியின் பெருமைகளைப் பாடி ஆடுவது இதுவாகும்.
- தொல்காப்பியர் இதனை 'வாடா வள்ளி' என்பர். வாடாவள்ளியினால் வளம் பல தரும் நாடுகளைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை,

  ''வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்

  நாடு பல கழிந்த பின்றை'' (பெரும்பாணாற்றுப்படை: 370–371)

  என்று கூறுகிறது. இஃது இழிந்தோர் காணும் கூத்தாகும்.
- பொது மக்கள் ஆடிய இன்னொரு கூத்து **குரவை** எனப்படும். மலைவாழ்நர் விரும்பி ஆடியது இக்கூத்தாகும். மலையுச்சியில் குன்றவாணர்கள் மான் தோல் சிறுபறையின் முழக்கோடு ஆடினர் என்பதை மலைபடுகடாமும் (வரி.320–322) மூங்கிற் குழாயில் பெய்த முற்றிய கள்ளைக் குடித்துவிட்டு வேங்கை முற்றத்தில் குரவையாடினர் என்பதை நற்றினையும் (பா.273:3–10) கள்ளையுண்டு குரவையாடியதைப் புறநானூறும் (பா.129:1–3) பரதவ மகளிர் ஆடிய குரவையைப் பற்றி மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுகின்றன.
- விழாக் காலங்களில் மகளிர் கயிற்றின் மேல் நின்றாடும் ஒருவகை ஆட்டம் பற்றிக் குறிஞ்சிப்பாட்டில் (வரி.192–194) கபிலர் குறிப்பிடுகின்றார்.
- ஆட்டத்திற்கேற்ற இசைபாடும் மகளிர் தாம் கொண்ட இசைக் கருவியின் நரம்புகள் நிலை திரியவும், அதனைத் தம் வெம்முலையில் தடவிச் சூடேற்றிப் பண்ணு முறையில் நிறுத்தினர் என நக்கீரர் கூறுவார்.
- சமயச்சடங்கோடு ஆடல் கலை நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. இதற்கு வெறியாட்டுச் சான்றாக அமைகிறது.
- **துணங்கை** என்பது இன்னொரு கூத்தாகும். விழாவின் போது தெருக்களில் ஆடினர். இதற்கு ஏற்ப முழவு ஒலித்தது. இதில் ஆடவர், மகளிர் இருவரும் சேர்ந்து ஆடுவர்.

  ''மள்ளர் குழீஇய விழவினானும்

  மகளிர் தழீஇய துணங்கையானும்

  யாண்டும் காணேன் மாண்தக்கோனை''

  என்னும் ஆதிமந்தியாரின் பாடல் வரிகள் சான்றாகும்.
- போர்க் கொடுமையால் நெடுஞ்செழியனின் பகைப்புல மகளிர் தாம் ஆடும் துணங்கையை மறந்தனர் என்று மதுரைக்காஞ்சி (வரி.154–160) கூறுகிறது.
- போர்க்கள வெற்றியைச் சிறப்பித்து வீரர்கள் கூத்தாடுவதும் இருந்தது.
- மன்னர்கள் கூத்தர்களைப் பேணிய சிறப்பால் அவர்கள் கோடியர் தலைவர் எனப்பட்டார் என்பதை,

''பாடல் பற்றிய பயனுடை எழாஅல் கோடியர் தலைவ''

(பொருநராற்றுப்படை: 56–57)

என்று உணர்த்துகிறது.

### 2.6.2. கூத்து நூல்கள்

- சங்க இலக்கியத்தில் கூத்து நூல்கள் பற்றிய குறிப்பு இல்லை. ஆனால் கூத்து நூல்கள் பல அழிந்தமைக்கு உரையாசிரியர்களின் கூற்று சான்றாக அமைகிறது.
- மாதவி **நாடக நன்னூல்** நன்கு கடைப்பிடித்து ஆடினாள் என்பதன் மூலம் **நாடகக் கூத்து நூல்** இருந்தது அறியப்படுகிறது.
- மேலும், **விளக்கத்தார் கூத்து, செயன்முறை, மதிவாணனார் நாடகத் தமிழ்** என்னும் நூல்களும் அறியப்படுகின்றன.
- யாப்பருங்கலம் எனும் இலக்கண நூலின் உரையின் வாயிலாகச் **செயிற்றியம், சயந்தம், பொய்கையார்நூல்** முதலான கூத்து நூல்கள் பற்றிய குறிப்புகளையும் அறியலாம்.

### 2.6.3. சிலம்பும் கூத்தும்

- சிலப்பதிகாரம் கூத்துக் கலையின் பெருமையை அறிய உதவுகின்றது. அக்காலத்தில் 64 கலைகள் பற்றிய அறிவும் கூத்துக்குத் தேவைப்பட்டது.
- மன்னருக்கு உரியது வேத்தியல் என்றும், மற்றவர்க்கு உரியது பொதுவியல் என்றும் இக்காப்பியத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- பொன்னும், மணியும் **தலைக்கோல்** என்னும் பட்டமும் கூத்துக்கு அளிக்கப்பட்டன.
- தலைக்கோல் என்பது ஏழு சாண் நீளமுள்ளது. மூங்கிலாலானது, கணுக்கள் தோறும் மணிகளும் இடையிடையே பொன்கட்கு இடப்பட்டது. இக்கோலைப் பெற்றவள் **தலைக்கோலி** எனப்பட்டாள். நட்டுவாணன் **தலைக்கோலாசான்** எனவும், நாட்டியத்திற்குப் பாடல் பாடியோர் **தோரிய மடந்தை** எனவும் பட்டம் சூட்டப்பட்டனர்.
- இளங்கோவடிகள் அவர் காலத்து நாடக மேடையமைப்பினை விளக்கியுள்ளார். சிற்ப நூலாசிரியர் வகுத்த முறைப்படி இடத்தைத் தேர்ந்தெடுப்பர். கோயில்கள், வாயில்கள், அமைக்கப்பட்டுத் திரைச்சீலைகள் பொருத்தப்பட்டன.
- அவை ஒரு முக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி எனப்படும்.
- மாதவியாடிய பதினொரு ஆடல்கள் வருமாறு: **அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடயம், பேடு, மரக்கால், பாவை** ஆகியவையாகும்.
- இவற்றில் முதல் 6–ம் நின்றாடுபவை. பின்னவை 5–ம் வீழ்ந்தாடுவனவாகும். இவை அனைத்தும் புராணத் தொடர்பானவையாகும்.
- கண்ணன் யானையை வென்றது **அல்லி**யாகும்.
- சிவபெருமான் முப்புரம் எரித்து ஆடியது **கொடுகொட்டி**யாகும்.
- **குடைக்கூத்து** முருகன் அவுணரை வென்றாடியது.

- ❖ அநிருத்தனவாணனுடைய சிறையிலிருந்து மீட்டிடக் கண்ணன் ஆடியது **குடக்கூத்து.**
- ❖ சிவன் முப்புரம் எரித்து நான்முகன் காண ஆடியது **பாண்டரங்கம்.**
- ❖ கண்ணன் வாணன் மற்போர் குறித்தது **மல்லாடல்.**
- ❖ சூரனை வென்றபின் முருகன் ஆடியது **துடி.**
- ❖ வாணனுடைய சோவரணின் வடக்கு வாசலில் அயிராணி உழத்தி வடிவில் ஆடியது **கடயம்.**
- ❖ காமன் தன் மகன் அநிருத்தனை மீட்கப் பேடி வடிவில் ஆடியது **பேடு.**
- ❖ கொற்றவையை வஞ்சனையால் வெல்ல எண்ணி அவுணர் ஏவிய பாம்பு தேள் முதலியவற்றை மரக்காலால் உழக்கி அவள் ஆடியது **மரக்காலாடல்.**
- ❖ போர் செய்ய வந்த அவுணர் அழியுமாறு திருமகள் ஆடியது **பாவை.**

### 2.6.4. கூத்துக்கலையில் மெய்ப்பாடுகள்

- ❖ விறல் பட ஆடுவாள் விறலி. விறல் என்பது சத்துவம் எனப்படும். அதுவே மெய்ப்பாடாகும்.
- ❖ ஒன்பது சுவையும் மெய்யின் கண் புலப்பட ஆடுவதே கூத்தின் சிறப்பு. அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலை என்பன.
- ❖ வெகுண்டோன், சோம்பேறி, களித்தோன், அழுக்காற்றுடையோன், தெய்வ முற்றோன், துஞ்சியோன், நாணமுற்றோன் எனப் பல்வேறு மனநிலைகள் உடல் நிலைகள் பற்றிய அவிநயங்களும், கையின் மூலம் வெளிப்படுத்தப்படும் பல்வேறு நிலைகளும் சிற்பநூல்களும், கூத்து நூல்களும் கூறுகின்றன.

### 2.6.5. பல்லவர் காலத்தில் கூத்துக்கலை

- ❖ பல்லவர் காலத்தில் சைவ, வைணவம் மறுமலர்ச்சி அடைந்ததால், ஆடல் பாடல்களுக்குக் கோயில்கள் ஏற்ற இடங்களாயின. அடியார்கள் ஆடியும் பாடியும் மகிழ்ந்தனர். திருவிழாக்கள் பெருகின. விழாவில் ஆடலும் பாடலும் இடம் பெற்றன.
- ❖ பல்லவர் மன்னர்கள் மூலமே பரதக்கலை பேணப்பட்டன. இராசசிம்மன் காலத்தில் உச்சநிலை எய்தியது. இவன் காலத்தில் வேறுபட்ட நடனங்கள் கோயில்களில் புகுந்தன.
- ❖ ரிஷபத்தளியார், தேவரடியார், தளிச்சேரிப் பெண்டுகள், கூத்திகள் என நடனப் பெண்டிர் பெயர் பெற்றனர்.
- ❖ சிற்றண்ணவாசலிலுள்ள நடனமாதர் ஓவியம் அக்காலக் கூத்துக் கலையின் சிறப்பை விளக்குகிறது.
- ❖ ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்கள் பலவற்றில் கோயில் நடனப் பெண்டிர் பற்றிய குறிப்புகள் உள்ளன.

### 2.6.6. சோழர்காலத்தில் கூத்துக்கலை

- ❖ சோழர் காலத்தில் இக்கலை மேலும் வளர்ந்தது. கோயில்களில் ஆடவும், பாடவும் கொடுக்கப்பட்ட நிவந்தங்கள் எண்ணற்றனவாகும்.

- ❖ தஞ்சை கோயிலில் 400 தேவரடியார் இருந்தனர். அவர்களுக்கு ஆளுக்கொரு வேலி நிலம் கொடுக்கப்பட்டது. பதியிலார் எனப் பெயர் பெற்றனர்.
- ❖ இக்காலத்தில் திருவிழாக்களின் போது நடனம் கட்டாயமானது. நடனப் பெண்டிருக்குப் பட்டங்கள் சூட்டப்பட்டன.
- ❖ **பூங்கோயில் நாடகத் தலைக்கோலி** என்பது ஒருத்திக்கு அளிக்கப்பட்ட பட்டமாகும். **நிருத்தப்பேரரையன்** என்பது ஆசிரியருக்கும், **நட்டுவக்காணி** அவருக்குத் தரப்பட்ட நிலக்கொடையாகும். இக்காலத்தில் **சாக்கைக்கூத்து** என்னும் பட்டம் அக்கலைஞனுக்குக் கொடுக்கப்பட்டது.

### 2.6.7. நாயக்கர் காலத்தில் கூத்துக்கலை

- ❖ நாயக்க மன்னர்களும் மராட்டிய மன்னர்களும் கலை வளர்ச்சியில் கருத்தூன்றினர்.
- ❖ தேவதாசிகள் என்போர் கோயில்களில் அமர்த்தப்பட்டனர். அவர்கள் பூசையின் போது நடனமாடியதோடு இறைவனுக்கு உணவூட்டினார்கள் எனவும் கூறப்படுகிறது.
- ❖ பெண்களுக்குப் பொட்டுக்கட்டும் வழக்கம் உண்டு. இப்பெண்டிர் ஆடல் பாடல்களில் வல்லவர்கள்.
- ❖ அரண்மனையில் அரசன் சிலைக்கு முன் நின்று ஒவ்வொரு சனிக்கிழமையிலும் மகளிர் ஆடினர் என்கிறார் நியூனிசு என்பவர்.
- ❖ இரகுநாத நாயக்கன் நடனக்கலையில் வல்லவன். இவன் **இரகுநாத விலாசம்** என்ற நடனத்தைக் கண்டறிந்தான்.
- ❖ இக்கால நடனமாதர் விலை மாதராகவும் இருந்தனர்.
- ❖ முகமதியர் ஆட்சிக் காலத்தில் கலைஞர்கள் பேணுவாரற்றனர். எனவே கலை தளர்ச்சியுற்றது.
- ❖ இன்று நாடகங்களும் திரைப்படங்களும் இக்கலையை வளர்க்கின்றன.
- ❖ கமலா இலட்சுமணன், பத்மா சுப்பிரமணியம் போன்றோர் சிறந்த நாட்டியக் கலைஞர்களாகப் புகழோடு இன்று வாழ்கின்றனர்.
- ❖ இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் நாட்டிய வகைகளும், ஐரோப்பிய நடன வகைகளும் இன்றும் இங்குக் குடிபுகுந்துள்ளன.

**தன்மதிப்பீடு – 5**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. குரவை, துணங்கை – குறிப்பு வரைக.
2. பழம்பெரும் கூத்து நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. சிலப்பதிகாரத்தில் காணலாகும் கூத்து பற்றிய குறிப்புகளை எழுதுக.
4. கூத்துக்கலையில் மெய்ப்பாடு பெறும் இடம் யாது ?

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. சிலப்பதிகாரத்தில் காணலாகும் கூத்து பற்றிய செய்திகளை விளக்கி வரைக.
2. சங்க காலத்தில் கூத்துக்கலை பெறும் இடம் யாது ?

## 2.7. நாடகக்கலை

செவிக்கும் கண்ணுக்கும் கருத்துக்கும் ஒரே நேரத்தில் விருந்தளிப்பது நாடகம். நாடகக் கலைஞர் அவ்வை சண்முகம், ''நாடகம் கலைக்கரசு; நாட்டின் நாகரிகக் கண்ணாடி; பாமரர்களின் பல்கலைக்கழகம்; உணர்ச்சியைத் தூண்டி விட்டு, உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும் தூய்மையையும் வெளிப்படுத்தி, மக்களைப் பண்படுத்தும் மகத்தானக் கலை'' என்பது முற்றும் பொருந்தும். இக்கலை படிப்படியாக முன்னேறி வளர்ச்சியுற்று வருகிறது.

### 2.7.1. தொடக்ககாலத் தமிழ்நாடகங்கள்

- கி.மு. மூன்றாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் **தொல்காப்பியம்**, நாடக வழக்கினையும் உலகியல் வழக்கினையும் குறிப்பிட்டுள்ளது.
- நாடகம் என்னும் சொல் நாட்டியம் என்னும் பொருளில் ஆளப்பட்டு உள்ளது என்பதை **நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த விசிவீங்கு இன்னியம்**, **பாடலோர்த்தும் நாடகம் நயந்தும்**, **நாடக மேத்தும் நாடகக் கணிகை**, **நாடகம் உருப்பசி நல்காளாகி** என்னும் இலக்கியக் குறிப்புகளால் அறியலாம்.
- தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் ஆண்டுதோறும் வைகாசிப் பெருவிழாவில் **இராச ராச விஜயம்** என்னும் நாடகம் நடிக்கப்பட்டது. திருப்பாதிரிப்புலியூரில் உள்ள சிவன் கோயிலில் **பூம்புலியூர் நாடகம்** நடிக்கப்பட்டது. திருச்செந்தூர்ப் பகுதியிலுள்ள ஆத்தூர் சோமநாதர் கோயிலில் நாடகம் நடிக்கப்பட்டது. முதற் குலோத்துங்கன் பற்றிய **குலோத்துங்க சோழ சரிதை** என்னும் நாடகம் இருந்ததையும் கல்வெட்டால் அறிகிறோம்.
- நாயக்கர் காலத்தில் இசையோடு கலந்த நொண்டி நாடகம், குறவஞ்சி நாடகம், பள்ளு நாடகம் ஆகியவை தோன்றின.
- திருக்கச்சூர் நொண்டி நாடகம், திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும்.

### 2.7.2. பிற்காலத் தமிழ்நாடகங்கள்

- கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயர் **இராம சரிதை நாடகமும்**, கோபால கிருஷ்ண பாரதியாரின் **நந்தனார் சரிதக் கீர்த்தனையும்** குறிப்பிடத்தக்கவை.
- 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாடகம் நன்கு வளரத் தொடங்கியது.
- **பரிதிமாற் கலைஞர் கலாவதி, ரூபாவதி, மானவிசயம்** என்னும் நாடகங்களையும், **நாடகவியல்** என்னும் இலக்கணத்தையும் எழுதினார்.
- **பேராசிரியர் சுந்தரம்பிள்ளை செகப்பிரியரின்** நாடக அமைப்பினை யொட்டித் தமது **மனோன்மணீயத்தை** இயற்றினார்.

### 2.7.3. நாடகக் கலைஞர்களும் படைப்புகளும்

- பல சமயத்தவரும் நாடகங்களை எழுதினர் என்பதற்கு **அல்லி பாதுஷா**, **அப்பாசு நாடகம்**, **ஞானக்கூத்தன்** முதலிய நாடகங்கள் சான்றாக அமைகின்றன.
- நாடகத்தில் மிக முக்கிய இடம் வகிப்பவர் **பம்பல் சம்பந்த முதலியார்** ஆவார். இவர் 90 நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார். செகப்பிரியர் நாடகங்கள்,

காளிதாசரின் **மாளவிகாக்கினி மித்திரம், இரத்தினாவளி** ஆகியவற்றை மொழி பெயர்த்துள்ளார்.

- **மனோகரா, லீலாவதி, வேதாள உலகம், சபாபதி, கள்வர் தலைவன்** ஆகியவை பல சபையினாரால் நடிக்கப்பட்டன.
- **நாடக மேடை நினைவுகள், நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி ?** போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.
- நாடகத்தில் தான் நடித்ததோடு, ஆர்.கே. சண்முகம் செட்டியார், சத்தியமூர்த்தி, சி.பி. இராமசாமி ஐயர் ஆகியோரையும் நடிக்க வைத்தார். சுகுணவிலாச சபை இவரால் நிறுவப்பட்டதாகும்.
- நாடக உலகின் இமயமலையாகப் பாராட்டப்படுபவர் **தவத்திரு சங்கரதாசு சுவாமிகளாவார்.** இவர் 40 நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.
- **சுந்தரி, பவளக்கொடி, சீமந்தனி, சதியநுசுயா, பிரகலாதன், சிறுத்தொண்டர், வள்ளித்திருமணம், சத்தியவான் சாவித்திரி** என்னும் புராண நாடகங்களும், வடமொழி நாடகமான **மிருச்சகடி,** ஆங்கில நாடகமான **ரோமியோ ஜூலியத்து, சிம்பலைன்** ஆகியவற்றையும் நாடகமாக்கினார். **மணிமேகலை, பிரபுலிங்க லீலை** ஆகியவற்றையும் நாடகமாக்கினார்.
- இவரது நாடகங்களில் குறுந்தொகை, நற்றிணை, திருக்குறள் ஆகியவற்றின் நறுமணம் கமழும். வெண்பா, கலித்துறை, விருத்தம், சந்தம், வண்ணம், கும்மி முதலிய பலவகையான பாடல்கள் இடம் பெறும்.
- சமரச சன்மார்க்க நாடக சபையை 1910 இல் ஏற்படுத்தினார். இதில் **மாரியப்ப சுவாமி, கிட்டப்பா** ஆகியோர் இருந்தனர்.
- **கலியாணராமய்யர், இராமுடு அய்யர், கோவிந்தசாமி நாயுடு, வள்ளி வைத்தியநாதய்யர், அநந்த நாராயண ஐயர், வேலு நாயர், அரங்கசாமி நாயுடு, முனுசாமி நாயுடு, பாலாமணி, பாலாம்பாள், இராசாம்பாள், சாரதாம்பாள், அரங்கநாயகி, வி.பி.சானகி** முதலியோர் பல நாடக சபைகளை நிறுவியுள்ளனர்.
- நவாபு இராசமாணிக்கம் பிள்ளை நாடகவுலகில் மறக்க முடியாதவர்.
- **கும்பகோணம் வாணி விலாச சபை, திருச்சி ரசிகரஞ்சனி சபை, தஞ்சை சுதர்சன சபை, குமரகான சபை, சென்னை செகரட்டரியேட் சபை** ஆகியவைகளும், **கலியாணராமையர் நாடகக் குழுவும்** குறிப்பிடத் தக்கவையாகும்.
- முதலில் புராண சம்பந்தமான நாடகங்களே தோன்றின. அவை **பாரத விலாசம், சகுந்தலை விலாசம், மதுரை வீரன் விலாசம், சித்திராங்கி விலாசம், அரிச்சந்திர விலாசம்** போன்றவையாகும்.
- மொழி பெயர்ப்பு நாடகங்களும், வரலாற்று நாடகங்களும், சமூக நாடகங்களும் உருவாயின.
- தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலர், **கதரின் வெற்றி, தேசியக்கொடி, பதிபக்தி, பம்பாய் மெயில், கதர் பக்தி** போன்ற நாடகங்களை எழுதினார்.
- நாடக மறுமலர்ச்சியின் தந்தையான **எம்.கந்தசாமி முதலியார் இராஜாம்மாள், இராசேந்திரா, சந்திரகாந்தா** ஆகிய புதினங்களை நாடகமாக்கினார்.

❖ **கன்னையா** என்பவர் **தசாவதாரம், ஆண்டாள், பகவத்கீதை** ஆகிய நாடகங்களை எழுதினார்.

### 2.7.4. இருபதாம் நூற்றாண்டு நாடகங்கள்

கு.சா. கிருஷ்ணமூர்த்தி–**அந்தமான் கைதி**

ப.நீலகண்டன்–**முள்ளில் ரோஜா**

நாரண துரைக்கண்ணன்–**உயிரோவியம்**

மு.வரதராசனார் – **அல்லி**

அரு. இராமநாதன் – **இராசராசசோழன்**

பேரறிஞர் அண்ணா–**வேலைக்காரி, ஓரிரவு, சந்திரோதயம், நீதிதேவன்**

கலைஞர் கருணாநிதி–**மந்திரிகுமாரி.**

ஔவை டி.கே. சண்முகம், டி.கே.பகவதி–**இராசராச சோழன்**

மனோகர்–**இலங்கேசுவரன், துரோணர்** போன்ற நாடகங்களோடு

**வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள்** போன்ற வரலாற்று நாடகங்களையும் குறிப்பிடலாம்.

❖ **என்.எஸ். கிருஷ்ணன், கே.ஆர்.இராமசாமி, எஸ்.எஸ். இராசேந்திரன், சிவாஜி கணேசன்** ஆகிய திரைக்கலைஞர்கள் நாடக மன்றங்களை அமைத்தனர்.

❖ இன்று ஓரங்க நாடகங்களும், நாட்டிய நாடகங்களும், வானொலி நாடகங்களும் வளர்ந்து வருகின்றன.

❖ தற்காலச் சான்றோர் சிலர் உரைநடையிலும் செய்யுளிலும் பல நாடகங்களைப் படைத்துள்ளனர்.

❖ புலவர் பழனியின் **அனிச்ச அடியும்**, பாலசுந்தரனாரின் **புலவர் உள்ளம், புரவலர் உள்ளம், வேள் எவ்வி** போன்ற செய்யுள் நாடகங்களும், ஆறு. அழகப்பனின் **திருமலை நாயக்கர்** எனும் நாடகத்தையும் குறிப்பிடலாம். எள்ளல் நாடகம் சிலவற்றையும் இவர் எழுதினார். மேலும் **நாடகக்கலை** என்னும் திங்கள் இதழையும் நடத்தினார்.

**தன்மதிப்பீடு – 6**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. இசையோடு கலந்த நாடக வகைகளைக் குறிப்பிடுக.
2. முதல் குலோத்துங்கனைப் பற்றி எழுந்த நாடக நூல் எது ?
3. பின்வரும் நாடகத்தின் ஆசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

அ. தசாவதராம், ஆ. தேசியக்கொடி,

இ. வேலைக்காரி, ஈ. இலங்கேஸ்வரன்

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. நாடகக்கலையின் வளர்ச்சி நிலைகளைக் குறிப்பிடுக.
2. நாடகக் கலைஞர்களும் படைப்புகளும் குறித்து விவரிக்க.

### 2.8. மருத்துவக் கலை

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது பழமொழியாகும். நோய்களைப் பற்றியும், அவற்றைத் தீர்க்கும் முறைகள் பற்றியும் தமிழர்கள் நன்குணர்ந்திருந்தனர் என்பதற்கு இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் சான்றாக விளங்குகின்றன.

#### 2.8.1. சங்க காலத்தில் மருத்துவம்

- ❖ சங்க காலத்தில் மருத்துவ அறிஞர் பலர் வாழ்ந்தனர் என்பதற்கும், இலக்கியச் செல்வராய்த் திகழ்ந்தனர் என்பதற்கும் **மருத்துவன் தாமோதரனார்** என்னும் புலவர் சான்றாவார்.
- ❖ கிறித்துவுக்குச் சில நூற்றாண்டுகட்கு முன்பே தென்னகத்தில் அசோகரால் நிறுவப்பட்ட மருத்துவமனைகள் இங்கு இருந்தன என்பதற்கு அவருடைய கல்வெட்டுக்கள் சான்றாகும்.
- ❖ மனிதருக்கு மட்டுமின்றி விலங்குகட்கும் மருத்துவமனைகள் நிறுவப்பட்டன.
- ❖ கோவூர்கிழார் நீரையும் உணவையும் **இருமருந்து** எனப் பாராட்டுவார்.
- ❖ நோயாளி வேட்டதைக் கொடாது மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் சங்க இலக்கியத்தில் பேசப்படுகின்றான் (நற்றிணை–136). சங்க காலத்தில் போர்கள் அடிக்கடி நடந்தன.
- ❖ புண்பட்ட வீரர்களுக்கு மருத்துவர்கள் பல மருந்துகள் கொடுத்தும், புண்களை ஊசி கொண்டு தைத்தும் குணப்படுத்தினர். புண்ணைத் தைத்தமை பற்றிப் பதிற்றுப்பத்துப் பாடலொன்று குறிப்பதால் அறுவை மருத்துவமும் ஓரளவு வளர்ச்சியுற்றிருந்தமை அறியப்படுகிறது.

#### 2.8.2. திருவள்ளுவர் சுட்டும் மருத்துவம்

- ❖ திருக்குறள் மருத்துவக்கலை பற்றிய அடிப்படைக் கருத்துக்களைத் தொகுத்துத் தந்துள்ளது.
- ❖ முன்னுண்டது செரித்தது கண்டு உண்பார்க்கு மருந்துண்ணும் தேவையேற்படாது என்கிறார் வள்ளுவர்.
- ❖ வாதம், பித்தம், கோழை என்னும் மூன்றும் மனித உடலில் அளவோடு இயங்க வேண்டும். ஒன்றும் இல்லையென்றால் நோயுண்டாகும் என்பர்.
- ❖ நோயை முதலில் கண்டறிந்து அது எப்படி வந்தது என்று ஆய்ந்து, அதைத் தீர்க்கும் வழிமுறையைக் கையாள வேண்டும் என்பதை,

  ''நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும்

  வாய்நாடி வாய்ப்பச் செயல்''

  என்று வள்ளுவர் கூறுகிறார்.
- ❖ மருத்துவத்துறையின் இன்றியமையா உறுப்புகளாகப் 1. பிணியுற்றவர், 2. மருத்துவம், 3. மருந்து, 4. உதவியாளன் என்னும் நான்கினைக் குறிப்பிடுகின்றனர்.
- ❖ மருந்தின் வகை நான்கு. அவை,
  1. பல் பிணிகட்கும் ஏற்றல்
  2. சுவை, வீரியம், விளைவாற்றல்களின் மேம்படுதல்

3. எளிதின் எய்தப்படுதல்

4. பகுதியோடு பொருந்துதல்

ஆகியவை ஆகும்.

### 2.8.3. சமண பௌத்த நூல்கள் கூறும் மருத்துவம்

- கி.மு.மூன்றாம் நூற்றாண்டளவில் இவ்விரு சமயத்தவர் தமிழகத்திற்கு வந்தனர். உணவு, கல்வி, மருந்து, அடைக்கலமளித்தல் போன்றவற்றைத் தம் அடிப்படை அறங்களாகப் போற்றினர். இலக்கியங்களையும் படைத்தனர்.
- பதினெண்கீழ்க்கணக்கில் ஏலாதி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம் என்பவை மருத்துவ மூலிகைகளின் அடிப்படையில் பெயர் பெற்றன.
- சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் சேர்ந்தது திரிகடுகம் சூரணமாகும்.
- கண்டங்கத்திரி வேர், சிறுமல்லிவேர், சிறுவழுதுணை வேர், முதலிய ஐந்து வேர்களில் ஆனது சிறுபஞ்சமூலம்.
- ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறு பொருள்கள் சேர்ந்தது ஏலாதி.

### 2.8.4. பல்லவர் கால மருத்துவம்

- பல்லவர் கல்வெட்டுகளில் மருந்துச் செடிகளைப் பயிரிடுதற்கு விதிக்கப்பட்ட சில வரிகளைக் காணலாம்.
- சைவ நாயன்மார்கள் செய்த சமூகத் தொண்டுகளில் நோய் தீர்த்தலும் ஒன்றாகும். அப்பரும் சம்பந்தரும் விடந் தீண்டியவர்களுக்கு உதவியுள்ளனர். சம்பந்தரே கொல்லி மழவன் மகள்உற்ற **முயலகன்** என்னும் நோயைத் தீர்த்தார் என்பர்.
- பல்லவர் காலம் முதல் வடவர் மருத்துவ முறையும் வழக்கிற்கு வந்துவிட்டன.

### 2.8.5. சோழர் கால மருத்துவம்

- சோழர் காலம் மருத்துவக் கல்விக்குச் சிறப்பளித்த காலமாகும். மன்னர்கள் சிலவிடங்களில் மருத்துவக் கூடங்களை அமைத்திருந்தனர்.
- இராசேந்திர சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்றில் இலவச மருத்துவக் கூடம் ஒன்றைப் பற்றிய குறிப்பு உள்ளது.
- தஞ்சையில் **சுந்தர சோழ விண்ணகர் ஆதுரசாலை** என்னும் மருத்துவமனை இருந்ததாகக் கல்வெட்டு கூறுகிறது.
- வீரராசேந்திரன் 18 படுக்கைகள் கொண்ட மருத்துவக் கூடத்தினை நிறுவியுள்ளான்.
- தமிழ்நாட்டு மருத்துவம் பச்சிலைகளையும் வேர்களையும் அடிப்படையாகக் கொண்டது.

### 2.8.6. மருத்துவ நெறியில் சித்தர்கள்

- சித்தர்களே மருத்துவ நெறிகளை வகுத்தனர். இவர்கள் பெயரால் பல மருத்துவ நூல்கள் வழங்கப்படுகின்றன.
- வாதமடக்கி, வண்டு கொல்லி, கிரந்தி நாயகன், பொன்னாங்கண்ணி என்பவை மருத்துவப் பண்புகள் அடிப்படையில் பெயரிடப்பட்டவை.

- சித்தர் மருத்துவத்தில் கழாயம், குளிகை, சூரணம், இலேகியம், செந்தூரம், என்னும் பல மருந்துகளும் உண்டு. இவற்றின் நோக்கம், தடுப்பு, தீர்வு, ஆற்றல் மீட்பு, ஆயுள் நீட்சி என்னும் நான்கு என்பர்.
- மருத்துவத்துறையின் தலைவராகச் சிவபெருமான் கூறப்படுகிறார். அவர், ஏழு லட்சம் பாடல் கொண்ட நூலை இயற்றியதாகக் கொள்வர்.
- நந்தி, சனகர், சனாதர், சனானந்தர், சனற்குமாரர், திருமூலர், பதஞ்சலி, அகத்தியர், புலத்தியர், புசுண்டர், கருவூரார், தன்வந்திரி, சட்டைமுனி, தேரையர், யூசிமுனி ஆகியோர் பல மருத்துவ நூல்களை இயற்றியுள்ளனர் என்பர்.
- மருத்துவ நூல்கள் இரசமணி, மந்திரம், மருந்து என்னும் மூன்றினைக் குறிப்பிட்டுள்ளன.
- உப்பு, தீநீர், பட்டினி, உடற்பொருள், பாசாணம், உலோகம், சத்து, இரசக்குளிகை, யோகம் என்னும் பத்து முறைகள் கூறப்படுகின்றன.
- செந்தூரம், சுண்ணம், செய்நீர், தீநீர், சத்து, மணி முதலியன சித்தர் மருத்துவத்தில் மட்டுமே உண்டு.
- உப்புக்கள் 25, பாடாணம் 64, உலோகம் 9, உலோகச் சத்துக்கள் 120, மூலிகைகள் 1008 என்று நூல்கள் கூறுகின்றன.
- நாடியைப் பார்த்து நோயை அறிவது சித்தர் முறையாகும். இடகலை, பிங்கலை, சுழுமுனை என நாடிகள் மூவகையாகும். வாதம், பித்தம், கோழை எனும் மூன்றின் நிலைகளும் நாடியினால் கண்டறியப்படும்.
- சித்தருடைய பஸ்பம், நாடி பார்த்தல், புடம்போடுதல் ஆகியவற்றைத் தம் நூல்களில் வடவர் சேர்த்துக் கொண்டனர்.
- ஆயுர்வேதம் என்பது சித்தர் முறையே. வைத்திய வல்லாதி பூரண சூத்திரம், நாடி நூல், இரத்தினச்சுருக்கம், இரண வைத்தியம், நயனவிதி, சரபேந்திர வைத்தியம் என்னும் நூல்கள் வழக்கிலுள்ளன.
- சென்னையில் சித்த மருத்துவ முறையைக் கையாளும் **அண்ணா மருத்துவமனை** நிறுவப்பட்டுள்ளது.
- டி.எஸ்.சனககுமாரி **நாட்டு மருந்துகள், விஷக்கடிகளுக்கு அனுபவ மருந்துகள்**, **பாப்பாவுக்குப் பாட்டி வைத்தியம்** என்னும் நூல்களை எழுதியுள்ளார்.
- டாக்டர் கதிரேசன் **க்ஷயநோயும் தடுப்பு முறைகளும்** என்னும் நூலை எழுதியுள்ளார்.
- ஆங்கில மருத்துவத்தின் செல்வாக்கால் பின்னடைந்த சித்தர் மருத்துவம் மீண்டும் உயிர் பெற்றெழுந்துள்ளது.

**தன்மதிப்பீடு – 7**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. திருவள்ளுவர் சுட்டும் மருத்துவம் குறித்து எழுதுக.
2. மருத்துவக் குறிப்புகளுக்கு அறநூல்கள் எங்ஙனம் வழிவகுக்கின்றன.
3. நாயன்மார்கள் செய்த சமூகத் தொண்டுகளில் நோய் தீர்தலும் ஒன்று என்பதைச் சுருக்கி வரைக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. மருத்துவ நெறிக்கு வழிவகுத்தவர்கள் சித்தர்களே என்பதை நிறுவுக.
2. தமிழ் இலக்கியங்களில் காணலாகும் மருத்துவக் குறிப்புகளை விளக்குக.

## 2.9. தொகுப்புரை

1. தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் இசை குறித்த பல செய்திகளைக் குறிப்பிட்டுள்ளன.
2. குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நைவளம், காமரம் போன்றவை பழங்காலத்து பண் வகைகளாகும்.
3. முதுநாரை, முதுகுருகு, இசைநுணுக்கம், பதினாறு படலம், யாழ்நூல், சங்கீத ரத்தினாகரம் போன்றவை பழம் பெரும் இசைநூல்களாகும்.
4. பல்லவர் காலத்திற்கு முன்பே மண்ணுருவங்களும் சுதையுருவங்களும் செய்யப்பட்டுள்ளன.
5. சங்கத்தமிழர் மண்ணாலும், மரத்தாலும், தந்தத்தாலும், பாறையாலும் அழகிய சிற்பங்களை வடிவமைத்துள்ளனர்.
6. மரத்தால் ஆன மண்டபங்கள், செங்கற்களால் ஆன கோயில்கள், குகைக்கோயில்கள், தமிழரின் கட்டிடக் கலையின் நுட்பத்தை உணர்த்துவன.
7. பழமையான கலைகளில் ஒன்றான ஓவியம் தொல் பொருளாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட மண் ஓடுகளிலும் காணப்படுவது சிறப்புடையது.
8. பனைமலை ஓவியம், திருமலைப்புரம் ஓவியம், சித்தன்னவாசல் ஓவியம் தமிழரின் ஓவியச்சிறப்பை உணர்த்துவனவாகும்.
9. குரவைக்கூத்து, துணங்கைக் கூத்து என்பன கூத்தின் வகைகளாகும். கூத்தர், பொருநர், விறலியர், கோடியர் இக்கலையை வளர்த்தோராவர்.
10. நாடகத்தைத் தொல்காப்பியர் **நாடக வழக்கு** என்கிறார். ஆங்கிலேயரின் ஆட்சியில் பல்வேறு நாடகங்கள் தோன்றியுள்ளன.
11. ஓரங்க நாடகம், நாட்டிய நாடகம், மொழி பெயர்ப்பு நாடகம், வரலாற்று நாடகம், சமூக நாடகம் போன்றவை நாடக வகைகளாகும். நாடக சபைகள் நாடக வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளன.
12. மருத்துவ முறைகளைத் தமிழர்கள் நன்குணர்ந்தனர் என்பதற்கு இலக்கியங்களும், கல்வெட்டுகளும் சான்றுகளாக உள்ளன. சமயவாதிகளும், சித்தர்களும் மருத்துவர்களாக விளங்கியுள்ளனர்.

## குறிப்பு

…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….

## அலகு – 3

## சமயங்கள்

### பாடக்கருத்தலகுகள்

3.0. நோக்கம்

3.1. முன்னுரை

3.2. சைவ சமயம்

3.2.1. சைவமும் கலைகளும்

3.2.2. சைவமும் இலக்கியமும்

3.2.3. சைவமும் இல்லறமும்

3.2.4. சைவமும் பெண்களும்

3.2.5. சைவமும் சாதியும்

3.2.6. அன்பு நெறியில் சைவம்

தன்மதிப்பீடு – 1

3.3. வைணவ சமயம்

3.3.1. பாகவத மதம்

3.3.2. தமிழ் நாட்டில் வைணவம்

3.3.3. ஆழ்வார்களின் பாடுபொருள்

3.3.4. ஆழ்வார் பாசுரங்களில் தத்துவம்

3.3.5. வைணவ வளர்ச்சியில் ஆச்சாரியர்கள்

3.3.6. வைணவத்தமிழ்

தன்மதிப்பீடு – 2

3.4. சமண சமயம்

3.4.1. சமணப் பிரிவுகள்

3.4.2. சமண வளர்ச்சியும் வீழ்ச்சியும்

3.4.3. சமணம்–சைவம்–பொதுக்கூறுகள்

3.4.4. சமணரின் தமிழ்த்தொண்டு

தன்மதிப்பீடு – 3

3.5. பௌத்த சமயம்

3.5.1. பௌத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

3.5.2. இந்து சமயத்தில் பௌத்தம்

3.5.3. கோயில்களில் மாற்றம்

3.5.4. தமிழும் பௌத்தமும்

தன்மதிப்பீடு – 4

**3.6.** இசுலாம் சமயம்

**3.6.1.** இசுலாமின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

**3.6.2.** தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இசுலாம்

**3.6.3.** தமிழ்ச் சொற்களின் இசுலாமிய மொழிப்பதிவுகள்

தன்மதிப்பீடு **– 5**

**3.7.** பகுத்தறிவு இயக்கம்

தன்மதிப்பீடு **– 6**

**3.8.** தொகுப்புரை

## அலகு – 3

## சமயங்கள்

### 3.0. நோக்கம்

- ❖ தமிழகத்தில் நிலவிய பண்டைய சமயங்கள் குறித்து அறிந்து கொள்ளுதல்.
- ❖ சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயத்தின் பிரிவுகள் குறித்தும், இலக்கியங்கள் மற்றும் கலை வளர்ச்சியில் சைவத்தின் பங்கு குறித்தும் உணர்ந்து கொள்ளுதல்.
- ❖ வைணவ சமயத்தை ஆழ்வார்களும், ஆச்சாரியர்களும் இலக்கியங்களின்வழி வளர்த்த முறையினைத் தெரிந்து கொள்ளுதல்.
- ❖ சமணர்களின் பிரிவினரையும், சமணக் கொள்கைகளையும், தமிழ்த் தொண்டினையும் அறிதல்.
- ❖ பௌத்தர்களின் சமயம் சார்ந்த இலக்கியங்களையும் இந்து சமயத்தில் பௌத்தர்களின் செல்வாக்கையும் உணர்ந்து கொள்ளுதல்.
- ❖ தமிழகத்தின் இசுலாமியரின் ஆதிக்கத்தையும், பண்பாட்டு வளர்ச்சியினையும் தெரிந்து கொள்ளுதல்.
- ❖ கடவுள்–சமயம்–மொழி இவற்றைக் கடந்தது பகுத்தறிவு என்பதை உணர்தல்.

### 3.1. முன்னுரை

தமிழகத்தில் பல்வேறு சமயங்கள் பரவி இருந்தன. அவை ஒவ்வொன்றும் தம் மதக் கொள்கைகளைத் தமிழகத்தில் நிலைநாட்டின. சிவன், திருமால், முருகன், பலராமன், கொற்றவை போன்ற தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. சமணமும் பௌத்தமும் பரவியபோது வைதீகர்கள் இச்சமயங்களை எதிர்த்துள்ளனர். எதிர்ப்புகளை மீறித் தத்தமது சமயங்களை வளர்ப்பதற்குத் தமிழ் இலக்கியங்களைப் படைத்தனர். அந்த வகையில் சைவம், வைணவம், பௌத்தம், சமணம், இசுலாமியம் போன்ற சமயங்கள் தமிழகத்தில் புகுந்த நிலையினையும், அவற்றின் செயல்பாடுகளையும் இனிக் காண்போம்.

### 3.2. சைவ சமயம்

சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டது சைவ சமயமாகும். இதனைப் பழமையான சமயம் என்பர் ஆராய்ச்சியாளர். ஆரியர் வருகைக்கு முன்பே சிவவழிபாடு இருந்தது என்று தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். ஆரியர்கள் சிவபெருமானைச் **சிசினதேவர்** என்று இழிவாகக் குறிப்பிட்டுள்ளதால், சிவன் திராவிடர் தெய்வம் என்பது புலப்படுகிறது. **சிவ** என்னும் சொல்லாராய்ச்சியின் முடிவும் சிவனைத் தமிழ்க் கடவுள் என்றே கூறுகிறது.

- ❖ தொல்காப்பியத்தில் சிவனைப்பற்றிக் குறிப்பிடாததற்குக் காரணமாக, அவர் நானில மக்களுக்கும் பொதுவான முதற்கடவுள் என்கின்றனர்.
- ❖ இக்கருத்தினைச் சங்க நூல்களும், சிலம்பும், மணிமேகலையும் நிறுவுகின்றன.

> ''ஏற்றுவல னுயரிய எரிமருள் அவிர்சடை
>
> மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்'' (புறநானூறு – 56)

என்ற சங்கப்பாடல் சிவபெருமானையே முதற்கடவுளாகக் கூறுகிறது.

- ❖ சிலப்பதிகாரம் **பிறவாயாக்கைப் பெரியோன்** என்றும், மணிமேகலை **நுதல்விழி நாட்டத் திறையோன்** என்றும் கூறுகிறது. எனவே அக்காலத்தில் சிவபெருமானே முதற்பெருங்கடவுள் என்பதை அறியலாம்.
- ❖ சிவபெருமானின் பல்வேறு சிறப்புக்கள் சங்க இலக்கியத்தில் கூறப்படுகின்றன.

"முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே" (புறநானூறு – 6)

"ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை

மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்" (புறநானூறு – 56)

மேலும் புறம்: 55, 166, 198 பாடல்களாலும், திருமுருகாற்றுப்படை 151–154 வரிகளாலும், மதுரைக்காஞ்சி 453–455 வரிகளாலும் சிவபெருமான் மூன்று கண்களை உடையவர் என்பதும், மூன்று மதில்களை அழித்தவர் என்பதும், ஐம்பூதங்களைப் படைத்தவர் என்பதும், சடாமுடியினைத் தரித்தவர் என்பதும், நஞ்சு உண்ட கழுத்தினை உடையவர் என்பதும் அறியப்படுகின்றன.

- ❖ சங்க நூல்களுக்கு வாழ்த்துச் செய்யுள் பாடிய பெருந்தேவனாரும் சிவபெருமானின் பல்வேறு இயல்புகளை (புறநானூறு–1) எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் சில விளக்கங்களை அகநானூற்று வாழ்த்துச் செய்யுளில் கூறியுள்ளார்.
- ❖ சைவ வழிபாடு பல்லவர் காலத்திற்கு முன்பே தோன்றியது. சங்க காலத்திற்குப் பிறகு சைவம் வேத நெறியைத் தழுவி புத்துயிர் பெற்றது.
- ❖ இச்சமயத்திற்கு 63 நாயன்மார்கள் பெருந்தொண்டு புரிந்தனர். சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் ஊரூராகச் சென்று சிவனை ஆடியும் பாடியும் வணங்கினர். இவர்களின் செயலால் தமிழகமே சைவத்திற்குள் வந்தது. பல்லவ மன்னர்கள் பலர் சைவராக மாறினர். சமணமும் பௌத்தமும் சைவ வைணவத்தின் ஆற்றலால் நலிவுற்றன.
- ❖ இக்காலத்தில் சைவத்தில் பல பிரிவுகள் தோன்றின. பைரவர், கபாலிகள், களாமுகர், பாசுபதர் என்னும் பிரிவினர் இருந்தனர்.
- ❖ பல்லவர்கள் சைவராக மாறினர். அவர்கள் கத்துவாங்கம் எனும் சின்னத்தை முடிசூடும் பொழுது அணிந்தும், நந்தி இலச்சினையும் கொண்டிருந்தன. அவர்கள் கோயிலுக்கு நிலங்கள் பல தந்தும், பல கோயில்களைக் கட்டியும் உள்ளனர்.
- ❖ பாண்டிய மன்னரும் சைவத்தினைப் போற்றி, சோமசுந்தரப் பெருமானைத் தமது குலதெய்வமாகக் கொண்டனர்.
- ❖ கி.பி.9 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையில் விசயாலயன் வழியினரும், சாளுக்கியச் சோழரும் தென்னகத்தில் ஆட்சி நடத்தினர். இக்காலம் சைவத்தின் பொற்காலம் ஆகும். சோழர்கள் சைவத்தை அரசாங்கச் சமயமாகவே மாற்றினர். அரசர்கள் மட்டுமின்றி குந்தவை, செம்பியன் மாதேவி போன்ற அரச குடும்பப் பெண்களும் கோயில் திருப்பணியில் ஈடுபட்டனர். கோயில்களில் தேவாரம், திருவாசகம் போன்றவை பாடப்பட்டன.
- ❖ முதலாம் இராசராசன் தில்லையிலிருந்த மூவர் தேவாரங்களையும் ஏழுத் திருமுறைகளாகத் தொகுத்து வெளியிட்டான்.

- ❖ தமிழகத்தில் மட்டுமின்றி ஈழம், கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய கடல் கடந்த நாடுகளிலும் சைவம் பரவ சோழர்களே காரணமாகியிருந்தனர். இவர்கள் சைவத்தின் காவலர்களாக விளங்கினர்.

**3.2.1. சைவமும் கலைகளும்**

- ❖ சைவ சமயம் கலைகளைப் போற்றிய சமயமாகும்.
- ❖ தேவாரப் பாடல்கள் தமிழிசைக் களஞ்சியமாகத் திகழ்கின்றன. பக்தி நெறிக்கு இசைக்கலையே கருவியாக விளங்கியது.
- ❖ நாயன்மார்கள் செல்லுமிடமெல்லாம் இசைவெள்ளம் புரண்டோடியது. எனக்கு 'அருச்சனை பாட்டேயாகும்' என்று சிவபெருமான் சுந்தரரிடம் கூறியதையும், பலசோதனைகளை ஏற்படுத்தி நாயன்மார்களிடமிருந்து இசையோடு கூடிய பதிகங்களைச் சிவபெருமான் கேட்டார் என்றும் சேக்கிழார் கூறியுள்ளார்.
- ❖ சமயத் தொடர்பான நாடகங்களும், கூத்துக்களும், கோயில்களில் நடிக்கப்பட்டன.
- ❖ தமிழகச் சிவன் கோயில்கள் வெறும் சமயச் சின்னங்களாக மட்டுமில்லாமல் கலைச் சின்னங்களாகவும் நிற்கின்றன.
- ❖ சிவனுடைய பல்வேறு மூர்த்தங்களையும் கல்லிலும், செம்பிலும், பஞ்சலோகத்திலும், கோபுரங்களிலும், தூண்களிலும், சுவர்களிலும் சிலைகளை வடித்து வைத்தனர். வண்ண ஓவியங்கள் பலவற்றைத் தீட்டினர்.
- ❖ சமயம் கலைகளின் வளர்ப்புத் தாயாக விளங்கியது.

**3.2.2. சைவமும் இலக்கியமும்**

- ❖ சைவம் தமிழுக்குச் செய்த இலக்கியப் பணி அளவிடற்கரியதாகும்.
- ❖ காரைக்காலம்மையார் முதன் முதலில் பதிகப் பாடல்களைப் பாட, அவரைத் தொடர்ந்து சம்பந்தர் (1,2,3–திருமுறைகள்), அப்பர் (4,5,6–திருமுறைகள்), சுந்தரர் (7–ஆம் திருமுறை) ஆகிய மூவரும் ஆயிரக்கணக்கான பதிகங்களைப் பாடினர்.அவற்றுள் பல அகப்பொருட் சுவை கொண்டு விளங்குகின்றன.
- ❖ முதல் ஏழு திருமுறைகள் அன்பே தமிழர் சமயம் என்ற உண்மையைக் காட்டி நிற்கின்றன.
- ❖ தமிழர் பத்தித் திறத்தைக் காட்டுவதாக மாணிக்கவாசகப் பெருமான் இயற்றிய திருவாசகம் (8ஆம் திருமுறை) விளங்குகிறது. இதனைப் போப் பாதிரியார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- ❖ ஒன்பது சான்றோர் பாடிய ஒன்பதாம் திருமுறையினைத் திருவிசைப்பா என்று கூறுவர்.
- ❖ திருமூலர் இயற்றிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகும். இது சைவ சித்தாந்தத்தின் சிறப்பினையும், யோகத்தையும், பல்வேறு நூதன முறைகளையும் எடுத்துரைக்கிறது. இதில் 3000 பாடல்கள் இடம் பெறுவதுடன், உடலோம்பல், அன்புடைமை, ஈகை, புலால் மறுத்தல் முதலிய அறங்கள் பற்றியும் கூறுகின்ற திருமுறையாகும்.
- ❖ பதினொருவர் பாடிய பல நூல்களின் தொகுப்பு பதினோராந் திருமுறையாகும். இதில் காரைக்காலம்மையார், சேரமான்பெருமாள், நக்கீரதேவர், கபிலதேவர், பரணதேவர், கல்லாடதேவர், அதிரா அடிகள், இளம்பெருமானடிகள்,

ஐயடிகள்காடவர்கோன், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பிகள் ஆகியோர் உள்ளனர்.

- ❖ இரட்டைமணிமாலை, உலா, கலம்பகம், திருமறம், மாலை, திருவெழுகூற்றிருக்கை, ஏகாதசமாலை, ஒருபா ஒருபஃது போன்ற புதிய இலக்கிய வகைகள் இத்தொகுப்பில் உள்ளன.
- ❖ திருக்கைலாய ஞான உலா, ஆதியுலா எனச் சிறப்பிக்கப்படுகிறது.
- ❖ பன்னிரண்டாம் திருமுறையாக விளங்குவது 63 நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுவதாகச் சேக்கிழாரால் பாடப்பட்ட பெரியபுராணம் அமைகிறது.
- ❖ சிவனின் திருவிளையாடல்களைக் கூறும் பல புராணங்களும், பிற்காலத்தில் பல தலபுராணங்களும் தோன்றின. இவற்றில், பரஞ்சோதி முனிவரின் **திருவிளையாடற் புராணம், திருபரங்கிரிப் புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடற் புராணம்** ஆகியவை குறிப்பிடத்தக்கன.
- ❖ திருமுறைகள் பன்னிரண்டும் **தோத்திரங்கள்** எனப்படும். சைவ சமயத்தின் தத்துவங்களைக் கூறும் பல நூல்கள் தோன்றின. இந்நூல்கள் **சாத்திரங்கள்** எனவும் அழைக்கப்படும்.
- ❖ **சிவஞானபோதம்** 12 சூத்திரங்களில் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளை விளக்குகின்றன. இதன் ஆசிரியர் மெய்கண்ட தேவராவர். இவை தவிர **சிவஞான சித்தியார், திருவுந்தியார், திருக்களிற்றுப்பாடியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்** போன்றவை சாத்திர நூல்களாகும்.
- ❖ சைவ சமயம் மடங்களையும் தந்துள்ளன. குமரகுருபரர் திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம் ஆகிய இடங்களில் சைவ மடங்களை நிறுவினார்.
- ❖ மடங்களும், கிளை மடங்களும் சைவ நூல்களைப் பாதுகாத்து வருகின்றன.
- ❖ மாதவச் சிவஞான யோகிகள், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, உ.வே. சாமிநாதய்யர் போன்றோர் இம்மடங்களில் இருந்து தமிழை வளர்த்தனர்.

### 3.2.3. சைவமும் இல்லறமும்

- ❖ இல்லறத்தைப் போற்றிய தமிழகத்தில் சமணர்கள் இளமைத் துறவைப் பரப்பினர்.
- ❖ அதன் காரணமாகச் சைவப் பெரியோர்கள் இல்லறத்தைக் காக்க, துறவிகள் மட்டுமில்லாமல் இல்லறத்தாரும் இறைவனிடம் அன்பு கொள்ள வலியுறுத்தினர். அவர்கள் இறைவனையே அம்மையப்பராகக் கண்டனர்.
- ❖ உலக வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் இல்லற நெறியே அடிப்படை என்பதை விளக்கிட இறைவனே அவ்வாறு இருப்பதாக,

> ‘‘பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
> விண்பாலி யோகெய்தி வீடுவர்காண்’’

என்று மாணிக்கவாசகர் கூறுகிறார்.

- ❖ சம்பந்தர் மணக்கோலத்தில் சிவ சோதியில் கலந்ததும், சுந்தரருக்குச் சிவபெருமானே திருமணம் நடத்தி வைத்ததும் இல்லறத்திற்குச் சான்றாக விளங்குகிறது.

### 3.2.4. சைவமும் பெண்களும்

- ❖ சமணர்கள் பெண்களை இழிவு செய்து, அவர்களை வீடுபேற்றிற்குத் தடையாவர் என்றும் கூறினார்.
- ❖ ஆனால், சைவம் பெண்ணை உயர்வு செய்து, பெண்களுக்கும் வீடுபேறு உண்டென்றது.
- ❖ காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசி, பிற நாயன்மார்களின் மனைவிகள் போன்றோர் வீடுபேறு அடைந்தனர்.

### 3.2.5. சைவமும் சாதியும்

- ❖ நாயன்மார்கள் சமூகத்தில் சாதியாலும் குலத்தாலும் ஏற்பட்ட தீய விளைவுகளைக் கண்டு வருந்தினர். அவர்கள் இறைவன் பிள்ளைகளுக்குள் எவ்வித வேற்றுமையும் இல்லை என்று எடுத்துரைத்தனர்.
- ❖ அப்பர்,

  ''சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்!

  கோத்திரமும் குலமும்கொண் டென்செய்வீர் ?

  பாத்திரம் சிவமென்று பணிதிரேல்

  மாத்திரைக்குள் அருளுமாற் பேறரே''

  என்றும், சம்பந்தர்,

  ''குலவராக குலமிலரு மாககுணம் புகலுங்கால்

  உலகில் நல்ல கதிபெறுவர்''

  என்றும் கூறி இறைவன் அனைவருக்கும் நன்மை செய்வார் என்பதை விளக்குகின்றனர்.
- ❖ நாயன்மார்கள் அனைவரும் சாதியைப் பாராட்டவில்லை.
- ❖ மன்னர் முதல் பறையர் ஈறாக அனைவரையும் போற்றித் திருத்தொண்டத் தொகையைப் பாடியுள்ளார் சுந்தரர். இவர் கணிகை, வேளாண் குலப்பெண் ஆகிய இருவரையும் மணந்தார்.
- ❖ சிவநேசர் என்னும் வணிகர் தமது பெண்ணை மணக்க வேண்டும் என அந்தணராகிய சம்பந்தரை வேண்டியதும், அந்தணராகிய அப்பூதியார் வேளாளரான அப்பரைத் தன் கடவுளாகவே மதித்தார் என்பதும், நமிநந்தியடிகள் புலையராகிய திருநீலகண்டரும் அவர் துணைவியாரும் தம்மில்லத்தில் தங்க ஏற்பாடு செய்தார் என்பதும் சைவ சமயம் சாதி வேறுபாடற்றச் சமயமாக இருந்தது என்பதைப் புலப்படுத்துகிறது.

### 3.2.6. அன்பு நெறியில் சைவம்

- ❖ அன்பே சிவம் என்பது சைவத்தின் உயிர் நாடிக் கொள்கை என்பதை,

  ''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்

  அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே!''

என்ற பாடல் மூலம் விளக்குகிறார் திருமூலர். பிறர்துன்பம் கண்டு உதவுவதே சமய நெறியாகும். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதையும் வலியுறுத்தினார்.

- ''தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்கிறார் அப்பர். மேலும், வஞ்சனையும் வன்சொல்லும் கூடாது என்பதை,

''வஞ்சமின்றி வணங்குமின் வைகலும்

வெஞ்சொலின்றி விலங்குமின் வீடுற''

என்ற பாடல் மூலம் விளக்குகிறார்.

- சைவ சமயம், தமிழருடைய அடிப்படைப் பண்பாட்டைக் காத்ததோடு, தமிழ்க் கலைகளையும் வளர்த்து, தமிழர் நாகரிகத்தை வளப்படுத்தி வாழவைத்துள்ளது எனலாம்.
- உயர்ந்த குறிக்கோள் ஒன்றை அடைவதற்காக எதையும் தியாகம் செய்யலாம் என்ற உறுதிப்பாட்டை வலியுறுத்துவதாகப் பெரியபுராணம் கூறுகிறது.

**தன்மதிப்பீடு – 1**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. சைவமும் கலைகளும் குறித்து எழுதுக.
2. சைவம் அன்பு நெறியை எங்ஙனம் வலியுறுத்துகிறது ?
3. சைவ இலக்கியங்கள் குறித்து எழுதுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. சிவபெருமானின் சிறப்புகளைச் சங்க இலக்கியம் கொண்டு நிறுவுக.
2. பன்னிரு திருமுறைகள் – விவரிக்க.

### 3.3. வைணவ சமயம்

திருமாலை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம் ஆகும். வடவர் திருமாலை 'விஷ்ணு' என்று கூறுவர். இதனடியாகப் பிறந்ததே வைஷ்ணவம் ஆகும். இதனைத் தமிழில் வைணவம் என்பர். சங்க இலக்கியங்களில் திருமால் பற்றிய பல புராணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. மேலும், சிலம்பில் திருமாலின் கிருஷ்ணாவதாரம், இராமாவதாரம், திரிவிக்கிரமவதாரம், பலராம அவதாரம் முதலியன இடம் பெற்றுள்ளன.

#### 3.3.1. பாகவத மதம்

- வைணவத்தின் தாயகம் தமிழகம் என்று கூறினாலும், அது வடநாட்டவருடையது என்ற கருத்துடையவர்களும் உள்ளனர்.
- வைணவ சமய வரலாற்றினை ஆய்ந்த பி.வி. இராமாநுசம் என்பார், 'பெரும்பான்மையான ஆன்மீகக் கருத்துக்கள் வடக்கிருந்து வந்தன என்றும், வைணவத்துக்கு வேர் வடபுலத்தில் உள்ளது என்றும், வடமொழி வேதத்தில் விஷ்ணு தலைமை இடம் பெறவில்லையாயினும் அவருக்குரிய வணக்கப் பாடல்கள் என்றும், அவருடைய திருவடிகள் **பரமபதம்** என்று குறிக்கப்பட்டது' என்றும் கூறுகிறார்.

- ❖ சமண பௌத்தர்கள் முத்தியைப் பெறுவதற்கு அறத்தையும் ஒழுக்கத்தையும் காட்ட, வாசுதேவ சமயத்தினர் கடவுளிடம் பக்தி செலுத்துதலே முத்தி பெறுவதற்குரிய வழியாகும் என்றனர். எனவே வாசுதேவ மதமே **சாத்துவ மதம்** (அ) **பாகவத மதம்** என்று பெயர் பெற்றது என்பர் இராமாநுசம்.
- ❖ கி.பி. 4ஆம் நூற்றாண்டில் குப்தர் ஆட்சிக் காலத்தில்தான் பாகவதம் சிறப்புற்றது என்பர் திரு.பி.வி. இராமன்.

### 3.3.2. தமிழ் நாட்டில் வைணவம்

- ❖ கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பாகவத மதம் இருந்தது என்பதற்குப் பரிபாடலில் வாசுதேவன் நாராயணனோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளது சான்றாகும்.
- ❖ திருமாலின் பல இயல்புகள் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.
- ❖ நீலமணி போன்றவன், கருடக் கொடியை உடையவன், ஓணநாளில் பிறந்தவன், அவுணர்களை அழித்தவன், ஈரடியால் மூவுலகையும் அளந்தவன், காத்தல் தொழிலைச் செய்பவன், பாம்பணையில் பள்ளி கொள்பவன், நான்முகனைத் தன் உந்தியிடத்துத் தோற்றுவித்தவன் என்று பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை ஆகியவை குறிப்பிடுகின்றன.
- ❖ பரிபாடலில் 1, 2, 3, 4, 13, 15 ஆகிய எண்ணுள்ள பாடல்கள் திருமாலுக்கு உரியன.

  "செங்கண் காரி, கருங்கண் வெள்ளை

  பொன்கண் பச்சை பைங்கண் மாஅல்"

  என்ற அடிகளில் வாசுதேவன், சங்கருடணன், காமன், அநிருத்தன் என்னும் நான்கு வியூக அவதாரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவதாரங்களும், புராணங்களும் பரிபாடலில் குறிக்கப்பட்டுள்ளன.
- ❖ சிலம்பில் திருமாலின் இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும் பாராட்டப்படுகின்றன. ஆய்ச்சியர் குரவை திருமாலின் பெருமைகள் பலவற்றைக் குறிப்பிடுகிறது.
- ❖ இராமன் இலங்கையினை அழித்ததும், சோ என்னும் அரசனை அழித்ததும், தாதை ஏவலின் தம்பியொடும் கானகம் சென்றதும், 'நாராயணாய நம' என்னும் எட்டெழுத்து மந்திரத்தினை மாங்காட்டு மறையோன் பேசுவதும், திருவரங்கத்திலும், அழகர் மலையிலும், திருவேங்கடத்திலும் திருமால் குடிகொண்டிருப்பதாகக் கூறுவதும், மாதவியின் பதினோராம் பாடல்களில் குடக்கூத்து, பேடு, மல்லாடல், பாண்டரங்கம் முதலியன கண்ணனுக்குரியவையாகும் என்று கூறப்படுவதும் சிலப்பதிகாரக் காலத்தில் திருமால் வழிபாடு நன்கு வேரூன்றியிருந்தது என்பதை அறியலாம்.

### 3.3.3. ஆழ்வார்களின் பாடுபொருள்

- ❖ பன்னிரு ஆழ்வார்களும் திருமால் நெறியினை இன்னிசையோடு பரப்பினர். இவர்களில் 108 தலங்களையும் கண்டு பாடியவர் திருமங்கை மன்னர் ஆவார்.
- ❖ பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துத் தன்னைத் தாயாக நினைத்துப்பாடுகின்றார்.

- ❖ குலசேகராழ்வார் தயரதனாகவும், கோசலையாகவும் தன்னைப் பாவித்துக் கொண்டு இராமன் காட்டுக்குச் சென்றதை நினைத்துப் புலம்புகின்றார்.
- ❖ ஆண்டாள் கண்ணனைக் கணவனாகப் பெறுவதற்குக் கனாக் காண்கின்றாள்.
- ❖ திருமங்கையாழ்வார் மடலேறும் பெண்ணாக உருமாறுகின்றார்.
- ❖ நம்மாழ்வாரின்பாடல்கள் நான்மறைகளாகவும், திருமங்கையாழ்வாரின் பாடல்கள் ஆறு அங்கங்களாகவும் போற்றப்படுகின்றன.
- ❖ சிம்ம விஷ்ணு, நரசிம்மவர்மன் போன்ற பல்லவப் பெருவேந்தர்கள் சிறந்த வைணவர்களாக இருந்து அச்சமயத்தை வளர்த்தனர்.
- ❖ முதலாழ்வார்களிடத்தில் சைவம், வைணம் என்ற காழ்ப்புணர்ச்சி இல்லை.
- ❖ ஆழ்வார்களின் தொண்டும், மன்னர்களின் ஆதரவும் வைணவத்திற்கு ஊக்கமளித்தன.

### 3.3.4. ஆழ்வார் பாசுரங்களில் தத்துவம்

- ❖ ஆழ்வார்கள் மக்களில் தலைதூக்கி நிற்பது ஆண்டான் அடிமையுணர்ச்சியே ஆகும். இதனை வடவர் **தாசபாவம்** என்பர்.
- ❖ நம்மாழ்வார் இறைவனுக்கு அருகிலிருப்பது வீடு பேற்றிலும் மேலானது என்கிறார். இக்கருத்து பெரியாழ்வாரிடம் தாய் மகன் உறவாக நின்றது.
- ❖ நம்மாழ்வாரும், திருமங்கையாரும் இதனையே காதலன்–காதலி உறவாக நினைத்தனர்.
- ❖ பாசுரங்கள் அவனன்றி ஆன்மாவுக்கு நிலைபேறில்லை என்பதை நிலைநாட்டியது.
- ❖ ஆழ்வார்களின் பாடல்கள் உணர்ச்சியையே உயிராகக் கொண்டுள்ளதால் அவற்றில் அறிவு வழிபட்ட தத்துவங்களைத் தேட முடியாது. எனினும் அவற்றில் அடிப்படையான தத்துவங்கள் விரவிக் கிடக்கின்றன.

### 3.3.5. வைணவ வளர்ச்சியில் ஆச்சாரியர்கள்

- ❖ சோழர் காலத்தில் வைணவம் செல்வாக்குப் பெற்றது. அக்காலத்தில் **நாதமுனிகள்** ஆழ்வார் பாசுரங்களைத் தொகுத்தார். இவர் நம்பியாண்டார் நம்பிக்கு இணையாவார்.
- ❖ கி.பி.பத்தாம் நூற்றாண்டு வைணவ சமய வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.
- ❖ ஆச்சார்யர்களில் முதல்வரான நாதமுனிகள் தென்னார்க்காடு மாவட்டம், வீரநாராயணபுரத்தில் தோன்றியவர். நம்மாழ்வாரிடத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். **நியாய தத்துவம்** எனும் நூலை எழுதியவர் ஆவார். யோக இரகசியமும் எழுதினார்.
- ❖ அடுத்து, நாதமுனிகளின் பேரரான **யமுனாச்சாரியார்** என்னும் ஆளவந்தாராவார். இவர் இராமமிசிரரின் மாணாக்கராவார். **சித்தித்திரையம், ஆகமப் பிராமணீயம், கீதார்த்த சங்கிரகம், மகாபுருட நிர்ணயம், தோத்திர ரத்தினம்** முதலிய பல நூல்களை எழுதியுள்ளார்.
- ❖ வைணவ ஆச்சார்யர்களில் தனிச்சிறப்புக்கு உரியவர் **இராமாநுசராவார்.** காஞ்சியிலிருந்த யாதவப் பிரகாசரின் மாணாக்கர் இவர். யமுனாச்சாரியின் மாணாக்கர் பெரிய நம்பியிடம் பயின்றார். நாடு முழுதும் சுற்றினார்.

பிரம்மசூத்திரத்திற்கு இவர் எழுதிய ஸ்ரீ பாஷ்யம் புகழ்மிக்கதாகும். **வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகம், வேதாந்த தீபம், கீதைக்கு விளக்கம்** ஆகியவை இவர் எழுதிய வேறு நூல்களாகும்.

- இராமாநுசர் காலத்தில் தெலுங்கு நாட்டில் நிம்பபுரத்தில் தோன்றியவர் **நிம்பார்க்கர்.** இவர் கண்ணன் வழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர். கடவுள், உயிர், உலகம் மூன்றும் ஒரே சமயத்தில் ஒன்றாகவும் வேறாகவும் உள்ளன என்பது இவர் கோட்பாடாகும். இவர் பிரம்ம சூத்திரத்திற்கு உரையெழுதியதோடு **தசசுலோகி** எனும் நூலையும் இயற்றினார்.
- வைணவத்தின் வரலாற்றில் சிறப்பிடம் பெறுவோருள் **மாத்துவாச்சியாரும்** ஒருவர். இவருக்கு ஆனந்த தீர்த்தர், பூரண பிரச்சினர் என்ற வேறு பெயர்கள் உண்டு. பக்தியே ஈடேற்றமளிக்கும், இறைவனைக் காணமுடியும் என்பவை இவர் பரப்பிய கொள்கையாகும்.
- நாயக்க மன்னர்கள் வைணவத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டனர். திருவரங்கமும், திருப்பதியும் இவர்கள் காலத்தில் செல்வாக்குப் பெற்றன.
- 13, 14 ஆம் நூற்றாண்டுகளில் **வடகலை, தென்கலை** என இரண்டாக வைணவமானது பிரிந்தது.
- தென்கலை நெறிக்குத் தந்தை கி.பி. 1213 இல் தோன்றிய பிள்ளை லோகாச்சாரியார் ஆவார். இவர்கள் நாலாயிரத்தை வேதமாகப் போற்றினர்.

### 3.3.6. வைணவத்தமிழ்

- தமிழுக்கு வைணவம் தந்த கொடையில் முன்னிற்பவை ஆழ்வார் பாசுரங்களாகும்.
- **பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார், மதுரகவியாழ்வார், திருமங்கையாழ்வார், குலசேகரயாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள்** என்னும் பன்னிருவர் பாடியதே நாலாயிரத் திவ்ய பிரபந்தம்.
- பெரியாழ்வாரின் பாடல்களே பிள்ளைத் தமிழுக்கு வித்திட்டன.
- திருமங்கையாழ்வாரின் இரண்டு மடல்களும் தமிழுக்குக் கிடைத்த புத்திலக்கியங்களாகும்.
- பல்லவர் காலத்தில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாரத வெண்பா எழுந்தது. அதற்குப் பழைய உரையொன்றும் உண்டு.
- வைணவம் தமிழுக்குத் தந்த கொடைகளில் தனிச்சிறப்பு மிக்கது கம்பராமாயணமாகும்.
- வில்லிபுத்தூராரின் பாரதம் இன்னொரு பேரிலக்கியமாகும்.
- பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் **மணவாளதாசர்** என்றும் அழைக்கப்படுகிறார். இவரின், **அழகர் அந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்து மாலை, திருவரங்கத்து ஊசல், திருவேங்கடத்தந்தாதி** எனும் நூல்கள் அட்டப்பிரபந்தங்கள் என அழைக்கப்படும்.
- **அரிதாசர்–இருசமய விளக்கத்தையும், குருகைப் பெருமாள்–மாறன் அலங்காரத்தையும்** அதன் உரையும் எழுதியுள்ளார்.
- கண்ணனுடைய முழு வரலாற்றைப் பற்றி மூவர் பாடியுள்ளனர். அவை:

1. ஆரியப்புலவர் – 4970 விருத்தங்களையுடைய பாகவத புராணம்

2. அருளாளதாசர் – 9151 செய்யுள்களைக் கொண்ட வாசுதேவ கதை

3. செவ்வைச் சூடுவார் – விண்டுபாகவதம்

- **திருவரங்கத்தமுனார்–இராமாநுச நூற்றந்தாதியையும், நாதமுனிகள்–யோக ரகசியம், நியாயத்தத்துவத்தையும்**, 13 ஆம் நூற்றாண்டினரான **ஸ்ரீபட்டர்–சகஸ்ர நாம பாடியம், அட்டசுலோக வியாக்கியானத்தையும்** பாடினார்.
- **வேதாந்த தேசிகர்** பாதுகா சகஸ்திரம், அத்திகிரி மான்மியம், பரமதபங்கம், ஸ்ரீவைணவ தினசரி அடைக்கலப்பத்து, நவரத்தின மாலை, திருச்சின்னமாலை, கீதார்த்த சங்கிரகம், பிரபந்தசாரம், மும்மணிக்கோவை, அர்த்த பஞ்சகம், பரமபத சோபானம், திருமந்திரச் சுருக்கு, பன்னிரு நாமம், பதினேழு ரகசியம், அமிருதரஞ்சனி எனும் நூல்களை இயற்றினார்.
- **பின்பழகிய சீயர்** குருபரம்பரைப் பிரபாவம், திருவாய்மொழிக்கு 9000 படியை வகுத்தார்.
- **பிள்ளைலோகாச்சாரியர்** அட்டரகசியம் என்னும் 18 தத்துவ நூல்களை இயற்றினார். மேலும், நவரத்தின மாலை, பரந்தபடி, ஸ்ரீயப் பதிப்படி, அர்த்த பஞ்சரம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.
- **பிள்ளை லோகாச்சாரிய சீயர்** என்பவர் இராமாநுச திவ்வியசூரி சரிதை, உபதேசத் திருநாமம், யதீந்திரப் பிரணவப் பிரபாவம், அந்தாதிப் பிரபந்தவுரை, இராமாநுச நூற்றந்தாதியுரை, திருமந்திரார்த்தவுரை, நாலாயிரத் தனியன்கள் உரை, திருவாய்மொழி நூற்றந்தாதி உரை என்னும் நூல்களையும் எழுதியுள்ளார்.
- வைணவர்கள் மணிப்பிரவாள நடையைப் போற்றினர். திருவாய் மொழிக்கு எழுந்த உரைகள் இந்நடையில் அமைந்தவையே.
- **ஆளவந்தார்** திருவாய்மொழிக்கு உரையெழுதிய முதல்வராவார். இவர் ஆகமப்பிரமாணம், ஆத்துமசித்தி, ஈச்சுரசித்தி என்னும் நூல்களை எழுதினார்.
- **திருக்குருகைப் பெருமாள்** 6000 படியை எழுதினார். **நஞ்சீயர்** 9000 படியுரையின் ஆசிரியர். இவர் கண்ணினுட்சிறுதாம்பு, திருப்பள்ளி எழுச்சி, பெரிய மொழி ஆகியவற்றிற்கு உரை எழுதியுள்ளார்.
- **நம்பிள்ளை** திருவாய்மொழிக்கு 9000 படி உரை எழுதியதோடு திருப்பள்ளியெழுச்சி விருத்தம், பெரிய திருமொழி ஆகியவற்றிற்கு உரையும், நம்பிள்ளை இரகசியம் எனும் நூலையும் இயற்றியுள்ளார்.
- **அழகிய மணவாள சீயர்** திருவிருத்த வியாக்கியானம், திருவாய்மொழி வியாக்கியானம், பன்னீராயிரப்படி, பகவத்கீதை வெண்பா ஆகியவற்றைப் பாடினார்.
- **பெரியவச்சான் பிள்ளை** 24000 படி உரையை எழுதினார். கலியன் அருளிப்பாடு, பரந்தபடி என்பனவற்றை எழுதினார். இவர் நம்பிள்ளையின் மாணவராவார்.
- நம்பிள்ளையின் இன்னொரு மாணவர் வடக்குத் திருவீதிப் பிள்ளை 36000 படியை எழுதினார்.

- ❖ இவர் மகன் **அழகிய மணவாளர்** திருப்பாவைக்கு 6000 படி உரையும், அமலனாதிபிரான், கண்ணினுட்சிறுதாம்பு ஆகியவற்றிற்கு விரிவுரையும், மாணிக்க மாலை, ஆச்சார்ய இருதய அருளிச் செயல் எனும் நூலும் எழுதினார்.
- ❖ மணவாள மாமுனிவர் 36000 படியை அனைவரிடமும் எடுத்துரைத்தார். இராமாநுச நூற்றந்தாதி உரை, ஸ்ரீ வசன பூஷணவியாக்கியானம், திருவாய்மொழி வியாக்கியானம், உபதேச இரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, திருவாராதனைக் கிரமம் ஆகிய நூல்களையும் இயற்றினார்.

**தன்மதிப்பீடு – 2**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. பாகவத மதம் – குறிப்பு வரைக
2. பன்னிரு ஆழ்வார்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. ஆழ்வார் பாசுரங்களின் தத்துவம் யாது ?
4. கண்ணனுடைய முழு வரலாற்றைப் பாடிய மூவர் யார் ?

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. தமிழ்நாட்டில் வைணவம் குறித்துக் கட்டுரை வரைக.
2. ஆழ்வார்களின் தமிழ்த் தொண்டை விவரிக்க.

### 3.4. சமண சமயம்

கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் வடக்கே உருவான சமணம் இரு நூற்றாண்டுகளுக்குப் பின் களப்பிரர் ஆட்சியினால் தமிழகத்தில் வளர்ச்சியுற்றது. பின்னர் நாயன்மார்களும் ஆழ்வார்களும் போற்றிய பக்தி நெறியால் நலிவுற்றது. எனினும் பௌத்தம் போலன்றி இன்றளவும் சிறுபான்மையோரின் சமயமாகச் சமணம் உள்ளது.

#### 3.4.1. சமணப் பிரிவினர்

- ❖ சமணத்திற்கு ஆருகதம், நிகண்டம், அநேகான்மவாதம் என்னும் பல பெயர்கள் உண்டு.
- ❖ சமணர்கள் **பிண்டியர்** எனவும் கூறப்படுகின்றனர்.
- ❖ சமணப் பெரியோர்கள் **தீர்த்தங்கரர்** என அழைக்கப்படுவர்.
- ❖ இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் உள்ளனர். இதில் மகாவீரர் இறுதித் தீர்த்தங்கரர் ஆவார்.
- ❖ வெள்ளுடை பூண்ட **சுவேதாம்பரர்**, ஆடையில்லாத **திகம்பரர்**, அருக மறைகளை வழிபடும் **ஸ்தானக வாசிகள்** என்னும் மூன்று பிரிவினர் உண்டு. தமிழகத்தில் அதிகமாகத் திகம்பரர்கள் இருந்தனர்.

#### 3.4.2. சமண வளர்ச்சியும் வீழ்ச்சியும்

- ❖ கிறித்துவுக்கு முன்னும் பின்னும் உள்ள சில நூற்றாண்டுகளில் சமணமானது தமிழகத்திற்குள் பரவத் தொடங்கியது.
- ❖ நந்திகணம், சேனகணம், சிம்மகணம், தேவகணம் என்னும் பல குழுவினர்கள் அடங்கிய சமண சங்கத்தின் மூலம் தங்கள் மதக்கொள்கைகளைச் சமணர்கள் பரப்பினர்.

- ❖ ஒவ்வொன்றிலும் கச்சை, அன்வயம் என்னும் உட்பிரிவுகள் இருந்தன. சம்பந்தர் பாடலின் மூலம் சமணர்கள் இருந்ததை அறியலாம்.
- ❖ கி.பி. 470 இல் **வச்சிரநந்தி** மதுரையில் திராவிடச் சங்கத்தை நிறுவினார். **யட்சி**, **கந்தியார்**, **ஆரியாங்கனை** என்னும் பெண் துறவிகளும் இருந்துள்ளனர்.
- ❖ சமணர்கள் தம் சமய நூல்களைப் படியெடுத்து இலவசமாக மக்களுக்குக் கொடுத்தனர்.
- ❖ உயிர்க்கொலை செய்யும் தொழிலைத் தவிர மற்ற தொழில்கள் அனைத்தையும் இவர்கள் போற்றியதால் அனைத்துப் பிரிவினரும் இவர்களை மதித்தனர்.
- ❖ முதலாம் மகேந்திரன், பாண்டியன் நின்றசீர் நெடுமாறன், முத்தரையர்கள் போன்றோர் சமணத்தைப் பாதுகாத்தனர்.
- ❖ திராவிடத் தெய்வங்களும், ஆரியக் கடவுளரும் ஒருவரே என்று வற்புறுத்திப் புராணங்கள் தோன்றின.
- ❖ தொண்டை நாட்டில் அப்பர் மனம் மாறியதால் மகேந்திரனும் மதம் மாறி, சமணக் கோயிலை இடித்தான். இதனால் தொண்டை நாட்டில் சமணமானது வீழ்ச்சியுற்றது.
- ❖ சோழ நாட்டில் சம்பந்தரின் மூலம் கூன் பாண்டியனும் மனம் மாறி சைவத்திற்கு வந்தான். பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்தப் பின், சம்பந்தர் சமணர்களுடன் அனல் வாதம், புனல் வாதம் செய்தார்.
- ❖ இதனால் எண்ணாயிரம் சமணர்கள் கழுவேற்றப்பட்டனர். இந்நிலையில் பாண்டிய நாட்டிலும் சமணமானது வீழ்ச்சியுற்றது.
- ❖ சமணத்தின் வீழ்ச்சிக்கு முதற்காரணம் அதன் கொள்கைகளாகும். துறவே வீடுபேறு அளிப்பது, இல்லறத்தாருக்கு அப்பேறு இல்லை. இளமைத்துறவு மேலானது, இளமை, செல்வம் முதலியவை நிலையில்லாதது, பெண்கள் வீடுபேற்றுக்குத் தடையாவார், அவர்கள் பாவப்பிறவிகள், பெண்டிர் ஆடவராய்ப் பிறக்க தவம் செய்ய வேண்டும், பின் அருகனின் உதவியால் வீடுபேறு அடையலாம் என்ற கொள்கைகளை அளவுக்கு மீறி வற்புறுத்தியதே அதன் வீழ்ச்சிக்குக் காரணமாகும்.
- ❖ திகம்பர சமணர்கள் ஆடையின்றி அழுக்கு உடம்போடு திரிந்தனர். பல் விளக்குவதும் இல்லை. இச்செயல்கள் தமிழகப் பண்பாட்டுக்கு ஒத்துவரவில்லை.
- ❖ சம்பந்தர், ‘‘உண்டு உடுக்கையின்றியே நின்று ஊர் நகவே திரிபவர்’’, ஊத்தை வாய்ச் சமண்கையர், குண்டு முற்றிக் கூறையின்றியே பிண்டமுண்ணும் பிராந்தர் என்று சமணர்களைத் தாழ்த்திக் கூறுகிறார்.
- ❖ தொண்டரடிப்பொடியாழ்வார்,

‘‘வெறுப்பொடு சமணமுண்டர் விதியில் சாக்கியர்கள் நின்பால்  
பொறுப்பரி யனகள் பேசிப் போவதே நோயராகிக்  
குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கே  
அறுப்பதே கருமங் கண்டாய் அரங்கமா நகருளானே’’

எனப் பாடுமளவுக்குப் புறச்சமயத் தாக்குதல்களில் சமணர்கள் ஈடுபட்டதும் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும்.

❖ மன்னர்களும் மதம் மாறிய காரணத்தால் சமணம் வீழ்ந்தது.

❖ தண்டியர்கள் திருவாரூர்ச் சமணர் பாழிகளையும் பள்ளிகளையும் இடித்துத் திருக்குளத்தை விரிவாக்கினர் என்று கூறப்படுகிறது.

### 3.4.3. சமணம்–சைவம்–பொதுக்கூறுகள்

❖ சமணர்களின் செல்வாக்கினால் புலால் உண்ணாமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை ஆகிய பண்புகள் தமிழரிடம் இடம் பெற்றன.

❖ கொடிய நோய், பெருந்துன்பம் இவை காரணமாக உண்ணாதிருந்து உயிர்விடுதல் சமணருலகில் **சல்லேகனை** எனப்படும். சங்ககாலத்தில் கோப்பெருஞ்சோழனும், பெருஞ்சேரலாதனும் வடக்கிருந்து உயிர் விட்டனர் என்பது சான்றாகிறது.

❖ சித்தர்களைப் பஞ்சபரமேட்டிகளில் ஒருவராக வணங்குவர் சமணர். இந்துக்களும் ஞானிகளைச் சித்தர் என்கின்றனர்.

❖ **அரிநமோத்து சித்தம்** என்று கூறிக் கற்கத் தொடங்குவது மரபு. பள்ளிக்கூடம் என்னும் சொல்லும் சமணர்களிடமிருந்து வந்ததேயாகும்.

❖ அரியையும் சிவனையும் இணைக்கும் வகையில் ஐயனார் வழிபாடு இந்துக்களிடம் உள்ளது. ஆனால் இத்தெய்வம் சமண பௌத்தர்களுக்குப் பொதுவாக இருந்தது. யானை ஊர்தி சமணக் கோயில்களிலும், குதிரை ஊர்தி பௌத்தக் கோயிலிலும் இருந்தன.

❖ சமணர்களும் தம் சமயச் சான்றோர்களை 63 பேர் என்பர். சைவத்தில் நாயன்மார்களும் 63 பேர் என்று கூறப்படுகிறது.

❖ சைவ சமயத்துக்கும் சமணத்துக்கும் பொதுவான கூறுகள் சிலவுண்டு. சிவராத்திரி இருவருக்கும் பொதுவானதாகும்.

❖ சமணர்கள் கைலாயத்தில் இடபதேவர் வீடுபேறடைந்த நாளை மாசித் திங்களில் கொண்டாடுவர். இதே நாளில் சைவரும் சிவனை வழிபடுவர்.

❖ சிவகதி என்பது இருவருக்கும் பொதுவான சொல். இது முக்தியைக் குறிக்கும்.

❖ கயிலை மலை இருவருக்கும் புனித இடமாகும்.

❖ சிவனுடைய ஊர்தி நந்தி, ஆதி நாதரின் முத்திரை காளை.

❖ ஆணவம், கன்மம், மாயை என்று சைவரும், காமம், வெகுளி, மயக்கம் என்று சமணரும் கூறுவர்.

❖ சிவனுக்கும் ஆதி நாதருக்கும் சடைமுடியுண்டு.

❖ இவ்வொற்றுமைகளை வைத்துப் பார்ப்பதில் யாரிடம் இருந்து யாருக்கு வந்தது என்பது ஐயத்திற்கு இடமளிக்கிறது.

### 3.4.4. சமணரின் தமிழ்த்தொண்டு

தமிழருக்கு நிலையான தொண்டு செய்தோருள் குறிப்பிடத்தக்கோர் சமணராவார். இவர்கள் நீதி நூல்களையும், சிறுநூல்களையும், இலக்கண நூல்களையும், காவியங்களையும், நிகண்டுகளையும் எழுதியதோடு பழைய நூல்களுக்குச் சிறந்த உரைகளையும் எழுதியுள்ளனர்.

- சமணர்கள் போற்றிய கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை, கள்ளாமை போன்ற கொள்கைகள் திருக்குறளில் காணப்படுகிறது. அதன் செல்வாக்கிற்குச் சமணத்திற்கும் பங்குண்டு எனலாம்.
- நாலடியாரைச் **சமணமுனிவர்** பலர் எழுதினர். இதில் சமணக் கொள்கைகள் பல கூறப்பட்டுள்ளன.
- **பழமொழி நானூறு** என்னும் நூலை **முன்றுரை அரையனார்** என்ற சமணப் பெரியார் இயற்றினார்.
- **கணிமேதையார் ஏலாதியை** இயற்றினார். இதில் ஆறு அறங்கள் கூறப்படுகிறது.
- ஐந்து அறங்களைத் தன்னுள் கொண்ட **சிறுபஞ்ச மூலம் காரியாசானால்** இயற்றப்பட்டது. இவர் கணிமேதையாரின் மாணாக்கர் ஆவார்.
- 226 வெண்பாக்களைக் கொண்ட **அறநெறிச்சாரம்** என்பதை **முனைப்பாடியார்** இயற்றினார். ''தாமரைப் பூவின்மேற் சென்றான் புகழடியை நாவாற்றுதித்து'', ''நின்றமுக்குடையான் வேந்து'' என்னும் தொடர்களால் இவர் சமணர் என்பது விளங்கும்.
- **திணைமாலை நூற்றைம்பதைப்** பாடியவர் **கணிமேதாவியார்** ஆவார்.
- ஐம்பெருங்காப்பியங்களில் **சிலப்பதிகாரம்** தலைசிறந்தது. இதன் ஆசிரியர் **இளங்கோவடிகள்** சமண நெறியார் ஆவார்.
- ஐம்பெருங்காப்பியங்களில் திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணியும் சமணரின் கொடையாகும். விருத்தயாப்பில் அமைந்த முதற்காப்பியம். இந்நூல் கம்பருக்கும், சேக்கிழாருக்கும் முன்னோடியாக அமைந்தது.
- **குண்டலகேசி**, **வளையாபதி** ஆகியவையும் சமணர் இயற்றியவையே. எனவே ஐம்பெருங்காப்பியங்களில் நான்கு சமணரது கொடையாகும்.
- **உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், நீலகேசி, சூளாமணி** ஆகிய ஐந்தும் ஐஞ்சிறு காப்பியங்களும் சமணர் இயற்றியனவே.
- **மேருமந்தரபுராணம் வாமானாச்சாரியார்** இயற்றியது ஆகும். ஸ்ரீபுராணம் என்பது தீர்த்தங்கரர்களின் வரலாற்றைக் கூறுவதாக அமைகிறது.
- **திவாகர நிகண்டு, சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு** ஆகியவை சமணப் பெரியோர்கள் இயற்றியவையாகும்.
- தொல்காப்பியரைச் சிலர் சமணர் என்பர். கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் நன்னூலை இயற்றிய பெருமை சமணராகிய பவணந்தியைச் சாரும்.
- **நேமிநாதம், குணவீரபண்டிதர்** என்ற சமணருடைய படைப்பாகும்.
- **நம்பியகப்பொருளும் நாற்கவிராச நம்பியென்னும்** சமணருடையது.
- **அமிர்தசாகரர்** என்னும் சமணர் **யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை** என்னும் நூல்களை இயற்றினார்.
- தொல்காப்பிய உரையாசிரியர் **இளம்பூரணரும்**, யாப்பருங்கலக் காரிகைக்கு உரை செய்த **குணசாகரரும்**, நாலடியாருக்கு அதிகாரம் வகுத்த **பதுமனாரும்** சமணராவார்.

**தன்மதிப்பீடு : 3**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. சமணப் பிரிவினரைக் குறிப்பிடுக.
2. சமணர் இயற்றிய இலக்கண நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. சமண சமயத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் குறித்து விவரிக்க.

2. சைவத்திற்கும் சமணத்திற்கும் உரிய பொதுக்கூறுகள் யாவை ?

### 3.5. பௌத்த சமயம்

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கௌதம புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்த மதமானது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்திற்கு வந்தது என்பர்.

#### 3.5.1. பௌத்தத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

- ❖ பல்லவர் காலத்தில் தமிழகம் வந்த **யுவான் சுவாங்** சீன அறிஞராவர். இவர் பதினாயிரம் பௌத்தத் துறவிகளும் நூறு மடங்களும் இருப்பதாகக் கூறியுள்ளார்.
- ❖ மகேந்திரர் இந்திரவிகாரத்தைப் புகாரில் கட்டினார். பல ஊர்களில் பௌத்தச் சின்னங்கள் இருந்தது பௌத்தத்தின் செல்வாக்கினைக் குறிக்கிறது.
- ❖ பௌத்தர்களின் சங்கமே இதன் வளர்ச்சிக்குக் காரணம்.
- ❖ களப்பிரர் காலத்தின் தொடக்கத்தில் பௌத்தர்களுக்குச் செல்வாக்கு இருந்தது. அரசரும், வணிகர்களும் உதவினர்.
- ❖ பௌத்த மடங்களில் மக்களுக்குக் கல்விப் பயிற்சியும், சமயபோதனையும் அளிக்கப்பட்டன. நாட்டு மொழிகளைப் பாராட்டினர்.
- ❖ காணார், கேளார், காலில் முடவர், ஏதிலார் அனைவர்க்கும் உணவிட்டனர்.
- ❖ மணிமேகலையில் ஆபுத்திரன் தொண்டினால் உயர்ந்தோர் எனக் குறிப்பது மக்களிடம் வேற்றுமை பாராட்டாது, மக்களுக்குத் தொண்டு புரிந்த பௌத்த சமயம் என்பது விளங்குகிறது.
- ❖ கடவுளை ஏற்காததால் பௌத்த சமயம் அழிந்தது என்று கே.கே.பிள்ளை கூறுகிறார்.
- ❖ பௌத்தர்கள் வைதிகச் சமயத்தை ஏற்று, அதன் கொள்கைகளையும் ஏற்றனர்.
- ❖ இதனால் சமணர்க்கும் பௌத்தர்க்கும் இடையே பூசல்கள் ஏற்பட்டன. சமணர் கை ஓங்கிற்று.
- ❖ சமணம் செல்வாக்குற்றபின் பௌத்த மடங்களும் கோயில்களும் சமணக் கோயிலாகவும் மடமாகவும் மாறின.
- ❖ பௌத்தத்தில் **மகாயானம், ஈனாயானம்** என்ற இரு பிரிவுகள் தோன்றின.
- ❖ **புத்தம், தருமம், சங்கம்** என்னும் திரிரத்தினங்கள் இம்மதத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தன.
- ❖ சங்கத்தின் மூலமே பௌத்த மதம் செல்வாக்கிழந்தன. அதாவது ஆத்மீக குறிக்கோள் குன்றி, அதிகாரமும், லௌகீகமும் தலை தூக்கின.

இந்நிலையில் பெண்களும் சங்கத்தில் சேர்ந்தனர். இத்தகைய அகக்காரணங்களே பௌத்தமத வீழ்ச்சிக்கு அடிகோலின.

❖ இதையே, மகேந்திரவர்மன் தன் **மத்த விலாசப் பிரகசனம்** என்னும் எள்ளல் நாடகத்தில் விளக்கியுள்ளார்.

❖ பௌத்தமானது சமணத்தின் செல்வாக்காலும், பக்தி இயக்கத்தின் தாக்கத்தாலும், உட்பூசலாலும், பிக்குகளின் குறைபாட்டாலும், செல்வாக்கு இழந்தாலும் கி.பி. 14ம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் இருந்தது.

❖ காஞ்சி காமாட்சிக் கோட்டத்திலுள்ள அன்னபூரணியம்மன் சன்னதி முன்பு, மணிமேகலையின் கோயிலாக இருந்தது என்றும், தருமராசர் என்ற புத்தருக்குக் கட்டிய கோயில் பின்னர் பாண்டவ தருமன் கோயிலாயிற்று என்றும், சிந்தாதேவி, தாராதேவி ஆகிய பெண் தெய்வங்களின் கோயில்கள் அம்மன் கோயில்களாயின என்றும் மயிலை சீனி. வேங்கடசாமி கூறுகிறார். இதன் மூலம் பல பௌத்த கோயில்கள் இந்து கோயில்களாக மாறியதை அறிந்து கொள்ளலாம்.

### 3.5.2. இந்து சமயத்தில் பௌத்தம்

❖ சங்கரரின் மாயாவதக் கொள்கை பௌத்தத்திலிருந்து பெற்றது என்பர்.

❖ மகாயான பௌத்தத்தின் மாற்று உருவமே சங்கரரின் கொள்கை என்பர். இதனை உணர்ந்தே **இராமநுசரும், மாத்துவரும்** இதனை மாறுவேடமிட்டு வந்த பௌத்தம் என்னும் பொருளில் **பிரசன்ன பௌத்தம்** என்று கூறினார்.

❖ புத்தர் திருமாலின் அவதாரமே என்ற கருத்து ஆழ்வார்களிடம் காணப்படுகின்றது.

''அன்னமாய் அன்றங்கு அருமறை பயந்தான்
அரங்க மாநகர் அமர்ந்தானே''

என்பது ஆழ்வார் ஒருவரின் திருவாக்கு.

### 3.5.3. கோயில்களில் மாற்றம்

❖ வைணவர்கள் புத்தரைத் திருமாலின் அவதாரமாக ஏற்றது போல சைவரும் புத்தரை ஐயனாராக ஏற்றனர். புத்தருக்குத் தருமராசர், விநாயகன் என்னும் பெயர்கள் உண்டு.

❖ இப்பெயருடன் இருந்த கோயில்கள் பாண்டவ தருமன் கோயிலாகவும், பிள்ளையார் கோயிலாகவும் மாற்றப்பட்டன.

❖ இம்மாற்றம் குறித்து **நீலகண்ட சாத்திரியார்** புத்தர் கோயிலில் இந்து மரபுப்படி வழிபாடு செய்யத் தொடங்கினார்கள். அவ்வாறு பல பௌத்தக் கோயில்கள் இந்துக் கோயில்களாக மாறின என்று **தென்னிந்திய வரலாறு** என்னும் நூலில் கூறுகிறார்.

❖ புத்தர் பெருமான் போதி மரத்தடியில் ஞானம் பெற்றதால் பௌத்தர்கள் அம்மரத்தினைப் புனிதச் சின்னமாகப் போற்றினர். இது போலவே இந்துக்களும் அரச மரத்தடியில் பிள்ளையாரையும், வேம்பினையும், நாகத்தையும் வணங்கி வந்தனர்.

❖ துவராடையும் மழித்த தலையும் பௌத்தத் துறவிகளின் அடையாளமாகும்.

❖ ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் 'உண்டிக் கொடுத்தார் உயிர் கொடுத்தோரே' என்பது பௌத்தர்களின் கொள்கையாகும்.

- ❖ தமிழகத்தில் கொல்லாமையும் கள்ளுண்ணாமையும் வளரச் சமண பௌத்த சமயங்கள் வழிவகை செய்தன. இதற்குச் சான்றாக மணிமேகலையில்,

  ''மயக்கும் கள்ளும் மன்னுயில் கோறலும்

  கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்''

  என்ற சாதுவன் கூற்று அமைகிறது.

**3.5.4. தமிழும் பௌத்தமும்**

பிராமணர்கள் மக்களுக்குப் புரியாத வடமொழியில் சமய தத்துவங்களைக் கூற, புத்தரோ மக்களின் பேச்சு மொழியிலே தம் போதனைகளைக் கூறினார். இதனைப் பின்பற்றியே தமிழ் நாட்டுப் பௌத்தர்களும் தமிழில் நூல்களை இயற்றினர். இதனால் தமிழ்மொழி வளம் பெற்றது.

- ❖ தமிழிலுள்ள இரட்டைக் காப்பியங்களின் ஒன்றான மணிமேகலையைச் சீத்தலைச் சாத்தனார் இயற்றினார். 'பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க' என்று மணிமேகலை விரும்பியது.
- ❖ பௌத்தர்கள் தந்த இன்னொரு நூல் **குண்டலகேசி** என்னும் சமய வாத நூலாகும்.
- ❖ இடைக்காலத்தில் எழுந்த இலக்கண நூல்களில் **புத்தமித்திரனார்** எழுதிய **வீரசோழியம்** மொழி ஆய்வுக்குப் பயன்படும் நூலாக விளங்குகிறது.
- ❖ **சித்தாந்ததொகை, பிம்பசாரகதை** என்னும் இருநூல்களையும் பௌத்தர்கள் இயற்றினர்.
- ❖ கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் **தம்மபதம்** என்னும் நூல் தோன்றியது.
- ❖ திருக்குறள் ஒரு சமயப் பொது நூல் என்றாலும் இதில் புத்த சமண நெறிகள் உள்ளன என்பதை மயிலை சீனி. வேங்கடசாமி கடவுள் வாழ்த்துப் பகுதியிலுள்ள செய்திகளைச் சுட்டிக் காட்டுவார்.
- ❖ 'மலர்மிசை ஏகினான்' என்பது பகவான் புத்தர் பிறந்த போதே ஏழடி நடந்தார் என்றும், ஒவ்வோரடியை வைக்கும் போது தாமரைப் பூ தோன்றி அவருடைய பாதங்களைத் தாங்கிக் கொண்டது என்றும் பௌத்த நூல்கள் கூறுகின்றன. ஆகவே மலர்மிசை ஏகினான் என்பது புத்த பகவானைக் குறிக்கிறது என்கிறார்.
- ❖ பௌத்தர்கள் **பாலி மொழியினர்.** ஆதலால் பாலி மொழிச் சொற்கள் இலக்கியத்திலும் பேச்சிலும் இடம் பெறலாயின.
- ❖ **பிராமியெழுத்தினைக் கண்டவர் புத்தர்.** அசோகர் காலத்தில் இவ்வெழுத்துத் தமிழகத்திற்கு வந்தது. பாண்டி நாட்டு மலைக்குகைகளிலும் பல பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.
- ❖ **சமணரும் பௌத்தரும்** பிராமியிலிருந்து புதிய **கிரந்த எழுத்தை** உண்டாக்கினர். சோழ நாட்டில் இதிலிருந்து ஒருவகை எழுத்தைப் படைத்தனர். இன்று வழக்கிலுள்ளது இவ்வெழுத்தேயாகும்.
- ❖ பாண்டிய நாட்டில் வட்டெழுத்து இருந்தது கி.பி. 10ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை சோழர்கள் கைப்பற்றிய போது புதிய கிரந்தத்தில் இவற்றை மாற்றினர். இன்று பிராமியெழுத்தைத் **தாமிழி** என்று கூறுகின்றனர்.

புத்த சமய நூல்கள் ஏறத்தாழ நூற்றைம்பது மொழிகளில் இருந்தாலும் தமிழில் மட்டுமே காப்பிய இலக்கியம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இங்கிருந்து புத்தம் கீழைத் தீவுகட்குப் பரவிற்று என்பர் ஆய்வாளர்.

**தன்மதிப்பீடு : 4**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. இந்து சமயத்தில் பௌத்தத்தின் செல்வாக்கு குறித்து எழுதுக.
2. பௌத்த சமயத்தின் இரு பிரிவுகள் யாவை ?
3. தமிழ் இலக்கியங்களில் பௌத்த சமயக் குறிப்புகளைச் சுட்டுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. பௌத்தத்தின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் குறித்து விவரிக்க.
2. தமிழும் பௌத்தமும் – கட்டுரை வரைக.

### 3.6. இசுலாம் சமயம்

தமிழ்நாட்டில் தமிழையும் உருதுவையும் தாய்மொழியாகக் கொண்டவர்கள் முகமதியர்கள் ஆவர். இவர்கள் கடலோரப் பகுதிகளில் பெரும்பாலும் வசிப்பவராவர். இவர்கள் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

#### 3.6.1. இசுலாமின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

- ❖ அராபிய வணிகர்களின் மூலம் முகமதியர்கள் தமிழகத்தில் குடியேறினர். தமிழ்ப் பெண்களை மணந்தனர்.
- ❖ அதனால் இந்து பெர்சியக் கலப்பினமும், இந்து அரேபியக் கலப்பினமும் தோன்றின.
- ❖ 1378 வரையில் அரை நூற்றாண்டு காலம் மதுரையில் முகமதியர் ஆண்டனர். நாயக்க மன்னர்கள் இவர்களை வீழ்த்தினாலும், பீசப்பூர் சுல்தான்களும், கருநாடக நவாபுகளும் படையெடுத்ததால் 19 ஆம் நூற்றாண்டு வரை தமிழகம் போராட்டக் களமாக விளங்கியது.
- ❖ இசுலாம் சமயம் சகோதர நேயத்தைப் போற்றிய காரணத்தால் இந்துக்களால் புறக்கணிக்கப்பட்ட கீழ்சாதி மக்கள் இச்சமயத்தை ஆதரித்தனர்.
- ❖ இந்து சமயத்தின் குறைபாடுகளும், அரசியல் செல்வாக்கும் இச்சமய வளர்ச்சிக்கு உதவின.
- ❖ இந்துக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர் என்றும், சமய நெறிகள் தடை செய்யப்பட்டன என்றும், நூல்கள் பல அழிக்கப்பட்டன என்றும், பல கோயில்களைப் பள்ளி வாசல்களாக மாற்றினர் என்றும், பெருங்கோபுரங்கள் இடிக்கப்பட்டன என்றும் கூறப்படுவதன் மூலம் இசுலாமியர்கள் சமய வெறுப்புக் கொண்டனர் என்பதும், இந்து சமய நிறுவனங்களுக்கு இடையூறு செய்தனர் என்பதும் அறியப்படுகின்றது.
- ❖ அ.கி.பரந்தாமனார் **மதுரை நாயக்கர் வரலாறு** எனும் நூலிலும், இரண்டாம் கம்பணரின் மனைவி–**மதுரா விஜயம்** எனும் நூலிலும் முகம்மதியர் செய்த அழிவு வேலைகளை எடுத்துக்காட்டியுள்ளனர்.

#### 3.6.2. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இசுலாம்

- ❖ **திருக்குர்–ஆன்** தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதால் நபி நாயகத்தின் பெருமையைத் தமிழர்கள் அறிந்தனர்.

- ❖ தம் சமயக் கோட்பாடுகளைத் தமிழ் நூல்களின் வாயிலாகப் பரப்பியதால் இசுலாம் சமயத்தின் செல்வாக்கை மிகத் தெளிவாக இலக்கியங்களின் மூலம் அறியலாம்.
- ❖ **உமறுப்புலவரின் சீறாப்புராணம்** இசுலாமிய சமயத்தில் முதலிடம் பெறுகிறது. இது **மஸ்தான் சாகிபு** என்னும் இசுலாமிய சித்தரின் நூலாகும்.
- ❖ முகமதியப் புலவர் பலர் சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளனர். **கவிக் களஞ்சியப் புலவர், சவ்வாதுப்புலவர், சையது மீரா, சையது இமாம் சேக் அப்துல் காதர் நயினார், குலாம் காதிறு நாவலர்** போன்றோர் **அம்மானை, ஆற்றுப்படை, கோவை, அந்தாதி, திரிபு அந்தாதி, பிள்ளைத்தமிழ், மாலை, சிந்து, கீர்த்தனை, திருப்புகழ்** போன்ற இலக்கிய வகைகளைப் படைத்துள்ளனர்.
- ❖ இசுலாமியருக்கே உரிய இலக்கிய வகைகளும் இயற்றப்பட்டுள்ளன. படைப்போர், கிஸ்ஸா, மசாலா, நாமா என்பவை குறிப்பிடத்தக்கதாகும். பழித்தல் முறையில் பாடும் **ஏசல்** என்பதொன்றும் உண்டு.
- ❖ இசுலாம் சமய ஒழுக்க நூல்களும் தோன்றியுள்ளன. அவை,

  மகால் பெரிய நிகு–ஆசாரக்கோவை

  அப்துல் ரகுமான்–முசுலீம் அத்துவைத மூலமொழி

  மீரான் சாகிபு சாகுல் அமீது லப்பை–மௌலானா ருமி ஜீவிய சரித்திரம், அபுநவாசு.

  மேலும், அரபு, பாரசீகம் ஆகிய மொழிகளிலிருந்து வாத நூல்கள் பல மொழி பெயர்க்கப்பட்டன.

### 3.6.3. தமிழ்ச் சொற்களில் இசுலாமிய மொழிப்பதிவுகள்

- ❖ இசுலாமியர்களின் தொடர்பினால் தமிழில் கலந்துள்ள உருது, பாரசீக, அராபியச் சொற்கள் எண்ணற்றவையாகும். கிட்டத்தட்ட 5000 சொற்கள் பேச்சிலும், எழுத்திலும் கலந்துள்ளன என்று கூறுகின்றனர்.
- ❖ 961 உருதுச் சொற்கள் கலந்துள்ளன என்கின்றனர். அவற்றுள் சில: அக்கப்போர், அக்கரகாரம், ஆசாமி, அண்டா, அரை, அமுல், அம்பாரி, ராஜீ, ராஜீனாமா, ராட்டினம், ஊதுவத்தி, கச்சேரி, கஜானா, கசகசா, சந்தா, சப்பரம், சாமான் போன்றன.
- ❖ பாரசீக சொற்கள் 65 கலந்துள்ளன என்பர். அவற்றுள் சில: சிப்பந்தி, தாவாலி, தம்பிடித்தல், தர்கா, நாஸ்தா, மஜா, லுங்கி, ஜமுக்காளம், ஜோக்கு, சர்க்கார், சுமார், ஜில்லா, தாலூக்கா, மாகாணம், உஷார், ஜல்தி, பேஷ், சவுடால், கூஜா, அண்டா, மிட்டாய் போன்றன.
- ❖ புலவு என்னும் பிரியாணியும் சர்பத்தும் முகமதியர் தொடர்பால் இடம்பெற்றவை. அத்தர், பன்னீர் போன்றவை பயன்படுத்தும் வழக்கும் இத்தகையதே.
- ❖ கட்டிடக்கலையில் பள்ளிவாசல்கள் எண்ணற்றவை இடம் பெற்றன. சான்று : நாகூர் ஆண்டவர் கோயில்.
- ❖ இசுலாமியரின் இசை மரபும் தமிழகத்தில் நுழைந்தது.
- ❖ இந்திய வீணையையும் இரானியத் தம்பூராவையும் இணைத்து **சிதார்** என்னும் இசைக்கருவியை இந்திய முசுலீம் கலைஞர்கள் படைத்தனர்.

- ❖ **யுனானி** மருத்துவத்தின் மூலம் தமிழர்கள் பயனடைந்து வந்தனர்.
- ❖ இசுலாத்தின் சகோதரத்துவமும், சமத்துவ உணர்வும், ஒரே கடவுட் கோட்பாடும், கடவுளிடம் முழுமையாகச் சரண் புகுதலும், இந்திய சிந்தனையாளரிடத்தும், சீர்திருத்தக்காரரிடத்தும் அழுத்தமாகப் பதிந்தன.
- ❖ இசுலாம் சமயம் பிற சமயங்கள் போலவே கலை, சமயம், இலக்கியம், மருத்துவம் போன்ற பல துறைகளிலும் தன் அடிச்சுவட்டைப் பதித்துள்ளன.

**தன்மதிப்பீடு : 5**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. தமிழகத்தை ஆண்ட இசுலாமியர் குறித்து எழுதுக.
2. இசுலாமியர் தமிழகத்திற்குள் எதன் பொருட்டு நுழைந்தனர் ?
3. இசுலாமிய சிற்றிலக்கியங்களைக் குறிப்பிடுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. இசுலாமின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் குறித்து விவரிக்க.
2. தமிழ்ச் சொற்களில் இசுலாமிய மொழிப் பதிவுகளை விளக்குக.

### 3.7. பகுத்தறிவு இயக்கம்

- ❖ பகுத்தறிவு என்பது நல்லது கெட்டதை ஆராய்ந்து அறியும் ஆறாவது அறிவு. இது மனிதன் மட்டுமே பெற்றிருக்கும் சிறப்புத் தகுதியாகும்.
- ❖ பகுத்தறிவு மனிதனுக்கு உயிர் போன்றது. அதன் வளர்ச்சிதான் மனிதனை மனிதனாக ஆக்க வல்லது. மனிதன் தாழ்ந்த நிலையில் இருக்கும் பொழுது அவன் காட்டு மிராண்டி என்பது பொருள். மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு பகுத்தறிவு தெளிவு பெறுகின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு பக்குவமானவன் என்பது பொருள்.
- ❖ **“பகுத்தறிவு என்பதற்கு மறுபெயரே உண்மை என்பது தான். உண்மை ஆராயச் சொல்கிறது. யோக்கியமாக இருக்கச் சொல்கிறது’’** என்பார் அமெரிக்கச் சிந்தனையாளன் **கலோனல் ராபர்ட் கிரீன் இங்கர்சால்.**
- ❖ பெரியார் கண்ட பகுத்தறிவுப் பணி கடவுள், மதம், மூடநம்பிக்கைக்கு எதிரான போர் மட்டுமல்ல. புதியதொரு சமதர்மச் சமுதாயம் மலரப் போட்ட அடித்தளம்.
- ❖ பகுத்தறிவு என்பதற்குப் பொருள், உண்மையை உணர்ந்து அறிந்து தெளிகிற மேலான மெய்யறிவே ஆகும்.
- ❖ பெரியார் அரசியல், ஆட்சிமுறை இவற்றிலான பகுத்தறிவை விளக்குகையில், நான் பகுத்தறிவுவாதி. எனக்கு மதம்–கடவுள்–மொழி–நாடு–அரசு இதைப்பற்றி யெல்லாம் கவலையில்லை. யார் ஆட்சி செய்கிறார்கள் என்பதைப் பற்றியும் கவலை கிடையாது. பகுத்தறிவோடு ஆட்சி செய்கிறார்களா என்பதுதான் எனக்கு முக்கியமாகும் என்கிறார்.
- ❖ மேலும், பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள் கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பி விடக் கூடாது; எழுதி வைத்திருப்பதாலேயே ஒன்றை நம்பி விடக்கூடாது. வெகுகாலமாக நடந்து வருவதாலும் ஒன்றை நம்பிவிடக்கூடாது. கடவுளாலோ மகாத்மாவாலோ சொல்லப்பட்டது என்பதாலேயே நம்பி விடக்கூடாது; நம்முடைய புத்திக்கு ஆச்சரியமாய் தோன்றுவதாலேயே அதைத் தெய்வீகம் என்றோ மந்திரச் சக்தி என்றோ நம்பி

விடக்கூடாது. எப்படிப்பட்ட விசயமானாலும் நடுநிலையில் இருந்து பகுத்தறிவுக்குத் தாராளமாய் விட்டு ஆராய வேண்டும்.

- ❖ மனிதன் பகுத்தறிவு கொண்டு சிந்திக்கும் போதுதான் அவனுடைய முயற்சியும் கூடுகின்றது. அதனால் வெற்றியும் பெறுகிறான். ஒவ்வொரு வளர்ச்சிக்கும் சிந்தனை அறிவுதான் அடிப்படைக் காரணமாகும்.
- ❖ ஒவ்வொரு மனிதனும் பகுத்தறிவு வாதியாக மாறும் போது தான் மனிதத்தன்மை வளர்ச்சி மட்டுமல்லாமல் சமுதாய வளர்ச்சியும் ஏற்படுகின்றது. மனிதச் சமுதாயத்தில் ஒழுக்கமும் நாணயமும் உண்டாகின்றது.
- ❖ பெரியார் பகுத்தறிவைப் பற்றிக் கூறுகையில் **பகுத்தறிவு என்ற சொல் கேட்டே யாரும் பயப்படத் தேவையில்லை. பகுத்தறிவு மனதைப் பண்படுத்தும்; சிந்தனையைச் செம்மைப்படுத்தும்; மேலான மெய்யறிவிற்கு வழிவகுக்கும்** என்கிறார்.

**தன்மதிப்பீடு : 6**

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பகுத்தறிவு என்றால் என்ன ? பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் குறிப்பிடுக.
2. மனிதனின் வெற்றிக்குப் பகுத்தறிவு துணை நிற்கிறது என்பதை நிறுவுக.

### 3.8. தொகுப்புரை

1. பிற சமயங்கள் தத்தமது கொள்கைகளைப் பரப்புவதற்காகவே தமிழகத்தில் புகுந்துள்ளன.
2. சிவபெருமான் பற்றிய குறிப்புகளையும் திருமால் பற்றிய குறிப்புகளையும் இலக்கியங்கள் பரவலாகச் சுட்டியுள்ளன.
3. சைவ சமயத்தை நாயன்மார்களும், வைணவ சமயத்தை ஆழ்வார்களும் வளர்த்துள்ளனர்.
4. சைவர்களும் வைணவர்களும் கலைகளைப் போற்றியதோடு இலக்கியப் பணிகளையும் ஆற்றியுள்ளனர்.
5. சமண சமயம் களப்பிரர்களின் ஆட்சியில் வளர்ச்சியுற்றது. சமணப் பெரியோர்கள் தீர்த்தங்கரர் என்று அழைக்கப்பட்டுள்ளனர்.
6. புலால் உண்ணாமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை சமணர்களின் கொள்கைகளாக விளங்கின. இதனை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களையும் படைத்துள்ளனர்.
7. கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட பௌத்த சமயம் கி.மு.3 ஆம் நூற்றாண்டில் தமிழகத்திற்குள் வந்ததாகத் தெரிய வருகின்றது.
8. மணிமேகலை, குண்டலகேசி, வீரசோழியம் போன்ற இலக்கியங்கள் பௌத்தர்களால் இயற்றப்பட்டுப் பல தமிழிலக்கியங்கள் வளர்ந்து உள்ளன.
9. இசுலாம் சமயத்தினர் தமது கொள்கையினை இலக்கியங்களின் வாயிலாகப் பரப்பினர். திருக்குர்ஆன் மொழி பெயர்க்கப்பட்டது.
10. பகுத்தறிவு என்பது கடவுள், மதம், மூடநம்பிக்கைக்கு எதிரானது. மனிதன் பகுத்தறிவுவாதியாக மாறும் போது தான் மனிதத்தன்மை வளர்கின்றது. இப்பகுத்தறிவு கொள்கைக்கு வித்திட்டவர் பெரியாரே என்பது தெளிவாகின்றது.

# குறிப்பு

…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..

## அலகு – 4

## சமூக அமைப்புகள்

### பாடக்கருத்தலகுகள்

4.0. நோக்கம்

4.1. முன்னுரை

4.2. தமிழரின் நீதிமுறைகள்

4.2.1. இலக்கியங்களில் நீதி

4.2.2. சான்றோருக்குரிய தகுதியும் நீதியும்

4.2.3. நீதி தவறியோர்க்கான தண்டனைகள்

4.2.4. பல்லவர் கால நீதி

4.2.5. சோழர் கால நீதி

4.2.6. பாண்டியர் கால நீதி

4.2.7. விசய நகர ஆட்சியில் நீதி

4.2.8. மதுரை நாயக்கர் கால நீதி

தன்மதிப்பீடு – 1

4.3. வரிகள்

4.3.1. சங்க கால வரிகள்

4.3.2. பல்லவர் கால வரிகள்

4.3.3. சோழர் கால வரிகள்

4.3.4. பாண்டியர் கால வரிகள்

4.3.5. விசய நகரத்தார் கால வரிகள்

4.3.6. வரிகளின் வகைகள்

4.3.7. வரி பெற்ற முறைகள்

தன்மதிப்பீடு – 2

4.4. உள்ளாட்சி மன்றம்

4.4.1. ஊராட்சி மன்றங்களின் தோற்றம்

4.4.2. சங்ககாலத்தில் உள்ளாட்சி மன்றங்கள்

4.4.3. பல்லவர் காலத்தில் உள்ளாட்சி மன்றங்கள்

4.4.4. பாண்டியர் காலத்தில் உள்ளாட்சி மன்றங்கள்

4.4.5. சோழர் காலத்தில் உள்ளாட்சி மன்றங்கள்

4.4.6. உள்ளாட்சி மன்ற உறுப்பினருக்கான தகுதிகள்

4.4.7. உறுப்பினராவதற்குத் தகுதியற்றவர்கள்

4.4.8. தேர்தல் நடைமுறை

4.4.9. பல்வேறு வாரியங்கள்

4.4.10. உறுப்பினர் எண்ணிக்கையும் செயல்பாடும்

**4.4.11.** பல்வேறு அவைகளின் பணிகள்

**4.4.12.** கிராம ஆட்சியின் அழிவு

தன்மதிப்பீடு – **3**

**4.5.** சாதி வளர்ச்சியும் பெரியார் செயல்பாடுகளும்

**4.5.1.** பண்டைக்காலத்தில் சாதிமுறை

**4.5.2.** சோழர் காலத்தில் சாதி

**4.5.3.** வலங்கை–இடங்கை பூசல்கள்

**4.5.4.** சாதி எதிர்ப்பும் சான்றோர் முயற்சியும்

**4.5.5.** சாதி எதிர்ப்பில் பெரியாரின் செயல்பாடுகள்

தன்மதிப்பீடு – **4**

**4.6.** மகளிர் நிலை

**4.6.1.** தொல்காப்பியர் காலத்தில் மகளிர்

**4.6.2.** சங்க காலத்தில் மகளிர்

**4.6.3.** சங்க மருவிய காலத்தில் மகளிர்

**4.6.4.** பல்லவர் காலத்தில் மகளிர்

**4.6.5.** சோழர் காலத்தில் மகளிர்

**4.6.6.** விசயநகர காலத்தில் மகளிர்

**4.6.7.** ஆங்கிலேயர் காலத்தில் மகளிர்

**4.6.8.** பெண் உரிமைக்குக் குரல் கொடுத்தவர்கள்

தன்மதிப்பீடு – **5**

**4.7.** இந்தியப் பண்பாட்டில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்

தன்மதிப்பீடு – **6**

**4.8.** தொகுப்புரை

# அலகு – 4

## சமூக அமைப்புகள்

### 4.0. நோக்கம்

- ❖ பண்டைக் காலத்தில் நிலவிய நீதிமுறைகளைத் தமிழ் இலக்கியங்களின் வாயிலாக அறிந்து கொள்ளுதல்.
- ❖ மன்னர்களின் ஆட்சிமுறைக்கேற்றபடி தண்டனைகள் வேறுபட்டிருந்ததை வரலாற்றின் வழி உணர்தல்.
- ❖ கல்வெட்டுகளும், செப்பேடுகளும் குறிப்பிடும் வரிகள் குறித்த செய்திகளை அறிதல்.
- ❖ உள்ளாட்சி மன்றங்களின் தோற்றத்தினையும், உறுப்பினர்களுக்கான தகுதிகளையும் காலவாரியாகத் தெரிந்து கொள்ளுதல்.
- ❖ பெரியோர்களின் கூற்றின் வாயிலாகச் சாதி எதிர்ப்பினை அறிந்து கொள்ளுதல்.
- ❖ சங்க காலம் முதல் தற்காலம் வரையில் பெண்களின் நிலை குறித்து உணர்ந்து கொள்ளல்.
- ❖ இந்தியப் பண்பாட்டில் கலந்துள்ள தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை அறிதல்.

### 4.1. முன்னுரை

பண்டைச் சமுதாயத்தில் சமூக வழக்காறுகள்தான் சட்டங்களாக விளங்கியுள்ளன. சங்க காலத்தில் பொதுவான சட்டம் என்பது கிடையாது. சமூக வழக்காறுகள் நீதி நூல்களாக வளர்ச்சியுற்றன. அறிவார்ந்த சான்றோர்கள் மன்னருக்கு உதவியாகவும் இருந்தனர். சிற்றூர்களில் மக்களின் மன்றங்களே நீதி மன்றங்களாக விளங்கின. ஆங்கில அரசால் கொண்டுவரப்பட்ட இன்றைய சட்டம் போன்று இல்லாமல் மன்றங்களின் வாயிலாக நீதி வழங்கப்பட்டது. அனைவருக்கும் பொதுவான சட்டங்களை ஆங்கில அரசே உருவாக்கியது. இனி சங்ககாலம் முதல் பிற்காலம் வரை தமிழகத்தில் நிலவிய நீதிமுறையினைக் காண்போம்.

### 4.2. தமிழரின் நீதிமுறைகள்

- ❖ மன்னன் என்பவன் தலைமை நீதிபதியாக விளங்கினான். அவனுடைய அவையே தலைமை நீதிமன்றமாகும்.
- ❖ மக்கள் குறைகளை நீக்க வேண்டிய பொழுது மன்னன் அணுகுவதற்கு எளிமையாக இருந்தான். நீதியை **அறம்** என்று கூறினர்.
- ❖ ஆராய்ச்சிமணி அரண்மனையின் முன் தொங்க விடப்பட்டிருந்த குறிப்பு சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.

#### 4.2.1. இலக்கியங்களில் நீதி

**(i) புறநானூற்றில் நீதி**

மன்னனுக்கு அனைத்துப் படைவளங்கள் இருப்பினும் அறமே அவனுக்குச் சிறந்த அணிகலனாகக் கருதப்பட்டது. மக்கள் மன்னனின் அறமே ஆட்சிக்கு அடித்தளம் என்று வற்புறுத்தினர்.

> “அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
>
> அதனால் நமரெனக் கோல்கோ டாது

பிறரெனக் குணங்கொல் லாது'' (பாடல் : 55 : 10–12)

என்று புறநானூறானது நீதி வழங்க வேண்டிய முறையினை வலியுறுத்திக் கூறுகிறது. மேலும் மக்களுக்கு நீதி வழங்க **நாளவை** என்ற மன்றம் கூடிய செய்தியினையும் எடுத்துக் காட்டுகிறது (புறநானூறு 29, 54).

**(ii) திருக்குறளில் நீதி**

- ❖ நீதி வழங்குதல் **முறைசெய்தல்** எனப்பட்டது. அறநெறி தவறாமைக்கு அடையாளமே செங்கோல்.
- ❖ முறை செய்தாளும் வேந்தனை இறைவன் என்கிறார் வள்ளுவர்.
- ❖ நல்லவர்களைக் காத்தலும் தீயவர்களை அழித்தலும் மன்னனின் கடமையெனக் கொள்ளப்பட்டது.
- ❖ கொலை செய்பவர்களைத் தண்டிப்பது களைப்பறிப்பதற்கு ஒப்பாகும் என்கிறார் வள்ளுவர்.

**(iii) மணிமேகலையில் நீதி**

- ❖ மன்னன் நீதி தவறி நடந்து கொண்டால் நாட்டில் மழை பெய்யாது என நம்பியதை மணிமேகலை எடுத்துரைக்கின்றது. இதை,

  ''கோல்நிலை திரியின்கோள் நிலை திரியும்

  கோள்நிலை திரியின் மாரிவறங் கூறும்''

  என்று சுட்டுகிறது.

**(iv) சிலப்பதிகாரத்தில் நீதி**

- ❖ அன்றைய மன்னர்கள் முறை தவறினால் உயிரை விடவும் துணிந்தனர். சிலப்பதிகாரத்தில் கோவலனைத் தவறான முடிவினால் தண்டித்தான் பாண்டியன். உடனே பாண்டியனின் உயிரானது பிரிந்தது என்பது அன்றைய அறநெறியினைக் காட்டுகிறது.
- ❖ பொய்யாகச் சாட்சி சொல்பவரை உண்ணும் சதுக்கபூதம் இருந்ததைச் சிலம்பு கூறுகிறது.
- ❖ விலங்குகளுக்கும் நீதி வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் மனுநீதிச்சோழன் வரலாற்றினையும், சிபிசக்கரவர்த்தியின் வரலாற்றையும் இக்காப்பியம் குறிப்பிட்டுச் செல்கிறது.
- ❖ மன்னன் நீதி வழங்குவது மட்டும் இல்லாமல் அறிவார்ந்த சான்றோர்களைக் கொண்டு மன்றங்களை அமைத்து நீதி வழங்கினான். நீதி வழங்கும் சான்றோர்களை **அறகளத்து அந்தணர்** என அழைத்தனர்.

**4.2.3. சான்றோருக்குரிய தகுதியும் நீதியும்**

- ❖ தொல்காப்பியம் குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுநிலை, அழுக்காறின்மை, அவாவின்மை என்பன சான்றோருக்கு உரிய ஒழுக்கம் என வரையறை செய்கிறது.
- ❖ அச்சத்தையும், அவலத்தையும் நீக்கிடும் இயல்புடையவராக, கோபமும் உவகையும் இல்லாத பண்புடையவராகச் சான்றோர் இருத்தல் வேண்டுமென மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. (வரி : **489 – 490**)

- ❖ இளைஞன் என்று கருதப்பட்ட கரிகாலன் நரைமுடியினைத் தாங்கி நீதி வழங்கிய முறையினையும் புறநானூறு காட்டுகிறது.

### 4.2.3. நீதி தவறியோர்க்கான தண்டனைகள்

- ❖ குற்றங்களுக்கான தண்டனைகள் வரையறை செய்யப்படவில்லை.
- ❖ பகைவரின் ஒற்றர்களைக் கொல்வது உண்டு எனக் கோவூர்கிழாரின் பாடல் ஒன்றினால் அறிய முடிகிறது.
- ❖ பிறன்மனை விரும்பியவனின் காலை வெட்டியிருக்கின்றனர்.
- ❖ அரசியல் பகைக்காரணமாகக் கைது செய்யப்பட்டவர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். இதற்குக் கணைக்கால் இரும்பொறையின் வரலாறு சான்றாக அமைகிறது.
- ❖ கைதிகளைச் சிறையில் கொடுமைப் படுத்தியுள்ளனர். இதற்கு மணிமேகலையில் உதயகுமரன் இறந்த போது மணிமேகலையைச் சிறையில் வைத்துக் கொடுமைப் படுத்தியது சான்றாகும்.

### 4.2.4. பல்லவர் கால நீதி

- ❖ இக்கால நீதிமன்றங்கள் **தருமாசனம்**, **அதிகரணம்** என அழைக்கப்பட்டன. இதன் நீதிபதிகள் **தருமாசனபட்டர், அதிகரணபோசர்** எனப்பட்டனர்.
- ❖ சிற்றூர்களில் இருந்த மன்றம் **கரணம்** எனப்பட்டது. அதன் அலுவலர் அதிகாரிகள் ஆவர்.
- ❖ நீதி மன்றங்களில் கையூட்டு நிலவியதை மகேந்திரன் தனது மத்த விலாசத்தில் கிண்டலாகக் குறிப்பிட்டுள்ளார்.

### 4.2.5. சோழர் கால நீதி

- ❖ அரசின் நேர்ப்பார்வையில் தருமாசனம் இருந்தது. கிராம சபைகளும் நீதி வழங்கின.
- ❖ தருமாசனத்தில் தலைவர் தருமாசனப்பட்டர் ஆவார்.
- ❖ பெரிய புராணத்தில் இடம் பெறும் சுந்தரர் பற்றிய வழக்கு சோழர் கால நீதி முறையினைப் பற்றி அறிய முடிகிறது. இருசாராரிடமும் வாக்குமூலம் பெற்றுள்ளனர். குற்றம் சாட்டுபவர் ஆட்சி, ஆவணம், காட்சி என்னும் மூன்றில் ஒன்றால் குற்றத்தை நிறுவினர்.
- ❖ சமூக மரபுகளுக்கு நீதிமன்றம் மதிப்புக் கொடுத்தது.
- ❖ கோயில் சிலைகளையும் நகைகளையும் திருடியவரின் சொத்துக்கள் பறிக்கப்பட்டன.
- ❖ திருட்டு, கள்ள கையொப்பம், கற்பழிப்பு ஆகிய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் ஊரவையில் இடம் பெறத் தடை இருந்தது.
- ❖ கொலைக் குற்றத்துக்கும் ஒறுப்புக் கட்டணமே தண்டனையாக இருந்தது.
- ❖ உயர்சாதிக்காரருக்கும் கீழ்சாதிக்காரருக்கும் தண்டனை வேறுபட்டது. வெள்ளாளருக்கு மரண தண்டனை அளிக்கப்படவில்லை.
- ❖ கிராம சபையினர் விசாரித்தும் முடிவுக்கு வராத வழக்குகளை அரசு அதிகாரிகள் விசாரித்தனர். அதிலும் நீதி கிடைக்காதபோது மன்னன் நீதி கூறினான். அரசுக்கு எதிரான குற்றங்களை மன்னனே நேரில் விசாரித்தான்.

### 4.2.6. பாண்டியர் கால நீதி

- ❖ பாண்டிய நாட்டில் நிலவிய நீதி முறையினைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.
- ❖ பாண்டியரின் நேர்மையை **மார்க்கோபோலோ** பெரிதும் பாராட்டியுள்ளார். சிறைக்கைதிகளை முத்துக்குளிக்கும் பணியில் ஈடுபடுத்தியுள்ளனர் என்று அவர் குறிப்பின் வழி அறிந்து கொள்ள முடிகிறது.
- ❖ பிராமணனைக் கொன்ற குற்றவாளி எருமையின் காலில் கட்டப்பட்டிருக்கிறான்.
- ❖ சிவதுரோகத்துக்குக் கடுமையான தண்டனைகள் கொடுக்கப்பட்டன. பழுக்கக் காய்ச்சிய இரும்புத்துண்டைக் கையில் ஏந்தி சத்தியம் செய்வது வழக்கிலிருந்துள்ளது.
- ❖ பெண்கள் நியாயச் சபையில் இடம் பெற்ற செய்தியினைக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

### 4.2.7. விசய நகர ஆட்சியில் நீதி

- ❖ தலைமை நீதிமன்றம் தலைநகரத்தில் விளங்கியது . மாகாணத்தில் மாகாணத் தலைவர்கள் தனி நீதிமன்றங்களை நிர்வகித்தனர். பொருள் வழக்குகள் பெரும்பாலும் பஞ்சாயத்து முறையில் தீர்க்கப்பட்டன.
- ❖ மன்னனே தலைமை நீதிபதி. **தானிக்** என்பவன் உயர்ந்த மேடையில் அமர்ந்து வழக்குகளைக் கேட்டு நீதி வழங்கினான் என்று **அப்துல்ரசாக்** குறிப்பிட்டுள்ளார். நீதிபதிக்கு அமைச்சனுடைய தகுதி இருந்தது. கிருஷ்ணதேவராயரின் அமைச்சன் **சாளுவதிம்மன் தர்மபார்த்திபாலகன்** என்றழைக்கப்பட்டுள்ளான். எனவே அமைச்சனே நீதிபதியாக இருந்தமையை அறியலாம்.

### 4.2.8. மதுரை நாயக்கர் கால நீதி

- ❖ இக்கால ஆட்சி முறையினைப் **புரோன்சா** என்பவர் குறிப்பிட்டுள்ளார்.
- ❖ மன்னன் கட்டளையிட்டதும் ஆளுநர், நீதிபதிகள், உயர் அதிகாரிகள் ஆகியோர் அரண்மனைக்குச் சென்றனர். குற்றங்களை விசாரித்து இவர்கள் மன்னனுக்குச் செய்திகள் அனுப்பியுள்ளனர். தீர்ப்புகளை மன்னன் அங்கிருந்தபடியே அறிவித்திருக்கிறான். இதனால் **பிரதானியே** நீதிபதியாக இருந்திருப்பதை அறிய முடிகிறது.
- ❖ தலைநகரங்களில் மட்டுமின்றி ஒவ்வொரு சிற்றூரிலும் இரண்டு நீதிபதிகள் இருந்தனர்.
- ❖ கிருஷ்ண தேவராயர் வழக்குகளை நேரில் சென்று தீர்ப்பு வழங்க வேண்டுமென்று எழுதியுள்ளார். மன்னன் தானே நீதி வழங்கியதோடு தமது அதிகாரிகளை விசாரிக்குமாறு கூறுவதுண்டு.
- ❖ குற்ற வழக்குகளும் கோயில் அல்லது அதிகாரிகள் தொடர்பான வழக்குகளும் மன்னன் பொறுப்பில் இருந்தனவென்றும் பிற வழக்குகள் நீதிபதிகளின் பொறுப்பில் இருந்தன என்றும் **டி.வி.மகாலிங்கம்** குறிப்பிட்டுள்ளார். சிக்கலான வழக்குகளைத் தீர்க்க பிராமணர்களின் உதவியையும் நாடியுள்ளனர்.

- ❖ வட்டாரங்கள் தோறும் மரபுகள் மாறுபட்டிருந்தன. இதனால் வட்டாரங்கள் தோறும் மரபினை உணர்ந்தோர் நீதி வழங்கினர்.
- ❖ கோயிலை மேற்பார்வையிடும் அதிகாரிகளும் நீதி வழங்கியிருக்கின்றனர்.
- ❖ சமூக சமயத் தொடர்பான வழக்குகளைச் சமயத் தலைவர்கள் தீர்த்தனர். **கிருஷ்ண தேவராயர்** இராமாநுசரின் கொள்கைகளைப் பின்பற்றிய அனைத்துச் சாதியினரின் சமூக சமய ஒழுக்கங்களை ஆராய்ந்து தவறு செய்தவர்களைத் தண்டிக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்.
- ❖ சமூக சமயத் தொடர்பான வழக்குகளைச் சமயத் தலைவர்கள் தீர்த்து வைத்துள்ளனர்.
- ❖ அரசாங்க ஒற்றனிடம் சிறு அன்பளிப்பினைக் கொடுத்துத் திருடனின் அடையாளத்தைக் கூறிவிட்டால் அவர்கள் திருடனைப் பிடித்துத் தண்டிப்பர். இதனால் திருடர்கள் நாட்டில் பெரும்பாலும் இல்லை என்று **நியூனிசு** குறிப்பிட்டுள்ளார். இவர் விசயநகரத்தார் ஆட்சியில் தண்டனைகள் கடுமையாக இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார்.
- ❖ தண்டனைகள் விசய நகரத்தார் காலத்தில் கடுமையாக இருந்தது. சிறிய திருட்டுக்குக் கையும் காலும் வெட்டப்பட்டன. பெரிய திருட்டானால் கொல்லப்பட்டனர்.
- ❖ பெண்களுக்குத் தீங்கு இழைத்தவர்கள் கொலை தண்டனை பெற்றனர்.
- ❖ பெரிய அதிகாரிகள் துரோகமிழைத்தால் வயிற்றில் பெரிய கழியால் குத்திக் கொல்லப்பட்டனர். சிறிய அதிகாரிகள் இக்குற்றத்தைச் செய்தால் சந்தை வெளியில் நிறுத்தித் தலையை வெட்டினர்.
- ❖ சாதி, சமூக நிலைக்கு ஏற்ப தண்டனைகள் வழங்கப்பட்டன.
- ❖ **கிருஷ்ண தேவராயர்** மூன்று முறை மேல் முறையீடு செய்ய கொலை தண்டனை பெற்றவர்களை அனுமதிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். சமூகத்திற்கோ அரசிற்கோ இடையூறு நேருமாயின் உடனே தண்டனையை நிறைவேற்றியுள்ளார்.
- ❖ தெய்வத்திற்கு நரபலியிட வேண்டிய தேவை ஏற்பட்டால் கொலை தண்டனை பெற்றவர்கள் பயன்படுத்தப்பட்டனர். **கிருஷ்ணதேவராயர்** நீர்ப்பாசன திட்டத்திற்காக நரபலியிட சிறையில் இருந்த கொலைக் கைதியினைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டிருக்கிறார்.
- ❖ இரண்டாம் தேவராயரைக் கொல்லத் திட்டமிட்டவர்கள் உயிரோடு எரிக்கப்பட்டனர். அவர்களின் குடும்பமும் அழிக்கப்பட்டது.
- ❖ குற்றவாளிகள் கொடிய தண்டனைக்கு அஞ்சி தப்பியோடியுள்ளனர். சில குற்றவாளிகள் ஊரை விட்டும் ஓடியுள்ளனர். சாதியிலிருந்து விலக்கப்பட்டனர். சொத்துக்களை அரசு பறித்தது.
- ❖ நீதிக்குப் புறம்பாகக் கண்கள் பறிக்கப்பட்டவர்களுக்கு நிலம் வழங்கப்பட்டதைக் கன்னடக் கல்வெட்டு தெரிவிக்கின்றன.

**தன் மதிப்பீடு : 1**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. சிலப்பதிகாரம் கூறும் நீதி யாது ?
2. சான்றோர்குரிய தகுதிகளைக் குறிப்பிடுக.
3. நீதி தவறியோர்க்கு வழங்கப்பட்ட தண்டனைகள் யாவை ?
4. பாண்டியர் கால நீதிமுறையினை எழுதுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. மதுரை நாயக்கர்களின் நீதிநெறிகளை விளக்குக.
2. தமிழர் நீதிகளைத் தொகுத்தெழுதுக.

### 4.3. வரிகள்

இலக்கியத்தின் வாயிலாகச் சங்க காலத்தில் வழங்கப்பட்ட வரிகள் வாங்கிய முறை, அதிகாரிகள் ஆகியவை பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளலாம். பல்லவர் காலம் தொட்டு கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் கிடைப்பதால் வரி தொடர்பான செய்திகளை அறிவது எளிதாகிறது.

#### 4.3.1. சங்க கால வரிகள்

- சங்ககாலத்தில் **வரி** என்பது **இறை** என அழைக்கப்பட்டது. இறுக்கப்படுவதால் இறையெனப்பட்டது. மக்கள் செலுத்திய **வரியும்** பகைவர் கொடுத்த **கப்பமும்**, கடல் வாணிகர் கொடுத்த **உல்கும்** அரசனுடைய வருவாய்களாகும்.
- **இரவு** என்ற சொல்லும் வரியைக் குறித்தது. பொதுவாக வாங்கியது தவிர, குடிகளிடம் கேட்டுப் பெற்றது இரவு என்கிறார் திரு.சுப்பிரமணியன். மன்னன் மக்களிடம் அன்பு கெடாதபடி வரி வாங்க விரும்பினான். மக்களின் அன்பு கெடும்படி வரி வாங்கினால் யானை புக்க புலம் போல நாடும் கெட்டு மன்னனும் கெடுவான் என்று பிசிராந்தையார் எனும் புலவர் பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அறிவுறுத்தினார் என்று இலக்கியம் கூறியுள்ளது.
- மக்களிடம் அறநெறி இல்லாமல் வரி வாங்கினால் அம்மன்னன் ஆறலைக் கள்வனை ஒப்பான் என்கிறார் வள்ளுவர்.
- விளைச்சல் இல்லாத போது வரி தள்ளுபடி செய்ததைப் புறநானூற்றில் (பாடல்:35) வெள்ளை நாகனாரின் பாடலால் அறியலாம். திருவள்ளுவர் மன்னனுக்கு வரும் வருவாய்களைக் கூறுகையில் **உறுபொருள், உல்கு பொருள், தெறுபொருள்** என்று குறித்துள்ளார்.

#### 4.3.2. பல்லவர் கால வரிகள்

- நடுவரசும் மண்டல அரசும் வாங்கிய வரிகள் **அரச வகை, நாட்டு வகை** எனப் பெயர் பெற்றன.
- அரசாங்க வரியினைத் தவிர ஊர் மன்றங்களும் வரிகளை விதித்தன. நிலவரியே முதன்மையானது.
- ஊரில் உள்ள நத்தம், சுடுகாடு, பறைச்சேரி, கம்மாளச்சேரி, வாய்க்கால் போன்றவை வரியிலிருந்து விலக்குப் பெற்றன.
- தென்னை, பனை, பாக்குமரங்களை வெட்டினால் அதில் ஒரு பகுதி அரசுக்குரியதாகும்.

- ❖ நாட்டில் இருந்த அனைத்துத் தொழிலாளரும் வரி செலுத்தினர்.
- ❖ சிற்றூர்த் தலைவன் ஊர் வருவாயில் ஒரு பகுதியைப் பெற்றான்.
- ❖ **திருமுகக்காணம்** என்பது திருமுகம் அனுப்பியோர் செலுத்திய வரியாகும். பறையடிப்போரும் (நெடும் பறை), கத்தி செய்வோரும் (கத்திக்காணம்) செலுத்தினர்.
- ❖ நீதிமன்றம் விதித்தது **மன்றுபாடாகும். எற்சோறு** என்பது வரி அதிகாரிகள் உணவுக்காக விதித்த வரியாகும்.
- ❖ கால்நடை மேய்ப்போர், கொல்லர், வண்ணார், குயவர், கலைஞர், நெசவாளர், நெய்விற்போர், கள்ளிறக்குவோர், கழைக்கூத்தாடிகள், சூதாடிகள் ஆகியோர் அனைவரும் வரி செலுத்தினர்.

### 4.3.3. சோழர் கால வரிகள்

- ❖ சோழர் காலத்தில் நானூறு வரிகள் இருந்ததை இக்காலக் கல்வெட்டுக்களின் வழி அறிய முடிகிறது. நிலவரி, தொழில் வரி, சுங்க வரி, கட்டாய வரி, தனி வரி என இவை வகை செய்யப்படும்.
- ❖ விளைச்சலில் மூன்றில் ஒரு பகுதி வரியாகப் பெறப்பட்டது. வரியானது நெல்லாகவும் நெல்லும் காசுமாகவோ வாங்கினர்.
- ❖ நிலமானது தரம் பிரிக்கப்பட்டு அதற்கேற்ப வரி வாங்கப்பட்டது.
- ❖ ஊரார் செலுத்திய வரி **ஊரிடுவரிப்பாடு** எனப்படும். நிலவரி **ஆயம்** எனப்பட்டது. குத்தகையாளர் செலுத்தியது **குடிமையாகும். கடமை** என்பது அன்பளிப்பாகும்.
- ❖ காவிரியில் வெள்ளம் பாதிக்காமல் இருக்கக் கரையில் இருக்கும் ஊரினர் **காவிரிக்கரை விநியோமம்** என்ற வரியினைச் செலுத்தினர்.
- ❖ ஊர் அவைகளின் நிருவாகச் செலவுக்குச் **சபா விநியோகம்** என்ற வரி விதிக்கப்பட்டது.
- ❖ **தட்டார் பாட்டம், மீன் பாட்டம், தரகுப் பாட்டம்** என்பது அவரவர் தொழிலுக்காகச் செலுத்திய வரிகளாகும்.
- ❖ வண்ணாரப் பாறை, தறியிறை, சக்காணம், தறிக்கூறை, ஆட்டுக்கிறை, கண்ணாலக்காணம் என்னும் பெயர்கள் காணப்பட்டன.
- ❖ நாட்டாட்சி, ஊராட்சி என்பவை நாடு, ஊர் ஆகியவை பெற்ற வரிகளாகும்.
- ❖ காசுகளைச் சோதனையிடும் வண்ணக்கனுக்குரிய ஊதியம் **வண்ணக்கக் கூலி** என்றும், நாணயம் அச்சடிப்பார் பெற்ற கூலி **மாடைக்கூலி** என்றும் அழைக்கப்பட்டன.
- ❖ ஊருக்குப் பொதுவான எடைக்கல்லைப் பயன்படுத்த **ஊர்க்கழஞ்சு** என்ற வரியினைச் செலுத்தினர்.

### 4.3.4. பாண்டியர் கால வரிகள்

- ❖ அறிஞர் நீலகண்ட சாஸ்திரி பாண்டியர் கல்வெட்டுக்களில் காணப்படும் வரிகளின் பெயரை எடுத்துக்கூறியுள்ளார். சான்றாக: கடமை, அந்தராயம், விநியோகம், அச்சுவரி, தறியிறை, இனவரி, இடைவரி முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

- ❖ நூல் நூற்பார் செலுத்திய வரி **பஞ்சுப்பீலி.** இவை பொருளாகவும் காசாகவும் வாங்கப்பட்டன.
- ❖ முழு விளைச்சலுள்ள நிலத்திற்கே வரி வசூலிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட நிலத்திற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.
- ❖ நன்செய் நிலமானால் ஒரு மாவுக்கு ஒரு தூணி **விநியோகம்** பெறப்பட்டது. புன்செய் நிலமானால் மாவுக்கு அரை **திரமம்** (காசு) பெறப்பட்டது.
- ❖ கடை வணிகர் ஆண்டுக்கு ஆறுபணம் வரி செலுத்தினர்.
- ❖ பாடிகாவலன் தனது ஊதியத்திற்குப் பதிலாக அரசின் வரியைப் பெற்றுக்கொள்ளலாம் எனப் பராக்கிரமன் ஆணையிட்டுள்ளான்.
- ❖ மன்னனின் முடிசூட்டு விழாவின் போது வரி தள்ளுபடி செய்யப்பட்டது.
- ❖ இக்காலக் கட்டத்தில் மக்கள் வரிப்பளுவினால் மக்கள் துன்புற்றனர்.
- ❖ மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் வரிச்சுமையினால் இராமநாதபுரத்திலுள்ள ஓர் ஊரினர் காட்டில் வாழ்வதே சிறந்தது என எண்ணினாராம்.
- ❖ மக்கள் தம் பொருட்களை விற்றும் வரி செலுத்தி இருக்கின்றனர்.

### 4.3.5. விசய நகரத்தார்க்கால வரிகள்

- ❖ **கடமை, மகமை, காணம், காணிக்கை, கட்டணம், வாரம், போகம், வரி, பாட்டம், இறை, கட்டாயம்** என்று பல பெயர்களால் வரி அழைக்கப்பட்டது.
- ❖ தனிமனிதரும் நிறுவனங்களுக்கு வரி செலுத்தினர். ஒவ்வோரினமும் தனிப்பட்ட தேவைகளுக்காக வரி செலுத்தின. சில வட்டாரங்களில் வாங்கப்பட்டவை, குத்தகைக்காரர் உரிமையாளருக்குக் கொடுத்தவை என மேலும் சில வரிகள் இருந்ததை அறிய முடிகிறது.
- ❖ இக்காலத்தில் பெறப்பட்ட வரிகளை,

  **1.** நிலவரி, **2.** சொத்துவரி, **3** வணிகவரி, **4.** உத்தியோக வரி, **5.** தொழில் வரி, **6.** படைவரி, **7.** இனவரி, **8.** தண்டவரி, **9.** பிறவரிகள் என டி.வி.மகாலிங்கம் வகைப்படுத்திக் காட்டுகிறார்.
- ❖ நிலவரியானது கிராமத்தின் தன்மை, நிலத்தின் தரம் தன்மையைப் பொறுத்து வசூலிக்கப்பட்டது. பட்டுப்போன நிலமானது வரி விலக்குப் பெற்றது.
- ❖ மேய்ச்சல் நிலத்திற்கும் வீடுகளுக்கும் வரியானது விதிக்கப்பட்டது.
- ❖ இடத்திற்கு இடம் வரியின் அளவானது மாறுபட்டது. கிராம ஊழியரின் ஊதியத்திற்குத் தனிவரி உண்டு. இதற்குக் **கருணீகசோடி, தலையாரிக்கம், நாட்டுக்கணக்கு, அரசவர்த்தனை, அதிகார வர்த்தனை** என்பன சில சான்றுகளாகும்.
- ❖ கோயில்களும், சத்திரங்களும் தம் செலவுக்கு மக்களிடம் வரி வாங்கின. வணிகரிடம் கோயில் **மகமை** பெற்றது. **பிடாரிவரி, விபூதிக் காணிக்கை, ஆடிப்பச்சை, கார்த்திகைக் காணிக்கை, பிரசாதக் காணிக்கை** என்பவை சிலவாகும்.
- ❖ இடத்திற்கு இடமும் நிலத்தின் தரத்தை ஒட்டியும் வரி விகிதம் வேறுபட்டது.

**4.3.6. வரிகளின் வகைகள்**

**(i) வணிக வரி**

- ❖ பொருளை ஓரிடத்திற்குச் சென்று விற்றால் அந்த வியாபாரிக்கு **ஸ்தலாதாயம்** என்ற வரி விதிக்கப்பட்டது. மாவட்டம் விட்டு மாவட்டம் சென்று விற்றால் அதற்காக **மார்க்காதாயம்** என்ற வரி வசூலிக்கப்பட்டது.
- ❖ பொருளை விற்றவர்கள் அரசுக்கு **விற்பணம் கைவிலைக்காணம்** என்ற வரியினைச் செலுத்தினர்.
- ❖ சோப்புக்கட்டி, கண்ணாடி, வளையல், வைக்கோல், விறகு இவற்றுக்கும் வரி உண்டு.

**(ii) உத்தியோக வரி**

- ❖ வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் பதவிக்கு ஏற்ப வரி செலுத்தினர். தம் வீட்டிலிருந்த கடைக்கு மூன்று பணம் வரியாகும்.
- ❖ பரதேசிகளும் பரத்தையரும் வரி செலுத்தினர்.
- ❖ கிராம ஊழியர்கள், இடையர் போன்றோரும் வரி செலுத்தினர்.

**(iii) தொழில் வரி**

- ❖ தொழில் செய்த முதலாளிகள் தம் வருவாயின் ஒரு பகுதியை அரசுக்கு வரியாகச் செலுத்தினர். இதற்குத் தறிக்கடமை, செக்குக்கடமை, அரிசிக்காணம், பொன்வரி, செம்பொன்வரி, புல்வரி, நூலாயம் போன்றவை சான்றுகளாகும்.

**(iv) படை வரி**

- ❖ தலைநகரத்திலுள்ள கோட்டையின் காவற்படைக்குத் தனி வரி விதிக்கப்பட்டது.
- ❖ கோட்டை பீரங்கிக்குத் தனிவரி விதிக்கப்பட்டது.
- ❖ மக்கள் தாங்கள் பயன்படுத்திய கருவிகளுக்குப் **பட்டயக் காணிக்கை, சூலவரி, வில்வரி** என்ற பெயரில் வரி செலுத்தினர்.

**(v) சமூக வரி**

- ❖ மக்களிடமும், நிறுவனங்களிடமிருந்தும் வரி பெறப்பட்டுப் பிற நிறுவனங்களுக்கும் கோயில்களுக்கும் கொடுக்கப்பட்டது.
- ❖ திருமண ஊர்வலம், பந்தல், பல்லக்கு ஊர்வலம் போன்றவற்றிற்கு வரிகள் விதிக்கப்பட்டன.
- ❖ மன்னனுக்குக் குழந்தை பிறந்தால் பிறந்த நாள் பரிசாக ஆங்கிருந்த தலைவர் விலையுயர்ந்த பொருள்களைக் காணிக்கையாகச் செலுத்தினர்.
- ❖ **சம்மாதம்** என்பது பதினெட்டு சாதியர் செலுத்திய வரியாகும்.
- ❖ ஒய்வு இல்லங்களுக்கு **அங்கசாலை** என்ற வரி விதிக்கப்பட்டது.
- ❖ கிராம தேவதையின் கோயிலுக்கெனப் பெற்றது **பிடாரி வரி** ஆகும்.

### (vi) ஒறுப்புக் கட்டணம்

- ❖ குற்றங்களுக்குத் தண்டனையாக, விதிக்கப்பட்ட ஒறுப்புக் கட்டணத்தை இனத்தின் தலைவர் பெற்று அரசுக்குச் செலுத்தினர்.
- ❖ பாதுகாப்பில்லாமல் அலைந்து திரியும் மாடுகளுக்கும் உரியவரிடம் ஒறுப்புக்கட்டணம் வசூலித்தனர்.
- ❖ கீழ்ச்சாதியினர் தம் சமயச் சடங்குகளைச் செய்வார்க்குக் கொடுத்த கட்டணம் **சமயச்சாரம்** எனப்பட்டது.

### (vii) சில்லறை வரிகள்

- ❖ வாரிசு இல்லாத பிராமணர்கள் பிற பதினெட்டினத்தார்க்கும் உரிய சொத்து அரசுக்குரியதாகும்.
- ❖ அரசாங்கத்துக்கும் கோயிலுக்கும் பற்றாக்குறை ஏற்படும் பொழுது மக்கள் **கட்டாயம்** என்னும் வரியினைச் செலுத்தினர்.

### (viii) பிற வரிகள்

- ❖ குறிப்பிட்ட காலங்களில் சில தேவைகளுக்காகச் சில வரிகள் வாங்கப்பட்டன. இவை **தோரணக் காணிக்கை, தரிசனக் காணிக்கை, கால்வாசி, அனுவர்த்தனை, கோவைவர்த்தனை, அதிகாரவர்த்தனை, தட்டாயக் கோல், புரவாட்டம்** எனப் பலவகைப்பட்டன.
- ❖ ஏரி, கால்வாய், ஆறுகள் வெட்டவும் கோயில் சுவர் எழுப்பவும் அரண்மனைக்கு விறகு சுமக்கவும் குடி மக்கள் கட்டாயமாகப் பணி செய்ய வேண்டியிருந்தது.

### 4.3.7. வரி பெற்ற முறைகள்

- ❖ கிராம களஞ்சியத்தில் அரசுக்குரிய வரி நெல் காக்கப்பட்டது.
- ❖ புன்செய் வரி என்பது காசாக வாங்கப்பட்டதாகும்.
- ❖ விசயநகரத்தார் நான்கு வகையாக வரியினை வசூலித்தனர்.

1. அரசின் அதிகாரிகளே நேராகச் சென்று வாங்குவது முதல் வகை. இதற்கு **இரயத்துவாரி முறை** என்று பெயர்.
2. குறிப்பிட்ட பகுதியில் பெற வேண்டிய வரியை ஏலத்தில் விடுவது இரண்டாம் வகை. இது **கட்டுக் குத்தகை** எனப்படும்.
3. நாட்டுச் சபையும், பிராமணச் சபையும் வரி வாங்கி அரசுக்குச் செலுத்துவது மூன்றாம் வகை. வரி விதிப்பு, வரி தள்ளுபடி இச்சபைகளின் ஒப்புதலின் பேரில் நடந்தது.
4. ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையைக் கப்பமாக அரசுக்குச் செலுத்தும் முறை நான்காம் வகையைச் சாரும். **நாயங்காரர்** என்னும் தலைவர்கள் இப்பணியைச் செய்தனர்.

**தன் மதிப்பீடு : 2**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. வரி – பொருள் விளக்கம் தருக.
2. படைவரி குறித்து எழுதுக.
3. ஒறுப்புக் கட்டணம் என்றால் என்ன ?

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. சோழர் கால வரிகளைப் பற்றிக் குறிப்பிடுக.
2. வரிகளின் வகைகள் யாவை ? விவரிக்க.

### 4.4. உள்ளாட்சி மன்றம்

- தென்னகத்தில் அரசியலில் உள்ளாட்சி நிறுவனங்கள் பெற்றிருந்த இடம் சிறப்புக்குரியதாகும்.
- பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய அறிஞர்கள் சிறுகுடியரசாக விளங்கிய இந்த உள்ளாட்சி மன்றங்களைக் கண்டு போற்றியுள்ளனர்.
- **சார்லஸ் மெட்காஃப்** என்பர், “கிராமங்கள் சிறிய குடியரசுகளாகும்; அவற்றுக்குத் தேவையான ஏறத்தாழ எல்லா வசதிகளையும் அவை பெற்றிருந்தன. ஏறத்தாழ அவை வெளியாரின் தொடர்பின்றி உரிமை பெற்ற சமுதாயமாக விருந்தன”என்பார்.

### 4.4.1. ஊராட்சி மன்றங்களின் தோற்றம்

- தோற்றத்தினை வரையறுத்தல் கடினம். ஆனால் பழமை வாய்ந்தது என்பது தெளிவாகத் தெரிகிறது.
- நடுவணரசினை நாடாமல் மக்கள் தம்மைத்தாமே ஆண்டு கொண்டதால் மன்னனுக்குச் சுமை குறைந்தது. இம்மன்றங்கள் தோன்றுவதற்கு ஏற்ற சூழ்நிலைகள் அன்று இருந்தன.

சிறிய சமுதாயமாக விளங்கியதால் அனைவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழ்ந்தனர். பொருளாதார அடிப்படையே இம்மன்றங்கள் தோன்ற முதற்காரணம் எனலாம்.

- மன்னர்கள் பிராமணர்களுக்கும் கோயில்களுக்கும் நிலத்தைத் தானமாக வழங்கினர். பிராமணர்கள் நிலங்களைப் பயிரிட்டுப் பகிர்ந்து கொண்டனர். மன்னனிடம் சலுகைகளைப் பெறக் கூட்டமாகச் செயல்பட்டனர். ஒன்று கூடிக் கூட்டங்களை நிகழ்த்தினர். இதனால் தொழிலாளர்கள் தமக்கு வேண்டிய சலுகைகளைப் பெறுவதற்கும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் சங்கங்களை அமைத்துக் கொண்டனர். இவ்வாறு ஊராட்சி மன்றங்கள் தோற்றம் பெற்றன.

### 4.4.2. சங்ககாலத்தில் உள்ளாட்சி மன்றங்கள்

- இக்காலத்தில் **அவை, மன்றம், அம்பலம், பொதியில்** போன்ற பெயர்களில் ஊராட்சி மன்றம் விளங்கியது.
- அம்பலங்களில் வழிப்போக்கர்கள் தங்கிச் சென்றனர். விழாக்கள் நடத்தப்பட்டன. ஊர் மக்கள் கூடிப் பேசினர்.

- ❖ உறையூரில் இருந்த மன்றமானது, ''மறங்கெழுசோழா் உறந்தை அவையத்து அறங்கெட அறியாதாங்கு'' என சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது. மன்றங்களானது தண்டனை வழங்கப்படும் இடமாகவும் விளங்கியது. நீதி வழங்குவதற்கும் இதுவே இடமாக விளங்கியது. சான்றோர்கள் தலைவர்களாக இருந்து வழக்குகளைக் கேட்டு முடிவு செய்தனர்.

### 4.4.3. பல்லவர் காலத்தில் உள்ளாட்சி மன்றங்கள்

- ❖ கி.பி. 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர்கள் நாட்டில் மட்டும் 20 சபைகள் செயல்பட்டன. இவை பெரும்பாலும் தொண்டை நாட்டில் இருந்தன. உத்திரமேரூர், பெருங்குழி, வெண்குன்றம், அன்பில், பெரும்புலியூர், மணலி, சீயபுரம், புல்வனூர், திருத்தணி, ஆடம் பாக்கம், திருவல்லம், உக்கல் எனும் பல இடங்களில் சபைகள் செயலாற்றின.

### 4.4.4. பாண்டியர் காலத்தில் உள்ளாட்சி மன்றங்கள்

- ❖ பாண்டிய மாறன் சடையன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டினால் அக்காலச் சபை நடவடிக்கைகளை அறிய முடிகிறது.
- ❖ நன்னடத்தை உடையவரும் தருமம் உணர்ந்தவர் மட்டுமே சபை நடவடிக்கைகள் கலந்து கொள்ள முடியும். இவர்கள், சபை முடிவினை ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஐந்து காசுகள் தண்டம் விதித்திருக்கின்றனர்.

### 4.4.5. சோழர் காலத்தில் உள்ளாட்சி மன்றங்கள்

- ❖ உத்திரமேரூரில் கிடைத்த கல்வெட்டினால் முதலாம் பராந்தகன் காலத்திற்கு முன்பே ஊர்ச்சபை வளர்ச்சி பெற்றிருந்ததை அறிய முடிகிறது. கம்பவர்மன் காலத்தில் வாரியர்கள் இருந்துள்ளனர். ஏரிவாரியப் பெருமக்களும், சம்வத்சர வாரியர்களும் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- ❖ மூன்றாம் குலோத்துங்கன்காலக் கல்வெட்டொன்று தேர்தலை **வாரணம் செய்தல்** என்று குறிப்பிட்டுள்ளது. செயற்குழுவிற்கு வாரணம் என்ற பெயர் வந்துள்ளது.
- ❖ முதற் பராந்தகன் காலத்தில் உத்திரமேரூர்ச் சதுர்வேதி மங்கலத்தில் இருந்த சபை அவ்வூருக்குரிய சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய முறைகளை முடிவு செய்தது.
- ❖ ஓர் ஊர் 30 குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டது. முப்பது குடும்பமும் தகுதியுள்ள ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

### 4.4.6. உள்ளாட்சி மன்ற உறுப்பினருக்கான தகுதிகள்

1. வரி செலுத்துவதற்குத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.
2. சொந்த மனையில் குடியிருக்க வேண்டும்.
3. முப்பது முதல் அறுபது வயதினை உடையவராக இருத்தல் வேண்டும்.
4. வேதத்திலும், சாஸ்திரத்திலும் பயிற்சி உடையவராக இருத்தல் வேண்டும்.
5. தூய வழியில் பொருள் ஈட்டுபவராக இருத்தல் வேண்டும்.
6. கடந்த மூன்று வருடங்களாக எந்த வாரியத்திலும் பணியாற்றி இருக்கக் கூடாது.
7. வாரியத்திலிருந்து ஓய்வு பெற்றவராக இருத்தல் கூடாது.

#### 4.4.7. உறுப்பினராவதற்குத் தகுதியற்றவர்கள்

- முன்னர் வாரிய உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாதவர்களும் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களும் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர்.
- பழி பாவங்களைச் செய்தவர்களும் பாவத்திற்குப் பரிகாரம் தேடியவர்களும் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர். வன்முறைச் செயல்களில் ஈடுபட்டோரும் பிறர் பொருளைப் பறித்துக் கொண்டோரும் தகுதியிழப்பர்.
- தண்டனையாகக் கழுதையேறியவர்களும், கள்ளக் கையெழுத் திட்டவர்களும், பெண்களிடம் தவறாக நடந்து கொண்டவர்களும் உறுப்பினராவதற்குரிய தகுதியற்றவர்கள்.

#### 4.4.8. தேர்தல் நடைமுறை

- ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் தனித்தனியாகக் கூடித் தகுதியாகாதவர்களின் பெயரை முடிவு செய்து ஓலையில் எழுதி அவற்றைச் சேர்த்துக் கட்டி, எந்தக் குடும்புக்குரியது என்று காட்ட வாயோலை தீட்டிக் குடத்திலிட்டனர்.
- தேர்தல் நாளன்று ஊர் பெரியவர்களின் முன்னிலையில் இந்த ஓலையினை ஒரு குடத்தில் இட்டு குலுக்கிக் கண்பார்வையற்ற சிறுவனைக் கொண்டு ஒரு கட்டினைத் தேர்ந்தெடுப்பர். அதனைக் கலைத்து வேறோர் குடத்திலிட்டுக் குலுக்கி அதிலிருந்து ஒர் ஓலையினை எடுத்து மத்தியஸ்தன் கையில் கொடுக்க அதை அவன் படிப்பான். படித்தபின் அப்பெயர் தனியே எழுதிக் கொள்ளப்படும். 30 குடம்புகட்கும் 30 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இதில் வயது முதிர்ந்த பன்னிருவர் **சம்பவத்சரவாரிய உறுப்பினராகினர்.** பன்னிருவர் **தோட்டவாரியாகவும்**, ஏனையோர் **ஏரிவாரியாகவும்** ஆக்கப்பட்டனர்.
- இந்த முப்பது உறுப்பினர்களும் ஓராண்டுக்கு ஊதியமில்லாமல் பணியாற்றினர். தவறு செய்தால் நீக்கப்பட்டனர். இறுதியில் கணக்கைக் காட்ட வேண்டும். ஓராண்டு முடிந்து மீண்டும் தேர்தல் நடத்தப்படும்.

#### 4.4.9. பல்வேறு வாரியங்கள்

- வாரியங்கள் இடந்தோறும் காலந்தோறும் மாறுபட்டிருந்தன. திருப்பாற் கடல் என்னும் ஊரில் 1. குடும்ப வாரியம், 2. தோட்ட வாரியம், 3. கழனி வாரியம், 4. வடகழனி வாரியம் என்ற வாரியங்கள் இருந்தன.
- காவேரிப்பாக்கத்தில் எட்டு வாரியங்கள் இருந்தன. அவை.

  1. சம்வத்சர வாரியம் 2. தோட்ட வாரியம், 3. கழனி வாரியம், 4. பஞ்சவார வாரியம், 5. கணக்கு வாரியம். 6. கலிங்கு வாரியம், 7. தடிவழி வாரியம், 8. ஏரி வாரியம் என்பனவாகும்.

#### 4.4.10. உறுப்பினர் எண்ணிக்கையும் செயல்பாடும்

- சபையில் இடம் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் இடந்தோறும் வேறுபட்டிருந்தது. இராசகேசரிவர்மன் காலத்தில் தொட்டியத்துச் சபையில் 48 பேர் இருந்துள்ளனர்.
- சோழர்கால அவைகள் முழு உரிமை பெற்றிருந்தன. தமக்கான விதிகளைத் தாமே வகுத்துக் கொண்டன.

- செம்பியன் மாதேவியில் விளக்கு எரிக்கும் செலவினைக் குறைக்கப் பகலில் மட்டும் சபையைக் கூட்டிட முடிவு செய்துள்ளனர்.
- ஊருக்குப் பொதுவான இடங்களில் சபை கூடியது. மரத்தடி, கோயில், மண்டபங்களும், நந்தவனங்களிலும் சபை கூடிற்று.
- பறை சங்கு எக்காளம் ஊதி மக்களுக்குச் சபை கூடுவதை அறிவித்தனர்.

### 4.4.11. பல்வேறு அவைகளின் பணிகள்

- பிராமணர்கள் குடியிருந்த இடங்களில் **ஊர்ச்சபை, மகாசபை** என்ற அவைகள் இருந்தன. சில இடங்களில் பிராமணர்க்குரிய சபையும் பெரியோர்களுக்குரிய அவையும் இருந்தன.
- புதுக்கோட்டை வட்டத்தில் குமாரமங்கலத்திலும் அமணர்குடியிலும் இரண்டு அவைகள் இருந்துள்ளன. ஊர்ச்சபைகளில் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.
- ‘ஊராக இசைந்த ஊரோம்’ என்னும் குறிப்பால் ஊர்ச்சபையில் அனைவரும் கலந்து கொண்டனர் என்பதை அறியலாம்.

**(i) நாட்டுச்சபை**

- நாடு என்னும் ஆட்சிப் பிரிவுக்கு உரிய சபை **நாடு** எனப்பட்டது. செல்வாக்குள்ளவர்கள் இதில் உறுப்பினராக இருந்துள்ளனர்.

**(ii) மண்டல சபை**

- பல நாட்டு உறுப்பினர்கள் இணைந்து செயல்பட்ட சபை **மண்டலசபை.** இதன் உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது தெரியவில்லை.

**(iii) ஊரவை**

- நிலம் தொடர்பான பணிகளை இது செய்தது. வரி விதிக்கவும், வாங்கவும் மாற்றங்களைச் செய்து கொள்ளவும், தள்ளுபடி செய்யவும் சபை உரிமை பெற்றிருந்தது.
- நீர் நிலைகளையும், அறப்புறங்களையும் மேற்பார்வை செய்தன.
- சில இடங்களில் நிலங்களைக் கூட்டாக அனுபவித்தனர். இது **கணபோகம்** எனப்படும்.
- சமூகம் முழுதும் கூட்டாக அனுபவித்தல் உண்டு. பங்கின் அளவிற்கு ஏற்ப வருவாய் பங்கிடப்பட்டது.
- சில ஊர்களில் சில பகுதிகள் தனியுடைமையாக இருந்தன.
- பொதுவுடைமையாகக் கருதப்பட்ட நிலங்கள் நல்லது, நடுத்தரமானது, கெட்டது என மூன்றாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. சில காலத்திற்குப் பிறகு அது மாற்றிக் கொடுக்கப்பட்டது.
- இத்தகைய செயல்களால் வெளியில் இருந்து வருபவர்கள் நிலம் வாங்குவதனைத் தடுத்தனர்.
- பிராமணர் சூத்திரரிடம் நிலத்தை விற்றால் அவர்களைச் சாதியிலிருந்து விலக்கி வைத்தனர்.
- கோயிலிலிருந்து கடன் பெற்று ஊருக்கு நன்மை செய்தனர். இந்தக் கடனைத் தீர்க்க ஓரிடத்தின் அங்காடிக் கூலியைக் கோயிலுக்குக்

கொடுத்தனர். **ஸ்ரீகாந்தச் சதுர்வேதி மங்கலத்தார்** கோயில் நிலத்துக்கு வரி விலக்களித்தனர்.

- வரி செலுத்தாதவர்களின் நிலத்தினை ஏலம் விட்டுப் பொருளைக் கருவூலத்திற்குக் கொடுக்கச் சபைக்கு அதிகாரம் இருந்தது.

**(iv) சபையின் அலுவலர்களின் பணி**

- சபையின் கணக்கை எழுதியவன் **கணக்கன்** அல்லது **கரணத்தானாவான்.**
- சபை நடவடிக்கையை எழுதியவன் **மத்தியஸ்தன்.** சரியாகப் பணி செய்யாதவருக்குத் தண்டனை உண்டு. தவறு செய்தோர் உடன் பணியிலிருந்து நீக்கப்பட்டான். சொந்த கிராமத்தை விட்டு வேறிடத்தில் பணி செய்யத் தடையிருந்த, இதிலிருந்து மீறியவர்கள் தண்டனை பெற்றனர்.

### 4.4.12. கிராம ஆட்சியின் அழிவு

- கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு வரையில் படிப்படியே வளர்ந்து வந்த கிராம சபைகள் நாயக்கர்கள் ஆண்ட கி.பி. பதினைந்து பதினாறாம் நூற்றாண்டில் நலியத் தொடங்கியது.
- 17, 18–ஆம் நூற்றாண்டில் முழுவதுமாக அழிந்தது. இதற்குக் காரணம் கூட்டுணர்வு அழிந்து தனி உரிமை உணர்ச்சி வளரத் தொடங்கியதாகும். மேலும் தனிமனிதர்கள் சமுதாயத்தை எதிர்த்து அரசிடம் முறையிட்டுள்ளனர். இதனால் சபைகள் செயல்பட இயலாத நிலை ஏற்பட்டது. அதிகாரிகளின் ஊழலும் இதற்குக் காரணமாகும்.
- சோழர்களும் பாண்டியர்களும் கிராம சபைகளைப் போற்றி வளர்த்தது போல நாயக்க மன்னர்கள் செய்யவில்லை.
- ஆங்கில ஆட்சிக்காலத்தில் கிராம சபையானது அடியோடு ஒழிந்தது.
- நீதி, நிருவாகம் போன்றவை நீதி மன்றங்களின் கைக்கு மாறியது. அமைதியைக் காக்கும் பொறுப்பு காவல் துறைக்கு மாறியது.
- பன்னெடுங் காலமாக மக்களுக்காகப் பணியாற்றி வந்த கிராமப் பஞ்சாயத்து முறை அடியோடு அழிந்தது. இயந்திரத் தொழிலின் பெருக்கத்தால் திறமை மிகுந்த தொழிலாளர்களின் தொழில்கள் நசிந்தன. நகரங்கள் வளர்ந்து கிராமங்கள் வறுமையுற்றன. தொழிலாளர்களும் வணிகர்களும் கல்வி, தொழில் முதலானவற்றிற்காக நகரங்களை நோக்கிச் சென்றனர். கிராம வாழ்வு முற்றிலும் சீர் கெட்டது. கிராமப் பஞ்சாயத்து முறையும் அழிந்தன.

**தன் மதிப்பீடு : 3**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. பல்லவர்கள் கால உள்ளாட்சி மன்றம் குறித்து எழுதுக.
2. வாரியங்களின் பல்வேறு வகைகளைக் குறிப்பிடுக.
3. ஊரவைகளின் பணிகள் யாவை ?

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. சோழர் காலத் தேர்தல் முறையை விளக்குக.
2. உள்ளாட்சி மன்ற உறுப்பினராவதற்குரிய தகுதியுடையார் யார் ? தகுதியற்றோர் யார் ? விவரிக்க.

### 4.5. சாதி வளர்ச்சியும் பெரியார் செயல்பாடுகளும்

#### 4.5.1. பண்டைக்காலத்தில் சாதிமுறை

- சங்ககாலத்தில் மக்கள் நில இயற்கையை ஒட்டியும் தொழில்களையொட்டியும் பிரிக்கப்பட்டிருந்தனர். **பிராமணர்** உயர்நிலையில் இருந்தனர். சிலர் **புலையர் இழிசினர்** என்று குறிக்கப்பட்டிருந்தனர்.
- களப்பிரர் காலம் முதல் இச்சாதிமுறை படிப்படியே வளர்ந்து இறுகி மக்களைப் பல்வேறு குலப்பிரிவாகவும், கோத்திரப் பிரிவாகவும் பிரித்து, மக்கள் குருதி சிந்தவும், அமைதி குலைந்திடவும் இடமளித்தது.
- கி.பி. 500 முதல் 900 வரையிலான காலப் பகுதியில் சாதி வேற்றுமை கடுமை அடைந்ததைக் **கே.கே.பிள்ளை** தம் தென்னிந்திய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்.
- இக்காலக்கட்டத்தில் பல்வகை வருணத்தார் பல்வேறு தொழில்களைச் செய்துள்ளனர். பிராமணர்கள் வணிகத்திலும், சிற்பத்தொழிலும் ஈடுபட்டனர். **சத்திரியர்** பலர் வாணிகம் செய்துள்ளனர். **சூத்திரர்** பிரிவில் பல்வேறு புதுச்சாதிகள் தோன்றின.
- எட்டாம் நூற்றாண்டில் பாண்டியர் கல்வெட்டுக்கள் **வைத்தியக் குலத்தினர்** அரசியலில் உயர்ந்த பதவிகள் வகித்ததைக் குறிப்பிட்டுள்ளன.
- **சண்டாளர்** என்பவன் யாருமற்ற பிணத்தைப் புதைக்கும் தொழிலைச் செய்ததாகவும், இவன் தீண்டத்தகாதவனாகக் கருதப்பட்ட நிலையினையும் ஊருக்கு வெளியே வாழ்ந்த நிலையையும் **பாகியான்** குறிப்புகளின் மூலம் அறியலாம்.
- சேர நாட்டில் தீண்டாமைக் கொள்கை **நம்பூதிரிகளால்** போற்றப்பட்டது. மிருதி நூல்கள் சாதிக்கட்டுப்பாடுகளைக் கூறியுள்ளன. மேலினத்தவருக்கும் தாழ்ந்த மக்களுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டன.
- இழிந்த சாதியராகிய பாணர்களுக்கு அடியவர்கள் சிறப்பு செய்திருக்கின்றனர். அடியவர்கள் வேற்றுமை பாராட்டவில்லை என்றாலும் சமூகத்தில் வேற்றுமை பெருகியது.

#### 4.5.2. சோழர் காலத்தில் சாதி

- கி.பி. 9–ஆம் நூற்றாண்டு முதல் 13 நூற்றாண்டு வரையிலான சோழர் ஆட்சிக்காலத்தில் பார்ப்பனர்கள் மேன் மேலும் வளர்ச்சிப் பெற்றனர். வடநாட்டுப் பிராமணர்கள் இங்கே குடியேறினர். ஆயிரக்கணக்கான வேலி நிலங்கள் பிரமதேயங்களாகத் தரப்பட்டன.
- தமிழ் மன்னரும் தமிழ் மக்களும் வரையாது வழங்கிய வாழ்க்கை நலன்களைப் பெற்ற பிராமணர்கள் தனித்து வாழ்ந்து மக்களிடையே குல வேறுபாடுகளைப் பெருக்கித் தமிழர் அனைவரையுமே சூத்திரர் என்ற இழிகுலத்தினராகக் கருதிக் கோயில்களிலும் மடங்களிலும் ஏனைய பொது அறச்சாலைகளிலும் ஒதுக்கி வைத்துவிட்டார்கள். “தேவார ஆசிரியர்கள் காலத்தில் தமிழர் கருவறைக்குள் செல்லும் உரிமை பெற்றிருந்தும் சோழர் பாண்டியர் காலத்தில் அவ்வுரிமையை இழந்துவிட்டார்கள்” என்றும் கே.கே. பிள்ளை கூறியுள்ளார்.
- அரசாங்க செல்வாக்கை என்றென்றும் நிலையாக்கிக் கொள்ளப் பிராமணர் திட்டமிட்டு வெற்றி பெற்றனர். சாதி ஒழுக்கத்தைக் காத்தலே தம் கடன் என

மன்னர்கள் பாராட்டிக் கொண்டனர். பிராமணர்களைப் பாராட்டும் நூல்களும் எழுந்தன.

### 4.5.3. வலங்கை–இடங்கை பூசல்கள்

- குல வேறுபாடுகளில் கொடுமையான விளைவுகளுக்குக் காரணமாக இருந்தது **வலங்கை–இடங்கை** பிரிவாகும்.
- கே.கே. பிள்ளை இது பற்றி விரிவாக தமது நூலில் (தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்) குறிப்பிட்டுள்ளார்.
- இடங்கைப் பிரிவினரை வலங்கைப் பிரிவினரும் வேளாளரும், வன்னியரும் கொடுமைப்படுத்தி உள்ளனர். இடங்கையினர் பெரும்பாலும் வணிகராகவும் பிற தொழிலாளராகவும் இருந்தனர்.
- இடங்கையினர் அளவுக்கு மீறிய வரித்தொல்லைகளால் இன்னல் உற்றனர்.
- வலங்கை–இடங்கைப் பிரிவினர் ஒன்று கூடி பிராமணர்களை எதிர்த்துள்ளனர்.
- அரசாங்க அதிகாரிகளும் நில உடைமையாளரும் பிராமணர் செய்த அநீதிகளை எதிர்த்தனர்.
- இடங்கைப் பிரிவினருக்குச் சுமையாக இருந்த சுங்கவரி காரணமாகக் கலகம் செய்தமையால் தான் முதலாம் குலோதுங்கன் சுங்கவரியை நீக்கினான் என்று வரலாறு கூறும்.
- சில குலத்தினர் ஒன்று கூடி அரசியல் போராட்டங்களில் தலையிட்டுள்ளனர்.
- வலங்கை–இடங்கை குலத்தினர் அன்றி இரதக்காரர் என்ற பிரிவினரும் இருந்துள்ளனர். உயர் குலத் தந்தைக்கும் தாழ்குலப் பெண்ணுக்கும் பிறந்தவர்கள் **அனுலோமர்கள்.** இரதக்காரர் இந்த பிரிவினைச் சார்ந்தவர்கள்.
- சத்திரியத் தந்தைக்கும் வைசியத் தாய்க்கும் பிறந்தவர்கள் **மாகிஷ்யர்கள்** என்று அழைக்கப்பட்டனர்.
- வைசியத் தந்தைக்கும் சூத்திரத் தாய்க்கும் பிறந்தவர்கள் **கருணீகர்கள்** என்று அழைக்கப்பட்டனர். இவ்வாறு சாதிகள் பெருகின.
- தமிழகத்தில் கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் முஸ்லீம்களின் குடியேற்றம் ஏற்பட்டது. மாலிகாபூரில் படையெடுப்புக்கு முன்பே பாண்டிய நாட்டு படை வீரராக இருந்துள்ளனர்.
- அரேபியர், சீனர், மலேயர், போர்ச்சுக்கீசியர் இங்குத் தொழில் புரிந்தனர். பொருளாதாரத்தின் அடிப்படையில் நூற்றுக்கணக்கான குலங்கள் பெருகி வளர்ந்தன என்கிறார் கே.கே. பிள்ளை.
- **கம்மாளர்** என்னும் பிரிவினர் தட்டார், தச்சர், கருமார், கன்னார், சிற்பிகள் என்ற ஐந்து பிரிவினர் இருந்தனர். இவர் ஐவரும் ஒன்று கூடுவது ஒரு சட்டத்தால் தடை செய்யப்பட்டதும் உண்டு.
- இக்காலத்தில் சிறப்பு பெற்ற ஒரு சாதி **கைக்கோளராவார்.** நாயக்கர் என்ற பட்டமுடைய குதிரைச் செட்டிகளும் இருந்தனர். காஞ்சிபுரக் கல்வெட்டு ஒன்று இவர்களுடைய சங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.
- சோழர் காலத்தில் 98 குலங்கள் இருந்ததை அச்சுதராயரின் கல்வெட்டால் அறிந்து கொள்ளலாம்.

- ❖ விஜய நகரத்தார் காலத்தில் பறையரின் நிலைகள் மிகவும் இழிந்து காணப்பட்டன. அவர்களுக்கெனத் தனித்த சேரிகள் அமைந்தன.
- ❖ 19 ஆம் நூற்றாண்டில் ஒரே குலத்தினர் அவரவர் வாழ்ந்த இடங்களுக்கு ஏற்றபடி பலமொழிகளைப் பேசினர்.
- ❖ பிராமணர்கள் ஒரு பிரிவினர் தம்மை வைணவர் என்று கூறிக்கொண்டனர். அவர்களே ஐயங்காரர் ஆவார்.
- ❖ சிவன் கோயில் பூசாரிகளாகிய ஆதிசைவர்களின் சமூக அமைப்பு தனியானது. இவர்களோடு ஏனைய பிராமணர் நட்புறவோடு பழகுவதைத் தவிர்த்தனர். ஆதி சைவர்கள் சிவ தீக்கை கொடுக்கும் உரிமையுடையவராகக் கருதப்பட்டனர்.
- ❖ கருணீகர் என்னும் குலத்தில் நான்கு பிரிவுகள் இருந்தது. சீர் கருணீகர், சரட்டுக் கருணீகர், கைகாட்டிக் கருணீகர், மற்றவழிக் கருணீகர் என்போராவர்.
- ❖ 19–ஆம் நூற்றாண்டில் ஒதுக்கப்பட்ட குலத்தவர்க்கு விடிவு காலம் ஏற்பட்டது. பலர் கிருத்துவர் ஆனதால் சமூகத்தில் உயர்வுபெற்றனர். இந்திய ஐரோப்பியர் என்னும் சட்டைக்காரரும் தோன்றினர்.
- ❖ இக்காலத்திலும் வலங்கை இடங்கை பூசல்கள் தொடர்ந்தன. காஞ்சியில் தென்கலை, வடகலை வைணவர்களுக்குள் பூசல் ஏற்பட அரசு தலையிட்டு உள்ளது.
- ❖ 20–ஆம் நூற்றாண்டு புதுமைகள் நிறைந்த நூற்றாண்டாக இருந்தாலும் சாதி உணர்வு நீக்கப்படவில்லை. செல்வாக்குடனேயே இருந்தன.
- ❖ ஒவ்வொரு சாதியினரும் சங்கங்களை வைத்துக் கொண்டனர். எதிர்ப்புகளுக்கு இடையே கலப்பு மணங்களைச் செய்து கொண்டனர்.
- ❖ சுயமரியாதை இயக்கம் பிராமண ஆதிக்கத்தை எதிர்த்தது. ஆனால் சாதி ஒழிப்புக்காக அவ்வியக்கம் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. அந்தளவுக்கு அது வேரூன்றி உள்ளது என்பது அதன் வலிமையைக் காட்டுகிறது.

### 4.5.4. சாதி எதிர்ப்பும் சான்றோர் முயற்சியும்

தமிழகத்தில் சாதிப்பிரிவு தொழில்களின் அடிப்படையில் அமைந்திருப்பினும் பிற்காலத்தில் சாதியின் அடிப்படையில் உயர்வு தாழ்வு தோன்றியது. சாதியினுள் உட்பிரிவுகள் பல தோன்றின. இதனால் சாதிப் பூசல்களும் தோன்றின. சான்றோருலகம் இதைக் கண்டித்தது. பெரியோரின் முயற்சிகள் யாவும் தோல்வியைத் தழுவின.

- ❖ ஆரியப்படை கடந்த **பாண்டியன் நெடுஞ்செழியன்** கல்வி பற்றிப் பாடிய ஒரு பாடலில் 'கல்வியறிவு இவ்வேறுபட்டவர்களிடையே இணக்கம் ஏற்படுத்த வல்லது' என்பதிலிருந்து **வேறுபட்டவர்கள்** என்பது சாதிப்பிரிவினை உடையவர் என்பதை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.
- ❖ **திருவள்ளுவரும்** மேற்குடிப்பிறந்த கல்லாதவரை விடக் கீழ்க்குடியில் பிறந்த கற்றோர் பெருமை பெறுவர் என்கிறார். (குறள்:409)
- ❖ சமண நூலான **நாலடியாரும்** 'கல்வியறிவினால் கீழ்க்குடிப்பிறந்தார் உயர்வடைய முடியும்' என்கிறது.

- கோத்திரத்தாலும், குலத்தாலும், செல்வத்தாலும், அமைவதாகக் கருதும் சிறப்புகள் சிறப்பாகாது. இறையன்பால் அமையும் சிறப்பே சிறப்பென்று **பக்தி இலக்கியங்கள்** எடுத்துரைத்துள்ளன.
- சித்தர் மரபில் தோன்றியவராகக் கருதப்படும் **சிவவாக்கியர்**, **அகப்பேய்ச் சித்தர்**, **கொண்கணச்சித்தர்**, **வள்ளலார்** போன்றோர் சாதி பேதங்களைக் கண்டித்தவராவார். சான்றாக,

  ''சாதிப் பிரிவினிலே தீ மூட்டுவோம்'' (சிவவாக்கியர்)
  ''சாதி பேதம் இல்லை – அகப்பேய்
  தானாக நின்றவர்க்கு'' (அகப்பேய்ச் சித்தர்)
  ''சாதிபேதம் சொல்லுகிறீர் – தெய்வம்
  தானென்ப தொன்றுடன் பேதமுண்டோ ?'' (கொண்கணச் சித்தர்)
  ''சாதி சமய சழக்கைவிட்டேன்'' (வள்ளலார்)

  போன்ற வரிகளை எடுத்துரைக்கலாம்.
- ஆபுத்திரன் பிறப்பைப் பழித்த வைதிகர்களை அவன் சாடுமிடம் **மணிமேகலை**யில் குறிப்பிடத்தக்கதாகும்.
- பெரியோர்களின் கண்டனக்குரல் மக்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தவில்லை. நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டது. சமூக வளர்ச்சிக்குச் சாதி குல வேறுபாடுகள் தடையாக இருந்தன.
- காந்தியடிகளும், இந்தியத் தலைவர்களும், சமூக ஒற்றுமைக்கு உழைத்தனர். தீண்டாமையை எதிர்த்துப்போராட்டம் நிகழ்த்தினர்.

  ''சாதிக் கொடுமைகள் வேண்டாம்–அன்பு
  தன்னில் செழித்திடும் வையம்''

  என்று பாடி மக்களுக்கு எழுச்சியூட்டியவர் **மகாகவி பாரதியாராவார்.**
- ''நந்தனைப் போலொரு பார்ப்பான் இந்த நாட்டினில் இல்லை'' என்றும் கூறியவர் மகாகவி. அரிசனத் தோழன் ஒருவனுக்கும் பூணூல் அணிவித்துப் புரட்சிக்கண்டவரும் இவரே ஆவார்.
- **பாவேந்தர்** கவிதைத்துறையில் மகாகவி பாரதியையும், சமூகத்துறையில் பெரியாரையும் தலைவராக ஏற்றுக் கொண்டவராவார்.

  ''இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி
  இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே''
  என்று சாதியைப் பற்றிப் பாடி மனம் நொந்தார். மேலும்,
  ''பிறவியில் உயர்வும் தாழ்வும் சொலல் மடமை–இந்தப்
  பிழை, நீக்குவதே உயிருள்ளவரின் கடமை''

  என்றும்,

  ''சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா ?
  சமய பேதம் வளர்த்தே தளர்வது நன்றா ?
  மாந்தரிற் சாதி வளர்ப்பது சரியா ?
  மக்கள் ஒரே குலமாய் வாழ்வது சரியா ?''

  என்றும் பாடி சாதியை எதிர்த்துக் குரல் எழுப்பினர்.

### 4.5.5. சாதி எதிர்ப்பில் பெரியாரின் செயல்பாடுகள்

- **தந்தை பெரியார்** இயக்கரீதியாகச் சாதி வேறுபாட்டை எதிர்த்தார். இவருக்கு முன்பு சாதி எதிர்ப்பு என்பது தனிப்பட்டவரின் குரலாக இருந்தது.
- பெரியார் "கொடுமைப்படுத்தித் தாழ்த்தப்பட்ட ஒரு மாபெரும் சமூகம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையோடும் சாந்தத்தோடும் அகிம்சா தர்மத்தோடும் இருக்கவேண்மென்று விரும்புகிறீர்கள்'' என்று 1920லேயே தனது, சொற்பொழிவு ஒன்றில் குரல் கொடுத்த பெருமைக்குரியவராவர்.
- கேரளத்தில் **வைக்கம்** என்பது சிறு நகரமாகும். முக்கியமான தெருக்களில் தீண்டத்தகாதவர்கள் நடமாடக் கூடாது; குறிப்பாக வைக்கம் கோயிலைச் சுற்றியிருந்த பகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்களும், கீழ்ச்சாதி மக்களும் நடக்கக் கூடாது; எதிரிலுள்ள தெருக்களுக்குப் போகவேண்டும் என்றாலும் ஒன்றரைக் கிலோமீட்டர் தூரம் சுற்றிக்கொண்டு தான் போகவேண்டும் என்ற இக்கொடுமையே பெரியாரின் வைக்கம் போராட்டத்திற்குக் காரணமாகும்.
- செயலில் நிறைவேற்றத்தக்க வகையில், சாதியை எதிர்த்து இயக்கத்தினை முதன்முதலாக அமைத்துப் பாடுபட்டவர் தந்தை பெரியாரே ஆவார். வைக்கத்திலே அவர் நடத்திய போராட்டம் அவருக்கு **வைக்கம் வீரர்** என்ற பெயரைப் பெற்றுத்தந்தது.
- பெரியாரின் சுயமரியாதை இயக்கம் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டது. அவருடைய கொள்கைகளும் அறிவுரைகளும் தமிழகமெங்கிலும் பரவிற்று.
- சுயமரியாதைப் படிப்பகங்கள் நாடெங்கும் திறக்கப்பட்டன. இக்கழகங்களில் பிராமணரல்லாத இளைஞர்கள் உறுப்பினராயினர்.
- பெரியார் வாழ்ந்த வழியை **அறிஞர் அண்ணாவும்** பின்பற்றினார். ஆற்றல் வாய்ந்த அவரது எழுதுகோல், பேச்சாற்றல் இரண்டும் சமூகச் சீர்திருத்தத்தினை முதற்பணியாகக் கொண்டனர். கலப்பு மணத்தையும் ஆதரித்தார் அறிஞர் அண்ணா.
- கல்வியே சாதியத்தைக் களைவதற்குரிய கருவியாகும். இதன் காரணமாகவே, சாதி வேறுபாட்டுணர்ச்சி மங்கி வருகிறது. இச்சாதி வேறுபாடு வேர்விட்ட மரம் என்றாலும் சாதி மரம் வீழ்ந்து மடியும் காலம் நெடுந்தொலைவில் இல்லை எனலாம்.

**தன் மதிப்பீடு – 4**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. சோழர் காலத்தில் பார்ப்பனர் பெற்ற செல்வாக்கைக் குறிப்பிடுக.
2. சாதியை எதிர்த்துப் பாவேந்தர் எங்ஙனம் பாடியுள்ளார் ?
3. சாதி குறித்து சித்தர்கள் கூறியவற்றைச் சுருக்கி வரைக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. வலங்கை – இடங்கை பூசல்கள் குறித்துக் கட்டுரை வரைக.
2. சாதி எதிர்ப்பில் பெரியாரின் பங்கு குறித்து விவரிக்க.

### 4.6. மகளிர் நிலை

- ❖ அற இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் பெண்களின் நிலையினை அறிய துணை செய்கின்றன.
- ❖ வரலாற்று நோக்கில் பார்க்கும் போது சங்க காலத்திற்குப் பின்னர் பெண்களின் நிலை தாழ்ந்தும், பின்னர் இருபதாம் நூற்றாண்டில் தான் பெண்கள் முன்னேற்றம் பெற இடம் ஏற்பட்டது.

### 4.6.1. தொல்காப்பியர் காலத்தில் மகளிர்

- ❖ தமிழ்ப் பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களை அணிகலன்களாகக் கொண்டவர்கள் எனத் தொல்காப்பியர் கூறுகிறார்.
- ❖ கற்பு, காமம், ஒழுக்கம், சுற்றம்போற்றல், விருந்து பேணல், மென்மை, பொறை என்பன பெண்களின் பண்புகளாக இருந்தன.
- ❖ மாதர், பெண், பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை எனப் பலவாறு பெண்களை அடையாளம் காட்டி இருக்கின்றனர்.
- ❖ பெண் தனது கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றவளாக இருந்தாலும் அதற்குப் பல தடைகள் இருந்தன. இச்செறிப்பு, அன்னையின் சினம், உடன்போக்கு, மடலேறுதல் போன்ற செயல்கள் பெண்களின் மீது ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டினைக் காட்டுகின்றன. இத்தகைய செயல்களினால் காதலுக்கு முழு உரிமை அளிக்கப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

### 4.6.2. சங்க காலத்தில் மகளிர்

- ❖ இக்காலத்தில் பெண் கல்வி உயர்ந்திருந்தது. **ஔவையார், நப்பசலையார், வெள்ளி வீதியார்** போன்ற பெண் புலவர்கள் இருந்தனர்.
- ❖ ஔவையார் அதியமானின் தூதுவராகத் தொண்டைமானிடம் சென்ற நிகழ்ச்சி வரலாற்றுச் சான்றாக அமைந்திருக்கிறது.
- ❖ பெண்கள் இசையிலும் பிற கலையிலும் சிறந்து விளங்கினர். இவர்கள் பாணர், கூத்தர் குடிப்பெண்களாவர். இவர்கள் **பாடினி** என்றும் **விறலி** என்றும் அழைக்கப்பட்டனர்.
- ❖ ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாடு இருந்தது. சொத்து உரிமையில் ஆடவர்க்கு முதலிடம் இருந்தாலும் பெண்கள் அடிமைப்படுத்தப்படவில்லை.
- ❖ கணவன் வறுமையுற்ற போதிலும் பெற்றோர் செல்வத்தை எண்ணாது வாழ்ந்த நிகழ்வினை நற்றிணை **(110)** காட்டுகிறது.
- ❖ இன்றைய நிலையைப் போலவே சங்க காலத்திலும் கணவனை இழந்த பெண்கள் துன்புற்றனர். மறுமையில் தன் கணவனை அடைய தலையை மழித்தல், வளையல் முதலிய அணிகலன்களை அணியாமல் இருத்தல் போன்ற அணிகலன்களை அணியா நோன்புகளை மேற்கொண்டனர்.
- ❖ உடன்கட்டை ஏறும் வழக்கமும் இருந்தது. பூதப்பாண்டியன் மனைவி கோப்பெண்டு தீயில் புகுந்ததைப் புறநானூறு காட்டுகிறது.
- ❖ மறக்குடி மகளிரின் வீரத்தினை 'மூதின் முல்லை' காட்டுகிறது. தன் மகன் எங்கே என்று கேட்ட அயல் வீட்டுப் பெண்ணிடம் "என் மகன் யாண்டுளன் என அறியேன்; அவனை ஈன்ற வயிறு இது தான்; அது புலி கிடந்த குகை;

அவன் போர்க்களத்திலே தோன்றுவான்''. தன் மகனின் வீரத்தினைக் கூறுகின்ற தாயினைப் புறநானூறு காட்டுகிறது.

❖ அக்காலத்தில் செல்வம் மிக்க நகரில் பரத்தையர் இருந்தனர். இவர்கள் பகைப் புலத்திலிருந்து கவர்ந்து வரப்பட்டவராவர். இவர்கள் **கொண்டி மகளிர்** எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இளைஞர்களை மயக்கிப் பொருள் பறித்த பரத்தையர்களை மதுரைக் காஞ்சி (வரி 549–589) குறிப்பிடுகிறது. இவர்களில் சிலர் ஒருவனுக்கே உரிமைக் கொண்டவர்களாக இருந்தனர். இவர்கள் 'காதற் பரத்தையர்' எனப்பட்டனர்.

**4.6.3. சங்க மருவிய காலத்தில் மகளிர்**

❖ இக்காலத்தில் சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்றது.

❖ சமணம் பெண்ணை இழித்துப் பேசியது. பெண்ணுக்கு வீடு பேறில்லை என்றது . பெண்ணைப் பாவப்பிறவி என்று குறிப்பிட்டது.

❖ சைவ வைணவம் பெண்ணைப் போற்றியது. பெண்கள் பலர் சமயத்தொண்டாற்றினர். திலகவதியார், புனிதவதியார், ஆண்டாள் போன்றோர் இறைப்பணி ஆற்றினர்.

❖ இக்காலத்திலும் பெண்களின் நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

**4.6.4. பல்லவர் காலத்தில் மகளிர்**

❖ இக்காலத்தில் கோயில்களில் பெண்கள் பணிபுரிந்திருக்கின்றனர். இவர்கள் **கணிகையர்** எனப்பட்டனர். சுந்தரரின் மனைவியரின் பரவையார் கணிகையர் குலத்தில் தோன்றியவராவர். சங்கிலியார் இறைப்பணியில் ஈடுபட்டவராவார்.

❖ பலதார மணம் நடைமுறையில் இருந்தது. உயர்குடிப் பெண்கள் உடன்கட்டை ஏறினர். பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

❖ இக்காலக் கட்டத்தில் பெண்களின் நிலைத் தாழ்ந்திருந்ததை அறியலாம்.

**4.6.5. சோழர் காலத்தில் மகளிர்**

❖ இக்காலத்தில் பெண் கல்வி சிறப்பு பெறவில்லை. ஆத்தி சூடிப் பாடிய ஔவையார் தவிர பெண்பாற் புலவர் யாரும் இல்லை என்பதறியலாம்.

❖ உயர்குடி பெண்கள் உரிமை பெற்றிருக்கவில்லை. நடுத்தரப் பெண்கள் ஓரளவு உரிமைப் பெற்றிருந்தனர். குழந்தை மணம், உடன்கட்டை ஏறுதல், கைம்மைக் கொடுமை போன்றன பெரிதும் இடம் பெற்றன.

❖ பல்லவர் காலத்தில் தேவதாசி முறை வழக்கில் இருந்தது. நூற்றுக்கணக்கான தளிச்சேரிப் பெண்டுகள் இசைபாடுதல், நடனமாடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டனர். இத்தகைய பெண்டிர் மணம் புரிந்து வாழ்ந்தும் இருக்கின்றனர். சிலர் அடிமைகளாக நடத்தப்பட்டதும் உண்டு.

**4.6.6. விசயநகர காலத்தில் மகளிர்**

❖ கோயிலில் பணிபுரிந்தப் பெண்கள் பரத்தையர்களாக மாற்றப்பட்டனர்.

❖ பெண்கள் ஆடவர்களின் போகப் பொருளாக இருந்தனர்.

❖ குழந்தை மணம் வழக்கில் இருந்தது. வரதட்சணை பெறப்பட்டது. உடன்கட்டை ஏறாதோர்களின் தலைமுடி நீக்கப்பட்டது.

❖ கி.பி. 17, 18 ஆம் நூற்றாண்டில் பெண்களின் நிலை மேலும் தாழ்வுற்றது.

### 4.6.7. ஆங்கிலேயர் காலத்தில் மகளிர்

- ❖ கிறிஸ்துவச் சமயப் பெரியார்கள் பெண் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டினர்.
- ❖ பெண்களுக்கான பள்ளிகள் தோன்றின.
- ❖ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியும் பெண்கள் முன்னேற்றத்திற்காகத் தொண்டாற்றினர்.
- ❖ பெண்ணுக்குச் சொத்துரிமைக் குரல் ஓங்கியது.

### 4.6.8. பெண் உரிமைக்குக் குரல் கொடுத்தவர்கள்

- ❖ வள்ளலார் பெண் முன்னேற்றத்தில் விருப்பம் கொண்டிருந்தார். கல்வி, யோகத்தில் ஈடுபாடு கொள்ள வேண்டும் என விரும்பினார்.
- ❖ மாயூரம் வேதநாயகம் பிள்ளை **பெண் மதிமாலை** என்ற நூலைப் பாடியுள்ளார். பெண்களை அடிமைகளாக நடத்துவதைக் கண்டித்தார்.
- ❖ தமிழ்ப் பெரியார் திரு.வி.கலியாணசுந்தரனார் **பெண்ணின் பெருமை** என்ற நூலில் பெண்மையினின்றும் தாய்மையினின்றும் இறைமை மலர்கின்றன என்றார்.
- ❖ பெண்ணுரிமைக்காகப் பாடுபட்டவர்களில் தலைசிறந்த இரண்டு கவிஞர்கள் பாரதிதாசன், பாரதியார்.
- ❖ மாதரை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த வேண்டும் என்றார் பாரதியார்.
- ❖ பாரதியாரும், பாரதிதாசனும் குழந்தை மணத்தை எதிர்த்தனர். இளம் விதவைகளை வேரில் பழுத்த பலாவென்றும், குளிர்வடிகின்ற வட்ட நிலா என்றும், சீதளபூஞ்சோலை என்றும் கூறியுள்ளனர்.

இன்று பெண்கட்கு உரிமை வேண்டும் என்று கேட்கும் குரல் தேவையில்லை என்னும் அளவுக்குப் பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். கல்வியில் பெண்கள் பெரிதும் முன்னேறியுள்ளனர். பெண்கட்குத் தந்தையின் சொத்தில் உரிமை வழங்கப்பட்டு வருகிறது. மருத்துவராகவும், ஆசிரியராகவும், ஏனைய உயர் அதிகாரிகளாகவும் வளர்ந்துள்ளனர். இனியும் எதிர் வரும் காலத்தில் இவர்களது நிலை உயரும் என்பதில் ஐயமில்லை.

**தன் மதிப்பீடு : 5**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. தொல்காப்பியர் காலத்தில் மகளிர் நிலை குறித்து எழுதுக.
2. சங்க காலப் பெண்புலவர்களைப் பற்றிக் குறிப்பு வரைக.
3. ‘மூதின் முல்லை’ – விளக்குக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. பண்டைக்கால மகளிரின் நிலை குறித்து விவரிக்க.
2. பெண் உரிமைக்குக் குரல் கொடுத்த சான்றோர் குறித்து விளக்குக.

## 4.7. இந்தியப் பண்பாட்டில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்

- ❖ திராவிடப் பண்பாட்டுக் கூறுகள் என்பது முக்கியமானதாகும்.
- ❖ "இந்தியப் பண்பாட்டின் அடிப்படை ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் திராவிடப் பண்பாட்டின் கூறுகளைக் கொண்டிருப்பது மறுக்க முடியாத உண்மை" என்றனர் வரலாற்றறிஞர். திராவிட நாகரிகத்தின் செல்வாக்குச் சமயம், மொழி, கலைகள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் ஊடுறுவியது.
- ❖ ஆரியரின் வருகைக்கு முன்பே திராவிடர் இந்தியா முழுவதும் வாழ்ந்துள்ளனர். மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் மிக உயர்ந்த நாகரிகத்தைப் படைத்தனர். ஆரிய மொழியான வடமொழி சொற்களஞ்சியத்தில் ஆயிரக்கணக்கான திராவிட வேர்ச்சொற்கள் உள்ளன.
- ❖ திராவிட மொழிச் சொற்களைப் பெற்றுத் தம் மொழியைச் செம்மைப்படுத்திக் கொண்டனர்.
- ❖ தமிழ் நாட்டறிஞர் பலர் வடமொழியிலேயே தமது கருத்தைக் கூறினர். அர்த்த சாஸ்திரத்தை எழுதிய சாணக்கியர் காஞ்சியைச் சேர்ந்தவர். நாட்டிய சாஸ்திரத்தை எழுதிய பரதமுனிவர் தென்னாட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- ❖ வணிகத் தொடர்பினால் பர்மா, சயாம், அந்தமான், சம்பா, நிக்கோபர், மலேசியா போன்ற நாடுகளில் தமிழ் மொழி பரவலாகப் பேசப்படுகிறது.
- ❖ திராவிட முறையில் கட்டப்பட்ட பல கோயில்களும் இந்நாடுகளில் காணப்படுகின்றன.
- ❖ வடமொழியில் ஆயிரக்கணக்கான திராவிட வேர்ச்சொற்கள் காணப்படுகின்றன.
- ❖ பாலி மொழிக்கு முதன் முதலாக இலக்கியம் எழுதிய **கச்சாயணர்** காஞ்சி நகரத்தில் பிறந்தவர் என்ற கருத்துள்ளது.
- ❖ ஈனாயானப் புத்த சமயம் காஞ்சியில் தான் உருவானது. இங்கிருந்து தான் புத்த சமயம் கீழைத் தீவுகளுக்கும் பரவியது. **கடிகா** என்ற கல்லூரி வேதம், உபநிடதம், சாத்திரம் போன்றவற்றைக் கற்பித்தது. நாளந்தா பல்கலைக்கழகப் பேராசிரியர் தருமபாலர் இங்குப் பயின்றவரே.
- ❖ புத்த சமயத்தோடு தொடர்புடைய மொழிகள் நூற்றைம்பது. புத்த சமயக் கோட்பாடுகளைக் கொண்ட மணிமேகலை காப்பியம் தமிழில் உள்ளது சிறப்புடையது.
- ❖ சங்கரர், இராமானுசர், இராமானந்தர், இராம கிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியடிகள் போன்றோரின் பண்பாட்டிற்கு ஊற்றாய் இருந்தது திருக்குறளே என்று ஆல்பிரட் சுவைட்சர் குறிப்பிட்டுள்ளனர்.
- ❖ இந்தியப் பண்பாட்டின் சிகரமாக இருப்பது பக்திநெறி. இதன் தாயகம் தமிழ்நாடு.
- ❖ ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோற்றுவித்த பக்திநெறி வடஇந்தியாவிலும் பரவியது. பிராமணச் சமயத்தை இந்து சமயமாக மாற்றியது இந்நெறியே ஆகும்.
- ❖ அன்னை வழிபாடு மொகஞ்சதாரோ நாகரிகத்தில் இடம் பெற்றிருந்தது. ஆரியர் ஆண் தெய்வத்தை வணங்கினர்.
- ❖ தைத்திரிய ஆரணியகத்தில் உமா, சிவன் மனைவியாகக் கூறப்படுகிறாள். உமா என்பது அம்மா என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபாகும். காடுகிழாள், காடுகெழு செல்வி, கொற்றவை என்று பாலை நிலத்தெய்வத்தினை வழங்கினர் தமிழர்.

வேட்டுவர் நிலையில் தமிழர் இருந்த பொழுது தோன்றிய நெறி அன்னை நெறியாகும்.

- ஸ்ரீ பெரும்புதூரில் தோன்றிய இராமாநுசர் ஆழ்வார் பாடல்களில் காணப்படும் உண்மைகளைத் தொகுத்து வைணவ சமயத்துத் தத்துவங்களை முறைப்படுத்தியுள்ளார்.
- பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளைக் கண்ட சைவ சித்தாந்தம் தமிழுக்குரியதாகும். மெய்கண்டாரின் சிவஞானபோதத்தை வடமொழியில் மொழி பெயர்த்தவர் இராமாநுசர் என்பது குறிப்பிடத்தக்கது.
- இந்து சமயத்தின் சிறப்புமிக்க சில கருத்துக்களும் ஊழ் பற்றிய கொள்கைகளும் பக்தி நெறியும் வேதத்தில் இல்லை. இவை திராவிடர்க்குரியனவாகும். சிவபெருமான் திராவிடருடைய தெய்வமாகும். சிசினதேவர் என்று வேதம் இவரைப் பழிக்கிறது. உருத்திரனும் சிவனும் பிற்காலத்தில் ஒன்றாக்கப்பட்டனர். தமிழரின் மாயோன் பிற்காலத்தில் விஷ்ணுவானார்.
- விண், விண்டு என்ற சொற்கள் வானம் முகில் என்றப் பொருளைத் தருகின்றன. மாயோன் என்றால் விஷ்ணுவைக் குறிக்கிறது. ஆக, கண்ணனும் திராவிட தெய்வம் என்பர்.
- கண்ணன்–நப்பின்னை காதல் தமிழ்நாட்டில் பண்டு தொட்டே வழங்கி வருகிறது.
- ஆயர்பாடியில் கண்ணனும் நப்பின்னையும் பாடியதைப் பிருந்தாவனத்தில் கிருஷ்ணனும் இராதையும் ஆடிய சலக்கிரீடையாகக் கூறுவர்.
- முருகன் தமிழ்நாட்டுக் குறிஞ்சி நிலத்தெய்வம். ஆரியர்கள், கார்த்திகேயன் என்ற பெயரில் முருகனை மாற்றிப் புராணங்களை உருவாக்கிக் கொண்டனர்.
- சிலேட்டர் உலகத்தில் பல இன மக்களிடையே வழங்கும் வானியல் கொள்கைகளில் தமிழருடையதே மிகத் துல்லியமானது என்கிறார்.
- இந்திய நாகரிகத்தில் இசை, கூத்து, சிற்பம், கட்டிடம் ஆகிய கலைகள் முக்கிய இடம் வகிக்கின்றன. தமிழர்களும் இதில் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.
- தமிழ் நாட்டு யாழில் இருந்தே வீணை தோன்றியது. நாட்டியக் கலையில் தமிழர் பெற்றிருந்த சிறப்பைத் தமிழ்நாட்டுச் சிற்பங்களும் ஓவியங்களும் சான்றுகளாகக் காட்டுகின்றன.
- பரத சாத்திரத்தின் ஆசிரியர் பரத முனிவரும் தென்னிந்தியரே. இந்திய நாட்டுப் பரத நாட்டியம் தமிழரின் கொடை; தமிழர்கள் கட்டிடக்கலையில் சிறந்துள்ளனர்.
- பிரமிடு போல் வானளாவி நிற்கும் கோபுரங்களைத் **திராவிடக் கலைப்பாணி** எனச் சிற்ப நூல்கள் கூறுகின்றன.
- பல்லவரும் பாண்டியரும் சோழரும் நாயக்கரும் அமைத்த கோயில்களைக் கொண்டே கட்டிடக் கலைச் சிறப்பினைக் காணலாம்.
- தமிழர் இந்திய நாகரிகத்திற்குக் கொடுத்த செல்வங்களுள் சித்தமருத்துவமும் ஒன்றாகும். பிறகே ஆயுர்வேதம் எழுதத் திட்டமிட்டனர். பஸ்பம், புடம், நாடி ஆகியவை சித்த முறையில் மட்டுமே உள்ளவையாகும். தமிழர் மருத்துவத்தில் கிறித்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே சிறந்திருந்தனர். எனவே தமிழ் மருத்துவம் இந்திய நாகரிகத்தில் சிறப்பிடம் பெற்றது எனலாம்.
- நால்வகைச் சாதிகளும் திராவிடற்கே உரியவை என்றும் ஆரியர் வருகைக்கு முன்பே திராவிடர் உழவு, வாணிகம் முதலான தொழில்களை வளர்த்திருந்தனர்

என்றும் நாடோடிகளான ஆரியரிடம் இப்பிரிவுகள் தோன்றியிருக்க முடியாதென்றும் 'தர்ஸ்டன்' குறிப்பிட்டுள்ளார்.

**தன் மதிப்பீடு : 6**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. பௌத்த சமயத்தின் தோற்றம் – தமிழகத்திற்கு உரியது என்பதைக் குறிப்பிடுக.
2. தமிழக பக்திநெறி வட இந்தியாவிலும் பரவியது என்பதற்குச் சான்று தருக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. இந்தியப் பண்பாட்டில் தமிழ்ப் பண்பாட்டுக்கூறுகள் குறித்துக் கட்டுரை வரைக ?

**4.8.தொகுப்புரை**

1. மன்னன் என்பவன் தலைமை நீதிபதியாக விளங்கியதோடு அறவழியில் நின்று ஆட்சிப் புரிந்துள்ளான்.
2. சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான நூல்கள் மன்னனின் கடமைகளை எடுத்துரைத்துள்ளன.
3. மன்னன் சான்றோர்களின் வாயிலாக நீதி வழங்கியுள்ளான். சமூகத்தில் சமயம் தொடர்பான வழக்குகளைச் சமயத்தலைவர்கள் தீர்த்துள்ளனர்.
4. சங்க காலத்தில் வரி என்பது இறை என்று அழைக்கப்பட்டுள்ளது. பல்வேறு தொழில் புரிந்தோர் வரி செலுத்தியுள்ளனர்.
5. நிலவரி, சொத்துவரி, வணிகவரி, உத்தியோக வரி, தொழில் வரி, படைவரி, இனவரி, தண்டவரி, பிறவரி எனப் பல்வேறு வரிகள் வசூலிக்கப்பட்டுள்ளன.
6. சங்ககாலத்தில் உள்ளாட்சி மன்றங்கள் அவை, மன்றம், அம்பலம், பொதியில் எனும் பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களுக்கெனச் சிலதகுதிகள் வரையறுக்கப்பட்டு இருந்தன.
7. மக்கள் பல்வேறு குலப்பிரிவாகவும், கோத்திரப் பிரிவாகவும், பிரிக்கப்பட்டிருந்தனர். வலங்கை –இடங்கை பூசல்கள் எழுந்துள்ளன.
8. சங்ககாலத்தில் எழுத்தாற்றலில் வல்ல ஔவையார், நப்பசையார், வெள்ளி வீதியார் எனும் பெண்பாற் புலவர்கள் இருந்துள்ளனர். பெண்களிடம் உடன்கட்டை ஏறும் பழக்கமும் இருந்துள்ளது.
9. வடமொழியில் ஆயிரக்கணக்கான திராவிட மொழி வேர்ச்சொற்கள் காணப்படுகின்றன. இந்தியப் பண்பாட்டில் தமிழர்களுக்கான பல கூறுகள் பரவியுள்ளன.
10. வணிகத் தொடர்பினால் தமிழ்மொழி ஏனைய வெளிநாடுகளிலும் பரவியுள்ளது என்பது தெளிவாகிறது.

## குறிப்பு

**அலகு – 5**

**பண்பாட்டு ஊடாட்டங்கள்**

**பாடக்கருத்தலகுகள்**

**5.0.** நோக்கம்

**5.1.** முன்னுரை

**5.2.** ஆங்கிலேயர்கள் வருகைக்குப் பின் தமிழகத்துறைகள்

**5.2.1.** பொருளாதாரத்துறை

**5.2.2.** காவல்துறை

**5.2.3.** நிருவாகத்துறை

**5.2.4.** நீதித்துறை

**5.2.5.** கல்வித்துறை

**5.2.6.** தொல்ஆய்வுத்துறை

**5.2.7.** பத்திரிக்கைத் துறை

**5.2.8.** சமுதாயத்துறை

**5.2.9.** இலக்கியம் மற்றும் மொழித்துறை

**5.2.10.** பலவகைப் பண்பாட்டுக் கூறுகள்

தன்மதிப்பீடு **– 1**

**5.3.** மராட்டியர் செய்த நன்மைகள்

**5.3.1.** நாட்டு நலத்திட்டங்கள்

**5.3.2.** இலக்கிப்பணிகள்

**5.3.3.** மடங்களும் சத்திரங்களும்

**5.3.4.** கலைப்பணிகள்

தன்மதிப்பீடு **– 2**

**5.4.** வாய்மொழி இலக்கியங்களும் தமிழ்ப்பண்பாடும்

**5.4.1.** தாலாட்டு

**5.4.2.** ஒப்பாரி

**5.4.3.** பிள்ளைப்பேறு

**5.4.4.** காதல் பாடல்

**5.4.5.** கொடுமைக்காரக் கணவன்

**5.4.6.** குடிகாரனுக்கு அறிவுரை

**5.4.7.** மணமுறிவு

**5.4.8.** தெய்வ வணக்கம்

**5.4.9.** நல்வாழ்வுக்கான அறிவுரைகள்

**5.4.10.** பல்வகைப் பாடல்கள்

தன்மதிப்பீடு **– 3**

**5.5.** சமயப் பொதுநோக்கு

**5.5.1.** இலக்கியங்களில் சமயப் பொது நோக்கு

**5.5.2.** பக்தி இலக்கியங்களில் சமயப் பொது நோக்கு

**5.5.3.** பிற்காலத்தில் சமயப் பொது நோக்கு

தன்மதிப்பீடு **– 4**

**5.6.** பண்பாட்டு ஊடாட்டம்

**5.6.1.** தமிழிலக்கியங்களில் கன்னடச் செல்வாக்கு

**5.6.2.** தெலுங்கு மொழியில் தமிழ்ச் செல்வாக்கு

**5.6.3.** தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு

**5.6.3.1.** ஈழம்

**5.6.3.2.** மலேயா

**5.6.3.3.** சாவகம்

**5.6.3.4.** சுமத்திரா

**5.6.3.5.** தாய்லாந்து

**5.6.3.6.** கம்போடியா

**5.6.3.7.** சம்பாத்தீவு

**5.6.3.8.** பர்மா

தன்மதிப்பீடு **– 5**

**5.7.** தொகுப்புரை

## அலகு – 5

## பண்பாட்டு ஊடாட்டங்கள்

### 5.0. நோக்கம்

- ❖ ஆங்கில ஆட்சியின் செல்வாக்கால் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அறிதல்.
- ❖ பொருளாதாரத்தில் தமிழகம் உயர்ந்த வளர்ச்சியைப் பெற்ற நிலைகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- ❖ நீதிமன்றங்களின் சட்டமுறைகளை உணர்தல்.
- ❖ கல்வியில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும், கல்லூரி பல்கலைக் கழகங்களின் தோற்றம் குறித்தும் அறிதல்.
- ❖ சமுதாயத்துறையில் வகுக்கப்பட்ட பல்வேறு சட்டங்கள் குறித்துத் தெரிந்து கொள்ளுதல்.
- ❖ ஆங்கிலேயரின் மொழி ஆய்வையும், தமிழ்த் தொண்டினையும் பண்பாட்டு மாற்றங்களையும் அறிந்து கொள்ளுதல்.
- ❖ மராட்டியர் தமிழகத்திற்குச் செய்த நன்மைகளைப் பகுத்துக்காணுதல்.
- ❖ நாட்டுப்பாடல்களில் தமிழர் பண்பாட்டுக் கூறுகளை அறிதல்.
- ❖ இந்தியாவிற்கு உள்ளும், வெளியேயும் தமிழ்ச் செல்வாக்கு எவ்வாறிருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.

### 5.1. முன்னுரை

கி.பி.1498 ஆம் ஆண்டில் வாசுகோடகாமா நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு இந்தியாவுக்கு வரும் வழியைக் கண்டறிந்தார். இதன் மூலம் ஐரோப்பியர்கள் இங்கு வரத் தொடங்கினர். கிழக்கிந்திய வணிகக் கழகத்தின் திறமையாலும், ஆங்கில அரசின் நேராட்சியின் காரணமாகவும் ஆங்கில ஆட்சியின் செல்வாக்கு இந்தியாவில் ஊடுருவியது. சமூகம், பொருளாதாரம், சமயம், கல்வி போன்ற அனைத்துத் துறைகளிலும் செல்வாக்கு ஏற்பட்டது. இனித் தமிழ்ப்பண்பாட்டில் ஆங்கிலேயர், மராட்டியரின் செல்வாக்கு பற்றியும், வாய்மொழி இலக்கியங்களில் தமிழர் பண்பாடு குறித்தும், சமயப் பொதுநோக்கிலும், பிறநாடுகளிலும் தமிழ்–தமிழரின் பண்பாட்டு ஊடாட்டங்கள் குறித்தும் காண்போம்.

### 5.2.1. பொருளாதாரத்துறை

- ❖ 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் இயந்திரங்களைக் கொண்டு வந்தனர். பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. அதனால் கைத்தொழில்களும், ஆலைத் தொழில்களும் அழிந்தன. தொழிலாளர்களுக்குச் சங்கம் ஏற்படுத்தப்பட்டன.
- ❖ நெடுஞ்சாலை, புகைவண்டிப் பாதைகள், சென்னை, தூத்துக்குடித் துறைமுகங்கள், அஞ்சல் நிலையங்கள், தொலைபேசியகங்கள், சாலைப் போக்குவரத்தும் ஏற்படுத்தப்பட்டன.
- ❖ உழவுத்தொழில் செழிக்க மேட்டூர், பாபநாசம் அணைகள் கட்டப்பட்டன. ஆறுகளும், கால்வாய்களும் சீர்செய்யப்பட்டன. காவிரி பகுதியில் மேலணை, கீழணை கட்டப்பட்டன.

- ❖ திருநெல்வேலி போன்ற இடங்களில் பருத்தியானது பயிரிடப்பட்டது. காப்பியும், தேயிலையும் உற்பத்தியில் பெருகின. உயர்வகைப் பருத்திகள் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டன. இதனால் துணி உற்பத்தியும் பெருகியது.
- ❖ ஆங்கிலேயரின் வருகைக்குப்பின் நிலவரி ஒழுங்குபடுத்தப்பட்டது. 30 ஆண்டுக்கு ஒருமுறை வரி விகிதம் மாற்றப்பட்டது. பொருளுக்குப் பதிலாகப் பணமாக வாங்கினர். வரியினை அரசே **ராயத்துவாரி** என்ற முறையில் வசூலித்தது. இதனால் கிராம சபைகள் நலிவுற்றன.

### 5.2.2. காவல்துறை

- ❖ நாட்டுப் பாதுகாப்புக்குப் பெரும்பட்டாளம் ஏற்பட்டது. உள்நாட்டுப் பாதுகாப்புக்குத் தனிக்காவல்பிரிவு உருவாக்கப்பட்டது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலை உருவாயிற்று. சமூக விரோதிகள் ஒடுங்கினர். பாளையக்காரர்களின் அட்டூழியங்களுக்கு முடிவு ஏற்பட்டது. மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு ஏற்பட்டது.

### 5.2.3. நிருவாகத்துறை

- ❖ ஆங்கிலேயர் நமக்குத் தந்த கொடைகளில் ஒன்று நிருவாக இயந்திரமாகும்.
- ❖ கீழிலிருந்து மேலே உயர்ந்து செல்லும் அதிகார அமைப்பு, சட்ட வரம்புக்குட்பட்ட அதிகார வரம்பு, ஆணைகளின் வழியே சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல், முழு நேர அதிகாரிகள் சட்ட வரம்புக்கும் முன்னுதாரணங்கட்கும் உட்பட்டு இயங்குதல் முதலியன நிருவாக இயந்திரங்களின் பண்புகளாகும்.
- ❖ இவ்வமைப்பின் உயர்ந்த இடத்தில் பொது ஆளுநரும் கீழ்மட்டத்தில் கிராம அதிகாரியும் இருந்தனர்.

### 5.2.4. நீதித்துறை

- ❖ நிருவாகத் துறையிடமிருந்து நீதித்துறை தனியாகப் பிரிக்கப்பட்டது. 1801 இல் சென்னையில் பெருநீதி மன்றம் உருவாயிற்று. 1831 இல் மாவட்ட நீதிபதிகளுக்குக் குற்ற விசாரணை உரிமை வழங்கப்பட்டது. பொருள் வழக்குகளை மாவட்ட ஆட்சியாளர் தீர்த்தார்.
- ❖ நீதித்துறையில் ஏற்பட்ட குழப்பங்களைத் தீர்த்து, புதிய அமைப்பினை உருவாக்க **மெக்காலே** பாடுபட்டார்.
- ❖ இந்தியக் குற்றச் சட்டமும், குற்றம் சாராச் சட்டமும், குற்றவிசாரணை ஒழுங்கு முறைச் சட்டமும், சாட்சியச் சட்டமும் உருவாகியதால் ஒருமைப்பாட்டுக்கும், தேச வளர்ச்சிக்கும் உதவின.
- ❖ 1833 இல் ஏற்பட்ட சட்டபடி இந்தியக் குடிமக்கள் சாதி, குலம் சமய வேறுபாடின்றி அரசின் கீழ்ப்பணிபுரிய உரிமை பெற்றனர்.
- ❖ பாராளுமன்ற ஆட்சிமுறை தோன்ற ஆங்கிலேயர்கள் காரணமாயினர்.
- ❖ சென்னை தலைநகரமாயிற்று. மாவட்டத் தலைநகர்களும், கூற்றத் தலைநகர்களும் வளர்ந்து நகர நாகரிகத்தை வளர்த்தன.

### 5.2.5. கல்வித்துறை

- ❖ கிறித்துவப் பாதிரிமார்கள் செய்த கல்விப் பணியால் அறிவியல், வரலாறு, தத்துவம் போன்ற பல துறையறிவு மக்களுக்குக் கிடைத்தது.

- **1854** இல் ஆங்கிலக் கல்வித் திட்டம் உருவாயிற்று. மாகாண அரசில் கல்வித்துறை இடம் பெற்றது. தாய்மொழிப் பயிற்சிப் பள்ளிகள் பல இடங்களில் நிருவப்பட்டன.
- சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- சென்னைப் பல்கலைக்கழகம் **1857** இல் உருவாயிற்று. கலைகள், சட்டம், மருத்துவம், கட்டடப் பொறியியல் ஆகியவை கற்பிக்கப்பட்டதோடு இளங்கலைப்பட்டமும் அளிக்கப்பட்டது.
- கீழ்வகுப்புகளில் தாய்மொழியும் மேற்படிப்பில் ஆங்கிலமும் பயிற்சி மொழிகளாயின.
- பொறியியற் கல்லூரி **(1834)**, மருத்துவக் கல்லூரி **(1835)**, கிறித்துவக் கல்லூரி **(1837)**, ஓவியக் கல்லூரி **(1850)**, பச்சையப்பன் கல்லூரி **(1841)** ஆகியவையும் **1866** இல் பெண்கள் பள்ளிகளும் திறக்கப்பட்டன.
- ஆங்கிலக்கல்வி–பரந்த வெளியுலகத் தொடர்பையும், ஐரோப்பாவில் வளர்ந்து வந்த அறிவியல் தொடர்பையும் தமிழர்களுக்கு ஏற்படுத்தியது.
- சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் பிரஞ்சுக் கோட்பாடுகள் புதிய எழுச்சியை ஊட்டின.
- விடுதலைப் போராட்டம் வெற்றி பெற ஆங்கிலக் கல்வியே அடிப்படையாகும்.

### 5.2.6. தொல்ஆய்வுத்துறை

- பழம்பொருட்களைப் பாதுகாப்பதற்கு அரசு தனித்துறை ஒன்றை நிறுவியது. கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டு ஆராயப்பட்டன. **1920** இல் **ஜான்மார்ஷல்** சிந்துவெளி நாகரிகத்தை வெளிப்படுத்தியதால் திராவிட நாகரிகம் ஆரிய நாகரிகத்தைவிடப் பழைமையானது என்பது விளங்கியது.
- **ஈராசு பாதிரியார்** சிந்துவெளி முத்திரைகளை ஆராய்ந்து அவற்றின் மொழி தமிழே எனக் கூறினார்.
- ஆதிச்ச நல்லூர், அரிக்கமேடு போன்ற இடங்களில் செய்த ஆய்வுகள் தமிழரின் தொன்மை நாகரிகம் பற்றிய பல உண்மைகளை அறிய உதவின. **வி.ஏ.சுமித்து, மாக்சுமுல்லர், வெப்பர், மாக்டொனால், பார்னெட்** போன்றோர் சிறந்த வரலாற்று ஆய்வுகளைச் செய்து பழஞ் சிறப்பை அறிய உதவினர்.

### 5.2.7. பத்திரிக்கைத் துறை

- **ஜான் பிரிட்டோ, பெர்ணாண்டசு, இராபர்ட்டி நொபிலி, வீரமாமுனிவர், போப்பையர், கால்டுவெல்** போன்றோர் செய்த தொண்டினால் கிறித்துவ சமயம் பரவிற்று.
- புறக்கணிக்கப்பட்ட நலிவுற்றச் சமூகத்தினர் கிறித்துவ சமயத்தைச் சார்ந்து, கல்வியும் மருத்துவ உதவியும் பெற்றனர்.
- கிறித்துவ சமயத்தினர் ஏற்படுத்திய பள்ளிகளும், மருத்துவமனைகளும் ஏதிலர் இல்லங்களும் எண்ணற்றவையாகும்.
- **1711** இல் சென்னையில் அச்சுக்கூடம் நிறுவப்பட்டது. **மதராசுகெசட்** என்னும் செய்தித்தாளும் **கூரியர்** எனும் பத்திரிக்கையும் வெளியிடப்பட்டன.

- ❖ 1820க்குப் பிறகு **தி மதராசு கெசட்**, **தி மதராசு கூரியர்** என்பவை வெளியிடப்பட்டன. 1878 இல் இந்து நாளேடு தொடங்கப்பட்டது. **சுதேசமித்திரனும்**, **மதராசு மெயிலு**ம் வெளி வந்தன.
- ❖ ஏட்டுச்சுவடிகள் அச்சடிக்கப்பட்டதால் பல தமிழ்நூல்கள் அழிவில் இருந்து தப்பின.

**5.2.8. சமுதாயத்துறை**

- ❖ எண்ணற்ற சமயங்கள் கொண்ட இந்தியாவில் கிறித்துவ சமயமும் இடம் பெற்றது.
- ❖ ஐரோப்பியர் தமிழ்ப் பெண்களோடு கொண்ட உறவினால் ஆங்கில இந்தியர் என்னும் புது வகுப்புத் தோன்றியது.
- ❖ 1850இல் ஏற்பட்ட **இனத்தடைச்சட்டம்** சமயம் மாறியோருக்குப் பாதுகாப்பளித்தது.
- ❖ 1856இல் விதவைகள் **மறுமணச்சட்டமும்**, 1892இல் **குழந்தை மணத்தடைச்சட்டமும்**, 1928இல் **சாரதாசட்டமும்** கொண்டுவரப்பட்டது. ஆண்களுக்கு 18 வயதும், பெண்களுக்கு 14 வயதும் திருமண வயதாகக் கொண்டு வந்தது சாரதா சட்டம்.
- ❖ இராசாராம் மோகன்ராய் முயற்சியால் உடன்கட்டையேறும் கொடிய வழக்கத்திற்குத் தடையேற்பட்டது.
- ❖ 1876–78 ஆம் ஆண்டுகளில் பல்லாயிரம் மக்களின் உயிரைக் குடித்த கொடும் பஞ்சத்தினைப் பல நிருமாணப் பணிகளின் மூலம் அரசு ஒழித்தது.

**5.2.9. இலக்கியம் மற்றும் மொழித்துறை**

- ❖ புதினம், சிறுகதை, திறனாய்வு ஆகியவை வளர ஆங்கிலக் கல்வி இடமளித்தது. ஆங்கில இலக்கியங்கள் பல தமிழிலும், தமிழ் நூல்கள் பல ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டன.
- ❖ **செகப்பிரியனின்** (ஷேக்ஸ்பியர்) நாடகத்தைத் தழுவித் தமிழர் பலர் நாடகங்களைப் படைத்தனர். சிறுகதைக்கு எனப் பல வார, திங்கள் ஏடுகள் தோன்றின.
- ❖ **கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை** எழுதினார்.
- ❖ **போப்பையர்** தான் ஒரு தமிழ் மாணவன் என்பதில் பெருமை கொண்டார். திருவாசகத்தை மொழி பெயர்த்தார். திருவள்ளுவத்தையும், நாலடியாரையும் அறிமுகப்படுத்தினார். இலண்டனில் இந்திய மொழிப்பிரிவின் தலைவராக விளங்கினார்.
- ❖ சுப்பிரதீபக்கவிராயரின் மாணவரான **வீரமாமுனிவர் தேம்பாவணி, சதுரகராதி, தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம், திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மானை, அன்னை அழுங்கலந்தாதி** போன்ற பல நூல்களைப் படைத்துள்ளார். **திருக்குறளின் முதலிரு பால்களையும் இலத்தீனில் எழுதினார். தமிழ்–இலத்தீன் பாலம், தமிழ்–போர்ச்சுகல் அகராதி** ஆகியவற்றையும், **வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குரு கதை** போன்ற உரைநடை நூல்களையும் எழுதினார். **இவர் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தின் தந்தையுமாவார்.**

- **இராபர்ட்–டி–நொபிலி, சீகன்பால்கு, பெர்சிவல்** முதலிய பல அறிஞர்களும் மொழித் தொண்டுகளைச் செய்துள்ளனர். பழமொழி, நாட்டுக்கதை போன்றவற்றையும் தொகுத்துள்ளனர்.
- **மாயூரம் வேதநாயகம் பிள்ளையும், வேதநாயக சாத்திரியாரும், இலக்குமணப் பிள்ளையும்** கிறித்துவ மதத்தைத் தழுவி அரிய நூல்களைப் படைத்தனர்.
- மொழியாய்வையும், அகராதிக் கலையையும் வளர்த்து, உரைநடை வகையில் புதிய இலக்கிய வகைகளை அறிமுகம் செய்தவர் ஐரோப்பியராவர்.

### 5.2.10. பலவகைப் பண்பாட்டுக் கூறுகள்

- தமிழரின் பேச்சிலும் எழுத்திலும் கலந்துள்ள ஆங்கிலச் சொற்களும், பிற ஐரோப்பிய மொழிச் சொற்களும் பலவாகும். ஆங்கில உடை இன்று நம் பண்பாட்டில் நிலைத்த இடம் பெற்று விட்டது. பெண் கல்வி நன்கு பரவியதற்கு ஐரோப்பியர் தொடர்பே காரணம் ஆகும்.
- ஆண்–பெண் சமஉரிமையுணர்வு வளர்ந்து வருகிறது.
- தமிழாண்டு மறக்கப்பட்டு ஆங்கில ஆண்டு வேரூன்றி விட்டது.
- நாட்டு மூலிகைகள் மறைந்தன. எதிர் முறை மருத்துவம் (Allopathy) செல்வாக்குற்றது.
- மது, வெண்சுருட்டு போன்றவற்றைத் தமிழர்களும் பயன்படுத்தினர்.
- கிளாரினெட், பாண்டு வாத்தியம், வயலின் போன்ற இசைக்கருவிகள் செல்வாக்குற்றன.
- மிளகாய், அன்னாசி, கொய்யா, குரோட்டன்கள், பெரிய அவரை, காரட்டு, முட்டைக்கோசு, நூக்கல், பீட்ரூட் ஆகியவை தமிழர் உணவுப் பொருளாயின.
- ஆங்கிலேயர் தொடர்பால் புதுமைகள் பல நம் நாட்டில் குடியேறியுள்ளன.

**தன் மதிப்பீடு : 1**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. பொருளாதாரத் துறையில் ஆங்கிலேயரால் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை ?
2. காவல்துறை எப்போது, எதற்காக உருவாக்கப்பட்டது ?
3. மேலைநாட்டினரின் இலக்கியப் பணியைக் குறிப்பிடுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. ஆங்கிலேயர் தமிழகத்துறை வளர்ச்சிக்குப் பாடுபட்டமையை விவரிக்க.
2. கிருத்துவச் சமயத்தினரின் சமூகத் தொண்டை விளக்குக.

## 5.3. மராட்டியர் செய்த நன்மைகள்

### 5.3.1. நாட்டு நலத்திட்டங்கள்

கி.பி. 1676 ஆம் ஆண்டில் தஞ்சை, நாயக்கரிடமிருந்து மராட்டியர் கைக்கு மாறியது. வீர சிவாஜியின் தம்பியான **எக்கோஜி** என்னும் வெங்காஜி **செங்கமலதாசனை** வென்று தஞ்சையைக் கைப்பற்றினார். இவர்கள் 128 ஆண்டுகள் அரசாண்டனர்.

- மராட்டிய மன்னர்கள் பல இடங்களில் குளங்களை வெட்டினர். பள்ளிகளையும் சத்திரங்களையும் நிறுவினர்.

- ❖ கோயில்களுக்கு நிலங்களை அளித்ததோடு அணிகலன்களையும் செய்து கொடுத்தனர். கட்டிடம், சிற்பம், இசை, ஓவியம் என்னும் கலைகளை வளர்த்துப் போற்றினர்.
- ❖ **பிரபாத்சிங்** என்னும் மன்னர் தஞ்சையிலும், மணமேற் குடியிலும், நீடாமங்கலத்திலும் சத்திரங்களை நிறுவினார்.
- ❖ **துல்ஜாஜி** என்பவர் மீன்மிசல், தாராசுரம், அம்மா சத்திரம், இராசாமடம் ஆகிய இடங்களில் சத்திரங்களை அமைத்தார்.

### 5.3.2. இலக்கிப்பணிகள்

- ❖ **சரபோஜி மன்னர்** ஒரத்த நாட்டில் தன் காதலி முத்தம்மாளின் பெயரால் சத்திரமும் பள்ளியும் அமைத்தார். தஞ்சையில் மேனாட்டு மருந்தகம் ஒன்றும், இந்திய மருந்தகம் ஒன்றும் அமைத்தார்.
- ❖ இவர் சிறந்த கல்வியாளர். ஆங்கிலத்திலும் பிற ஐரோப்பிய மொழிகளிலும், வடமொழியிலும் பயிற்சி மிக்கவர். அறிவியல், கலை, வானநூல், மருத்துவம், சோதிடம் அனைத்திலும் நாட்டமும் பயிற்சியும் மிக்கவர்.
- ❖ ஆயிரக்கணக்கான ஏட்டுச்சுவடிகளை ஆங்கிலத்திலும், வடமொழியிலும் திரட்டி வைத்தார். அவை சரசுவதி மகால் என்ற நூல் நிலையத்தில் இன்றுமுள்ளன. இலக்கியம், கணிதம், சோதிடம், வானநூல், மருத்துவம் முதலிய பல துறைகளைச் சார்ந்த ஏட்டுச்சுவடிகள் உள்ளன.
- ❖ கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரின் உதவியோடு மருத்துவ நூல்களைச் செய்யுள் வடிவில் உருவாக்கினார்.
- ❖ சரசுவதி மகாலில் 30433 வடமொழியிலும் பிற மொழியிலும் அமைந்த ஏட்டுச் சுவடிகளும் 6426 அச்சிட்ட நூல்களும் உள்ளன என்பர்.
- ❖ திருவையாற்றில் வட மொழியும் தமிழும் இசையும் கற்பிக்கும் கல்லூரியை நிறுவினார். இதனோடு தொடர்புடைய பள்ளிகள் தஞ்சையில் உள்ளன.

### 5.3.3. மடங்களும் சத்திரங்களும்

- ❖ தஞ்சைக் கோயிலில் உள்ள சில கல்வெட்டுக்களால் மராட்டியர் செய்த தொண்டுகளும் திருப்பணிகளும் தெரிய வருகின்றன.
- ❖ இராமேசுவரத்திலும் சேதுக்கரையிலும் இருந்த இரண்டு சத்திரங்களோடு 16 சத்திரங்கள் அரண்மனைப் பெண்டிர்களின் பெயரால் அமைக்கப்பட்டன.
- ❖ சைதம்பாள் பெயரால் மகாதேவப்பட்டணம், மல்லியம், காசாங்குளம், பஞ்சனாத மோகனாம்பாள்புரம், நெடார் முதலிய இடங்களில் சத்திரமுண்டு.
- ❖ திருப்பனந்தாள், திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய சைவ மடங்களுக்கும் உதவி செய்துள்ளனர்.
- ❖ 1801 ஆம் ஆண்டு சனவரி 22 ஆம் நாள் சரபோஜி மன்னர் அரசுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில், ‘‘ஒவ்வொரு சத்திரத்திலும் நான்கு வேதங்களையும் அறிந்த ஒருவரும், ஓராசிரியரும், கட்டிகள், விடம், நோய்களைக் குணப்படுத்தும் மருத்துவரும் உண்டு. அநாதைகளாக வரும் குழந்தைகள் உணவும் உறையுளும் பெற்று இங்கே படிக்கலாம். கல்வி கற்றதும் திருமணமும் செய்து வைக்கப்படும் பயணத்தால் நோயுற்றவர்கள் மருந்தும் சத்துணவும் பெறுவர். இறந்து போவோருக்குச் சாதி வழக்கப்படி அடக்கமும் செய்யப்படும்; பிரயாணிகளில் சூலுற்றவருக்கு மகப்பேறு

செலவினைச் சத்திரம் ஏற்கும்; குழந்தைக்குப் பாலும் வழங்கப்படும். இன்னும் பல உதவிகளும் செய்யப்படும் என்று குறிப்பிட்டுள்ளன.

### 5.3.4. கலைப்பணிகள்

- துக்கோஜி, பிரதாபசிங் ஆகியோர் இசை நூல்களை இயற்றியுள்ளனர். இசைக்கு அழகிய மண்டபம் கட்டப்பட்டது. அதில் இசை, நாடகம், நாட்டியம் போன்றவை நடத்தப்பட்டன.
- மராட்டியர்கள் பட்டு நெசவைப் போற்றினர். நாளோலக்க மண்டபம், ஏழுநிலை மாடம், கூடகோபுரம், தொலைக்காவல் மண்டபம், கலைக்கூடம் போன்றவை இவர்களின் கட்டிடக் கலைக்குச் சான்றாகும்.
- சரசுவதி மகாலின் முன் பகுதியிலும், பிற இடங்களிலும் இவர்களது அழகிய வண்ண ஓவியங்கள் உள்ளன.
- சரபோசியின் அவையில் சிவக்கொழுந்து தேசிகர், திருவேங்கடநாத பிள்ளை, காரைக்குறிச்சி வேலாயுத உபாத்தியாயர், வேங்கடாசலம்பிள்ளை, சுப்பையக்கவிராயர் ஆகிய தமிழறிஞர்கள் இருந்தனர்.
- 1895 ஆம் ஆண்டில் ஓர் அச்சகத்தை நிறுவினர் மராட்டியர். கலைக்கூடத்தில் அரிய காசுகள் முதலியவற்றைச் சேர்த்து வைத்தனர்.
- சரசுவதி மகால் ஒன்றே மராட்டியர் தமிழகத்திற்கும் உலகுக்கும் ஆற்றிய பெருந்தொண்டிற்குப் போதுமான சான்றாகும்.

**தன் மதிப்பீடு : 2**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. மராட்டியர் அமைத்த மடங்கள் – சத்திரங்கள் குறித்துக் குறிப்பு வரைக.
2. மராட்டியரின் இலக்கியப் பணிகளைக் குறிப்பிடுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. மராட்டிய மன்னர்கள் செய்த தொண்டுகளைத் தொகுத்துரைக்க.

### 5.4. வாய்மொழி இலக்கியங்களும் தமிழ்ப்பண்பாடும்

மக்களின் சிந்தனைகளையும், வழக்கவொழுக்கங்களையும் உள்ளபடி உணர்ந்து கொள்ள உதவுவது நாட்டுப்பாடல்களாகும். செய்யுளுக்குரிய எதுகை, மோனை, உவமை, கற்பனை என்னும் கூறுகள் இருந்தாலும் உண்மைகளை அப்பட்டமாக வெளியிடுவதே இவற்றின் பண்பாகும். மக்களின் சமூக, பொருளாதார, சமய வரலாற்றை அறியவும், உயர்ந்த நோக்கங்களையும், பழக்கவழக்கங்களையும், இன்பதுன்ப உணர்ச்சிகளையும், ஆசைக் கனவுகளையும், வெற்றி, தோல்விகளை உணர்ந்து போற்றவும் பயன்படுகின்றன. குழந்தையின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள அனைத்து நிலைகளையும் சுட்டிக் காட்டுகின்றன.

### 5.4.1. தாலாட்டு

- தாலாட்டுப் பாடல்கள் வாய்மொழிப் பாடல்களில் முதலிடம் பெறுகின்றன. இதில் எதுகை, மோனை, ஓசை நயம் இருக்கும்.
- அந்தந்த வட்டாரத்தின் சிறப்பியல்பையும், சமூக நிலையையும் இவை கொண்டிருக்கும். அதாவது நாட்டுக்கோட்டை நகரத்தார் பாடல்களில் செல்வ வளமும், ஏழை மக்களிடம் தம் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய உணர்வுகளும் ஆசைக்கனவுகளும் நிரம்பியிருக்கும்.

''ஏலக்காய் காய்க்கும் இலைநாலு பிஞ்சிறங்கும்
சாதிக்காய் காய்க்கும் உன்தாய்மாமன் வாசலிலே
தங்கக் குடைபிடிச்சு தாசிமாரை முன்னேவிட்டு உன்மாமன்
தாசிக்கே விட்டபணம் இரண்டுதங்க மடம் கட்டலாமே''

என்ற பாடலில் பிறந்த இடத்துச் செல்வப் பெருமையினைக் காணலாம்.

❖ குழந்தைகளைத் தெய்வங்கள் துணை நின்று காக்க வேண்டும் என்பதனை,

''தொட்டிலுக்குக் கீழாக என் கண்ணே—உனக்குத்
துணையிருப்பாள் மீனாட்சி
கட்டிலுக்குக் கீழாக—என் கண்ணே
காத்திருப்பார் சொக்கலிங்கம்''

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

**5.4.2. ஒப்பாரி**

❖ மானிட உறவின் ஆழத்தையும் அழுத்தத்தையும் காட்டுவது ஒப்பாரி. வாழ்வின் முடிவு சாவாகும். ஒப்பாரிகள் நம் நாட்டுத் தாய்மார்களின் ஒப்பற்ற படைப்பாகும்.

❖ பிள்ளையில்லாக்குறை, மாமியார், நாத்தனார் கொடுமை, காதல் தோல்வி, கைம்மைத்துன்பம், ஏமாற்றம் முதலிய அனைத்தும் ஒப்பாரியில் நிரம்பியுள்ளன.

❖ எதிர்பாராவண்ணம் இளமையிலேயே தாலியிழந்த மகளின் எக்கப் புலம்பலையும் இப்பாடல்களில் காணலாம். சான்று,

''சில்லென்று பூத்த சிறுநெருஞ்சிக் காட்டினிலே
நில்லென்று சொல்லி நிறுத்தி வழிப்போனீரே
கட்டிய சேலையின்னும் கசங்கி மடியலையே
வச்சபூ இன்னும்வாசங் குறையிலையே
மஞ்சள் குறையவில்லே மடிப்புக்குலைய வில்லே
பிஞ்சுவய தென்றேன் பேராசைக் காரியென்றேன்
பெருமான் பறிகொடுத்துப் பிரிஞ்சிருக்க மாட்டேனென்றேன்
பிடிக்க வந்தான் கேட்கலையே''

❖ விதவைப் பெண்கள் சமூகத்தின் சுமையாகக் கருதப்படுவர். அவர்களின் கொடுமைகளை,

''வீதிவழி வந்தால் விலகிவர வேண்டுமென்பார்
வீதிவந்தால் வெட்கமல்லோ வீட்டிருந்தால் துக்கமல்லோ
வாசல்வழி வந்தால் மறைந்துவர வேண்டுமென்பார்
வாசல் வந்தால் வெட்கமல்லோ மறைந்திருந்தால் துக்கமல்லோ''

என்ற பாடல் மூலம் அறியலாம்.

### 5.4.3. பிள்ளைப்பேறு

- பிள்ளைப்பேறு வேண்டுவார் எத்தனையோ வகைகளில் முயல்கின்றனர். தான தருமங்கள் செய்கின்றனர்; கோயில்களுக்குத் தொண்டு செய்கின்றனர்; நோன்புகள் இயற்றுகின்றனர். சான்று:

''கண்ட கண்ட கோயிலெல்லாம் கையெடுத்துக் கும்பிடுவார்
காணாத கோயிலுக்குக் காணிக்கை அனுப்பிடுவார்
இலையிலே சாதமுண்டால் என்ன தவம் என்று சொல்லித்
தரையை அவர்மெழுகிச் சாதங்கள் உண்டார்கள்
பாலாடைக்குப் பால் கொடுப்பார் பசித்தார் முகம் பார்ப்பார்
தவிச்சு வந்த பேர்களுக்குத் தண்ணீர் கொடுப்பார்கள்
சாலைகள் போட்டுவைப்பார் சத்திரங்கள் கட்டிவைப்பார்
நல்லதண்ணீர்க் கிணறுகளும் நடைவாவி கட்டி வைத்தார்
தேசபர தேசிகட்குத் திருமடங்கள் கட்டி வைத்தார்
குளங்களை வெட்டி வைத்தார் கோபுரங்கள் கட்டி வைத்தார்''

### 5.4.4. காதல் பாடல்

நாட்டுப்புறங்களில் வயது வந்த ஆடவரும் பெண்களும் கூடித் தொழில் செய்வர். மாமன் மகள் அத்தை மகள் என்று இவர்கள் உரிமையோடு பழகுவார். அவர்களுக்கும் காதல் அரும்புவதும், மறுப்பதும் உண்டு. நாட்டுப்பாடல்களில் இத்தகைய காதல் உணர்ச்சிகள் இடம் பெறும். காதலில் தோல்வி, காதலில் தெய்வீகம் போன்றவை அமைந்துள்ளன.

''இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர்நின் நெஞ்சு நேர்பவளே''

என்னும் சங்க இலக்கியக்கருத்தும்,

''செத்து மடிஞ்சாலும் செலவழிஞ்சு போனாலும்
செத்த இடந்தனிலே செங்கழுநீர்ப் பூபூப்பேன்
மாண்டு மடிஞ்சாலும் வைகுந்தம் போனாலும்
மாண்ட இடந்தனிலே மல்லிகைப் பூபூப்பேன்
பஞ்சணை மெத்தையிலே படுக்கைமலர் நானாவேன்''

என்னும் பாடல் கருத்தும் ஒத்துள்ளன.

### 5.4.5. கொடுமைக்காரக் கணவன்

பெண்ணுக்கு அமையும் கணவன் சிலபோது கொடுமைக்காரனாக அமைந்து விடுவதுண்டு. பொறுத்துப் பார்த்துவிட்டு அவனை விட்டுச் சென்று விட என்னும் பெண்ணின் குரலாக,

''அறியாத ஊருலேயும்—நான்
தெரியாமல் வாக்கப்பட்டேன்
அடியாதிய புடியாதிய —நான்

விடியக் காலம் ஓடிப்போறேன்''

எனும் இப்பாடல் அமைகிறது.

### 5.4.6. குடிகாரனுக்கு அறிவுரை

குடும்ப வாழ்க்கை நரகமாக்கும் குடிப்பழக்கத்திற்கு ஆளான கணவனை ஒரு பெண் குடிக்க வேண்டாமென அறிவுரை கூறுகிறாள். அப்பாடல்:

''சிகரெட்டுக் குடியாதீங்க

சின்ன புள்ளெ ஆகாதிங்க

மெத்த குடியாதிங்க

பித்தம் சிரசிலேறும்

போயிலையும் போடாதிங்க

புகைசுருட்டுப் பிடியாதீங்க

வெள்ளையத் தேவன்கிட்ட

வெட்டுப்பட்டுச் சாகாதீங்க''

### 5.4.7. மணமுறிவு

கணவன் மனைவி உறவிலே உணவு பெறும் இடம் பெரிது. கணவன் சுவைக்கேற்பச் சமைக்கும் பெண் அவன் அன்பைப் பெறுகிறாள். கணவன் மனைவியிடங் காணும் குறைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். எப்பொழுதும் குறை கூறிக் கொண்டேயிருந்தால் வாழ்வு வெறுத்துவிடும். அத்தகு நிலையில், மனம் ஒவ்வாக் கணவனிடமிருந்து பிரிந்து விடவும் பெண் துணிகிறாள். சட்டப்படியும் பிரிந்து விடுகின்றனர். அவர்களின் உரையாடல்களும் பாடல்களாக அமைந்துள்ளன. சான்று:

''ஆண்: தாலி குடுத்தாலும் வாங்கமாட்டேன்

தாரம் கொடுத்தாலும் வாங்கமாட்டேன்

முப்பது பணத்தை முடிச்சு கட்டிணு

எப்ப வருவியோ கச்சேரிக்கு

பெண்: கச்சேரிக்கும் வரமாட்டேன்

கட்டியிழுத்தாலும் நான் வரல்லே

ஆக்கின சோத்துக்கு உண்ணானம் பேசின

இந்தாடா மாமா உன் தாலி''

### 5.4.8. தெய்வ வணக்கம்

கிராம தேவதைக்கு நடத்தும் திருவிழா சிறந்த சமூக நிகழ்ச்சியாகும். தமக்குள் இருக்கும் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடக் கோயில்கள் உதவும். தேவதைகளை வேண்டிப் பாடும் பாடல்கள், பூசாரிப்பாட்டுப் போன்றவை அவர்களின் சமய வாழ்வை விளக்குவனவாகும். அவர்களுக்குச் சமய வேறுபாடு கிடையாது. இச்சமயப் பொதுமை உணர்ச்சியே சமூகத்தின் சிறப்பு. ஏற்றப்பாட்டொன்றில் இதனைக் காணலாம்:

''பிள்ளையாரே வாரீர்! பெருமாளே வாரீர்!

பெருமாளே வாரீர்! சிவனாரே வாரீர்!

சிவனும் பெருமானும் சேர்ந்து ரதமேற
குருவும் பெருமாளும் கூடி ரதமேற
அரியும் சிவனாரும் பெரிய ரதமேற
இனியருகர் கோயில் வலம் வருவோம் வாங்க''

**5.4.9. நல்வாழ்வுக்கான அறிவுரைகள்**

நல்வாழ்வுக்கு, வேண்டிய பொன் மொழிகளைத் தாங்கிய நாட்டுப் பாடல்கள் பல உண்டு. இவை நம் மக்களின் பண்பாட்டு விளக்கங்களாக விளங்குகின்றன. அடக்கமும் அமைதியுமே பெண்ணுக்கு அணிகள் என்பதனை,

''பெண்டுகள் பூத்தேடி வைக்கவேணும் வைத்தால்
பிறர் அறியாமல் இருக்கவேணும்
கொண்டையில் பூத்தோண வைத்தால் வேசியென்று
கூறுவாரே முத்து வீராயி
தன்னடி பார்த்து நடப்பதே யாருக்கும்
சற்குண மாமென்று சாற்றுவார்கள்
அன்னநடையோடு முன்னும் பின்னும் பார்த்தல்
அழகல்லவே முத்து வீராயி''

என்ற பாடல் மூலம் அறியலாம். மேலும் அடக்கம், மெய்மை, கணவன் மீது அன்பு, இல்லக்கடமை, பக்தி, துப்புரவு, அறம், அருள் முதலிய பண்புகளையும் எடுத்துக்கூறும் பாடல்களும் உள்ளன.

**5.4.10. பல்வகைப் பாடல்கள்**

இன்னும் விளையாட்டு, தொழில், பஞ்சம், கொள்ளை போன்ற பலவற்றைப் பற்றிய பாடல்களும், மாமியார் நாத்தனார் கொடுமை, கங்காணிகளின் கொடுமை, நாடோடி வீரர்கள் போன்ற பொருள் பற்றியனவும் உண்டு. செயற்கை மணம் இன்றி இயற்கையெழிலோடு சமூகத்தைக் காட்டி நிற்கும் வண்ணமலர்கள் நாட்டுப் பாடல்களாகும்

**தன் மதிப்பீடு : 3**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. தாலாட்டுப் பாடல் – குறிப்பு வரைக.
2. ஒப்பாரிப் பாடல்கள் எப்பொருளில் அமையும்?
3. வாய்மொழி இலக்கியக் காதல் பாடல் ஒன்றைக் குறிப்பிடுக.
4. நாட்டுப்புற இலக்கியம் கூறும் நல்வாழ்வுக்கான அறிவுரைகள் யாவை?

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. நாட்டுப்பாடல் வகைகளைக் குறிப்பிடுக.
2. வாய்மொழி இலக்கியங்கள் மூலம் தமிழ்ப் பண்பாட்டை விளக்குக.

## 5.5. சமயப் பொதுநோக்கு

மனித இனத்தை நல்வழிப்படுத்திடச் சான்றோரால் கண்டெடுக்கப்பட்டதே சமயம். உலகச் சமயங்கள் பலவும் சென்று சேரும் இடம் ஒன்று தான். ஆனால் அவற்றின் வழிகள் வேறுபடும். இவ்வழிகளின் வேறுபாடுகளே சமயப்பூசல்களாகும். சமணம், பௌத்தம், இசுலாம், கிறித்துவம் போன்ற பல சமயத்தவரும் இந்தியாவிற்குள் உள்ளனர். சங்க காலம் தொட்டுப் பிற்காலம் வரையில் மன்னர்கள் எச்சமயத்தவராக இருந்தாலும் மக்களின் சமய வாழ்வில் தலையிடவில்லை.

### 5.5.1. இலக்கியங்களில் சமயப் பொது நோக்கு

- ❖ சங்க காலச் சமூகத்தில் மக்களிடம் கடவுள் உணர்ச்சியும் வழிபாட்டு முறைகளும் சடங்குகளும் இருந்தன. ஆனால் சமயம் என்ற அமைப்பு இல்லை. சிவனும், திருமாலும் பிற்காலத்தில் இரு பிரிவினராகப் பிரித்து வணங்கப்பட்டாலும் சைவம், வைணவம் என்ற பிரிவு இல்லை. சிவனும் திருமாலும் ஒரே பாட்டில் (புறநானூறு : 56) பாராட்டப்படும் நிலையும் இருந்தது. மேலும், பாரதம் பாடிய பெருந்தேவனார் அகநானூற்றுக்குச் சிவ வணக்கமும், நற்றிணைக்குத் திருமால் வணக்கமும் பாடியுள்ளார்.

- ❖ சங்க காலத்தில் சமய வாதம் அறவே இல்லை எனவும் கூற முடியாது. சமண பௌத்தர்கள் இருந்த பொழுது அந்தணர்களோடு வாதிட்டனர் என்பதை ஆவுர் மூலங்கிழார் பாடிய புறப்பாடல் விளக்குகிறது.

  ''ஆறுணர்ந்த ஒரு முதுநூல்

  இகல்கண்டோர் மிகல் சாய்மார்

  மெய்யன்ன பொய்யுணர்ந்து

  பொய்யோராது மெய்கொளீஇ'' (புறநானூறு : 166)

இப்பாடல் மூலம் சமணருக்கும் வைதிகருக்கும் மனக்கசப்பு இருந்ததை அறியலாம். ஆனால் இப்பிணக்குத் தமிழ்ச் சமுதாயத்தைத் தீண்டவில்லை என்பதையும் உணரலாம்.

- ❖ திருவள்ளுவரும், இளங்கோவடிகளும் ஏதேனும் ஒரு சமயத்தைப் பின்பற்றியிருக்கலாம். ஆனால் வள்ளுவர் பாடிய கடவுள் வணக்கம் இன்னும் கேள்விக்குரியதாகவே உள்ளது. அவர் கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல் போன்ற சமண பௌத்தர்களின் அடிப்படைக் கொள்கைகளைப் போற்றியுள்ளதால் அச்சமயச் சான்றோராகக் கூறமுடியவில்லை.

- ❖ இளங்கோவடிகள் கடவுள் பெயரில் கடவுள் வாழ்த்து பாடவில்லை. திருமால், சிவன், முருகன், கொற்றவை முதலிய கடவுளரைப் போற்றுகின்றார். சமணனாகிய கோவலன் புத்த விகாரத்தை வலம் வருவதும், வைதிக மாடலனிடம் அன்புடையவனாகவும், திருமால் வழிபாடு செய்யும் மாதரி சமணத்துறவியை வணங்குவதும், சிவனை வழிபடும் செங்குட்டுவன் திருவரங்கப் பெருமானை வணங்குவதும் சமய வேறுபாடற்றத் தமிழ்நாட்டைக் கற்பனையில் அடிகள் காட்டியுள்ளார் என்பதை விளக்குகிறது.

### 5.5.2. பக்தி இலக்கியங்களில் சமயப் பொது நோக்கு

- ❖ சமணராகிய களப்பிரர் பிற சமயத்தார்க்கு இடையூறு செய்தனர் என வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

- பல்லவர் காலத்தில் தோன்றிய ஆழ்வார், நாயன்மார் பாடல்களில் சமயப்போராட்டம் நன்கு தெரிகிறது. சமயப் பெரியார்கள் அனல்வாதமும் புனல்வாதமும் புரிந்தனர். சமணர் கழுவேற்றப்பட்டனர். சம்பந்தர் மடம் தீயிடப்பட்டது. அப்பருக்கு விடம் கொடுக்கப்பட்டது போன்ற கொடுமைகள் கூறப்பட்டுள்ளன.
- சமண பௌத்தர்களுக்கும், சைவ வைணவர்களுக்கும் இடையே நடந்த பிணக்குகள் நூலழிவு, கோயில் அழிப்பு, மடங்களின் அழிப்புப் போன்ற செயல்களுக்கு இடமளித்துள்ளன.
- சமயப்பொதுமை வேண்டி முதலாழ்வார்கள் சிவனையும், திருமாலையும் ஒன்றாகவே பாடியுள்ளனர். பொய்கையாழ்வார்,

  ''அரன்நா ரணன் நாமம் ஆன்விடை புள்ளூர்தி
  உரைநூல் மறையுறையும் கோயில்—வரைநீர்''

  என்று பாடியுள்ளார்.

  ''தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும், சக்கரமும்
  சூழரவும் பொன்னானும் தோன்றுமால்—சூழும்
  திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
  இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து''

  என்று பேயாழ்வாரும் பாடியுள்ளார்.
- திருமாலின் அவதாரம் பாட வந்த கம்பர் பொதுவான இறைவணக்கம் பாடினார். எல்லாச் சமயமும் ஒன்றே என்று வற்புறுத்தினார்.
- சோழ மன்னர்கள் சைவரெனினும் பிற சமயத்தாரிடம் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டனர்.
- நாயக்கர் காலத்தில் முகமதியர்கள், கிறித்துவர்கள் ஆகியோர் தமிழகத்துக்கு வந்தனர். பரதவர், நாடார், மறவர் போன்றவரைத் தம் இனத்திற்குக் கொண்டு வந்தனர்.
- வேதம் மந்திரம் தந்திரம் சடங்கு ஆகியவற்றை எதிர்த்துக் குரல் கொடுத்தனர் சித்தர்கள். அச்சித்தர் மரபில் தோன்றிய தாயுமானவர், அனைத்துச் சமயமும் சேரும் இடம் ஒன்றே என விளக்குகிறார்.

  ''வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்
  விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
  மாறுபடும் கருத்தில்லை முடிவில் மோன
  வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா''

  என்று பாடினார்.
- வள்ளலார் சுவாமிகள் 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' கண்டார்.

  ''கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
  கூட்டமும் அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்
  கள்ளமுறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்
  காட்சிகளும் காட்சிதரும் கடவுளரும் எல்லாம்
  பிள்ளை விளையாட்டு''

என்றார். இதன் மூலம் தாயுமானார்க்கும் வள்ளலாருக்கும் வெறும் சமய வாதங்களில் ஏற்பட்ட வெறுப்பு நன்கு அறியப்படுகிறது.

### 5.5.3. பிற்காலத்தில் சமயப் பொது நோக்கு

- ❖ விடுதலைப் போராட்டத்தின் போது இந்திய மாந்தர் சாதியாலும் மதத்தாலும் வேறுபட்டுக் கிடந்ததைக் கண்ட சான்றோர் அவர்களை ஒருங்கே இணைத்திடச் சமய ஒருமையை வற்புறுத்தினர். பாரதியார் இம்முயற்சியில் ஈடுபட்டார். இந்து, முஸ்லீம், கிறித்துவர் ஆகிய அனைவருமே இந்தியர் என்று உணர்த்தினார்.

"தீயினைக் கும்பிடும் பார்ப்பார் – நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே – நின்று
கும்பிடும் ஏசுமதத்தார்
யாரும் பணிந்திடும் தெய்வம்–பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்"

என்று ஒரு தெய்வக் கோட்பாட்டை வற்புறுத்தினார். புதிய ஆத்திச்சூடியில் சிவன், திருமால், ஏசுவின் தந்தை, அல்லா அனைவரும் ஒருவரே என்று பாடியுள்ளார்.

- ❖ **திரு.வி.கலியாணசுந்தரனார்** பொதுமைச் சமயம் பேசினார். "மார்க்கமெல்லாம் ஊடுருவி மருவி நிற்கும் சன்மார்க்கம் பார்க்க முடியாதவரே பல்சமய அமர் விளைப்பார்" என்று **கிறித்துவின் அருள்வேட்டலில்** பாடியுள்ளார்.
- ❖ தமிழ்ப் பெரியார் பலரும் சமயப் பொதுமையைப் போற்றியுரைத்தனர். முகமதியப் பள்ளிவாசல்களுக்கும், கிறித்துவக் கோயில்களுக்கும் இந்துக்கள் சென்று வழிபட்டு வருகின்றனர்.

**தன்மதிப்பீடு : 4**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. சமயப் பொது நோக்கின் அவசியம் யாது ?
2. இளங்கோவடிகளின் சமயப் பொது நோக்கைக் கூறுக.
3. வள்ளலாரின் சமரச சன்மார்க்கம் பற்றி விளக்குக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. சங்ககாலத்தில் வழிப்பாட்டு முறைகள் இருந்தனவென்பதை விளக்குக.
2. தமிழ் இலக்கியங்களில் சமயப் பொதுநோக்கைத் தொகுத்துரைக்க ?
3. தமிழ்ச் சமூகத்தில் காணப்பட்ட சமயப் பொதுநோக்கு எண்ணங்களையும், மாறுபட்ட போக்குகளையும் விளக்குக.

### 5.6. பண்பாட்டு ஊடாட்டம்

தமிழர்கள் பல நாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்த காரணத்தினால், பிற நாடுகளில் தமிழர்களும், தமிழகத்தில் பிற இனத்தவரும் குடியேறினர். இக்குடியேற்றங்களாலும் வணிகத் தொடர்பினாலும் பண்பாடுகள் கலந்தன. மலேயா, பர்மா, ஈழம், பிற கீழைத் தீவுகள் ஆகியவற்றில் தமிழரின்

பண்பாட்டுச் சாயலைக் காணலாம். சமயம், சிற்பம், ஓவியம் முதலிய பல துறைகளிலும் இந்தப் பண்பாடு ஊடுருவி நிற்பதை அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

❖ பொருள் நூல் யாத்த **கௌடிலியர்** காஞ்சி நகரப் பார்ப்பனர் என்பர்.

❖ **பாணினி**க்குப் பின் வந்த **வரருசி பாண்டியர்**, சோழர் என்னும் சொற்களுக்கும் இலக்கணம் கூறுகின்றார்.

❖ **அசோகரின் பெஷாவர், கிர்னார் சாசனங்கள்** வடநாட்டுத் தொடர்பைக் காட்டுகின்றன.

❖ சங்க காலத் தமிழர் வடநாட்டு வாரணவாசியையும், பாடலி நகரத்தையும் நன்கு அறிவர். நந்தர்களையும், மோரியரையும் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன.

❖ பல்லவர் காலத்து இறையடியார்கள் வடநாட்டுத் தலங்களைப் பாடுகிறார்கள். சுந்தரரும் சேரமான் பெருமாளும் கயிலைக்குச் சென்றனர் என்றும், திருமங்கை மன்னர் நைமிசாரணியத்தையும், பத்திரிநாத்தையும் கண்டுள்ளார் என்றும் கூறி, இலக்கிய ஆய்வுகள் கூறுவதிலிருந்து தமிழர், **யாதுமூரே யாவரும் கேளிர்** என்ற கொள்கையை மெய்ப்படுத்தினர் எனலாம்.

❖ வடமொழி இந்தியாவின் பல பகுதிகளில் கற்றவர் மொழியாக மாறியது. தமிழர் பலரும் வடமொழியில் எழுதினர். சங்கரர்தான் எழுதிய **சௌந்தரியலகரியில்** திருஞானசம்பந்தரின் பணிகளைக் குறிப்பிடுகிறார்.

❖ திருப்பெரும்புதூரில் பிறந்த **இராமாநுசர்** வடமொழி நூல்களில் தமிழ்ப் புலவர்களும் ஆழ்வார்களும் மொழிந்த பேருண்மைகளைக் கூறுகின்றார்.

❖ **சிவஞானபோதமும், மெய்கண்ட சாத்திரங்களும்**, வடநாட்டுச் சைவ நெறிகளைக் கலந்து கூறுகின்றன.

❖ மகாபாரதத்தின் பெரும்பகுதி தென்னகப் பண்பாட்டிலிருந்து தோன்றியது.

❖ தமிழ்நாட்டுக்கு வெளியே ஆழ்வார் பாடல்கள் தெலுங்கு, கன்னடம், வங்காளி, இந்தி, குசராத்தி ஆகிய மொழிகளின் எழுத்துக்களில் எழுதிப் படிக்கப்பட்டன என்பர் தெ.பொ.மீ.

❖ கம்பராமாயணம் கி.பி.14 ஆம் நூற்றாண்டில் கோயிலில் ஓதப்பட்டதற்குக் கன்னடக் கல்வெட்டில் சான்றுண்டு. கேரளத்தார் கம்பரைக் கடவுளாக்கினர். வடகேரளத்தில் தோற்பாவைக் கூத்தாகக் கம்பராமாயணம் நடத்தப்படுகிறது. இதன் மூலம் கம்பராமாயணத்திற்குக் கன்னட நாட்டிலும், கேரளத்திலும் செல்வாக்குப் பெற்றமையை அறிய முடிகிறது.

❖ பகவத்கீதைக்குச் **சங்கரர்** உரை எழுதினார். அதனைப் **பட்டர்** தமிழாக்கினார். இதனை மலையாளக் **கண்ணச்சக் கவிஞர்** மொழி பெயர்த்தெழுதினார்.

❖ சிவனின் திருவிளையாடல் பகுதியும், மலையாளத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. **கைவல்யநவநீதத்தைக்** கேரளத் துறவிகள் தமிழிலேயே ஓதினர். **மீனாட்சி பரிணயம்** போன்ற தமிழ் நாடகங்களும் மலையாளத்தில் எழுதப்பட்டுள்ளன.

❖ சைவ நாயன்மார்களின் வரலாறு கன்னடத்தில் உண்டு. 63 நாயன்மார்களைப் பற்றி எழுந்த, கன்னட நூல்களைப் பற்றித் **தமிழும் பிற பண்பாடும்** என்னும் நூலில் (பக்.34–35) கூறப்பட்டுள்ளது. நாயன்மார்கள் பெயர்கள் இதில் சிதைந்து காணப்படுகின்றன. சான்று:

| | | |
|---|---|---|
| உலகாண்ட மூர்த்தி | – | ஒலகாண்ட மூர்த்தி |
| மெய்ப்பொருளார் | – | சேதிராஜ |
| நாவுக்கரசர் | – | வாகீசர் |
| இயற்பகை | – | இஹறப்பகை |

### 5.6.1. தமிழிலக்கியங்களில் கன்னடச் செல்வாக்கு

19 ஆம் நூற்றாண்டில் நந்தனார் கதை கன்னட நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தது.

- **அரிச்சந்திர புராணத்திற்கு** மூலம் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கன்னடப் புலவர் **ராகவாங்க** என்பவரின் நூலாகும்.
- துறைமங்கலம் சிவப்பிரகாசர் கன்னடப் **பிரபுலிங்கலீலை**யினைத் தமிழில் தந்துள்ளார். நிஜகுண யோகியின் **தர்க்க பாஷாவைத்** தமிழில் **விவேக சிந்தாமணி**யாகத் தந்தார்.
- **பசவபுராணம்** பின்வந்தோரால் மொழியாக்கம் செய்யப்பட்டது.
- பலவீர சைவ மடங்களும் தோன்றின. சிவஞான பாலயர் ஒரு மடம் கட்டினார். திருப்பாபுலியூர் மடத்தில் இருந்த ஆறுமுகசுவாமி, **நிஷ்டாநுபதி** யை எழுதினார்.
- **அவிரோத உந்தியார்** சாந்தலிங்க சுவாமியின் படைப்பாகும். குமாரதேவர் **மகாராசா துறவு** என்பதை எழுதினார். சிதம்பர சுவாமிகள் சாந்தலிங்கரின் நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

### 5.6.2. தெலுங்கு மொழியில் தமிழ்ச் செல்வாக்கு

- தெலுங்கின் முதல் இலக்கிய ஆசிரியர் நன்னய்யாபட்டர் தமிழிலுள்ள எதுகை, மோனைத் தொடைகளைத் தெலுங்கில் புகுத்தினார். தமிழ் அகவல் தெலுங்கில் **அக்கலப்பாட** என மாறிற்று.
- **சீசபத்தியா, த்விபத்தியா, உத்சாகா, ஏலா, ஜோலி, லாலி, மேல்கொதுபு, மங்கலம்** என்னும் நாட்டுப்பாடல்களும், தமிழிலுள்ள நேரசை நிரையசை அமைப்பினையுடைய சீர்களைப் பின்பற்றியவை என்பர்.
- ஆசுகவி, மதுரகவி, வித்தாரகவி, சித்திரகவி என்னும் கவிமரபும் தெலுங்கிற்குச் சென்றன. ஆந்திரத்தில் தமிழ் வைணவம் பரவியது.
- இராமநுசரும், கந்தாடையும், திருமலையும், நல்லனும் ஆந்திரத்தில் தமிழ் வைணவத்தைப் பரப்பினர்.
- கன்னடத் **தாசா** இலக்கியம் தமிழின் செல்வாக்கை உணர்த்துகிறது.
- தியாகராசரின் கீர்த்தனைகள் தமிழகத்தில் இசையை வளர்த்தன; வளர்த்தும் வருகின்றன.
- விசய நகர பேரரசரின் **ஆமுக்தமால்யதா** ஆண்டாளின் வரலாற்றைக் கூறுகின்றது.
- குலசேகர ஆழ்வார் பற்றிய **பரமயோகி விலாச**, **குலசேகர சரிதம்** என்னும் நாடகங்களும் உண்டு. ஆழ்வார் பாடல்களும் உரைகளும் மணிப்பிரவாள நடையிலும், பின்னர் தெலுங்கு எழுத்திலும் எழுதப்பட்டன.

- ❖ பால்குரிசி சோமநாதர் போன்ற எழுத்தாளர் சிலர் தெலுங்கு நூல்களில் தமிழ்ப் பாடல்களையும், வரிகளையும் இடையே சேர்த்துள்ளனர். **பாண்டிதராத்திய சரித, வ்ரிஸதீப சதக** என்பவை இவரின் நூல்களாகும்.
- ❖ 63 நாயனார் பற்றிய தெலுங்கு நூல் **சிவதத்துவ சாரமு** என்பதாகும். ஆசிரியர் மல்லிகார்ச்சுன பண்டிதர்.
- ❖ நந்தனார், சம்பந்தர், சுந்தரர், திரிலோசன பல்லவ, செலதி (சிலந்தி) ஆகியோர் வரலாறுகளும் உண்டு. **பசவபுராணத்தின்** மொழி பெயர்ப்புத் தமிழிலுண்டு.
- ❖ தமிழிலுள்ள **அறப்பளீசுர சதகம், தண்டலையர் சதகம், அருணாசல சதகம்** என்பவை தெலுங்குச் செல்வாக்கால் உருவானவையாகும்.
- ❖ வேமன்னாவின் பாடல்கள் பலவும், கதைகளும், புதினங்களும், நாடகங்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. ஆந்திர, கன்னட, தமிழ்ச் செல்வாக்கு மராட்டியத்திற்கும் சென்றது. புனாவைச் சேர்ந்த பீஷ்வாக்களுக்குச் சிறுத்தொண்டர் வரலாறு மிகவும் விருப்பமானதாகும்.

### 5.6.3. தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு

தமிழ்ப் பண்பாடு பரவிய நாடுகளில் தென் கிழக்காசிய நாடுகள் குறிப்பிடத்தக்கவை. **இலங்கை, மலேயா, பர்மா, சயாம், சம்பா, சாவகம்** முதலான நாடுகளில் நெடுங்காலத்திற்கு முன்பே தமிழரின் குடியேற்றம் ஏற்பட்டது. சமயத்தோடு தமிழகச் சிற்ப, ஓவிய, கட்டிடக் கலைகளும், இலக்கியங்களும் அங்கே இடம் பெறலாயின.

### 5.6.1. ஈழம்

- ❖ தமிழகத்திற்கு மிக அண்மையிலுள்ள தீவு இலங்கையாகும். 2000 ஆண்டுகளாக அங்கே தமிழரும் சிங்களரும் இணைந்து வாழ்கின்றனர். கி.மு. 6ஆம் நூற்றாண்டில் விசயன் என்னும் சிங்களன் பாண்டியன் மகளை மணந்தான் என்பர்.
- ❖ **எலரா என்னும் சோணாட்டு மறவன்** இலங்கையை வென்று கி.மு. 205 முதல் 161 வரை ஆண்டதாகக் கூறுவர். கி.மு. 44 முதல் 25 வரையில் சில தமிழர் அந்நாட்டை ஆண்டனர் என்பர்.
- ❖ கி.மு. முதல் நூற்றாண்டில் **கரிகாலன்** இலங்கையை வென்று 12,000 சிங்களரைச் சிறை செய்தான் என்றும் கூறுவர். ஈழத்துப் **பூதந்தேவனார்** சங்கப் புலவருள் ஒருவராவார். பத்தினிக் கோட்ட விழாவிற்கு முதற்கயவாகு வந்ததாகச் சிலம்பு பகர்கின்றது.
- ❖ பௌத்தர்கள் இலங்கை பௌத்தர்களோடு உறவாடினர் இடைக்காலத்தில் இலங்கைத் தமிழர்கள் **இரகுவம்சம், தட்சிண கைலாசபுராணம்** முதலியவற்றைப் படைத்தனர்.
- ❖ **ஆறுமுக நாவலர்** தமிழர் உரைநடையையும் தமிழ்க் கல்வியையும் சமயத்தையும் வளர்த்தார். நன்னூலுக்கு உரையும் வகுத்தார். விபுலாநந்தர் யாழ்நூலை இயற்றினார்.
- ❖ **ஆனந்த குமாரசுவாமி** தமிழ்ப் பண்பாட்டுக்கு ஆற்றிய தொண்டு பெரியதாகும். **க.பொ.ரத்தினம், வித்தியானந்தம், கைலாசபதி** போன்ற அறிஞர்கள் தமிழ்த் தொண்டு புரிந்தனர். **ந.சி.கந்தையா பிள்ளையின்** வரலாற்று ஆராய்ச்சிகள் பாராட்டத்தக்கவையாகும்.

#### 5.6.3.2. மலேயா

- ❖ தென்கிழக்கு ஆசியாவின் தென்பகுதியே பழங்காலத்தில் **கடாரம்** எனப்பட்டது. இதனைச் சங்க நூல் **காழகம்** என்கிறது.
- ❖ மலேயாவின் சிறந்த துறைமுகம் **கெட்டா (Kedah)** எனப்பட்டது.
- ❖ கடாரம் கொண்டான் என்னும் இராசேந்திரன் பட்டப் பெயரும் கடாரங்காயும் அந்நாட்டுத் தொடர்பைக் காட்டுவனவாகும். தமிழரே மலேயா என்னும் பெயரைச் சூட்டினர் என்பர்.
- ❖ கெட்டாக்குக் குன்றின் மேலிருந்த சிவன் கோயிலின் அழிபாடுகளில் சிவன், முருகன், கணேசர், நந்தி, துர்க்கைப் படிமைகள் கிடைத்து உள்ளன.
- ❖ **வெல்லெஸ்லி** மாகாணத்திலுள்ள கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு இரு நாடுகளுக்குமிடையே உள்ள தொடர்பை விளக்கும்.
- ❖ மலேயா மொழியில் திருமணம், இலை, உறுதிமொழி, வண்ணான் இவற்றைக் குறிக்கும் சொற்கள் தமிழின் திரிபேயாகும்.

#### 5.6.3.3. சாவகம்

- ❖ **சாவகம் ஜாவா** எனப்படுகிறது. மணிமேகலையில் சாவகத் தொடர்பு குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ ஆபுத்திரனும் மணிமேகலையும் சாவக நாட்டுக்குச் சென்றதாக மணிமேகலை கூறுகிறது. புத்த சமயம் இங்கிருந்தே அங்குப் பரவிற்று என்பதை இவ்வரலாறு உணர்த்துகிறது.
- ❖ அதியமானின் முன்னோர் கரும்பினை இங்கிருந்தே கொண்டு வந்தனர். தென்னிந்தியப் பஞ்சாங்க முறையே இங்கும் வழங்குகின்றது.
- ❖ கி.பி. 732 இல் சங்கையர் என்னும் சாவக மன்னர் சிவனைக் கடவுள் மங்கலம் செய்துள்ளார். இப்பகுதிக்கு **நாகநாடு, நாகபுரம், போகவதிபுரம்** என்னும் பெயர்கள் உண்டு. இங்கேயுள்ள ஒரு தீவுக்கு மதுரையென்ற பெயர் உள்ளது.
- ❖ பாண்டியனால் ஆளப்பட்ட ஒரு பகுதி இங்கே **மீனன் காப்பு** எனப்படுகிறது.
- ❖ மலையர், சோழன் என்னும் அரசர் குடிப்பெயர்கள் இங்கே மெலியோன், கோலன் என்று வழங்கப்படுகின்றன. பேராபதூரிலுள்ள புத்தர் கோயில் பல்லவர் சோழர் கட்டிட அமைப்பைக் கொண்டுள்ளது.
- ❖ கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் இந்து சமயம் நிலவியதனைப் பாகியான் குறிப்பிட்டுள்ளார்.

#### 5.6.3.4. சுமத்திரா

- ❖ இப்பகுதியில் கி.மு.3–ஆம் நூற்றாண்டிலேயே தமிழர் குடியேறி உள்ளனர். இங்கு வாழும் **சும்பிரிங்கு** என்னும் பழங்குடியினரிடையே சோழிய பாண்டிய, மெலியாள, பெலவி (பல்லவ), தெகங் (துக்கணம்) என்னும் பெயர்கள் வழங்கும்.
- ❖ **லே–போ–வோ** என்னுமிடத்தில் உள்ள கி.பி.1088 ஆம் ஆண்டுக் கல்வெட்டு **திசையாயிரத்து ஐந்நூற்றுவர்** என்னும் வணிகர் குழுவைக் குறிப்பிட்டுள்ளது. இவர்கள் **பாகன்** என்னுமிடத்தில் திருமால் கோயில் ஒன்றைக் கட்டியுள்ளனர்.

### 5.6.3.5. தாய்லாந்து

- ❖ **லோ–ஜின்–ஜா** என்னும் மழைத்திருவிழா பாவை நோன்பை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்விழாவில் திருப்பாவைப் பாடல்கள் பாடப்படும். இதனை **லோரிபாவாய்** என்று கூறுவர்.
- ❖ மூவர் பாடல்களும் **பாங்காக்கில்** சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற வரிசையில் தமிழகத்தார் போலவே பாடுகின்றனர்.
- ❖ திருமால் அங்கே நாட்டுத் தெய்வமாக ஆகியிருக்கின்றார். திருமாலைச் **சுகோதயப் பெருமாள்** என்று அழைக்கின்றனர்.
- ❖ இங்குக் கிடைக்கும் சிற்பங்கள் திராவிட முறையினவாகும். ஆனந்தத் தாண்டவமாகும் நடராசர் சிலை இங்குண்டு. பொங்கல் விழாவினை அறுவடை விழாவாகக் கொண்டாடுகின்றனர்.
- ❖ அங்குள்ள இராமாயணத்தின் ஒருபகுதி தமிழ் இராமாயணத்தை ஒத்துள்ளது. கதை மாந்தர் **மாயன், தேவன், சீவன்** எனப் பெயர் பெறுவர். தங்கம், கப்பல் என்பன தாய்மொழிச் சொற்கள் ஆகும்.

### 5.6.3.6. கம்போடியா

- ❖ **காம்பூசம்** என வடமொழியாளர் இதனை வழங்கினர். இதன் தென்பகுதியில் **பியூனான்** உள்ளது. **மலையரசன்** என்பது இதன் பொருள். இது பல்லவர் பட்டப் பெயர்களுள் ஒன்றாகும்.
- ❖ பல்லவர்களைப் போலவே இந்நாட்டு மன்னர் **சூரியவர்மன், ஜெயவர்மன்** எனப் பெயர் கொண்டனர்.
- ❖ கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலாண்ட சூரியவர்மர் **அங்கோர்வாட்டு** என்னும் ஊரில் திருமால் கோயில் கட்டினார். இராமாயணக் கதை நிகழ்ச்சிகள் இங்கே சிற்ப வடிவில் காட்சியளிக்கின்றன. தேவாரமும், திருவாசகமும் இங்கே பாடப்பட்டன.
- ❖ பல்லவர்களையும், சங்கராச்சாரியாரையும் இங்குள்ள கல்வெட்டுக் குறித்துள்ளது.
- ❖ குதிரையை **மா** என்றும், கப்பலைக் **கப்பால்** என்று கூறுகின்றனர்.

### 5.6.3.7. சம்பாத்தீவு

- ❖ இன்றைய **வியட்னாம்** பழங்காலத்தில் **சம்பா** எனும் பெயருடன் விளங்கிற்று.
- ❖ குன்றுகளும், சமவெளியும் நிறைந்த பகுதிகள் **பாண்டுரங்கம், அமராவதி, விஜயா** எனப் பிரிக்கப்படுகிறது.
- ❖ இதன் பழங்குடிமக்கள் **சாம்** என்போராவார். இத்தீவின் முதல் அரச மரபைத் தென்னிந்தியரே தோற்றுவித்தனர்.
- ❖ இங்கே சிவலிங்கமும் நடராசர் உருவமும் வணங்கப்பட்டன.
- ❖ கல்வெட்டுக்கள் தென்னக எழுத்துச் சாயலைக் கொண்டவை.
- ❖ **பத்திவன்மன்** என்பவன் சிவன் கோயில் கட்டினான். **பிரமன், அரி, அரன் வணக்கம்** இங்குப் பெரு வழக்காகும்.
- ❖ கட்டிடக்கலை தமிழ்க் கலையின் சாயலைப் பெற்றுள்ளது.

- ❖ பழைய கல்வெட்டில் **ஸ்ரீ மாற ராஜகுல ஸ்ரீ மாரலோன் குலேந்தரன்** என்று காணப்படும். மாறன் என்பது பாண்டியர் பட்டமாகும்.
- ❖ செய்கோனில் தண்டாயுதபாணிக்கும் மாரியம்மனுக்கும் கோயிலும் உண்டு.
- ❖ **போனகர்க் குன்றுக் கோயில், மிஷான் நகர்க் கட்டிடங்கள்** ஆகியவை பல்லவர் கலையை நினைவூட்டும். எம்பாவை விழா இங்கும் உண்டு.

**5.6.3.8. பர்மா**

- ❖ பர்மாவும் மலேசியாவும் பழங்காலத்தில் **சுவர்ணபூமி** எனப்பட்டன.
- ❖ பாகன் என்னுமிடத்தில் நானதேசீயத் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் கட்டிய திருமால் கோயில் உள்ளது. கோயில்களும் சிலைகளும் தமிழ் முறையில் அமைந்தவையாகும்.
- ❖ காஞ்சியிலிருந்து **மகாயான பௌத்தம்** இங்கே பரவிற்று.
- ❖ **தலைங்குகள்** என்னும் பழங்குடியினர் காஞ்சியையும், தர்மபாலரையும் குறிப்பிட்டெழுதியுள்ளனர்.
- ❖ முருகனுக்கும் மாரியம்மனுக்கும் பல கோயில்கள் இங்கேயுள்ளன.
- ❖ 18 ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் இவர்களுக்கு வணக்கப்பாடல்கள் பாடியுள்ளனர். **தண்டபாணிப் பதிகம்** இவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும்.
- ❖ தமிழர் நாகரிகமும் பண்பாடும் பல நாடுகளில் பரவி அந்தந்த நாட்டிலும் ஒருவகைக் கலப்புப் பண்பாட்டினை உருவாக்கியுள்ளது.
- ❖ இந்தியாவுக்குள் மட்டுமின்றிக் கீழைத் தீவுகளிலும் தமிழ்ப்பண்பாடு பரவியதற்கு வணிக உறவு தலைமையான வாயிலாக அமைந்தது.

**தன் மதிப்பீடு : 5**

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. தமிழிலக்கியங்களில் காணலாகும் கன்னடச் செல்வாக்கைக் குறிப்பிடுக.
2. தெலுங்கு மொழியில் தமிழ்ச் செல்வாக்கு – சுருக்கி வரைக.
3. ஈழத்தில் தமிழ்ப் பண்பாடு குறித்து எழுதுக.

**பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.**

1. பண்பாட்டு ஊடாட்டத்தின் நன்மை தீமைகளை விவரிக்க.
2. தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு – எனும் தலைப்பில் கட்டுரை வரைக.

**5.7. தொகுப்புரை**

1. ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த இயந்திரங்களினால் பல்வேறு தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
2. பொருளாதாரம் பெருகவே காவிரி பகுதியில் மேலணை, கீழணை கட்டப்பட்டன.
3. காவல்துறை நாட்டின் பாதுகாப்பிற்குப் பெரிதும் பணியாற்றியுள்ளன. சட்டங்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன.
4. கிறித்துவப் பாதிரிமார்களால் அறிவியல், வரலாறு, தத்துவம் போன்ற பலதுறையறிவு மக்களுக்குக் கிடைத்துள்ளது.

5. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் பிரெஞ்சுக் கோட்பாடு மக்களிடையே புதிய எழுச்சியை ஊட்டின.

6. ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு போன்ற இடங்களில் செய்யப்பட்ட ஆய்வுகள் தமிழரின் தொன்மை நாகரிகத்தை அடையாளப்படுத்தின.

7. ஆங்கிலேயரின் வருகையால் அச்சு இயந்திரங்கள் கொண்டு வரப்பட்டு அச்சுக்கூடங்கள் நிறுவப்பட்டு பத்திரிகைகள் வெளியாகியுள்ளன.

8. கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலை எழுதினார். பல தமிழ் நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

9. வீரமாமுனிவர், நொபிலி, சீகன்பால்கு, பெர்சிவல் போன்றோர் தமிழ்ப்பணியில் ஈடுபட்ட மேலை நாட்டினராவார்.

10. மராட்டிய மன்னன் சரபோஜி இலக்கியம், கணிதம், சோதிடம், வானநூல், மருத்துவம் முதலிய பல துறைகளைச் சார்ந்த ஆயிரக்கணக்கான ஏட்டுச் சுவடிகளைத் தொகுத்த பெருமைக்குரியவராவார்.

11. சமூக இன்ப துன்ப நிகழ்ச்சிகளையும், பழக்க வழக்கங்களையும், குழந்தையின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்தையும் பதிவு செய்துள்ளவை நாட்டுப்புறப் பாடல்களாகும்.

12. மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளில் தமிழ் இலக்கியச் செல்வாக்கு மிகுந்திருந்தது. தமிழ்ப் பண்பாடு வெளிநாடுகளிலும் குறிப்பாக இலங்கை, மலேயா, பர்மா, சயாம், சம்பா, சாவகம் போன்ற இடங்களிலும் பரவி தமிழர்களுக்கான அடையாளங்களை வெளிப்படுத்தி வருகின்றன என்பது தெளிவாகின்றது.

**13. பார்வை நூல்கள்:**


கே.கே.பிள்ளை – **தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்**
உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்
தரமணி,
சென்னை–13. 2000.

வே.தி. செல்லம் – **தமிழக வரலாறு – புதிய பார்வை**
மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரி முனை
சென்னை–8. 2006.

## குறிப்பு

……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..
……………………………………………………………………………..

# குறிப்பு